
# நாவலர் மரபு



இரா.வை.கனகரத்தினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

637

உ
சிவமயம்

என்றும் எனது அன்புக்கும் மதிப்புக்கும் உரிய
பேராசிரியர் வி. சிவசாமி அவர்களுக்கு
அன்புடன்
இரா. வைத்தியநாதன்
14/09/2000.

12/20.5.C

Prof. V. SIVASAMY
UNIVERSITY OF JAFFNA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

KOHA JPL

# நாவலர் மரபு

## (The Navalar Tradition)

121205C

**பேராசிரியர். இரா.வை. கனகரத்தினம்**
தமிழ்த்துறை,
பேராதனைப் பல்கலைக்கழகம்,
பேராதனை.

பூரணம் வெளியீடு.
1999.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9R10

# நூற் குறிப்பு


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | நாவலர் மரபு |
| நூலாசிரியர் | : | கனகரத்தினம், இரா.வை |
| வெளியீடு | : | பூரணம் வெளியீடு |
| பதிப்புரிமை | : | நூலாசிரியருக்கு |
| பதிப்பு | : | ஆவணி 1999 |
| நூல் வடிவம் | : | 1x8 |
| எழுத்து | : | 10 புள்ளி |
| பக்கம் பதிப்பு | : | தயா பதிப்பகம் |
| அச்சகம் | : | நியூ கார்த்திகேயன் பிறைவேட் லிமிட்டெட் |
| விலை | : | 200 |
| Title | : | The Navalar Tradition |
| Author | : | Kanagaratnam, R.V |
| Edition | : | First |
| Printers | : | New Karthikeyan Printers (Pvt) Ltd.<br>501/2, Hotel Ceylon Inns,<br>Galle Road, Colombo-06 |
| No.of Pages | : | |
| Price | : | 200 |





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# சமர்ப்பணம்

**சைவத்தையும் அதன் வளர்ச்சிக் கருவியாகிய**
**கல்வியையும் வளர்த்தற் பொருட்டுத்**
**தன்னை அவ்வேள்விக்குள் அர்ப்பணித்த**
**சைவத் தமிழ் பெருமகன்: சைப்பெரியார் சு. இராசரத்தினம் அவர்கட்கு,**
**இந்நூல் சமர்ப்பணம்**



மனேஜர் ராசரத்தினம மன்றுலகம சென்றுவிட்டார்
தனே தனியரசு சாய்ந்ததே — மனேகேள்
பன்னிரண்டு மூன்று பகரெழுப தாமாண்டு
மன்னும் மறைவு தினம் மற்று.

பண்டிதமணி சி.க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தென்மொழியும் வடமொழியும் கற்றுவல்ல அறிஞர் பண்டிதர் ச. சுப்பிரமணியம் அவர்கள் வழங்கிய சிறப்புப்பாயிரம்

உலகில் உள்ளார் உயிர்வாழ உழுதூண் உதவும் உத்தமரும்
உலகில் உள்ளார் உறுபிணிதீர் உபாயம் உணர்ந்தே உதவுநரும்
உலகில் உள்ளோர் ஒற்றுமையாய் உறவாய் வாழ ஓம்புநரும்
உலகில் உள்ளோர் உளத்திருள்தீர் உண்மை உணர்த்தும் உரவோரும்

தெய்வா மிசத்தார் தியாகிகளாய்த் தேசம் போற்றும் தலை நிலத்தார்
ஐவாய் உணர்வுக் கெளிதானாய்த் தாமுண் டுடுத்திங் கினிதிருப்போர்
கைவாய் படைத்த கண்காதில் நாற்கா விகளாம் கடைநிலத்தார்
உய்வான் பலவா றுழைத்தூட்(டு) உத் தமோத்த மரன்னோர் நாவலனே

மண்ணுள் மடியா வகைசைவ மாண்பார் மறையாம் திருமுறைகள்
கண்ணுள் மணிபோற் கரத்துதவும் காவல் வேந்தன் கைவணம் போல்
எண்ண ஈழத் தெழுந்தெமக்காம் இனிய தமிழ் நற் சைவமிணைந்(து)
அண்ணும் வாழ்வுக் கடிகோள அமைத்தோன் நல்லை ஆறுமுகம்

பத்தொன் பானில் முளைத்திருபான் நூற்றாண்டிற் பல் கிளைபரப்பி
வித்தொன் றெனினும் விழுதுபல வீழ்த்தி நிழலும் விருந்துமருள்
அத்தொன் மரம்போல் அமைந்தறிவாம் விருந்தும் நிழலும் வாழவருள்
அத்த னருள்கை தரவளித்தான் ஆறு முகநாவல அரசே

ஆல மதனை அறிந்தணைந்தார்க்(கு) ஆய்ப்போய் ஆண்டா யிரம்பயனாம்
தால மதுபோல் தான்பயன் செய் தன்மை தரணி தலைமேற்கொள்
கால கருதி மரபில்வரு பயனாம் பலவும் கட்டுரைத்தான்
சீலம் தெரிந்து செறிந்தொழுகும் சீரோன் கனக ரத்தினமே

முன்பின் னானோர் உடனிருந்தோர் முதுபே ரறிஞர் முதற் பணியில்
அன்பின் வழியில் அருவரதம் ஆற்றும் அறவோர் தொண்டும் எதிர்
வன்பின் வாதில் வழக்கிலெழும் மறவோர் மிண்டும் வருபயனும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்பி னெவரும் ஏற்றுணர எளிய தமிழில் எடுத்துரைக்கும்
தில்லை நடனன் தாள்போற்றும் திருவார் நல்லை நாவலன்பின்
தில்லை நாதன் முதலாகத் திருநெல்வேலி சேர் பண்டிதமணி
எல்லை யாக எண்ணிலவர் இயற்றும் ஏற்ற மாம்பணிகள்
வல்லை பலசான் றாதாரம் வருந்தித் தேடி வகைப்படுத்தி

வழக்கு வாய்மை தீர்ப்புவரை வகையால் வரைந்த இந்நூல்தான்
சழக்கி லாதே தாய்நாட்டுத் தமிழிற் சைவ நூலுணர்வில்
எழுச்சி பெற்றோர் போற்றேற்றம் எல்லாம் அடங்கல் இடங்கொண்டே
விழுப்பம் மிகுந்த அபிதான சிந்தா மணிபோல் விளங்குவதே

இந்நூல் கைந்நூல் கையிலெடுத்தால் எண்ணில் பல நூல் இயல்பெல்லாம்
நந்நூலாக நாமெடுத்து நாடிப்படித்து நலம் நுகர
எந்நூல் எங்கெங் கெனத்தேட ஏவும் கனக ரத்தினத்தின்
செந்நூல் ஆய்வும் தெளியறிவும் தெளிவாம், சித்தம் திரமுறுமே

பேரா தனைப்பல் கலைக்கழகத்துப் பேராசிரியன் பெரு முயற்சி
தேரார் நல்லை ஆறுமுக நாவ லர்கோன் திருமரபை
நீரால் நேரடி நியாயவழி நீட்டும் நூலும் கனகரத்தினச்
சீரார் அருங்க லம்தமிழ்த்தாய் அருளாற் சிறக்க செகமீதே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேராதனைப் பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளரும் கவிஞருமாகிய பூ.சோதிநாதன் வழங்கிய சிறப்புப்பாயிரம்

அயலவர் எங்கள் நாட்டை
அடிமையாய் ஆண்ட வேளை
செயலெதும் அறியா ராகிச்
செந்நெறி வழுவி மக்கள்
புயலென வந்த மேலைப்
புந்நெறி மேவல் கண்டம்
மயலினைப் போக்கிப் பண்டை
மரபைநா வலரே காத்தார்.

பதிப்புகள் உரைகள் நல்ல
பள்ளிகள் புதிய நூல்கள்
மதிப்புள கண்ட னங்கள்
மனமகிழ் பிரசங் கங்கள்
பதிபசு பாசத் தாலே
பாரினில் உயர்ந்த ஞானம்
அதியுயர் சைவசித் தாந்தம்
ஆதிய வழியாற் காத்தார்.

அவையெலாம் ஆழ மாக
அருந்தமிழ்ச் சைவர் பேண
நவையறு கூட்டம் ஒன்றை
நாட்டலும் அஃதே யந்தத்
தவமுறை மரபை மண்ணிற்
தழைத்திட வைத்த தென்பார்
அவரது சேவை யெல்லாம்
அறிவதெம் கடமை யன்றோ.

ஆங்கவர் செய்த சேவை
அறிவதற் கெளிய தாக
ஈங்கொரு நூலை யாய்ந்தே
இயற்றினார் கனக ரத்னம்
தீங்கெதும் எண்ணா னந்தத்
திருந்திய மனத்தி னானை
நாங்களும் வாழ்த்த எங்கள்
நாவலர் மரபு வாழும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவுரை

உண்மையான உயிர்த்துடிப்பான மரபு என்பது
கடுமையான வரையறை அற்றது. அது
காலத்துக்குக் காலம் தன்னைத்தானே புதுப்பித்தும்
தனக்கு வேண்டிய ஜீவ சத்துப் பெற்றும்
இயங்கிச் செல்வதே யாகும்.

*பேராசிரியர் க.கைலாசபதி*

இக்கூற்றினை **நாவலர் மரபு** என்னும் தொடருடன் ஒப்பிட்டு நோக்கும் பொழுது, இவ்வாக்கியம் பொருள் பொதிந்ததொன்றாகவே காணப்படுகின்றது. மரபு என்பது மாற்றம் பெற முடியாததொன்றல்ல. அது காலந்தோறும் மாற்றங்களை உள்வாங்கி வளர்ந்து செல்வ தொன்று. நாவலரவர்கள் மரபு வழிச் சிந்தனையாளராக இருக்கவில்லை. காலத்தின் தேவைகளையும் அவசியத்தையும் உணர்ந்து மாற்றங்களை வரவேற்றவர். நாவலர் மரபு என்பதன் தொனிப்பொருளும் அதுவே. பிறிதோர் மாற்றங்களை உள்வாங்கும் தன்மையது என்பதாகும்.

''முன்னிருந்த எங்கள் சமயசாரியர்கள் தாம் தரிசனஞ், செய்யப் போன தலங்களிலெல்லாம் பதிகங்கள் அருளிச் செய்தார்கள். இவரே தாம் போன இடங்களிலெல்லாம் லோகோபகாரமான சைவப்பிரசங்கங்கள் செய்து வந்தவர். வசனம் போல பாட்டுக்கள் இக் காலத்திற் பிரயோசனமுடையவைகளல்ல வென்று கருதியே பாட்டுப் பாடுதலை இவர் குறைத்துக் கொண்டார் '' என்ற த. கைலாசபிள்ளையின் கூற்றும்

''நிறைந்த கல்வி அறிவுடைய வித்துவான்களும் குறைந்த கல்வி அறிவுடைய பிறரும் ஆகிய யாவரும் எக்காலத்திலும் எளிதில் வாசித்து உணரும் பொருட்டும்....கத்தியரூபமாகச் செய்து வாசிப்போர்களுக்கு எளிதிலே பொருள் விளங்கும்படி பெரும் பான்மையும் சந்தி விகாரங்களின்றி அச்சிற் பதிப்பித்தேன் ''

என்ற நாவலரவர்கள் தம் கூற்றும் நாவலரவர்கள் தமிழ் இலக்கியத்தில் மரபு என்பதற்கு கொண்டிருந்த விளக்கம் எனக் கருதலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுவாக நாவலரவர்கள் கவிதைப் பதிலாக உரைநடையைக் கையாண்டார். தமது காலத்தில் வழக்கிலிருந்த மணிப்பிரவாள நடைக்குப் பதிலாக எளிய தமிழில் எளிய பதங்களை எளிய நடையில் அறிந்து கொள்ளக்கூடிய சந்தத்தில் தமது உரை நடையைக் கையாண்டார். எனவே, நாவலரவர்கள் தம் படைப்புக்களைப் பொது மக்களை நோக்கிச் செல்ல வழிவகுத்தார். நாவலர் மரபைப் பொதுப்பட்ட நோக்கின் ஒரு முகப்படுத்தப்பட்ட சமய நோக்கம், இலக்கிய நோக்கம், மக்கட் சார்பு, நாட்டு நலம் போன்றன காணப்பட்டன. இந் நோக்கங்கள் நாவலர் மரபில் வந்தோரிடத்திலும் நாவலர் நோக்கினை மனங்கொண்டு செயற்பட்டோரி டத்திலும் பொதுவாக நிறைந்து காணப்பட்டன. இப் பண்புகளில் சிலவற்றை நாவலர் மரபினர் தமக்குத் தனியுடைமையாகக் கொண் டிருந்தனர். காசிவாசி செந்திநாதையர், நடராசையர், ஆறுமுகத்தம்பிரான், அம்பலவாண நாவலர், த. கைலாசபிள்ளை முதலானோர்கள் நாவலரின் நோக்கினை மனங்கொண்டு செயற்பட்டனர். வித்துவசிரோமணி பொன்னம் பலப்பிள்ளை, சுன்னாகம் குமாரசுவாமிப்புலவர், சுவாமிநாத பண்டிதர், பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, பெரியதம்பிப்பிள்ளை, போன்றோர்கள் இலக்கிய நோக்கினை மனங்கொண்டு செயற்பட்டனர். சி.வை. தாமோதரம்பிள்ளை, சிற். கைலாசபிள்ளை, ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை, பாவலர் துரையப்பாப்பிள்ளை முதலானோர்கள் எச்செயற் பாடுகளும் மக்கள் சார்புடையனவாக அமைவதில் கருத்துடையவர்களாக விளங்கினர். எச் செயற்பாடும் மக்கள் சார்பும் நாட்டு நலமும் உடையதாக அமைதல் வேண்டும் என்பதில் கருத்துடையவர்களாக சேர்.பொன். இராமநாதன், சேர். பொன் அருணாசலம், இந்து போட் சு. இராசத்தினம் பாவலர் துரையப்பாப்பிள்ளை முதலானார்கள் செயற்பட்டனர்.

இத்தகைய நாவலர் மரபு என்னும் சக்தி நேரடியாகவோ, மறைமுக மாகவோ, உள்ளார்ந்த ரீதியாகவோ காலந்தோறும் சமயத்தையும் தமிழ்மொழியையும் இலக்கியத்தையும் இவற்றினூடாக மக்களையும் நாட்டையும் வளம்படுத்தவே செய்தது, செய்கின்றது, செய்யும்

இன்று ஈழத்தில் சமயமும் இலக்கியமும் வளமும் வளர்ச்சியுற்று தனித்துவமுடையதாக விளங்குவதற்கு நாவலர் மரபும் முக்கியமான காரணம் என்பதை யாரும் மறுப்பதற்கில்லை, ''நாவலர் மரபு மறைமுகமாகவேனும் உள்ளார்ந்த சத்தியுடன் செயற்படுவதினாலேயே, தற்கால ஈழத்துத் தமிழிலக்கியம் சிற்சில அம்சங்களில் தமிழக இலக்கியப் போக்கிலிருந்து வேறுபட்டு விளங்குகின்றது என்பதையும் நாம் ஐயத்துக்குமிடமின்றி உணரக் கூடியதாயிருக்கின்றது'' என்ற கூற்று நினைவு கூரத்தக்கதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வகையில் நாவலர் மரபினை மீண்டும் மீண்டும் கற்றுக் கொள்வதன் மூலம் புதிய சக்தியுடன் நமது மரபினை வளர்த்துச் செல்வதற்கும், ஈழத்து இலக்கியப் பரப்பை அறிந்து கெள்வதற்கும், வாழ்ககை வரலாற்று இலக்கியத்தை அறிந்து கொள்ள விரும் புவோருக்கும் இந்நூல் ஒரு முன்னோடியாயமையுமென நம்புகின்றேன்.

இந்நூலைப் படைப்பதற்குப் பலவழிகளில் உதவிய நண்பர் களுக்கும் குறிப்பாக, இந்நூலைப் படித்து ஆக்க பூர்வமான முறையில் கலந்துரையாடி இந்நூலுக்குச் சிறப்புப்பாயிரம் அளித்த இனிய நண்பர் மு.சோதிநாதன் அவர்களுக்கும் சிறப்புப்பாயிரம் அளித்த பண்டிதர் சுப்பிரமணியம் அவர்களுக்கும் இந்நூல் வெளிவர பல்வகையிலும் உதவிய மீனாவுக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டவன் அவர்கள் எல்லோருக்கும் எனது நன்றிகள் உரித்தாகட்டும்.

மேலும் இந்நூல் அழகுற அமைவதற்குக் காரணமாக இருந்த கார்த்திகேயன் பிறைவேட் லிமிட்டெட் உரிமையாளர் திரு. ந. குருபரன் அவர்கட்கும், இதனை அழகுற கணணியில் பதித்த நயினை கிருபாகர், சா.கண்ணன் ஆகியோருக்கும், மற்றும் இத்தாபனத்தின் ஊழியர்களான இளைஞர்களுக்கும் எனது நன்றியையும் வாழ்த்துக்களையும் தெரிவிப் பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளடக்கம்

சிறப்புப்பாயிரம், ........................................ iv-vi

முகவுரை ........................................ vii-ix

இயல். 01. நாவலர் மரபு ........................................ 1-5

இயல். 02. ஈழநாட்டில் நாவலா மரபு ............ 6-48

இயல். 03. தமிழ் நாட்டில் நாவலர் மரபு ......... 49-54

இயல். 04. நாவலர் நோக்கும் மரபும் ............. 55-108

இயல். 05. முடிவுரை ........................................ 109-110

பின்னிணைப்பு

01. தத்துவ நியமனம் ........................................ 111-115

02. ஆய்வுநூல் பட்டியல் ........................................ 116-122

03. பெயர் அகர நிரல், ........................................ 123-126

04. நூல் - இதழ் அகர நிரல் ........................... 127-137

05. பொருள் அகர நிரல் ........................................ 134-136



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயல் 1

## நாவலர் மரபு

### மரபு

மரபு என்ற சொல்லுக்குப் பலர் பலவாறு பொருள் கொள்வர். மரபு என்னும் சொல் குறிக்கும் பொருளை விளக்க வந்த பேராசிரியர் *ஆ.சதாசிவம்* அவர்கள் *தொல்காப்பியர்* முதல் *அரசஞ் சண்முகனார்* ஈறாக மரபு பற்றிக் கூறிய கருத்துக்களைப் பின்வருமாறு தொகுத்துக் குறிப்பிடுவார்.

''**தமிழ் மரபு**'' எனக் கூற அமையாதோ எனின் அமையாது. மரபு என்பது சான்றோர் வழக்காதலின் தமிழ் கூறுவோர் அனைவரும் மரபு நிலை நிறுத்தற்குரியராகார். செந்தமிழ் வழி நிற்போரே மரபையறிவர்; அவர் வழக்கே மரபு வழக்காகும். இதனை ஆசிரியர் தொல்காப்பியனார் தெளிவாக விளக்குகின்றார். சிறப்புப் பாயிரம் செய்த பரம்பாரனாரும் ''ஆயிடைத் தமிழ் கூறு நல்லுகத்து'' என்றும் 'செந்தமிழியற்கை சிவண்ய நிலத்தொடு' என்றும் வேறு வேறாகக் கூறினார். எனவே, தமிழ் என்பது கொடுந்தமிழையும் உள்ளடக்குமாதலின் 'செந்தமிழ்' என விதந்து கூறப்பட்டது.

மரபு, இலக்கணம், முறைமை, தன்மை என்பன ஒரு பொருட் கிளவி என்பர் *நச்சினார்க்கினியர்*. அவர் கருத்துப்படி 'மரபு' என்ற சொல்லின் பொருள் இலக்கணம் என்பதாகும். மரபென்பது தொன்று தொட்டு வந்த வழக்கு என்பர், அரசஞ் சண்முகனார். இருவர் கருத்தையும் ஒப்பு நோக்குங்கால், மரபே இலக்கணம் என்பதும், தொன்று தொட்டு வந்த வழக்கே அது என்பதும் புலப்படும் என்பார்.[1] இஃது எவ்வாறு இருப்பினும் இன்று நவீன இலக்கியப் பதிவில், மரபில் 'மரபு' என்ற சொல் ஒரு எழுத்தாளன் தனக்கு முந்திய இலக்கியத்திடமிருந்து மரபுரிமையாகப் பெறுகின்ற இலக்கிய ஆதாரங்களையும் உத்திகளையும் வழக்கங்களையுமே குறிக்கும். குறிப்பாகக் கடந்த கால நூல்கள் ஒன்றோடொன்று காரண, காரியங்களுடன் இணைகின்ற இணைப்பைக் குறிக்கும்[2]. இச் சொல் முக்கிய இரு பண்புகளை உணர்த்தும். அவற்றைப் பின்வருமாறு விளக்குவர்[3].

---

1. *சதாசிவம்*,ஆ., 1962/63 மரபு, இளங்கதிர், பேராதனைப் பல்கலைக்கழகம் தமிழ்ச்சங்க வெளியீடு.
2. *சச்சிதானந்தம்*,வை.,மேலை இலக்கியச் சொல்லகராதி, 1983,பக்.204
3. மேலது நூல்,பக் 205

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(1) ஒரு எழுத்தாளன் பயன்படுத்துகின்ற மொழி அவன் மரபுரிமையாகப் பெற்றதாகவே விளங்குவதால் அவனது எழுத்துக்களின் ஆரம்பம் மரபைச் சார்ந்ததாகவே எழுகின்றது. ஆனால், எந்த ஆசிரியனும் வெறும் மரபைப் போலச் (imitate) செய்வதோடு திருப்தியடைந்து விடமுடியாது. ஆசிரியன் என்பவன் மரபினில் சில திருத்தங்கள் செய்து அது தனது தொடர்ச்சியான ஓட்டத்திலும் இயக்கம் கொண்டதாக விளக்க வேண்டும் என்பதற்காகப் பாடுபடுகின்றான்.

(2) கடந்த காலத்தைப் பற்றி முழுமையாக உணர்ந்துள்ள ஓர் எழுத்தாளன், அந்த மரபினில் சீர்த்திருத்தங்கள் செய்ய முனையும் போது தான் மரபுரிமையாகப் பெற்ற கடந்த காலத்தை நிகழ்காலத்தோடு தொடர்பு படுத்தத் தெரிந்தவனாகின்றான். எனவே, மரபாகிய நீரோட்டத்தின் போக்கிலேயே செல்வதை விடுத்து அதன் போக்கிற்கு மாறாக எதிர் நீச்சல் போட்டு மரபை வளம்படுத்துபவனே சிறந்த ஆசிரியனாகக் கருதப்படுகின்றான்.

மேற்கூறிய மரபு பற்றிய கருத்துக்களில் இருந்து பின்வரும் உண்மைகளைத் தெரிந்து கொள்ள முடிகின்றது.

(1) மரபு காரண காரியத் தொடர்புடையது
(2) மரபு போலி செய்யக்கூடிய தல்ல
(3) மரபு மாற்றங்களை உள்வாங்கும் இயல்புடையது
(4) மரபு வளம்படுத்தும் இயல்பு வாய்ந்தது

இத்தகைய கருத்துக்கள் வெறும் இலக்கியப் படைப்பாளிக்கு மாத்திரம் பொருத்தமுடையதன்று. தமது பணிகளால் தன் வாழ்க்கை வரலாற்றை வரலாற்றில் பதியச் செய்யும் ஆற்றல் உடையோர்க்கும் மிகுந்த பொருத்தமுடையது. சிறப்பாக நாவலரவர்களும் அவரது பல்வகை முயற்சிகளும் இவற்றுக்கோர் உதாரணமாகும்.

(1) நாவலரவர்கள், மரபு வழிவந்த *சுப்பிரமணிய உபாத்தியாயர் சரவணமுத்துப்புலவர்* முதலானோரிடத்திலும், பன்மொழிப் புலமைமிக்க **இருபாலைச் சேனாதிராய முதலியாரிடத்திலும்** மரபு வழி ஆசாரத்தோடும் அதற்கு மேலாகத் தம் இலட்சிய உணர்வுகளோடும் கல்வி கற்றவர்.

(2) நாவலரவர்கள் நெட்டுருப்பண்ணும் மாணவனாகவோ ஆசிரிய யராகவோ விளங்கவில்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(3) நாவலரவர்கள் மரபு வழிக் கல்வியைப் பின்பற்றியதோடு, வெஸ்லியன் மிஷன் கல்லூரியில் ஆங்கில மொழி மூலம் கல்வி பயின்று அங்கு ஆசிரியராகவும் விளங்கியவர். கல்வித்துறையில் ஏற்பட்ட நவீன மாற்றங்களை நாவலரவர்கள் இக்காலப்பகுதியில் நன்கறிந்தவர். இதனாலேதான் தமிழ்க் கல்வி மரபில் புதிய மாற்றங்களை நாவலரவர்கள் கொண்டு வர முயன்றவர்.

(4) நாவலரவர்கள் திண்ணைக் கல்வி மரபில் இயங்கிய தமிழ்க் கல்வி மரபினை மேலைத்தேசக் கல்வி மரபிற்கு ஏற்ப மாற்றியமைத்தார். தமது பாடசாலையில் புதிய பாடத்தினைப் புகுத்திய போதும் பாடம் பயிற்றும் முறைமையில் திண்ணைப் பள்ளிப் பயிற்சி முறையையும் பெரிதும் பேண முயன்றவர்.

(5) நாவலரவர்கள் கற்பித்தல் முறையை நவீனப்படுத்தினார். பாடநூல்களை எழுதினார். நூல்களுக்கு உரை எழுதினார். பழைய நூல்களைப் பதிப்பித்தார். தமிழில் சைவசமயப்பிரசங்க முறைமையைத் தொடக்கி வைத்தார். புராணபடன முறையைப் பொதுசனத் தொடர்புச் சாதனமாக்கினார். சமூகத்திற்குப் புதிய உத்வேகத்தை அளித்தார். பிற சமய வாதிகளின் பொருட்டும் சுதேசிய சமய வாதிகள் பொருட்டும் கண்டனங்களையும் பிரதிக் கண்டனங்களையும் செய்தார். முதியோர் கல்வியை வளம்படுத்தினார். நாவலரவர்கள் மரபு வழிக் கல்வி பயின்றவர். அதன் காரணகாரியத் தொடர்புகளை நன்குணர்ந்து அம்மரபினை வளம்படுத்த முனைந்ததன் பேறாக அமைந்ததே நாவலர் பணி; அதன் வளர்ச்சி நிலையே நாவலர் மரபாகும். இதனை நாவலர் பாரம்பரியம் என்றும் சொல்வர். நாவலரவர்கள் வளம் படுத்திப் பணிகளை அவர் தம் மாணவர்கள் உள்வாங்கி, போலி செய்யாது, தமது ஆளுமை, செல்வச் செழிப்பு, சூழ்நிலை முதலானவற்றுக்கு ஏற்றவாறு எடுத்து வளம்படுத்திய முறைமையே நாவலர் மரபு என்று குறிப்பிடலாம்.

(1) **நாவலர் வழிப்பட்ட இலக்கியப் பாரம்பரியம்** பொருள் முக்கியத்துவம் கொண்டது (2) விஷயத்திற்கேற்ப நடை கொண்டது (3) கண்டன தர்மம் கொண்டது (4) ஆரியம் - தமிழ் என்ற பேதமற்றது (5) பேசுவது போல் எழுதுவது (6) வரிசைக்கு முக்கியத்துவம் கொடுப்பது (7) போலிப் புலமையை வெறுப்பது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(8) தன் நாட்டுணர்ச்சி கொண்டது எனச் சுட்டுவார் கனகசெந்திநாதன்[4]. ஆனால் இவை மாத்திரம் நாவலர் மரபின் தன்மைகள் அல்ல. நாவலரவர்களின் மரபின் முக்கிய அம்சங்களான பிரசங்கம் செய்தல், புராண படனஞ் செய்தல், சுதேசிய பிறமத கண்டனங்கள் செய்தல், இலக்கண இலக்கியப் புலமை உடையவர் களாக இருத்தல், பாடசாலைகளைத் தாபித்தல், பாடநூல்களை எழுதுதல், நூல்களுக்கு உரை எழுதுதல், நூல்களைப் பதிப்பித்தல், திருமுறைகளே அருட்பா எனப்போற்றுதல் அருட்பாக்களைப் பண்ணோடு ஓதுதல், இந்திய தத்துவசாத்திரங்களில் எல்லாம் சைவசித்தாந்த சாத்திரமே தலையாயது என்பதை வற்புறுத்துதல், புதிய மாணவ பரம்பரையை உருவாக்குதல் முதலானவையும் முக்கிய அம்சங்களாக விளங்கின.

## II

இத்தகைய அம்சங்கள் தொடர்ந்து வளர்த்துச் செல்லும் பொருட்டு நாவலரவர்கள் தமது தருமங்களைத் தமது குடும்பப் பாரம்பரிய உறவினர்களுக்கு விட்டுச் செல்லாது, தமது மரபின் பொருட்டு விட்டுச் சென்றார். நாவலரவர்கள் இத்தருமசாசனத்தை மிகுந்த அவதானத்துடனும் முன்னோக்குடனும் செய்துள்ளார். சைவமும் தமிழும் தமது பாரம்பரி யத்துடன் இணைந்து செல்லும் வகையில் அதனை அமைத்துள்ளார். அது நாவலரவர்களது தீர்க்க தரிசனமான பார்வையெனலாம். நாவலரவர்களது சைவத் தமிழ் ஊழியம், செயலில் துறவின்பாற்பட்டது என்பதற்கு இத்தருமசாசனம் சிறந்த உரைகல்லாகும். 1919 ஆம் ஆண்டு எழுதப்பட்ட தருமசாசனத்தின்படி முக்கிய அம்சங்களுள் சிலவற்றை இங்கு நோக்கலாம்.

1. இவ்வித்தியாசாலையை நடத்துகின்ற அதிகாரிகள் இவ்வித்தி யாசாலையிலாவது ஆறுமுகநாவலர் மாணாக்கர் பரம்பரையிலாவது கல்வி கற்றவராயும், வேளாண்வருணத்தவராயும் சைவாசார முடையவராயும் இருத்தல் வேண்டும்.
2. இவர்கள் வண்ணார் பண்ணைச் சைவப்பிரகாச வித்தியாசாலை யையும் அதனோடு சேர்ந்த வித்தியாசாலைகளையும் பிறதருமங் களையும் ஆறுமுகநாவலரவர்கள் இயற்றியனவும் அச்சிட்டனவும் பிரமாணமாகக் கொண்டனவுமாகிய நூல்களுக்குச் சிறிதும் மாறுபாடில்லாமல் நடத்தல் வேண்டும்.

---

4. புதுமை இலக்கியம், இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்க வெளியீடு, 1962

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. இவர்கள் வருஷந்தோறும் வித்தியாசாலைப் பிள்ளைகளைப் பரீக்ஷிப்பித்து தைமாசங்களில் பிரசித்த சபையில் பிள்ளைகளுக்கு உபகாரங்கொடுத்தல் வேண்டும்.
4. இவர்கள் இவ்வித்தியாசாலையில் தமிழையே முக்கியமான பாஷையாகக் கற்பித்தல் வேண்டும்.
5. இவர்கள் வித்தியாசாலைப் பிள்ளைகளுக்கு இயன்றளவு சைவசமயாசாரமும் சைவசமய பத்தியும் வரும்படி செய்தல் வேண்டும்.
6. இவர்கள் பணமிருந்தால் விவேகமுடைய சைவப்பிள்ளைகளுக்கு அன்னவஸ்திரமுங்கொடுத்துக் கல்விகற்பிக்கலாம்.
7. பிள்ளைகள் சேர்ந்தால் இவர்கள் சமயசாத்திரங்களும் ஞான சாத்திரங்களும் கற்பிக்கலாம்.
8. இவ்வித்தியாசாலையைத் தமிழ்க்கல்விக்கும் சைவசமய விருத்திக்குமாகவே உண்டாக்கினதாக இவ்வித்தியாசாலையின் முதலாவே தனத்தில் நாவலவரவர்கள் சொல்லியிருக்கின்றபடியால் இவர்கள் வித்தியாசாலைச் செலவுக்கு மேலே வருமானமிருந்தால் சைவப் பிரசாரகர்களை ஏற்படுத்திச் சமயப் பிரசங்கமும் செய்விக்கலாம்[5].

இச் சாசனத்தின் பிரதான நோக்கம் சைவத் தமிழ் பாரம்பரியத்தைத் தொடர்ச்சியாக வளர்த்துச் செல்வதேயாகும். அவ் வளர்ச்சி நாவலரவர்களின் பாடசாலையின் ஊடாக வளர்த்துச் செல்லுமிடத்து அதன் பயன்பாடாக நாவலர் மரபு, அல்லது நாவலர் பாரம்பரியம் என்பது வெளிப்படுத்தப்படுகின்றது. இந்நாவலர் மரபு நிறுவன ரீதியாக மாத்திரம் செயற்படாது அதற்கு அப்பாலும் சமூக மட்டத்திலும் செயற்படுமிடத்து அது புதிய பரிமாணங்களைப் பெறுகின்றது. எனவே நாவலர் மரபு என்பது நாவலர் பாரம்பரியத்தாலும் அதன் செல்வாக்காலும் இணைந்ததொன்றே. இவற்றின் அடிப்படையிலும் நாவலர்தம் மரபினை நோக்கலாம்.

பொதுவாக நாவலர் மரபினை பின்வரும் இயல்களாக வகுத்து நோக்கலாம்.

(அ) நாவலர் மரபு
(ஆ) ஈழநாட்டில் நாவலர் மரபு
(இ) தமிழ் நாட்டில் நாவலர் மரபு
(ஈ) நாவலர் நோக்கும் மரபும்

---

5. தத்துவநியமனம். இல 10261

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயல் 2

## ஈழநாட்டில் நாவலர் மரபு

ஈழநாட்டில் நாவலர் மரபில் வந்தோர்களாக மு.தில்லைநாதபிள்ளை (?-1867) ந.க. சதாசிவம்பிள்ளை (?-1910) பச்சிலைப்பள்ளி காசிநாதபிள்ளை வித்துவசிரோமணி ந.ச. பொன்னம்பலபிள்ளை ந.ச. தில்லையம்பலபிள்ளை (-1882) வை.ஆறுமுகம்பிள்ளை, (-1888) மா. வைத்தியலிங்கபிள்ளை, (1902) த. கைலாசபிள்ளை, (-1939) இணுவில் நடராசையர் (-1903) க.வேலுப்பிள்ளை, வி. சுப்பிரமணியபிள்ளை (1873), சி.த.மு. பசுபதிச் செட்டியார் (1856-1906). இ. மாரிமுத்து, வை.சின்னத்தம்பிச் செட்டியார், சு. சபாபதிச் செட்டியார் இ.விசுவ நாதையர்; ஆறுமுகச் செட்டியார், வேன்மயில்வாகனச் செட்டியார் (1856-1912) மு. சுவாமிநாதையர், காசிவாசி, சி. செந்திநாதையர், வை. திருஞானசம்பந்தம்பிள்ளை, வடகோவை, சு. சபாபதிநாவலர் (1845-1903) ச.சபாரத்தின முதலியார் (1858-1922) வை. ஆறுமுகப்பிள்ளை (?-1894) மாதகல் ஏரம்பையர் (1847--1914), நீர்வேலி ச. சிவப்பிரகாசபண்டிதர் (1864-1916) வேலணை வி. கந்தப்பிள்ளை (1840-1914) பொன்னாவெளி வீ.சின்னத்தம்பி உடையார், இணுவில் அம்பிகைபாகர், சுழிபுரம் வை.திருஞானசம்பந்தம்பிள்ளை, ச.தில்லையம்பலம், சங்கரநாராயணபிள்ளை, ஊரெழு, சு.சரவணமுத்துப்பிள்ளை சி. பொன்னுத்துரை ஐயர், விநாயகமூர்த்திச் செட்டியார், ம.க. வேற்பிள்ளை (1846-1930) முதலானோர்கள் நாவலவர்களிடம் பாடங்கேட்டு, நாவலரவர்களின் சிந்தனைகளை நன்கு மனங் கொண்டு நாவலவரவர்களது மரபினை ஈழநாட்டில் முன்னெடுத்துச் சென்ற பெரியோர்கள் ஆவ்ர்கள்:

ஈழநாட்டில் நாவலர் மரபில் வந்தோர்கள் நாவலரவர்களுடன் கொட்ண் தொடர்புகளையும் அவர்கள் நாவலவர்களின் மரபினை மனங்கொண்டு செயற்பட்ட முறையினையும் இங்கு சுருக்கமாக நோக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தில்லைநாதபிள்ளை.மு., (-1867)**

இவர் வண்ணார் பண்ணையைச் சேர்ந்தவர். நாவலரவர்களுடன் யாழ்ப்பாணம் வெஸ்லியன் கல்லூரியில் உடன் பயின்றவர். உத்தியோகத்தின் பொருட்டு கிறிஸ்தவ சமயத்தில் சேராதவர். நாவலவர்களுடன் கொண்ட நட்பால் கொடுத்த வாக்கை நிறைவேற்றும் பொருட்டும் வலிய வாய்த்த உத்தியோக வாய்ப்பினையும் உதறித் தள்ளிவிட்டு நாவலரவர்களுடன் சைவ சமயப் பணிபுரியப் புறப்பட்டவர்[1]. 1849 ஆம் ஆண்டு முதல் நாவலரவர்களின் பிரசங்க முயற்சிகளை ஒழுங்குபடுத்துபவராக விளங்கினார். அக்காலத்தில் நாவலரவர்களிடத்தில் இலக்கிய இலக்கணங்களைப் பயின்றார். 1848 ஆம் ஆண்டு முதல் தில்லை. நாதபிள்ளை நாவலரவர்களின் சைப்பிரகாச வித்தியாசாலையில் உடன் ஆசிரியராக இருந்து வந்நாதர்.

1868 முதல் 1867 வரை அப்பாடசாலையின் தலமை உபாத்தியாராகக் கடமையாற்றி வந்தார்.[2] இப்பாடசாலையில் நீண்டகாலம் வேதனம் பெறாது ஆசிரியர் தொழில் புரிந்தவர்களுள் தில்லை நாதபிள்ளையும் ஒருவர். நாவலரவர்கள் இவர் பற்றிக் குறிப்பிடும் பொழுது; தற்காலத்தில் இவ்வித்தியாசாலையிலே கல்வி கற்பிக்கும் உபாத்தியாயர்கள் மூவர். இவர்களுள் ஒருவர்[3] மு். தில்லைநாத பிள்ளை. ''இவர் என்னோடு இங்கிலிஷ் கற்றவர் என்னிடத்திலே சில காலம் தமிழ் கற்றவர். இங்கிலிஷ் வித்தியாசாலையிலே சிலகாலம் உபாத்தியாராக இருந்தவர். இவர் நமது சைவப்பிரகாச வித்தியா சாலை தாபிக்கப்பட்ட காலம் முதலாக இதிலே தமிழ் உபாத்தியாயராய் இருக்கின்றார்''[4] என்று குறிப்பிடுவது இங்கு நினைவு கூரத்தக்கதாகும். நாவலவர்களைத் தெய்வாம்சம் பொருந்தியவராகக் கருதி வழிபட்டவர்களுள் தில்லை நாதபிள்ளை முக்கிய இடத்தைப் பெறுபவர். இவர்[5] பிரபவ ஆனி மாதம் (1867) தேகவியோகம் அடைந்தார்.

---

1.2, கனகரத்தின உபாத்தியாயரின், வே. ஆறுமுகநாவலர் சரித்திரம், 1994, பக். 13,27

3,4. யாழ்ப்பாணம் சை.பி. வித்தியாசாலை முதலிருபது வருஷத்து ஆவேதனம் (1848-1867), பக் 5-6

5. கைலாசபதி, ஈழத்து இலக்கிய முன்னோடிகள், மக்கள் வெளியீடு, சென்னை. ப. 89.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சதாசிவப்பிள்ளை, ந.க. ( ? -1910)**

நாவலர் மரபில் முதலிடம் பெறுபவராகக் கருதப்படுபவர் சதாசிவப்பிள்ளையாகும். நாவலரவர்களிடம் பாடம் கேட்கத் தொடங்கிய காலம் முதல் அவரைவிட்டுப் பிரியாது அவருக்குத் தொண்டு புரிந்தவர். அவ்வகையில் நாவலரவர்களைச் சிவம் என்றும் சதாசிவப்பிள்ளையைச் சக்தி என்றும் பெரியோர் போற்றினார்[6]. நாவலரவர்கள் வண்ணார் பண்ணையிலும் சிதம்பரத்திலும் பாடசாலைகள் அமைத்தபொழுது சதாசிவப் பிள்ளையே அவற்றின் மேற்பார்வையாளராகவும் ஆசிரியராகவும் விளங்கியவர். நாவலரவர்கள் சிதம்பரம் சைவப்பிரகாச வித்தியாசாலையின் முதல் உபாத்தியாயராக இருந்த பொழுது ''முதல் வகுப்பை வைகாசி மாதம் முதலாக நான் படிப்பித்தேன். முதலுபாத்தியாயர் ஐப்பசி மாதம் 23ஆந் திகதி வித்தியாசாலையை விடுத்தனர். அதன் பின் அவர் வகுப்புக்களை நல்லூர்ச் சதாசிவப்பிள்ளை கைமாறு வேண்டாது கற்பித்தனர்''[7] எனச் சதாசிவப்பிள்ளையின் சேவையைப் பாராட்டுவார். யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணைச் சைவப்பிரகாச வித்தியாசாலையை நாவலரவர்கள் அழியாது நிலைபேறு உடையதாக அமையும் பொருட்டுப் பிடியரிசித் தருமத்தை நடைமுறைப்படுத்தினார். அத்தகைய தருமத்தின் பொருட்டு உழைத்தவர்களுள் சதாசிவப்பிள்ளையின் சேவையை விதந்துரைப்பார்.[8] 1871 ஆம் ஆண்டு ஆடி மாதம் 29ஆந் திகதி நாவலரவர்களால் எழுதப்பெற்ற தரும சாசனத்தின்படி நாவலரவர்களின் வித்தியாசாலைத் தருமங்களையும் அதைச் சேர்ந்த தருமங்களையும் நாவலரவர்களுடைய மாணவ பரம்பரையினரே நடத்திவரல் வேண்டும் என்பதற்கிணங்க[9], நாவலரவர்களின் முதல் மாணாக்கராகக் கருதப்பட்ட சதாசிவப்பிள்ளை நாவலரவர்களின் வித்தியாசாலைத் தருமங்களுக் கெல்லாம் முகாமையாளராக நியமனம் பெற்றார்.

6. அருணாசலக் கவிராயர், ஆறுமுகநாவலர் சரித்திரம், 1934, 2 ஆம் பதிப்பு, முகவுரை, ப.13

7. சிதம்பரம் சை.பி.வித்தியாசாலை ஆவேதனம் 1866, ப.1

8. யாழ்ப்பாணம் சை.பி. வித்தியாசாலை முதலிருப்பது வருஷத்து ஆவேதனம், 1868,ப.4

9. பார்க்க பின்னிணைப்பு -1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Prof. V. SIVASAMY
UNIVERSITY OF JAFFNA

நாவலரவர்கள் போலச் சதாசிவப்பிள்ளையும் நைட்டிக பிரமச்சாரியாக வாழ்ந்ததோடு, நாவலரவர்கள் பதிப்பித்த நூல்களை மறு பிரசுரம் செய்தனர். நாவலரவர்கள் பரிசோதித்து வைத்திருந்த நூல்களைப் பதிப்பித்து வெளிப்படுத்தினர். நாவலரவர்களின் முன்னிலையில் பல நூல்களைப் பதிப்பித்தார். சி.வை தாமோதரம்பிள்ளையவர்களின் பதிப்புப் பணிக்குச் சதாசிவப்பிள்ளை தம்மால் இயன்ற மட்டும் உதவினார். திருவாசகம், திருக்கோவையார், திருவுந்தியார், (1868) தாயுமான சுவாமிகள் பாடல்கள் (1868), அகத்தியர் தேவாரத்திரட்டு (1874), சிவஞான போதமும் வார்த்திகமென்னும் பொழிப்புரையும் (1886), வைராக்கிய தீபவுரை, அவிரோதவுந்தியாருரை (1873), மகாபாரதம் (1874) முதலான நூல்களை நாவலரவர்களின் முன்னிலையிலும் மதுரையறுபத்து நான்கு திருவிளையாடற் புராணம், கம்பரகவல், சிவதத்துவ விவேகம் (1872) முதலான நூல்களைத் தாமாகவே பதிப்பித்து வெளிப்படுத்தினார்.

சதாசிவப்பிள்ளை, நாவலர் மரபிற்குத் தன்னை அர்ப்பணித்து, நாவலரவர்களுடைய தருமங்களைப் பொறுப்பேற்றுச் சிறப்புற நிர்வகித்ததோடு, நாவலரவர்களைப் போன்று நல்ல பதிப்பாசிரியனாக விளங்கிச் சிதம்பரத்தில் சாதாரண ஸூ ஐப்பசி மாதம் (1910) தேகவியோகம் அடைந்தார்.

## பொன்னம்பல பிள்ளை, ந.ச. வித்துவசிரோமணி (1836-1897)

இவர் நாவலரவர்களின் மருகர். நாவலரவர்கள் தமக்கையாரின் புதல்வர். சரவணமுத்துச் செட்டியாரின் மகன். இவர் ஆரம்பக்கல்வியை நல்லூர்க் கார்த்திகேய ஐயரிடத்திலும் பின்னர் நாவலரவர்களிடத்திலும் பலகாலம் பாடங்கேட்டவர். இவரிடத்தில் நல்ல ஞாபக சத்தியும் நிறைந்த புத்திக் கூர்மையும் ஆராய்ச்சித்திறனும் இயல்பாகக் காணப்பட்டமையால் இவர் ஏனைய புலவர்களைக் காட்டிலும் பல்வேறு துறைகளில் சிறந்து விளங்கினார். சங்க இலக்கியங்களிலும் இலக்கண நூல்களிலும் ஆற்றலுடையவராக இருந்தபொழுதும், சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம், கம்பராமாயணம் முதலான காப்பிய நூல்களிலும் பெரியபுராணம், கந்தபுராணம் திருவிளையாடற்புராணம் முதலான புராண நூல்களிலும் மிகுந்த ஈடுபாடும் புலமையும் பெற்றிருந்தார்[10]. இயல்பாக இவருக்கிருந்த இசைஞானம் நாவலரவர்களால் வளர்த்துச் செல்லப்பட்ட புராணபடன முறையையும் காவிய இரசனையையும் ஆழமாக ஊன்றி வளர்ச்சி பெறுவதற்கு உதவிற்று பொன்னம்பல பிள்ளையின் இரசனைச் சிறப்பினைக் கூறவந்த கணேசையர்,

10. கணேசையர், சி. ஈழநாட்டுத் தமிழ்ப்புலவர் சரித்திரம், 1934, பக் 71 71 - 74

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''பொருள் செல்லுங் கேட்டவர்கள் ''யாழிசையோ பாரதி தன்னின்னிசையோ'' என்று ஆயிருக்குமாறு தமக்கு இயற்கை யாமைந்த இனிய மிடற்றோசையோடும் விரிவுரையோடும் சொல்லின்பமும் பொருளின்பமும் தோன்றச் சொல்வார். இவர் சொல்லும் பொருளிலே பரிமேலழகர் நச்சினார்க்கினி யர் பேராசிரியர் முதலியோருரைத்த உரைத்திறங்களெல் லாம் அமைந்து மிளிரும். வாக்கிற் பிறக்கும் உரையும் பரிமேலழகர் உரைபோலத் தெளிவும் இனிமையும் பொருந்தி ஒளிரும். இவர் பொருள் சொல்லும் அழகையும் இனிமையையுங் கேட்பதற்காக யாழ்ப்பாணத்திலே பற்பல ஊர்களிலுமுள்ள பிரபுக்களும் அறிஞர்களும் தத்தங் கோயில்களிலே புராணபடனம் நடக்கும் காலத்திலே இவரை அழைத்துப் பொருள் சொல்லுவித்துக் கேட்டு மகிழ்வர்''

எனக் குறிப்பிடுவது[11] இவர் இலக்கிய இரசனையில் ஈடும் எடுப்பும் இல்லாதவர் என்பதைக் காட்டி நிற்கும். கந்தப் புராணத்தில் சூரனமைச்சியற் படலத்தில் வரும் ''வேதக் காட்சிக்கும் உபநிடத உச்சியில் விரித்த போதக் காட்சி காணலன்'' எனவரும் செய்யுளுக்கு மாமனாரான நாவலரவர்கள் பயன் சொல்ல மருகர் பொன்னம்பலபிள்ளை வாசித்தமை வரலாற்று முக்கியத்துவம் உடையது என்பர்[12]. பொன்னம்பலபிள்ளை வாசித்தேயறி யார். அவர் தொழில் பயன் சொல்லுதலேயாகும். அவர் வாசித்தது தமது மாமனாராகிய நாவலருக்கே என்பர். பிள்ளையவர்கள் புராணங்களில் காட்டிய ஆர்வத்தை விடக் காவியங்களுக்குப் பொருள் சொல்லுவதில் காட்டிய புலமையே வரலாற்றுப் புகழ்மிக்கது. ''கம்பராமாயணத்திற்கு இவர் பொருள் சொல்லுவது மிக விசித்திரமாயும் மிக இன்பமாயுமிருக்கும், இவர் சொல்லும் நூதனப் பொருள்களைக் கேட்டோர், கம்பன்றான் மீளவும் பிறந்து, தான் பாடிய இராமாயணத்துக்குப் பொருள் சொல்லுகின்றானா'' வென்று அதிசய முறுவர்[13] என இவரது கம்பராமாயண இரசனையை அநுபவித்தோர் குறிப்பிடுவர்.

---

11. கணேசையர் சி. ஈழநாட்டுத் தமிழ்ப்புலவர் சரித்திரம், 1934, பக் 72-73

12. கணபதிப்பிள்ளை, சி., 'நாவலரும் புராணபடனமும்', நாவலர் மாநாட்டு விழாமலர், 1969, ப.5

13. கணேசையர், சி., ஈழநாட்டுத் தமிழ்ப் புலவர் சரித்திரம், 1934, பக். 72-73

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளையவர்களின் இரசனைக் குறிப்புக்கள் அவரது மாணவர்களால் குறிப்பு எடுக்கப்பட்டு நாட்டின் பல பகுதிகளுக்கு எடுத்துச் சென்று படிக்கப்பட்டு வந்தன. பிள்ளையவர்கள் வெறும் படன ஆசிரியராக அமையாது, வீட்டிலும் கல்விச் சாலைகளிலும் மாணவர்கட்குப் பாடம் சொல்லி வந்தார். ஊரத்தூர்கோவை. வைத்திலிங்கபிள்ளை, திருவாவடுதுறை பொன்னோதுவார், சுப்பிரமணிய ஓதுவார். காரைக்குடி - சொக்கலிங்கச் செட்டியார் பழனிகுமாரசுவாமித் தம்பிரான், பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் முதலானோர்கள் தமிழ் நாட்டில் பிள்ளையவர்களின் மாணாக்கர் ஆவர். ம.க.வேற்பிள்ளை, சுவாமிநாத பண்டிதர், சி,பொன்னுத்துரைஐயர், தாவடி ஆ.மு. சோமாஸ்கந்தபிள்ளை, கந்தர்மடம் வை.சி, சிவகுருநாத பிள்ளை, கொக்குவில் பண்டிதர் தம்பு, சாவகச்சேரி ச. பொன்னம்பலபிள்ளை, சி.கணேசையர், நல்லூர் வே. கனகசபாபதி ஐயர் முதலானோர்கள் ஈழ நாட்டில் பிள்ளையவர்களிடம் பாடங்கேட்ட மாணவர்கள் ஆவர். பிள்ளையவர்களின் ஆரம்பகால மாணவர்களுள் பலர் நாவலரவர்களிடம் பாடம் கேட்டடவர்களேயாகும். நாவலரவர்களின் சித்தியின் பின் சைவப்பிரகாச வித்தியாசாலைகளின் முகாமையாளராகவும் தலைமை உபாத்தியாயராகவும் கடமையாற்றினார்.

பிள்ளையவர்கள் வெறும் கல்விப் பணியாளராக மாத்திரம் சேவை புரியாது, நாவலரவர்கள் விட்டுச் சென்ற இலட்சியங்களை முன்னெடுத்துச் செல்பவராகவும் அதன் இயக்கத்துக்குத் தலைமை தாங்குபவராகவும் விளங்கினார். நாவலரவர்கள் 1879 ஆம் ஆண்டு நிறுவிய சைவப்பிரகாச சமாஜம் நாவலரவர்களின் பின் அது செயல் இழந்த நிலையில் அதனைச் சீரமைக்கும் வகையிலும் நாவலரவர்களின் இலட்சியங்களை முன்னெடுத்துச் செல்லும் வகையிலும் தோன்றிய சைவப்பிரகாச சமாசீயம் (1880) சைவ பரிபாலன சபை (1888) முதலான சபைகளின் ஆரம்பகாலத்தலைவராக அமர்ந்து பெரும் பணியாற்றினார். **சைவ உதயபானு** (1881) **இந்துசாதனம்** (தமிழ், ஆங்கிலம் 1889) ஆகிய பத்திரிகைகள் பிள்ளையவர்களின் தலைமையில் மேற்படி நிறுவனங்களால் வெளிப்படுத்தப்பட்டவையாகும்.

பிள்ளையவர்கள் நாவலரவர்களைப் போன்று உரையாசிரியராகவும் பதிப்பாசிரியராகவும் திகழ்ந்தார். மயூரகிரி புராணம் (1885) பாரதம் - ஆதி பருவம் (1931) முதலான நூல்களுக்குப் புத்துரையும் திருக்கேதீச்சர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிகத்துக்கு விளக்கவுரையும்[14] எழுதியுள்ளார். யாழ்ப்பாணத்து ஆரியச்சக்கரவர்த்தியாகிய அரசகேசரி மொழிபெயர்த்த இரகுவம்சத்தை முதலில் பதிப்பித்தவரும் இவரே[15] ஈழநாட்டில் வெளிவந்த புராண உரை நூல்களும் காப்பிய உரைகளும் பெரிதும் பிள்ளையவர்களின் உரைக் குறிப்பை அடியொற்றி எழுந்தவையேயாகும். நாவலர் மரபிற்கு தம்மை அர்ப்பணித்து நாவலர் மரபுகள் வளர்ந்தோங்க உழைத்தவர் பிள்ளையவர்கள். இவர் விளம்பி ஞூ மார்கழி மாதம் (1897) தமது பூதவுடலை விட்டுப் புகழ் உடம் பெய்தினார்.

## ஆறுமுகம்பிள்ளை, வை.

பிள்ளையவர்கள் செல்வவளமுள்ள குடும்பத்தில் பிறந்தவர். இவரது பூட்டனார் வையிரவநாதர். ஒல்லாந்தர் காலத்தில் மணியகாரனாகத் தொழில் புரிந்தவர். இவரது பேரன் வைரவநாதர் ஆவார். இவரது இளைய புதல்வரே ஆறுமுகம் பிள்ளையாவர்[16]

சின்னத்தம்பி என்பார் இவரது மூத்த புதல்வன். இவர்கள் இருவரும் வண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலையிலும் சைவாங்கில வித்தியாசாலையிலும் நாவலரவர்களிடத்தில் பயின்றவர்கள். இவ்விருவரும் பிற்காலத்தில் வர்த்தகத்தில் ஈடுபட்டுப் பெரும் செல்வர்களாக விளங்கியவர்கள். இவர்களுள் ஆறுமுகம்பிள்ளை நாவலரவர்களின் காலத்தில் நாவலரவர்களின் நோக்கினை மனங்கொண்டு செயற்பட்டவர். நாவலரவர்களின் சித்தியின் பின் நாவலர் மரபினை வளர்ப்பதிலும் அதனை நிறைவேற்றுவதிலும் பெரும்பங்கு கொண்டு உழைத்தவர். சைவப்பிரகாச சபைகளை நிறுவுதல். அச்சியந்திரசாலையை நிறுவுதல். பத்திரிகையை வெளியிடல், நூல்களைப் பதிப்பித்து வெளியிடல், ஆலயத்திருப்பணிகளில் ஈடுபடுதல் முதலான பணிகளில் ஈடுபட்டுச் சைவசமய வளர்ச்சிக்கு உழைத்த பெரியோர்களுள் பிள்ளையவர்களுமொருவர்.

---

14. இந்நூல் திருக்கேதீச்சரத் தலத்தின் மேல் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரும் சுந்தர மூர்த்தி நாயனாரும் பாடியருளிய தேவாரங்களுக்கு விளக்கவுரையும் தக்ஷிணகைலாச மான்மியத்தில் இடம் பெற்றுள்ள திருக்கேதீச்சரவைபத்தின் மொழிபெயர்ப்பையும் கொண்டுள்ளது.
15. இது கர ஞூ ஆடி மாதம் யாழ்ப்பாணம் சைவப்பிரகாச யந்திரசாலையில் அச்சிட்டு வெளிப்படுத்தப்பட்டுள்ளது.
16. வேலுப்பிள்ளை, க., யாழ்ப்பாண வைபவ கௌமுதி, ஜயசிறி சாரதா பீடேந்திரசாலை, வயாவிளான், 1918, பக். 264

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA
JPL



நாவலரவர்கள் நிறுவிய சைவப்பிரகாச சமாஜம் (1879) நாவலரவர்களின் சித்தியின் பின் தளர்வடைந்து விட்டது. அதன் நோக்கங்களை முன்னெடுத்துச் செல்லும் வகையில் விக்கிரம ஞு சித்திரை மாதம் (1880) **சைவப்பிரகாச சமாசீயம்** என்னும் ஒரு நிறுவத்தை தம் பொருள் கொண்டு நிறுவினார்.[17] இந்நிறுவனம் அச்சுயந்திரசாலையை நிறுவுதல், பத்திரிகையை வெளியிடல், நூல்களை அச்சிடல் ஊர்கள் தோறும் பிரசங்கம் செய்தல் பாடசாலைகள் அமைத்தல் உலமுற்ற ஆலயங்களைப் புனருத்தாரணஞ் செய்தல், முதலான நோக்கங்கைள அடிப்படையாகக் கொண்டிருந்தது. இந்நிறுவனத்தின் தலைவராகப் பொன்னம்பலபிள்ளையும் பொருளாளராக ஆறுமுகம்பிள்ளையும் விளங்கினர். விக்கிரம ஞு 18ஆந் திகதி யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையில் சைவப்பிரகாச அச்சுயந்திரசாலை என்னும் பெயருடன் ஓர் அச்சியந்திரசாலையை நிறுவினர். இவ்வச்சு யந்திரசாலை இந்நிறுவனத்தின் பல நோக்கங்களை நிறைவேற்றுவதற்குப் பெரிதும் வாய்ப்பாக அமைந்தது. இந்நிறுவனத்தின் முகாமையாளராகவும் பிள்ளையவர்கள் கடமையாற்றினார்.

இவ்வச்சுயந்திரசாலையில் இருந்து விக்கிரம ஞு ஆவணி மாதம் **உதயபானு** என்னும் பெயருடன் ஒரு பத்திரிகையை இச்சமாசீயம் வெளிப்படுத்தியது. இதன் முதல் ஆசிரியராக த. கைலாசபிள்ளை கடமையாற்றினார். 1881 ஆம் ஆண்டில் இப்பத்திரிகை சைவ உதயபானு் என்னும் பெயருடன் திங்கட்கிழமை தோறும் வெளி வந்தது. நாவலரவர்களும் சைவ உதயபானு என்னும் பெயருடன் ஒரு பத்திரிகையை வெளியிடல் வேண்டுமென ஆர்வம் கொண்டிருந்தனர் என்பது ஈண்டு மனங்கொள்ளத்தக்கதாகும்.

இவ்வச்சுயந்திரசாலையின் மூலம் நாவலரவர்களால் அச்சேற்றாது விட்டுச் சென்ற நூல்களையும் நாவலரவர்கள் பதிப்பித்த நூல்களையும் பிற நூலாசிரியர்கள் எழுதிய நூல்களையும் பிள்ளையவர்கள் வெளியிட்டு வந்தார். ஆசௌசதீபிகை (1883) கந்த புராணம் மூலம் (1883) பாலபாடம் நான்காம் புத்தகம் (1883) இலக்கணச் சுருக்கம் (1883) முதலான நாவலரவர்களின் நூல்களும் திருவாதவூரடிகள் புராணவுரை (1883) புலியூரந்தாதியுரை (1883) கந்தரலங்காரம் (1884) கந்தரநுபூதி (1884) இலங்கைச் சரித்திர சூசனம் (1883) ஆறுமுகநாவலர் சரித்திரம் (1882) நைடதம் முதலான நூல்களும் இவ்வச்சுயந்திரசாலையில் இருந்து வெளிவந்தன.

17. சைவ உதயபானு, சித்திரை, 1880

12120 S.C

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலரவர்கள் தனது சைவசமயப் பிரசாரப் பணிகளுள் ஆலயப் புனருத்தாரணப்பணிக்கே முக்கியத்துவம் கொடுத்து பிரசங்கித்து வந்தார். நாவலர்களால் தம் காலத்தில் சில ஆலயங்களின் புனருத்தாரண பணிகளிலேயே ஈடுபடமுடிந்தது. ஆனால், ஆறு முகம்பிள்ளையே நாவலர் மரபினைப் பேணி நல்லூர்க் கந்தசுவாமி கோயில்[18], கீரிமலைச் சிவன் கோயில்[19] வண்ணார் பண்ணைச் சிவன் கோயில், நீராவியடிப் பிள்ளையார் கோயில், யாழ்ப்பாணம் பெரும்மாள் கோயில், நல்லூர் வீரகாளியம்மன் கோயில் கண்டி முருகன் கோயில், கண்டி கட்டுக்கலை பிள்ளையார் கோயில் முதலான ஆலயங்களின் வளர்ச்சிப் பணிகளில் தாம் ஈடுபட்டு உழைத்த தோடு[20] அவற்றின் கிரியை நெறிகள் ஒழுங்காக நடைபெறும் பொருட்டு மானியங்களையும் விட்டுச் சென்றார். பிற்காலத்தில் நல்லூர்க் கந்தசுவாமி கோவிலில் நாவலரவர்கள் கூறிய திருத்தங்கள் பல மேற்கொள்ளப்படுதற்கு ஆறுமுகம்பிள்ளை அவர்களே அடிப்படைக்காரணமாக அமைந்தனர் எனில் மிகையன்று.

## தில்லை நாதபிள்ளை, ந.ச. (-1882)

இவர் சரவணமுத்துச் செட்டியாரின் புதல்வர். வித்துவ சிரோமணி ந.ச. பொன்னம்பல பிள்ளையின் தமையனார். நாவலரவர்களின் மருகர். நாவலரவர்களிடம் கல்வி பயின்றவர். வண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலையின் உபாத்தியாயராக இருந்தவர். அதன் முகாமையாளராக இருந்ததோடு, அதன் வளர்ச்சிக்கு அயராது உழைத்தவர். திருமுறைகளைப் பண்ணோடு ஓதுதல், பிரசங்கம் செய்தல். புராணபடனம் செய்தல் முதலான வற்றில் வல்லவர்.

''ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலருடைய வித்தியாசாலை சிறப்புற்று இனிது நடை பெறுமாறு ஆனவழி வகைகளைத் தன்னுடைய மனம் செயல் வாக்கிய கிருவித கரணங்களும் ஒத்துச் செய்து வருதலினாலும், அதற்கு வந்த பற்பல இடையூறுகளை நீக்குதற்கு இராப் பகல் பேதமின்றி உற்ற விடத்துதவி புரியும் சில நியாயதுரந்தரர்கள் வீடுகளிற் சென்றும் நீதித் தலங்களிற் சென்றும் நீக்கியும் நீக்க முயன்றும் வருதலினாலும் போசனம் நித்திரை ஆகிய சுகங்களைக் காலாகாலத்திலே யனுபவியாது இழந்து....வித்தியாசாலை விஷயத்திலே தனது வாழ்நாளைப் போக்க முயன்றவராய் இவ்வித்தி

18. சைவ உதய பானு 24 பங்குனி, 1884
19. கீரிமலைச் சிவன் கோயில் ஆவேதனம், சைவப்பிரகாசயந்திரசாலை, 1882, பக். 7
20. நேர்காணல் கந்தர்மடம் சண்முக சுந்தரம் ஓய்வு பெற்ற பாட நூல் எழுத்தாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாசாலையின் விவகாராதிகள் பொருட்டாகத் தமது மரணாந்தம் வரையும்....வித்தியாசாலை விஷயங்களைக் குறித்துத் தமது தம்பியும் வித்துவ சிரோமணியும் ஆகிய ஸ்ரீமத் பொன்னம் பலப்பிள்ளை அவர்களுக்கும் சில தகுந்த மனுஷர்களுக்கும் வெளிப்படுத்தியும் பின்பு தமது மனதைத் திவ்விய தேவாராதி தோத்திரங்களிற் செலுத்தியும் இருந்து இம்மாதம் 3ஆம் தேதி சிவபதப் பிராப்தியாயினார் [21]. எனச் சைவ உதயபானுப் பத்திரிகை, இவரின் பற்றற்ற சேவை மனப்பாங்கினை மேற்காட்டியவாறு சிறப்பித்துக் குறிப்பிடும்

## வைத்திலிங்கபிள்ளை, வை.,

இவர் நாவலரவர்களின் உறவினர். 1848 ஆம் ஆண்டு முதல் யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலையில் பயின்றவர். நீண்ட காலம் வேதனமின்றிக் கல்வி கற்பித்து வந்தவர். நாவலரவர்களின் அன்புக்குப் பாத்திரமானவர். ''உபாத்தியாயர் வைத்திய லிங்கபிள்ளை, இவர் நெடுங்கணக்கு முதல் இலக்கண விலக்கியங்கள் வரையும் இவ்வித்தியாசாலையிற்றானே கற்றுக் கொண்டு பத்து வருஷ காலம் இதில் உபாத்தியாயராக இருக்கின்றார்'' என நாவலரவர்கள் இவர் தொண்டினைப் பாராட்டுவார்.[22] 1867 ஆம் ஆண்டு முதல் தில்லைநாத பிள்ளைக்குப் பின் இப்பாடசாலையின் தலைமை உபாத்தியாயராக விளங்கியவர் இவரே. பிரசங்கம் செய்தல், புராணபடனஞ் செய்தல் பண்ணோதுதல் என்பன இவர் தமது கல்விப் பணிக்கு அப்பால் நின்று சமய வளர்ச்சியின் பொருட்டு ஆற்றிய தொண்டுகளாகும்.

## கைலாசபிள்ளை,த.

நாவலரவர்களின் தமையனார் ஆராய்ச்சி தம்புவின் மகன் கைலாசபிள்ளையாவார். நாவலரவர்களின் அந்திம காலத்திலே அவரின் முன்னிலையில் அவருடைய எழுத்து வேலைகளையும் ஏவல் வேலைகளையும் செய்து வந்தார். நாவலரவர்களின் சித்தியின் பின் நாவலரவர்களின் சொத்துக்கு உரிமை பாராட்டியவர்[23] சொத்துக்களைப் பெற்றுக் கொண்டவர். 1897 ஆம் ஆண்டிற்குப் பின் வண்ணார் பண்ணைச் சைவப்பிரகாச வித்தியாசாலையின் முகாமையாளராக நியமனம் பெற்றவர்.

21. சைவ உதயபானு, பங்குனி, 1882
22. யாழ்ப்பாணம் சை பி. வித்தியாசாலை முதலிருபது வருஷத்து ஆவேதனம் 1868 ப 6
23. சைவ உதயபானு 1881

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் தமிழ், ஆங்கிலம், சங்கதம் ஆகிய மொழிகளில் புலமை மிக்கவர். நாவலரவர்களின் பின் வண்ணார் பண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலையைச் சிறப்புடன் நடத்தியவர். சுன்னாகம் அ.குமாரசுவாமிப் புலவரைச் சைவப்பிரகாச வித்தியாசாலையின் தலைமைத் தமிழ் உபாத்தியாயராக நியமித்தவர். புலவரின் நியமனம் கைலாசபிள்ளையின் பல்வேறு முயற்சிகள் வெற்றி அடைவதற்குக் காரணமாயிற்று. நாவலரவர்களின் தருமங்களை அடிப்படையாகக் கொண்டு புலவரின் அனுசரணையுடன் ஒரு காவிய பாடசாலையை (1917) நடத்தினார். இங்கு தமிழ் சங்கத மொழிகளும் இலக்கிய இலக்கண நூல்களும் பயிற்றப்பட்டன. இங்கு பயிலும் மாணவர்கட்கு உண்டியும் உறையுளும் இலவசமாக வழங்கப் பட்டன. ஆரியச்சக்கரவர்த்தி மன்னரின் பின் யாழ்ப்பாணத்தில் **தமிழ்ச்சங்கமொன்றினை** (1898) அமைப்பதில் முன்னின்று உழைத்தவரில் கைலாசபிள்ளையுமொருவர். இது பாண்டித்துரைத் தேவர் அமைத்த தமிழ்ச்சங்கத்துக்கு (1904) முன்னோடியாக அமைந்தது. யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத்தில் கற்றுத் தேறியோருக்குப் பாரதி பண்டிதர் பட்டங்கள் வழங்கப்பட்டன. ''கற்று வல்லவர்களென நன்கு மதிக்கப்பட்டவர்களுக்கு அவரவர் தகுதிக்கேற்ப பெயரும் சின்னமும் கொடுத்தருளுவார்களாயின் நமது தமிழ் மொழி மிகவும் வளர்ந்தோங்கும்''[24] என்ற நாவலரவர்களின் சிந்தனைக்கு வடிவம் கொடுக்க உழைத்தவர் கைலாசபிள்ளை.

நாவலரவர்களின் இலட்சியங்களைப் பேண பல நிறுவனங்கள் அவ்வப்போது தோன்றிய பொழுதும், 1888 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட **சைவ பரிபாலன சபையே** நாவலரவர்களின் இலட்சியங்களைப் பேண முயன்ற பெரிய நிறுவனமென்று குறிப்பிடலாம். இந்நிறுவனத்தை அமைப்பதிலும் வளர்ப்பதிலும் பிள்ளையவர்கள் முக்கிய பங்கினை வகித்ததோடு, அதன் முதற் செயலாளராகவும் கடமையாற்றினார். இச்சபையால் ஆரம்பிக்கப்பட்ட இந்து உயர் பாடசாலையிலும் இந்துக் கல்லூரியிலும் அவ்வப்பொழுது ஆசிரியராகவும் பணிபுரிந்தனர். இச்சபையால் ஆரம்பிக்கப்பட்ட **இந்து சாதனப் பத்திரிகை**யின் முதல் ஆசிரியராக வேதனமின்றி ஏழு ஆண்டுகள் பணிபுரிந்தமை குறிப்பிடத்தக்க தொன்றாகும்.

**கிறிஸ்துமத கண்டன சபை, கலாவிருத்திச் சங்கம், சைவசித்தாந்தசபை, சைவசித்தாந்த மகா சமாஜம்** முதலான சபைகள் இருபதாம் நூற்றாண்டின் முதற்காற்பகுதியில் தோன்றி நாவலரவர்களின் சைவசமய

24. கைலாசபிள்ளை, த., ஆறுமுகநாவலர் பிரபந்தத்திரட்டு, 1921, ப.28

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கங்களை முன்னெடுத்துச் சென்றன. இத்தகைய சபைகளின் தோற்றத்திலும் வளர்ச்சியிலும் முக்கிய பங்கு கொண்டு பணியாற்றியவர் கைலாசபிள்ளையவர்கள்.

சைவர்களுக்கு முதன் நூலாக விளங்குவது திருமுறைகளே. அவையே அவர்களுக்கு வேதம். அவை வேதங்களிலும் பார்க்க உயர்ந்தவை, கந்தபுராணமும் பெரியபுராணமும் இதன் பேரிலக்கியங் களாகும் என்பதில் திடமான நம்பிக்கை கொண்டிருந்தவர் நாவலரவர்கள். கைலாசபிள்ளையும் இக்கருத்தினைப் பேணும் வகையிலேயே மேற் கூறிய முயற்சிகள் பலவற்றை அவர் மேற் கொண்டார். அத்துடன் நாவலரவர்களின் பாடசாலையில் ஒரு சிறிய ஆலயம் அமைத்து சமயகுரவர், சேக்கிழார் ஆகிய பிரதிமைகளோடு நாவலரவர்களின் பிரதிமையை பிரதிட்டை செய்வித்து நித்திய பூசை நடைபெறும் பொருட்டு நிபந்தங்களும் விட்டுச் சென்றார். இம் முயற்சி நாவலரவர்களின் மரபினையும் நாவலரவர்களின் இலட்சியத்தினையும் நினைவு கூர்ந்து வேரூன்றச் செய்வதற்கு எடுத்துக் கொண்ட முயற்சி எனலாம்.

நாவலரவர்களுக்குப் பல மாணவர்கள் இருந்த பொழுதும் நாவலர்களின் ஆக்கங்களை தொகுத்துப் பதிப்பித்து வெளியிட்டவர் இவரே யாவார். **ஆறுமுகநாவலரவர் பிரபந்தத்திரட்டு** (முதலாம் இரண்டாம் பாகம்) என்பது இவர் தொகுத்த நூலாகும். ஆறுமுக நாவலர் சரித்திரம் (1916) என்னும் நூலையும் இவர் எழுதியுள்ளார். கைலாசபிள்ளை நாவலர் மரபின் நோக்கங்களைத்தக்கவாறு உள்வாங்கிச் சிந்தித்துச் செயற்பட்டாரா என்பது ஆராயப்பட வேண்டிய தொன்றாகும் ஆயினும் சி.கணேசையர் இவரது பணியினை மதிப்பீடு செய்யும் பொழுது[25]

> ''யாழ்ப்பாணத்திலே நாவலருக்குப் பின் தமிழ்க்கல்வி பயிலும் சைவ சமயத்திலும் உண்மை யபிமானம் பூண்டு அவற்றின் பொருட்டுத் தமதாயுட் காலத்தை அர்ப்பணஞ் செய்தவரிவரே யென்பது ஒரு போதும் மிகையாகாது நாவலருக்குப் பின் மறைகனிந்தனை சைவநிந்தனை ஏற்பட்ட காலந்தோறும் அவற்றைப் பொறா மனமுடையவராய் அந்நிந்தனைகளை மறுத்துப் பற்பல கண்டனங்ளெழுதி எதிர்த்துப் போராடிய வருமிவரே. உண்மைப் புலவர்களை யன்றிப் போலிப்புல வர்களை முகநோக்கியு மறியாதவரு மிவரே. முக நோக்கிப்

25. கணேசையர்,சி,ஈழநாட்டுத் தமிழ்ப்புலவர் சரித்திரம், 1938,ப.203

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொய்யான காரியங்களைச் செய்தற்கு உடன்படாதவருமிவரே. காலந்தோறும் புதிது புதிதாகத் தோன்றும் நாகரிகங்களிலீடுபட்டு அவற்றின் பொருட்டுப் பழைய பழக்க வழக்கங்களைக் கைவிடாது ஒழுகின்றவருமிவரே''.

எனக் குறிப்பிடுவது இவர் யாழ்ப்பாணப்பாரம்பரியத்தின் காவலனாக மதிக்கப்பட்டார் என்பதைப் புலப்படுத்தும்.

இவர் வசனத்தொடை (1967) பாலபாடங்கள் (1890 - 1892) என்னும் உரை நூல்களையும் சதுர்வேத தார்ப்பரிய சங்கிரகம், முத்திரால க்ஷணம் (1911) பசுபதிபாச விளக்கம் (1906) சிவஞான போத விருத்தி, சித்தாந்த சிகாமணி, சிவயோகரத்தினம் சிவயோக சாரம், சிவஞான சித்தியார் - சுபக்கம் முதலான சமய தத்துவ நூல்களைப் பதிப்பித்து வெளியிட்டார். சிவகீதை என்னும் நூலும் இவரால் பரிசோதிக்கப் பெற்றது. 1939 மாசி 2ஆம் திகதி கைலாச பிள்ளை தேகவியோகம் அடைந்தனர். அப்பொழுது ஈழகேசரி ''பொதுவாகத் தற்காலத்தில் உள்ளோர் இவர் கொள்கைகளை ஏற்காதவராய் இருப்பினும் இவர் மாட்டு அவர்க்கிருந்த மதிப்புக்களவின்று அதற்கெல்லாம் காரணம் இவரது நேர்மையும் தாம் சொல்வது போல உதாரணமாக நடக்கும் திறமையும் எதற்கும் அஞ்சாத நெஞ்சுறுதி உடமையுமேயாகும்'',[26] எனக் குறிப்பிட்டிருப்பதும் ஒப்புநோக்கத்தக்கதாகும்.

## நடராசையர் - இணுவில் (-1903)

நாவலரவர்களின் முதற் காலகட்ட மாணவபரம்பரையைச் சேர்ந்த இவர், நாவலரவர்களிடத்தில் தமிழ் இலக்கிய இலக்கண நூல்களையும் சித்தாந்த நூல்களையும் கற்றவர். சித்தாந்த சாத்திரங்களில் வல்லவர். சங்கத மொழியில் தேர்ச்சி பெற்றவர். தமிழ் நாட்டில் சிதம்பரம் மதுரை முதலான இடங்களில் தங்கி ஆலய தரிசனம் செய்து கொண்டு சைவ சித்தாந்தத்தைப் போதித்து வந்தவர். **சிவஞான சித்தியாருக்கு** ஞானப்பிரகாச முனிவர் எழுதிய உரையினை முதலில் 1888 ஆம் ஆண்டு திருப்பற்றூர் சின்னையா நாடார் அச்சுயந்திரசாலையில் பதிப்பித்து வெளியிட்டவர் இவரேயாவர். பொதுவாக ஞானப் பிரகாச உரையினைச் சிவசமவாத உரையெனக் கொள்வது மரபு. ஆயினும் நாவலர் மரபில் வந்தோர் அவ்வுரையினைச் சைவ சித்தாந்த மரபின் அடிப்படையில் நோக்குவது பொது இயல்பாகக் காணப்படுகின்றது. நாவலர் மரபில் சித்தாந்த நெறியின் வளர்ச்சியில் மிகுந்த பங்கு கொண்டுழைத்தவர் நடராசையர் ஆவார். இவர் சோபகிருது ஷு மார்கழி மாதம் (1903) சித்தி பெற்றனர்.

---

26. ஈழகேசரி, 26 மாசி, 1939

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PROF. V. SIVASAMY
UNIVERSITY OF JAFFNA

## வேலுப்பிள்ளை,க,

இவர் யாழ்ப்பாணத்திலுள்ள திருநெல்வேலியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். 1848 ஆம் ஆண்டு முதல் நாவலரவர்களிடம் பயின்றவர். வண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலை, சிதம்பரம் சைவப்பிரகாச வித்தியாசாலை ஆகிய இரண்டு பாடசாலைகளையும் நாவலரவர்கள் கட்டி முடிப்பதற்கு நாவலரவர்களோடு ஒன்றிணைந்து உழைத்த மாணவர்களுள் க. வேலுப்பிள்ளையும் ஒருவர்[27]. இவர் பிற்காலத்தில் ஒரு வர்த்தகராக விளங்கிய பொழுதும் நாவலர் மரபில் நின்று செயற்படுவதையே பெரிதும் விரும்பினார். ''நல்லையருளாள னாறுமுக நாவலனெங் குருபரனுக் கடிமை செய்வாம்''[28] என்ற அவரது பாடல் வரி இதனை உணர்த்தும். இவர் சைவ உதய பானுவின் ஆசிரியராகச் சிலகாலம் பணிபுரிந்தமையும் சைவப்பிரகாச சமாசீயத்தின் நிர்வாக உறுப்பினர்களுள் ஒருவராக இருந்தமையும் அவர் கொண்டிருந்த குறிக்கோளைப் புலப்படுத்தும்[29] பிங்கள ஸூ மாசி மாதம் (1858) வண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலையின் பொருட்டு ரூபா 70 நாவலரவர்களிடம் நன்கொடையாக அளித்திருந்தமை இங்கு நினைவு கூரத்தக்கதொன்றாகும்.[30]

## சுப்பிரமணியபிள்ளை, வி.

இவர் யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணையைச் சேர்ந்தவர். வணிக குலத்தில் பிறந்தவர். நாவலரவர்களிடம் பயின்றவர். வண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலையில் ஆசிரியராகக் கடமையாற்றியவர். நல்லொழுக்கம் குருபத்தி முதலான ஒழுக்கவியற் பண்புகளை இயல்பாகக் கொண்டிருந்தவர். நாவலரவர்களின் ஆசிக்கும் பேரன்புக்கும் உரிய மாணவனாகத் திகழ்ந்தவர். நாவலரவர்கள் தனக்குப் பின் தனது இலட்சியங்களைத் தக்கவாறு எடுத்துச் செல்லக்கூடிய தகுதிப்பாடு இவரொருவர்க்கே உண்டெனை நம்பினார். தமது இறுதிக் கிரியைகளையும் இவரே செய்ய வேண்டுமென்று விரும்பினார். ஆனால் விதி சதி செய்தது. நாவலரவர்களுக்கு முன்பாகவே சுப்பிரமணியபிள்ளை பரமபதம் (1873) அடைந்து விட்டார். இவரது பிரிவு நாவலரவர்களை வாட்டியது. மனவைராக்கியம் படைத்த நாவலர்களின் உள்ளம் கசிந்து உருகிப்

---

27. யாழ்ப்பாணத்துச் சை.பி.வித்தியாசாலை முதலிலிருபது வருஷத்து ஆவேதனம், 1868 ப.5
28. கனகரத்தின உபாத்தியார், ஆறுமுகநாவலர் உரைத்திறம், 1882,ப. 164
29. சைவ உதயபானு, 18 ஆவணி 188
30. யாழ்ப்பாணம் சை.பி.வித்தியாசாலையின் முதலிருபது வருஷத்து ஆவேதனம், 1868

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாய்வதாயிற்று. பிள்ளையின் பிரிவாற்றாது நாவலரவர்கள் ''என்னுடைய கண்மணியே! எனதன்பர் சிகாமணியே! '' என ஆற்றாமையோடு பாடி நிற்பார்[31] அவரது வரலாற்றையும் நாவலரவர்கள் எழுதி முடித்தனர்[32] மனுடனைப் பாடவிரும்பாத நாவலரவர்கள் தன் மாணவனின் பிரிவு தாங்காது பாடியமை சுப்பிரமணியபிள்ளையினதும் குடும்பத்தினரதும் ஒழுகலாற்றுக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

## பசுபதிச் செட்டியார், சித.மு (1856-1906)

செட்டியார் யாழ்ப்பாணத்தில் செல்வளமுள்ள குடும்பத்தில் பிறந்தவர். தமது ஆரம்பக்கல்வியை வண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலையிலும் சைவாங்கில வித்தியாசாலையிலும் பயின்றவர். இடைநிலைக் கல்வியை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் கற்றவர். உயர் நிலைக் கல்வியைக் கும்பகோணம் அரசினர் கல்லூரியில் பயின்றவர். நாவலர் பரம்பரையில் வந்தவர். நாவலர் மரபை வளர்த்தெடுக்க முயன்றவர். செட்டியார் நாவலரவர்களின் சைவ ஆங்கில வித்தியாசாலையிலே பயின்று கொண்டிருந்த காலத்தில் பாதிரிமார்களின் கடும் எதிர்ப்புக் காரணமாக அப்பாடசாலை கைவிடப்பட்டது. அக்காலம் தொட்டு கிறிஸ்துவப் பாதிரிமார்களின் ஆங்கிலப் பாடசாலைகளுக்கு நிகரான சைவாங்கிலப் பாடசாலையொன்றினை நிறுவவேண்டும் என்னும் பேரவா செட்டியாருக்கும் அங்கு பயின்றோருக்கும் இருந்து வந்தது. இதனை நிறுவன முறையில் செயல்படுத்துவதே பலமுடையதாக அமையுமெனக் கருதிய இக்குழுவினர் உருவாக்கிய நிறுவனமே **சைவபரிபாலனசபையாகும்.** செட்டியார் இச்சபையின் பொருளாளராக இருக்கும் வரையும் நற்பணி புரிந்தவர். தமது செல்வத்தின் பெரும் பகுதியை நாவலரவர்கள் விட்டுச் சென்ற இலட்சியங்களைச் செயற்படுத்தும் பொருட்டுச் செலவு செய்து வந்தவர். செட்டியார் அவர்களின் கடும் உழைப்பால் உருவாகியதே

31. கனகரத்தினம்.வை., சி.செல்லையாபிள்ளையின் யாழ்ப்பாணம் நல்லூர் ஆறுமுகநாவலர் அவர்களின் சரித்திரச் சுருக்கமும் அவர்கள் இயற்றியருளிய தனிப்பாமாலையும், கவிக்குயில் அச்சகம், சென்னை, 1996., பக்.96.
32. சுப்பிரமணியபிள்ளை மீது நாவலரவர்கள் பாடிய பாடல்களை சி. செல்லையாபிள்ளை தொகுத்துத் தமது ஆறுமுகநாவலர் சரித்திரச் சுருக்கமும் அவர்கள் இயற்றியருளிய தனிப்பாமாலையும் (1914) என்னும் நூலில் வெளியிட்டுள்ளார். ஆறுமுக நாவலர் பிரபந்தத்திரட்டினை (1921) வெளியிட்ட தலைபிள்ளை சுப்பிரமணிய சரித்திரத்தையும் இரங்கற் பாக்களையும் அடுத்த பதிப்புக்களில் வெளியிட இருப்பதாகக் குறிப்பிடுவர். ஏதோ உள்நோக்கம் கொண்டு சுப்பிரமணியபிள்ளை வரலாற்றை பதிப்பியாமலே அழித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**யாழ்ப்பாணம்இந்துக்கல்லூரி,** இவரது முயற்சியால் பிரசங்கம் புராணபடனம், தமிழ் வேத பாராயணம் மூதலானவையும் வளர்ச்சி பெற்றன. அடர்ந்த காட்டின் மத்தியில் மறை பொருளாகக் கிடந்த திருக் கேதீச்சரம் கண்டு பிடிக்கப்பட்டு மீண்டும் புனருத்தாரணம் செய்யப் பெற்றது. சைவ இளைஞர் மத்தியில் சமய நம்பிக்கைகளை வளர்த்துச் செல்லும் **இந்துவாலிப சங்கம்** செட்டியாரின் முயற்சியால் உருவாக்கப்பட்டது. க.சுப்பையர், சுன்னாகம் அ்.குமாரசுவாமிப்புலவர், மாதகல் சு.ஏரம்பையர். தம்பையாபிள்ளை, சு.இராமலிங்க வன்னியனார் முதலானோர்கள் இச்சபை யின் பிரசாரகர்களாக விளங்கினார்கள். இ. மாரிமுத்து உபாத்தியாயர் அ.மு. சோமாஸ்கந்த பண்டிதர், மா.சிவலிங்கம், சி.வைத்திலிங்கம் முதலா னோர்களுடன் சங்கானை நாகலிங்க சுவாமியும் இணைந்து தமிழ் வேத பாராயண வகுப்புக்களைஈ நடத்தினார். இவையாவும் செட்டியாரின் தலைமையிலே நடைபெற்று வந்தன. 1902 ஆவணி மாதம் செட்டியார் தமிழ் நாட்டினின்று இரு ஓதுவார்களை வரவழைத்து இவ்வகுப்புக்களை நடத்திவந்தார். ''இரு ஓதுவார்கள் வந்து நல்ல பண்ணமைந்த தேவார திருவாசகங்களைப் பத்திரசத்தோடும் ஓதினார்கள் இத்தமிழ் வேதபா ராயணத்தை நடத்தப் பலர் முன்வந்தமையையும் அனேகர் வந்து கேட்டமையையும் காண்பது பெரும் சந்தோஷம்'' [33] என இந்து சாதனம் செட்டியாரின் பணிகளைச் சிறப்பித்துக் குறிப்பிடும். நாவலரவர்கள் சைவ சமயிகளின் வளர்ச்சியின் பொருட்டு முயற்சித்த விடயங்களான சைவாங்கில வித்தியாசாலையை நிறுவுதல், தமிழ் வேத பாராயணம் நடத்தல் திருக்கேதீச்சர ஆலய புணருத்தாரணம் முதலானவை நாவலரவர் கள் நினைத்தது போல் பெரு வெற்றி வாய்ப்பை அளிக்கவில்லை. ஆனால் நாவலர் மரபில் வந்த செட்டியார் இவ்விலட்சியங்களை முன்னெடுத்துச் சென்று நிறைவேற்றியதோடு, சைவத் தமிழ் மக்களின் கல்வி சமய வளர்ச்சியின் பொருட்டு அரும்பணியாற்றினார்.

## மாரிமுத்து,இ.,

இவர் நாவலரவர்களிடத்தில் பயின்றவர். சிதம்பரம் சைவப்பிரகாச வித்தியாசாலையின் ஆசிரியராகவும் முகாமையாளராகவும் இருந்தவர். சைவபரிபால சபையின் நிர்வாக உறுப்பினராகவும் அதன் பிரசாரகராகவும் விளங்கியவர். இந்துக் கல்லூரியின் தாபகத்தின் பொருட்டு தனது காணியை வழங்க முன்வந்தவரும் இவரே.

33. இந்து சாதனம், ஆவணி 1902.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சின்னத்தம்பிச் செட்டியார்,வை.,** இவர் ஆறுமுகச் செட்டியாருக்குச் சகோதர முறையானவர். இவரும் நாவலரவர்களிடத்தில் பயின்றவர். சின்னத்தம்பிச் செட்டியார் நல்லூர்க் கந்தசுவாமி கோயிலின் புனருத்தாரண பணிக்கு இயன்ற மட்டும் நன்கொடை வழங்கியவர்.

**சபாபதிச் செட்டியார்,சு.,** இவர் சிதம்பர சுப்பையாச் செட்டியாரின் மகன் சுப்பிரமணியச் செட்டியாரின் புதல்வன், நாவலரவர்களிடத்தில் பயின்றவர், உறவினர். நாவலரவர்களுக்குப் பல உறவினர்கள் இருந்த பொழுதும் சிவபூசாதுரந்தரராக விளங்கிய சபாபதிச் செட்டியார் அவர்களுக்கே நவலரவர்கள் தமது ஈமக்கிரியைகளை நடத்தும் உரிமையை அளித்தமை ஒரு வரலாற்றுச் சம்பவமாகும்.

**விசுவநாதையர், இ.,** இவர் நாவலரவர்களிடத்தில் திண்ணைப் பள்ளியிலும் சைவப்பிர காச வித்தியாசாலையிலும் கல்வி பயின்றவர். வண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலையைக் கட்டுவதில் நாவலரவர்களுக்கு அனுசரணையாக இருந்தவர். பின்னர் அப்பாடசாலையின் ஆசிரியராகக் கடமை யாற்றியவர்.[34]

**ஆறுமுகச் செட்டியார், கு.** நாவலரவர்களிடத்தில் திண்ணைப் பள்ளியிலும் சைவப்பிரகாச வித்தியாசாலையிலும் பயின்றவர். நாவலரவர்கள் இப்பாட்சாலைக்குரிய காணியைப் பெற்றுக் கொள்வதற்கு நாவலரவர்களுக்கு பெரிதும் உதவியவர். ''அ.ஆறுமுகச் செட்டியார் நமது வித்தியாசாலையின் பொருட்டுச் சௌமிய ௵ ஐப்பசி 6 ஆம் திகதி ஒரு நிலம் தரும சாசனஞ் செய்தனர். இதன் பொருட்டு முயன்றவர் அவர் தௌகித்திரரும் என்மாணாக்கர்களுள் ஒருவருமாகிய கு.ஆறுமுகச் செட்டியார்'' என நாவலரவர்கள் செட்டியாரின்[35] பணியினைச் சிறப்பாகக்குறிப்பிடுவார். செட்டியார் சிறிது காலம் இப்பாடசாலையின் ஆசிரியராகவும் முகாமையாளராகவும் கடமையாற்றினார்.[36]

**வேன்மயில்வாகனச் செட்டியார்** இவர் நாவலரவர்களின் உறவினர். அச்சுவேலி அரிகர புத்திரச் செட்டியாரினதும் புலோலி வைத்திலிங்கச்

---

34. யாழ்ப்பாணத்துச் சை.பி.வித்தியாசாலையின் முதலிருபது வருஷத்து ஆவேதனம் (1868) ப.4
35. மேலது நூல், ஆவேதனம்.5
36. மேலது ஆவேதனம்.5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PROF. V. SIVASAMY

செட்டியார் மகள் முத்தாட்சியம்மையாரினதும் மகனும் ஆவார். இவர் நாவலரவர்களிடத்திலும் சிவசம்புப் புலவரிடத்திலும் பாடங்கேட்டவர்.[37] நாவலரவர்களிடத்தில் சித்தாந்த சாத்திரங்களைப் பயின்றவர். நாவலரவர்கள் 1872 ஆம் ஆண்டு புலோலியில் அமைத்த சைவப் பிரகாச வித்தியாசாலையின் முதல் தலைமை உபாத்தியாராக நாவலரவர்களால் நியமிக்கப் பெற்றவர்[38] செட்டியார் கற்பித்தல், பிரசங்கம் செய்தல், புராணபடனஞ் செய்தல். முதலான துறைகளில் சிறப்புற்று விளங்கினார். தமிழ் நாட்டுத் தேவகோட்டை தனவைசிகரின் வேண்டுதலின் பேரில் பல ஆண்டுகள் தேவ்கோட்டையில் ஆசிரியத்தொழில் புரிந்து வந்தார். பின் தாயகம் திரும்பிச் சமயப் பிரசாரகராகவும் புராணபடன வித்தகராகவும் விளங்கினார். செட்டியார் நாவலரவர்களைப் போல் பெரும் மாணவ பரம்பரையை யாழ்ப்பாணத்திலும் தமிழ் நாட்டிலும் உருவாக்கிய பெருமைக்குரியவர்[39]

**சுவாமி நாதையர்,மு.,** நாவலரவர்களின் ஆரம்பகால மாணவர்களுள் இவருமொருவர். நாவலரவர்கள் தமது பாடசாலைக்கு நிரந்தர கட்டடம் அமைக்க முயன்ற வேளையில் சுவாமிநாதையர் தம்மால் முடிந்தவரை இப்பணிக்கு உதவினர். ''பிடியரிசி தண்டுவித்தற் கருமத்திலே கைமாறு வேண்டாது மிக்கப் பிரயாசையோடு முயற்சி செய்த மாணாக்கர்களுள் சுவாமிநாதையருடைய முயற்சியே பாராட்டற்பாலது[40] என நாவலரவர்கள் மிகுந்த நன்றியுணர்வோடு ஐயரின் பணியைப் பாராட்டுவார். ஐயரின் பிற்கால வாழ்வு அறியுமாறில்லை.

## குமாரசுவாமிப்புலவர், அ, (1854 - 1922)

குமாரசுவாமிப்புலவர் நாவலரவர்களின் நேரடி மாணவரல்லாத பொழுதும் தமது சந்தேகங்களை நாவலரவர்கள் மூலம் கேட்டுத் தெளிந்தும் தமது ஆக்கங்களைக் காட்டி அபிப்பிராயம் பெற்றும் தன்னை நாவலரவர்களின் மாணவர்களுள் ஒருவராக ஆக்கிக் கொண்டதோடு, நாவலர் மரபினை வளர்த்துச் செல்வதில் மிக்க ஆர்வம் உடையவராகவும் காணப்பட்டார்.

---

37. கணேசையர்,சி., ஈழநாட்டுத் தமிழ்ப்புலவர் சரித்திரம், 1939, பக்.111-112
38. மேலது நூல், ப.112
39. மேலது நூல்.ப. 112
40. யாழ்ப்பாணத்துச் சைவப்பிரகாச வித்தியாசாலையின் முதலிருபது வருஷத்து ஆவேதனம், 1868, பக்.4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1902 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் வண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலையின் தலைமைத் தமிழ்ப் பண்டிதர் பொறுப்பை ஏற்றுக் கொண்ட புலவரவர்கள், நாவலர் மரபினை வலுவாக காலூன்றச் செய்வதில் முனைப்புடன் செயலாற்றினார். அதற்குக் கைலாசப்பிள்ளை அடித்தளம் அமைக்க புலவர் அதனைக் கட்டியெழுப்பினர். நாவலரவர்களுக்குப் பின் இப்பாடசாலையில் உயர்கல்வி வளரவும் நாவலர் தருமத்தின் பயனாக அமைக்கப் பெற்ற காவிய பாடசாலை, தமிழ்ச்சங்கம் ஆகியனவும் சைவ சித்தாந்த சமாஜம், சைவ சித்தாந்த சபை முதலான நிறுவனங்களும் சிறந்த பணிகளையாற்றுவதற்குப் புலவர் ஆற்றிய பங்கு கணிசமானதாகும். இருபதாம் நூற்றாண்டின் முதல் மூன்று கால்நூற்றாண்டு வரை புலவராலும் இப்பாடசாலையில் இருந்து வெளியேறிய மாணவர்களாலும் சைவமும் தமிழும் சிறப்புடன் வளர்க்கப் பெற்றதென்பதை யாரும் மறுப்பது கடினம். தெல்லிப்பழை வித்துவான் சிவானந்தையர் இ. பாலசுப்பிரமணிய ஐயர் க.சங்கரப்பிள்ளை, வண்ணை மாணிக்கத்தியாகராசா, ஏழாலை வி. தம்பையாபிள்ளை, மானிப்பாய் இளைய தம்பி, உடுவில் வி.மு. இரத்தி னேசுவரஐயர், காரைநகர்.க. பஞ்சாட்சர ஐயர், வல்வெட்டி மு. சுப்பிரமணியதேசிகர், இருபாலை மு.வேதாரணிய தேசிகர், சிறுப்பிட்டி த.கார்த்திகேய பிள்ளை, நல்லூர் குருமூர்த்தி ஐயர், மட்டுவில் சி. கணபதிப்பிள்ளை[41]. மட்டக்களப்பு ஏ. பெரிய தம்பிப்பிள்ளை[42] முதலானோர்கள் புலவரின் மாணாக்கர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள். புலவரவர்களின் மாணவர் அவ்வகையில் நாவலர் மரபினர். புலவர், நன்மாணாக்கர்களை உருவாக்குதல், நூல்களை எழுதல், வெளியிடல் முதலான பணிகளோடு கிறிஸ்து மத கண்டனம், பிரசங்கங்கம், முதலானவற்றையும் செய்துவந்தனர். கிறிஸ்து தேவனா? நற்புத்தி (1880) ''அஞ்ஞானி என்னுஞ் சொலன் மறுப்பு'' (1881) கிறிஸ்து சிருட்டிகர் (1880) வட இலங்கைக் கிறிஸ்தவ வித்தகருக்கு, (1881) காரைக்கால் சத்திய வேத

---

41. பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை (1886-1983) நாவலர் மரபைக் சேர்நத வர். அம்மரபினை வளர்த்துச் செல்ல முயன்றவர். குறிப்பாகக் கூறுவதானால் நாவலரவர்களின் நோக்கத்தை மனங் கொண்டு செயற்பட்ட கதிரைவேற்பிள் ளையின் மருமகனும் அவரின் அரவணைப்பில் வளர்ந்த இந்து போட் இராசரத்தினம் அவர்கள் நாவலர் மரபினை வளர்த்துச் செல்லும் பொருட்டுத் தாபித்த சைவ வித்தியாவிருத்திச் சங்கத்தின் பணியாளராகவும் உறுப்பின ராகவும் அமர்ந்து அதனோடு இணைந்து நாவலர் மரபினை வளர்த்துச் சென்றவர். இந்து போட் என்பது பெருநதி. அது பல கிளை நதிகளைக் கொண்டிருந்தது. கல்விப்பணி என்பது அதன் கிளை நதிகளிலொன்று. அதில் சி. கணபதிப்பிள்ளை என்னும் வற்றாத கிளை நதியொன்று பெருக்கெடுத் தோடி நாவலர் மரபினைச் செழிப்புறச் செய்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA
JPL

ஆசாரப் பிரியருக்கு (1881) முதலான கண்டனங்களை சைவ உதய பானுப் பத்திரிகையிலும் எழுதினர்.

புலவர் தமிழ் சங்கத மொழிகளில் மிகுந்த தேர்ச்சி உடையவர். கவிதை பாடுவதில் கைதேர்ந்தவர். பதுளைக் கதிரேசனூஞ்சற் பதிகம் (1884) நகுலேஸ்வரரூஞ்சல் (1896) துணைவை அரசடி விநாயகர் பதிகம் தென்கோவை வெள்ளெருவை விநாயக ரூஞ்சற்பதிகம் (1905) ஏழாலை அத்தியடி விநாயகரூஞ்சற் பதிகம் (1892) பதுளை மாணிக்க விநாயரூஞ்சற் பதிகம் (1884) அமராவதி புதூர் பாலவிநாயகர் பதிகம் (1897) நல்லூர் கைலாசப்பிள்ளையார் ஊஞ்சல் (1904) விளிசிட்டி பொறகலந்தம்பை வைரவர் ஊஞ்சல் (1912) அராலி முத்துமாரியம்மன் ஊஞ்சல் (1921) பன்னாலை வள்ளிமலைக் கந்தசுவாமி ஊஞ்சல் (1916) சாணக்கிய நீதிவெண்பா (1914) இராமோதந்தம் (1921) என்பன புலவரால் பாடப்பட்ட செய்யுள் நூல்களாகும். திருக்கரசைப் புராணப் பொழிப்புரை (1890) சூடாமணி நிகண்டுரை (1895,1900) திருவாதவூரர் புராணப் புத்துரை (1904) மறைசையந்தாதி - அரும்பதவுரை (1901) கல்வளை யந்தாதி பதவுரை (1921) நீதிநெறி விளக்கப்புத்துரை (1901) முத்தக பஞ்ச விஞ்சதி குறிப்புரை (1909) முதலானவை புலவர்கள் எழுதிய உரை நூல்களாகும். யாப்பெருங்கலப் பொழிப்புரை (1909) வெண் பாப்பாட்டியல் பொழிப்புரை (1900) தண்டியலங்காரப்புத்துரை (1903) அகப்பொருள் விளக்கப்புத்துரை (1912) முதலானவை புலவரவர்கள் இலக்கண நூல்களுக்கெழுதிய உரை நூல்களாகும். தமிழ்ப்புலவர் சரித்திரம் (1916) இதோபதேசம் (1920) இரகுவமிச சரிதாமிர்தம் (1922) கண்ணகி கதை (1900) சிசுபால சரிதம் (1921) என்பன புலவர்கள் எழுதிய வசன நூல்களாகும். இலக்கண சந்திரிகை (1897) வினைப்பகுபதவிளக்கம் என்பன புலவரவர்களின் இலக்கண ஆய்வு நூல்களாகும். நகுலமலைக் குறவஞ்சி நாடகம் (1895) ஆசாரக்கோவை (1900) திருவாதவூரர் புராண

12120 S.C

---

42. புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை மட்டக்களப்பைச் சேர்ந்தவர். பல தொழில் புரிந்தவர். அதில் ஆசிரியத் தொழிலுமொன்று. கிழக்கு மாகாணத்தில் பரவலாக நாவலர் மரபினை வளர்த்துச் செல்ல முற்பட்டவர். பிரசங்கம், புராணபடனஞ் செய்வதில் வல்லவர். ''கம்பனைப் போல் கவிபாடுவதில் ஆற்றல் உடையவர்'' (சி.க, முகவுரை, பகவத்கீதை வெண்பா) இந் நூற்றாண்டில் பல நூற்றுக் கணக்கான ஆசிரியர்களை உருவாக்கியவர். ஒருவகையில் கிழக்கு மாகாணத்திற்கு நாவலரவர்கள் குறிப்பிடத்தக்க வகையில் சேவையாற்றவில்லை என்ற குறையை நிவர்த்தி செய்யும் வகையில், நாவலர் மரபினைப் புலவர்மணி அவர்கள் வளர்த்துச் சென்றார் எனலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலம் (1902) பழமொழி விளக்கம் (1903) முதலான நூல்களைப் புலவர்கள் பதிப்பித்து வெளியிட்டார். இலக்கியச் சொல்லகராதி (1915) என்பது புலவர்கள் தொகுத்த அகராதியாகும். இருபதாம் நூற்றாண்டில் முதற்காற் பகுதியில் இற்றைவரை போற்றப்பட்டு வந்த தமிழ் இலக்கியம், சமயம், தத்துவம் முதலான துறைகளுக்கு அப்பால் இலக்கியத்தில் பிரிப்பின்றி நின்ற இலக்கணத்தைப் பிரித்து அதனை தனியான துறையாக மாற்றி அமைப் பதிலும் அதனை ஆழப் பதிப்பதிலும் பெருமுயற்சி எடுத்தார். அந்த வகையில் தமிழியல் ஆய்வு முயற்சியில் புதிய போக்கை - பரிநாமத்தைத் தொடக்கி வைத்த பெருமை புலவர்குரியது எனலாம்.

## செந்திநாதையர், சி, காசிவாசி (1848-1924)

ஏழாலைக் கிராமத்தைப் பிறப்பிடமாக்கொண்ட செந்திநாதையர், நல்லூர் சம்பந்த புலவர், நாவலர் முதலானோர்களிடம் தமிழ் இலக்கிய இலக்கணம் பயின்றவர். யாழ்ப்பாணம் வெஸ்லியன் கல்லூரியில் ஆங்கிலம் பயின்றவர். நாவலரவர்களின் பாடசாலையில் ஏழு ஆண்டுகள் பணி புரிந்தவர்[43]. நாவலரவர்களின் நன்மதிப்பைப் பெற்றவர். நாவலரவர்கள் பிரசங்கம் செய்யும் இடமெல்லாம் சென்று குறிப்பெடுத்தவர்[44] நாவலர வர்கள் சிவபூசை செய்யும் பொழுதெல்லாம் திருமுறைகளைப் பண்ணோடு ஓதுபவர். ''தேவாரம் யான் சொல்லக் கேட்டு மகிழ்ந்து சிரத்தையுடன் பூவாதி கொண்டு புரிசிவப்பூசை பொலி வழங்கும்'' [45] எனச் செந்திநாதையர் பாடுவது இங்கு மனங்கொள்ளத் தக்கதாகும். நாவலரவர்கள் ஐயருக்கு

> ''சி.செந்திநாதையரை யான் ஏழுவருடம் அறிவேன், ஆறு வருடம் என்னுடைய தமிழ் வித்தியாசாலையிலும், ஒரு வருடம் என்னுடைய இங்கிலிஸ் வித்தியாலயத்திலும் உதவி உபாத்தியாராக இருந்தும் தமது கடமையை ஜாக்கிரதையோடு பிறழாமல் நடத்திக் கொண்டு வந்தவர். ஒழிவுள்ள பிறநேரங்களில் நான் பொது நன்மையின் பொருட்டு எடுத்துக் கொண்ட பிறகருமங்களையும் நிறைவேற்றினார்'' [46]

என்னும் நற்சான்றிதழை வழங்கியதன் மூலம் நாவலரவர்கள் ஐயர்மேல் கொண்டிருந்த நம்பிக்கையையும் பரஸ்பர உறவையும் அறிந்து கொள்ள முடிகின்றது.

---

43-44. கணேசையர்,சி., ஈழநாட்டுத் தமிழ்ப்புலவர் சரித்திரம் 1939, பக்.165,166

45. கணேசையர்,சி.,ஈழநாட்டுத்தமிழ்ப்புலவர் சரித்திரம்,1939 பக் 167.

46. கனகரத்தின உபாத்தியார், ஸ்ரீலஸ்ரீ நல்லூர் ஆறுமுகநாவலர் சரித்திரம், 1882, பக். 163

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செந்திநாதையர் தமிழ் நாட்டில் தமது வாழ்நாளின் பெரும் பகுதியைக் கழித்தார். அக்காலப்பகுதியில் நாவலர் மரபில் நின்றே பெரிதும் தமது சமயப் பணியினை மேற் கொண்டார். ஐயர் தமிழ் நாட்டில் இருந்த பொழுது சங்கத மொழியில் நன்கு தேர்ச்சி பெற்றார். பாரத நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் யாத்திரை மேற் கொண்ட செந்திநாதையர் திருநெல்வேலி திருஞானசம்பந்தர் ஆலயத்தில் ''ஞானத்தின் திருவுருவை'' என்று தொடங்கும் திருவிருத்தப் பாவினைப் பிரசங்கப் பொருளாகக் கொண்டு செய்த பிரசங்கமும் மேலைச் சிதம்பரத்திலே ''உலகெலா முணர்ந்தோதற்கரியவன்'' என்று தொடங்கும் பெரிய புராணக் காப்புச் செய்யுளைப் பொருளாகக் கொண்டு செய்த பிரசங்கமும் ''ஆளவாயளவ தனளவாய்'' எனத் தொடங்கும் திருப்பேரூர்ப் புராணச் செய்யுளைப் பொருளாகக் கொண்டு கோயம்புத்தூர்ச் சைவசித்தாந்த சபையிற் செய்த பிரசங்கமும் நன்கு அறியப்பட்ட, குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய பிரசங்கம் என்பர்.[47] 1882 ஆம் ஆண்டில் தமிழ் நாட்டிலுள்ள திருநெல்வேலி சைவவித்தியாசாலையில் ஆசிரியராகப் பணியாற்றினார்.

சிவநிந்தனைகளையும் சைவாகம நிந்தனைகளையும் பொறா மனம் உடைய ஐயரவர்கள் ''சிவனடியே சிந்திக்கும்'' என்ற செய்யுளுக்குப் பிழையான உரையை யொருவர் கூறியதைப் பொறுக்க முடியாது ''ஞான போத விளக்கச் சூறாவெளி'' என்ற நூலை எழுதி வெளியிட்டார். சென்னை தங்கசாலைத் தெருவில் சூதசம்கிதாப் பிரசங்கம் செய்து வந்த சந்நியாசி நாயன்மார்களுள் சிலரைத் தூசித்து வந்தார். இதனைப் பொறுக்க முடியாத ஐயரவர்கள்ல மகாஷக்கிர வீரபத்பத்திராஸ்திரம் என்னும் நூலை எழுதி வெளிப்படுத்தினார். கோட்டையூரில் வசித்த சந்நியாசி யொருவர் ஆதிசைவ நாமக குலீன: முகபங்க, முத்திரை தாந்திக துண்ட கண்டனம் என்னும் நூல்கள் வாயிலாகச் சிவாகமங்களையும் ஆதிசைவமக்களையும் கண்டித்தார். ஐயரவர்கள் இவற்றுக்குப் பிரதிகண்டனமாக வச்சிர தண்டம் (1910) தாந்திரிக துண்ட கண்டன கண்டனம் (1910) என்னும் நூல்களை எழுதி வெளியிட்டார்[48]. இத்தகைய கண்டனங்கள் ஐயரவர்களால் மேற் கொள்ளப்பட்ட சுதேசிய கண்டனங்கள் எனலாம்.

நாவலரவர்கள் மாயாவாதப் போராட்டங்களை நடத்தா விட்டாலும்; மாயாவாதத்தைச் சாடாது விடவில்லை. தமது நூல்களில் அங்காங்கே

---

47. கணேசையர், சி. ஈழநாட்டுத்தமிழ்ப்புலவர் சரித்திரம் 1939, பக். 169, 176
48. மேலது நூல், பக் 176

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாயாவாதத்தினைச் கச்சிதமாகச் சாடியுள்ளார். அத்துவித நிலை பற்றிக் கூற வந்த நாவலரவர்கள்.[49]

* அத்துவித நிலையானது ஆன்ம போ(ழு)மும் கண்ணொளியும் போலச் சிவமும் ஆன்மாவும் தம்முள் இரண்டற ஒற்றுமைப்பட்டு நிற்றல். பிரமமும் ஆன்மாவுமெனப் பொருளிரண்டில்லை ஒன்றேயெனக் கூறுவர் மாயாவாதிகள்.

* **சிவமும் ஆன்மாவும் வேறு பொருளெனவும் அவ்விரு பொருளே இரண்டென ஒற்றுமைப்படாது அத்துவிதமாய் ஒற்றுமைப்பட்டு ஒன்றாய் நிற்குமென்வுங் கூறுவர் சைவசித்தாந்திகள். அத்துவித மென்னுஞ் சொல்லுக்கு இரண்டின்மையெனப் பொருள் கொள்வர் மாயாவாதிகள்; இரண்டண்மையெனப் பொருள் கொள்வர் சைவசித்தாந்திகள்**

எனச் சைவசித்தாந்தத்தையும் மாயாவாதத்தையும் கோட்பாட்டளவில் ஒப்பீடு செய்து சைவசித்தாந்த உண்மையை நிலை நிறுத்தும் வகையில் மாயாவாதத்தைச் சாடுவதை இங்கு அவதானிக்கலாம்.

19 ஆம் நூற்றாண்டின் இறுதிக் காற்பகுதியும் 20 ஆம் நூற்றாண்டின் முதற் காற்பகுதியும் தமிழ்நாட்டின் வரலாறு பெரிதும் சமயப் போராட்டங் களைக் கொண்டது எனலாம். இதற்குப் பொதுசனத் தொடர்புச் சாதனங்க ளின் வளர்ச்சியே அடிப்படையாக அமைந்தது. இச் சாதனங்களை ஊடகமாகக் கொண்டு சமய நிறுவனங்களும் சமயவாதிகளும் தத்தம் சமய உண்மைகளை நிறுவ முற்பட்டனர். சமய உண்மைகளை நிறுவுதல் என்பது இந்து சமய நிறுவனங்களின் அவசியமானதும் உடனடித் தேவையாகவும் அமைந்திருந்தது. இதற்குக் காரணங்கள் பலவாக அமைந்தன. ஆரம்பத்தில் சமயப் பிரசாரம் பிரசங்க வடிவிலே அமைந்தது. இப்பிரசங்கம் பொது சனங்கள் எல்லோரையும் சென்றடையும் ஆற்றலைப் பெற்றிருக்கவில்லை. அது குறிப்பிட்ட ஒரு தொகுதியினரையே திருப்திப்படுத்துவதாய் அமைந்தது. ஆனால், தொடர்புச் சாதனங்களான பத்திரிகைகள், துண்டுப் பிரசுரங்கள் நூல்கள் முதலானவை பொதுமக்களைச் சென்றடையும் வலு வான சாதனங்களாக இருந்தமையினால் எல்லாச் சமய வாதிகளும்

49. ஆறுமுகநாவலர், சைவசமயநெறி மூலமும் புத்துரையும், வித்தியாநு பாலன யந்திரசாலை, 1955, பக்.27

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றைப் பயன்படுத்தித் தத்தம் சமய உண்மைகளை நிறுவ முயன்றனர். இந்த நூற்றாண்டில் எழுந்த தமிழ் பத்திரிகைகள் பல சமயமே சமுதாயத்தின் முதுகெலும்பு என்று கருதிச் செயற்பட்ட காலம் அது. அத்துடன் கிறிஸ்துவ மிஷனரிமார்களின் செல்வவளமும் அர்ப்பணிப்பும் ஊழியமும் ஏனைய இந்து நிறுவனப்பணியாளரிடம் இருக்கவில்லை என்பது வரலாற்று உண்மையாகும்.

தமிழ் நாட்டு மக்களுள் பெரும்பான்மையோர் சைவர்கள். ஏனையோர் மாயாவாத சமயத்தையும் வைணவத்தையும், பிற சமயங்களையும் பின்பற்றி ஒழுகுபவர்கள். இவற்றுள் சைவமும் மாயாவாதமும் வேட வொற்றுமை கொண்டவை என்பர். வைணவம் இவ்விரு மதங்களிடையேயும் வேறுபட்டது. சைவ, மாயாவாத வேட ஒற்றுமையும் மாயாவாதத்தின் மேலாண்மையும் சைவநெறியையும் அதன் தத்துவத்தையும் உணரமுடியாதவகையில் மாயையிக்குட்படுத்தியது. இதன் வேடதாரத்தில் மயங்கும் சைவர்களின் மீது அநுதாபம் கொண்ட நாவலரவர்கள் பின்வருமாறு கூறுவது அவதானிக்கத் தக்கதாகும்.[50]

**''சமயங்கள் புறப்புறச் சமயமும், புறச்சமயமும் அகப்புறச் சமயமும், அகச்சமயமுமென நான்கு வகைப்படும். இந்த நான்கும் தனித்தனியே ஆறுவகைப்படும். இவற்றையெல்லாம் கடந்து நிற்பது சித்தாந்த சைவம்; இங்ஙனமே யாகவும், தற்காலத்துச் சைவசமயிகள் பலர் புறச்சமயங்களாறனுள் ஒன்றாகிய மாயாவாதத்துக்குரிய ஆசாரியரை வேடவொற்றுமை பற்றித் தம்மாசிரியரெனக் கொண்டு வழிபட்டொழுகியும், அம்மாயாவாத நூல்களைத் தஞ்சமய நூல்களெனக் கொண்டு பாராட்டியும், தன்சமய நிலையின் வழுவித் தாம் முன்னர்ப் பெற்ற சிவதீக்ஷையின் பயனையும் அநுட்டித்த சமய சாரங்களின் பயனையும் இழந்து எரிவாய் நிரயத்துக்கு இரையாகுகின்றனர் ''.**

இத்தகைய பின்னணி; சைவசித்தாந்த, மாயாவாதப் போராட்டங்களுக்கும், அத்வைத வேட வொற்றுமை மாயாவாதம் விசிட்டாத்துவைதம் துவைதம் ஆகியவற்றுக்கிடையிலான போராட்டத்துக்கும் வித்திட்டன. சைவசித்தாந்த சஞ்சீவினிசபை, வேதாந்தப் பிரசங்க சபை, சுத்தாத்துவித சைவ சித்தாந்த சபை, வேதாகமோத்த சைவ சித்தாந்த சபை முதலான சபைகள் தோன்றி சமய உண்மைகளை நிறுவமுற்பட்டன.

50. மேலது நூல், ப.21

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயரவர்களும் சைவசித்தாந்த சபைகளின் சார்பாக, மாயாவாதிகளைச் சாடினார். நேரடியாகவே சாடினார். **பிரஹ்மவித்தியா, லோகோபகாரி** முதலான பத்திரிகைகள் மாயாவாதம் பற்றிய கட்டுரைகளைத் பிரசுரித்து வந்தன. அவை சைவசித்தாந்த உண்மைகளை மறுதலித்தன. இதனால் ஐயரவர்கள் அவற்றைப் பரிகண்டனம் செய்யும் வகையில் **இந்துசாதனம், விவேகதிவாகரன், நாகை நீலலோசனி, விஜயத்துவஜம், வெற்றிக் கொடியோன்** முதலான பத்திரிகைகளில் எழுதி வந்தார். இந்து சாதனத்தில் வைதிக சுத்தாத்துவித சைவ சித்தாந்த சமயம்'' என்னும் பொருள் பற்றி எழுதிய விடயம் அவற்றுள் குறிப்பிடத்தக்கன. இவற்றோடு நின்றுவிடாது ''ஆரியனார் பிரமம் பரப்பிரமமாகாத சீவப்பிரமம்'' முதலான சிறு பிரசுரங் களையும் வெளியிட்டு வந்தார். ஆயினும் ஐயரவர்களின் இந்நூலுக்கு ''பேதவாத திரஸ்காரம்: செந்திநாதையர் நுர்வாத மறுப்பு'' (1897) என்னும் கண்டனமொன்று **ஆரியன்** என்பாரால் எழுதப்பட்டது.[51] இந்நூலாசிரியர் ஐயரவர்களின் மேற்கூறிய நூல் பற்றித் தெரிவிக்கும் பின்வரும் கருத்துக்க ளின் ஊடே அவரின் சைவசித்தாந்த அறிவினையும் பல்நூற் புலமையினை யும் தருக்க ஆற்றலையும் தெரிந்து கொள்ள முடிகின்றது.[51]

> ''சுருதி ஸ்மிருதி புராணதிகாசாதிகளைப் பிரமாணமாகக் கொள்ளும் இப்பரத கண்டத்தில் பூர்வீகமாய் விளக்கி வரும் வைதிகமதமாகிய சமுத்திரத்தின்கண் அப்போதப்போது எத்தனையோ அவைதிக மதங்களாகிய அலைகள் தோன்றித் தோன்றி யொடுங்கின வென்பது பிரசித்தம். அப்படியே இப்போதும் சில தோன்றி இருக்கின்றன. அவற்றில் அவைதிக தாந்திரிக துவித சைவமதமென்பது மொன்று. அது அவைதிகமாகவிருந்தும் வைதிகம் போல நடித்துக் கொண்டு; சுருதி ஸ்மிருதி புராண இதிகாசங்களையும், அவற்றினுக்குடன் பாடான ஆன்றோர் நூல்களையும், அவற்றின் ஒழுக்கங் களையும், அவற்றின் முடிவான மகாவாக்கியப் பொரு ளையும், அப்பொருளின் சித்தாந்தமான அத்துவிதத்தையும் தூஷித்து வருகின்றது. அப்படியே அம்மதத்தைக் கைக் கொண்டோர் பலர் சில வருஷங்களாகச் செய்த ஆக்ஷே பங்கட்கெல்லாம் தத்துவவாத முதல் துவித சைவம் ஈறாயுள்ள பல துவித சைவ கண்டன நூல்களின் வாயிலாக அத்துவிதிகள் சமாதானம் அளித்தார்கள். அவற்றைப் பற்றியேதும் பேசாது

51. ஆரியன், பேதவாத திஸ்காரம், செந்திநாதையர் துர்வாத மறுப்பு, 1897, மதராசுரிப்பன் அச்சகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் செந்திநாதையரென்பார் ரொருவர், சுருதிஸ்மிருதி புராணதிகா சாதிகட்கு மாறாக ஓர் அவாந்தர வாதந் தொடுத்து அத்துவித பாதகமாகச் சிறு நூலொன்றியற்றி, அதற்குச் ''சென்னை ஆரியனார் பிரமம் பரப்பிரமாகாத சீவப்பிரம்'' என நாமம் தந்து, அச்சிற்பதிப்பித்துப் பிரசுரப் படுத்துவாராயினார். அது அத்துவிதத்தின் உண்மையினை யுணராமை, புராணங்களினுரையை முன்பின் முரணுறப் புரட்டல், இல்லாத குற்றத்தைக் கற்பித்தல், உள்ள குணத்தை மறுத்தல், தம்மத தோஷத்தை வெளியில் காட்டாது மறத்த லாதிப் பல-குற்றங்களை அடக்கி வைத்திருக்கின்ற தாகலின், அவைகளையெல்லாம் கண்ணாடி போல் தெளிவுறக் காட்டித் திரஸ்கரித்து, அத்துவிதமே உண்மையெனவும், துவிதம் பொய்யெனவும் சுருதி யுத்தி அனுபவங்களால் விளக்கி இந்நூலை இயற்றினோம். எமது பக்ஷம் அபேதமுமாக முடிந்த மையின், அப்பேத வாதத்தைத் திரஸ்கரித்த இந்நூலுக்குப் **பேதவாத திரஸ்காரம்** என நாமஞ் சூட்டினோம்.

சென்னைக் கிறிஸ்தவர்களும் தங்கள் கிறிஸ்தவ சமய விசுவாசத்தைக் காட்டும் வகையில் சைவசமயத்தின் மீது பல கண்டனங்களை எழுதினர். அவற்றினுளொன்று ''சிவனுந்தேவனா?'' என்பதாகும். நாவலர்களைப் போல் ஐயரவர்களும் ''சிவனுந் தேவனா என்னுந் தீயநாவுக்கு ஆப்பு'', வஜ்ரடங்கம், விலிய குஞ்சித கண்டன தீக்காரம் ''விவிலிய குற்சிதக் குறிப்பு முதலான கிறிஸ்தவ கண்டன நூல்களை எழுதினார்.[52] இதனாலே இவர் **கிறிஸ்தவ கண்டன குடாரி** என்னும் சிறப்புப் பெயரைப் பெற்றார். தாம் சமயவாதம் செய்வதோடு அமையாது நாவலரவர்களைப் போலவே பிறரையும் அப்பணியில் ஊக்குவித்து வந்தார். நா.கதிரைவேற்பிள்ளை அவ்வகையில் குறிப்பிடத்தக்கவராவர். இவரே **மாயாவாத தும்சகோளரி** என்னும் பட்டத்தைக் கதிரைவேற்பிள்ளைக்கு வழங்கியமை குறிப்பிடத்தக்க தொன்றாகும்.[53] **வேதாமங்களைக் காட்டிலும் இறைவனுக்கு மிக்கப் பிரிதியுடையது தேவார திருவாசகங்களே என்பதில் நாவலரவர்கள் அசைமுடியாத நம்பிக்கை உடையவர்[54]**. அதன் வெளிப்பாடாக அமைந்ததே

52. பார்க்க, கிறிஸ்துமத கண்டனத் திரட்டு (முதற்பாகம்) மதராஸ் ரிப்பன் அச்சுயந்திரசாலை, 1918
53. கணேசையர்,சி., ஈழநாட்டுத்தமிழ்ப்புலவர் சரித்திரம் 1939, பக் 172
54. வே.கனகரத்தின உபாத்தியாரின் ஸ்ரீலஸ்ரீ நல்லூர் ஆறுமுகநாவலர் சரித்திரம், 1994, பக்.73-74

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருட்பா மருட்பாப் போராட்டம். ஐயரவர்கள் இக்கருத்தில் உடன்பாடு கொண்டிருந்ததாக கருதுவதற்கில்லை. ஆயினும் தமிழ் நாட்டில் மீண்டும் அருட்பா மருட்பாப் போராட்டம் நடைபெற்ற பொழுது திருமுறைகளே என்ற கட்சிக்குத் தலைமை தாங்கிய கதிரைவேற் பிள்ளைக்காக நீதிமன்றம் செல்லவும் தயங்காமை அவரின் உள்ளம் விரும்பியோ விரும்பாமலோ திருமுறைகளில் ஈடுபாடு கொண்டிருந்த தென்பதைப் புலப்படுத்தி நிற்கும்.

ஐயரவர்கள் நாவலர் மரபில் நின்று செயலாற்ற விழைந்த பொழுதும், நாவலரவர்களின் முழுமையான இலட்சியத்தையும் மனங்கொண்டு செயற்பட்டார் என்று சொல்லுவதற்கில்லை. நாவலரவர்கள் வேதசிவாகமங்களை ஏற்றுக் கொண்டவர். ஆயினும் வேதத்தைச் சைவத்தின் பொது நூல் என்பதில் அசையாத நம்பிக்கை கொண்டவர். அவை பற்றி விளக்கும் பேராசிரியராகவும் விளங்கினார். நாவலரவர்கள் தாம் எழுதிய பெரிய புராண சூசனம் சைவ சமய நெறியுரை முதலான நூல்களில் இந்நோக்கத்தை வளர்த்துச் செல்லும் போக்கினைக் காணலாம். ஐயரவர்கள் சிவாகம உணர்ச்சியைக் காட்டிலும் வேத உணர்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுத்தார். அதனால் திருமுறைகளின் மாட்சிமையை ஒப்புக் கொள்ளத் தயக்கம் காட்டினார். இதனால் இவற்றிடையே ஒருமைப்பாட்டைக்காண விழைந்தார். இவ்வுணர்ச்சியின் வெளிப்பாடாக எழுந்தவையே தேவாரம், வேதசாரம், சைவ வேதாந்தம் முதலான நூல்களாகும். ''நாவலர் மரபில் இஃதோர் புதிய மாற்றமாயினும் நாவலர்களின் தீவிர தரம் அவருடைய பரம்பரையிலே கண்ட மாற்றத்துக்குச் செந்திநாதையர் சான்றாவர்'' என்ற கூற்று இங்கு நினைவு கூரத்தக்கதாகும்.[55]

## திருஞான சம்பந்தப்பிள்ளை,வை (1849-1901)

இவர் நல்லூரைப் பிறப்பிடமாகக் கொண்டவர். நாவலரவர்களின் மருமகனும் மாணவரும் ஆவார். தருக்க சாத்திர விற்பனர். தர்க்கவாதம் புரிவதில் மிகுந்த ஆர்வம் உடையவர். இதனால் தர்க்கற்குடார தாலுதாரி என்று அழைக்கப்பட்டார். இவர் தமிழ் நாட்டில் கும்ப கோணம் இந்து யூனியன் உயர்நிலைப்பள்ளியிலும் சிதம்பரம் சைவபரிபாலன வித்தியா சாலையிலும் முறையே தலைமைத் தமிழ் பண்டிதராகவும் தலைமை உபாத்தியாயராகவும் பணி புரிந்தவர்[56]. பின்னர் சிதம்பரம் சொக்கபுர மடத்தில் சைவசித்தாந்த வகுப்புகளையும் நடத்தியவர்.[57]

---

55. பூலோகசிங்கம், பொ., நாவலர் பரம்பரை, பண்டிதமணி நினைவு மலர், 1989,பக்.103

56. கணேசையர்,சி.,ஈழநாட்டுத் தமிழ்ப்புலவர் சரித்திரம்,1993, பக்.105

57. கலியாணசுந்தரனார்,வி.,வித்தியாபிமானிகளுக்கு விக்கியாபன நிரசரனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலரவர்களை ஐந்தாம் குரவரென முதன் முதலில் போற்றுதல் செய்தவர் இவரே. நாவலரவர்களுக்கும் நல்லூர்க் கந்தசுவாமி கோயிலாருக்கும் நல்லூர்க் கந்தசுவாமி கோயிலின் ஆகம நடைமுறை பற்றி நடைபெற்ற வாதத்தில் நாவலரவர்களின் சார்பாக நல்லூர்க் கந்தசுவாமி கோயிற் பிரதி கண்டன வழுக்களை வச்சிர குடாரம் (1875) முதலான கண்டனங்களை எழுதினார். 1878 வடகோவை சபாபதி நாவலர் அகோர சிவாச்சாரியார் பத்ததியைக் கண்டித்து, அதனைப் போற்றுபவர்கள் சமயவாத சைவர்கள் என்று பிரசாரம் செய்தார். இக் கருத்தினை ஏற்றுக் கொள்ள மறுத்த தர்க்க குடாரதாறுதாரி **பத்திராத்திரப் பிரயோக ஏக வசன தீபிகை** என்னும் கண்டன நூலை எழுதினார். இக்கண்டன நூலைச் சபாபதி நாவலர் திருவாவடுதுறை யாதீனத்துக்கு அனுப்பியதன் மூலம் நாவலரவர்களுக்கும் இவ்வாதீனத்துக்குமிடையே இருந்து வந்த நல்லெண்ணத்தில் இடைவெளியை ஏற்படுத்தினார்[58] திருஞான சம்பந்தர் நாவலரவர்களை ஐந்தாம் குரவரெனப்பாடிப் போற்றிய நூல் நாவலரவர்களால் பறிமுதல் செய்யப்பட்டு எரிக்கப்பட்டதோடு இவர் தண்டிக்கவும் பட்டார். அரிகர தாரதம்மியம் (1895) வேதாகம நாமவாத தீபிகை (1875) நாராயண பரத்துவ நிரசனம் என்பன இவரால் எழுதப் பெற்ற நூல்கள் ஆகும். தர்க்காமிர்தம் என்பது மொழிபெயர்ப்பு நூல் ஆகும். இவரால் சைவ சமய வளர்ச்சியின் பொருட்டு எழுதிய சுதேசிய கண்டனங்களும் வைதீக மத கண்டனங்களும் பிரமச்சரிய விரதமும், இவர்தம் செயற்பாடுகளும் இவர் நாவலர் மரபு வழி நின்றவர் என்பதை வெளிப்படுத்தும்.

## சபாபதி நாவலர்.சு.,(1845-1903)

இவர் நீர்வேலிச் சங்கரபண்டிதரிடத்தும் நாவலரவர்களிடத்தும் பாடம் கேட்டவர். நாவலரவர்களின் அன்புக் குரியவர். இவரின் திறமையை அறிந்து நாவலரவர்கள் சிதம்பரம் சைவப்பிரகாச வித்தியாசாலைக்குத் தலைமை உபாத்தியாராக நியமித்தார். இவ்வித்தியாசாலையின் ஆவேதனம் ஒன்றில் நாவலரவர்கள், 'முதலாம் இரண்டாம் வகுப்புப் பிள்ளைகள் நன்றாக விடை சாற்றினார்கள் என்றும் மற்றைய வகுப்புப் பிள்ளைகள் நன்றாக விடைசாற்றவில்லை என்றும் உபாத்தியாயராகிய கோப்பாய் சுபாபதிப்பிள்ளை கற்பிக்குந் திறமையில் நன்கு மதிக்கப்பாலர்'' [58] எனக் குறிப்பிட்டிருப்பது நாவலரவர்கள் சபாபதி நாவலர் திறமையின் மேல் வைத்திருந்த நன்மதிப்பைக் காட்டுவதாக அமைகின்றது. நாவலரவர்கள் சபாபதி நாவலர்மேல் கொண்டிருந்த நம்பிக்கைக்கு ஏற்ற வகையில் அவர்

58. கைலாசபிள்ளை,த., ஆறுமுகநாவலர் பிரபந்தத்திரட்டு,1954,ப. 138

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடந்து கொண்டார் என்று சொல்லுவதற்கில்லை.[59] ஆயினும் நாவலர் மரபையொட்டி ஈழநாட்டிலும் தமிழ் நாட்டிலும் பிரசாரங்கள் செய்தவர் திருவாவடுதுறை யாதீனத்தால் நாவலர் என்னும் பட்டமும் மதுரை திருஞான சம்பந்தர் ஆதீனத்தால் மகாவித்துவான் என்னும் பட்டமும் வழங்கப் பெற்றவர்.[60] சென்னப்பட்டணத்தில் சித்தாந்த வித்தியாநுபாலன யந்திரசாலை யொன்றினை நிறுவி ஞானாமிர்தம், சுதேசவர்த்தமானி என்னும் பத்திரிகைகளை நடத்தி வந்தவர்[61] யேசுமத சங்கற்ப நிராகரணம் (1879) என்னும் நூலினை எழுதிக் கிறிஸ்துமத கண்டனம் செய்தவர். சதுர்வேத தாற்பரிய சங்கிரகம் (1876) பாரத தாற்பரிய சங்கிரகம் (1884) முதலான நூல்களை சங்கத மொழியில் இருந்து மொழிபெயர்த்து வெளியிட்டார். சிதம்பர சபாநாத புராணம் (1885) திருச்சிற்றம்பலயகம வந்தாதி, திருவிடைமருதூரந்தாதி, பதிற்றுப்பத்தந்தாதி, மாவையந்தாதி, நல்லைச் சுப்பிரமணியக் கடவுள் பதிகம், வடகோவை செல்வ விநாயகர் இரட்டை மணிமாலைய திராவிடப்பிரகாசிகை (1889), சிதம்பர பாண்டி நாயக்க மும்மணிக்கோவை, வதிரிநகர்த் தண்டபாணிக் கடவுள் பதிகம் (1890), இலக்கண விளக்கப்பதிப்புரை மறுப்பு, வைதீக காவிய தூஷண மறுப்பு, புறவார் பனங்காட்டூப் புறவம்மை பதிகம், சிவஞானபோத யோகிகள் குருபூசை மகோற்சவம் முதலான நூல்கள் இவரால் எழுதப்பட்ட வையாகும். சுழிபுரம் - பறாளை விநாயகர் பள்ளுப் பிரபந்தத்தை விரோதி ஹு சித்திரை மாதம் (1889) பதிப்பித்து வெளியிட்டார். ஸ்ரீ அம்பாலவாண தேசிகசுவாமிகள் கட்டளைப்படி மாவதச் சிவஞான யோகிகள் இயற்றிய சித்தாந்த மரபு, சிவசமயவாத மறுப்பு எழுத்து என்னுஞ் சொல்லுக்கிட்ட வைரக்குப்பாயம் முதலான நூல்களையும் பதிப்பித்து விஜய ஹு கார்த்திகை மாதம் (1893) வெளியிட்டார்.

சிதம்பரம் ஆ.சோமசுந்தர முதலியார் விழுப்புரம் இராமசாமிப் பிள்ளை மாகறல் கார்த்திகேய முதலியார் மயிலை க.சிங்கார வேலு முதலியார் மாவை வே. விசுவநாதபிள்ளை, சிதம்பரம் சிவராமச் செட்டியார். மயிலை பாலசுந்தர முதலியார், சுழிபுரம் சிவப்பிர்காச பண்டிதர் வதிரி சி. தாமோதரம்பிள்ளை, சிதம்பரம் முத்து வேலாயுதபிள்ளை, ச.பொன்னம்பலபிள்ளை முதலானோர்கள் சபாபதி நாவலரவர்கள் மாணாக்கர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள்.[61]

---

59. சிதம்பரம்,சை.பி. வித்தியாசாலை ஆவேதனம், 1869,பக்-2
60. கைலாசபதி,க., (அம்பலத்தான்) 'ஆறுமுகநாவலரும் சபாபதி நாவலரும்', நாவலர் நூற்றாண்டு மலர், 1979, பக் 160-161
61. மேலது நூல், பக்.100

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சபாபதி நாவலர் நாவலரவர்களின் மாணாக்கர்களோடு முரண்பட்டு நின்ற பொழுதும் நாவலர் மரபில் நின்று விலகிச் சென்றனரல்லர். ஆறுமுக நாவலர் சதகம்[62] பாடிய சபாபதி நாவலர் ''ஆறுமுகச் செம்மலெனு நாவலனே என்றெனை யாட்கொள்வாயினி'' [63] என இரந்து பாடுவது வழுவாத அவரின் குருபத்தியைக் காட்டுவதாக அமையும்.

## சபாபரத்தின முதலியார் ச, (1858-1922)

இவர் கொக்குவில் சுயம்புநாதபிள்ளை என்பவரிடத்து ஆரம்பக் கல்வி பயின்றார். பின்னர் நாவலரவர்களின் சைவப்பிரகாச வித்தியா சாலையில் தமிழ் மொழிக் கல்வியையும், சைவாங்கில வித்தியாசாலையில் ஆங்கில மொழிக் கல்வியையும் பயின்றார். பின் யாழ்ப்பாணம் வெஸ்லியன் கல்லூரியில் கல்வி பயின்றார். இவர் எழுதுவினைஞராகவும் முதலியா ராகவும் பதவி வகித்தார். அதே சமயம் சிறந்த கல்விமானாகவும் விளங்கினார். பிருட்டாவின் (Brandlaush) பிரபஞ்சம் பற்றிய உலகாயிதவா தத்தை அங்கீகரிப்பது போல் தமிழ் நாட்டில் தத்துவவிசாரணி, தத்துவ விவேகினி ஆகிய பத்திரிகைகள் அக்கொள்கை சார்பான கருத்துக்களை வெளியிட்டு வந்தன. அந்நிலையில் அக்கருத்துக்களைத் தருக்க வழி நின்று எதிர்க் கருத்துக்கள் தெரிவித்து வந்தவர் முதலியாரவர்கள்[64]. அவர் கருத்துக்கள் சைவ உதயபானு, இந்து சாதனம் ஆகிய பத்திரிகைகளில் வெளிவந்தன. இதே போன்று பிரமவித்யா என்ற பத்திரிகை மாயா வாதத்தை நிலை நிறுத்த முற்பட்ட நிலையில் அக்கருத்துக்களை மறுதலித்து எழுதியவர் முதலியாரவர்கள். இவர் கருத்துக்களை இந்து சாதனம் தாங்கி வெளிவந்தது. அவ்வகையில் முதலியாரவர்கள் சென்ற நூற்றாண்டில் ஈழத்தில் தோன்றிய தத்துவவாதியாக விளங்கினார் எனலாம். அத்துடன் கவித்துவ மிக்கப் புலவராகவும் திகழ்ந்தார், சுமார் நாற்பதுக்கு மேற்பட்ட பிரபந்தங்களைப் பாடியுள்ளார் என அறிய முடிகின்றது. கொக்குவில் கிருபாகர சிவ சுப்பிரமணிய சுவாமி மீது கலித்துறை யந்தாதி, பதிற்றுப் பத்தந் தாதி, சதகம், அங்கப்பிரத்தியங்கதோத்திரம், தெய்வயானையம்மை தோத்திரம், வள்ளி நாயகி தோத்திரம், வேல் விருத்தம், மயில் விருத்தம், சேவல் விருத்தம், வீரவாகு தேவர் விருத்தம், நவவீரர் விருத்தம் முதலானவையும் ஒட்டி சுட்டான் சிவபெருமான் பேரில் ஆசிரிய விருத்தம், கொக்குவில் சித்தி விநாயகர் மீது இரட்டை மணிமாலை முனீசுவரம்

---

62. விஞ்ஞான வர்த்தினி, 22 மார்கழி 1882.

63. மேலது நூல், பக்.

64. கனகரத்தினம். இரா.வை.,கொக்குவில் சபாரத்தின முதலியார் -ஓர் ஆய்வு (வெளிவராத நூல்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னைநாத சுவாமி வடிவாம்பிகை மீது ஆசிரிய விருத்தம் மற்றும் சிவபிரான் அகவல், வயிரவக் கடவுள் தோத்திரம், கந்தர் கலிப்பா, நல்லைநான் மணிமாலை என்பனவும் அவர் பாடிய பிரபந்தங்களுள் சிலவாகும்.

நாவலரவர்கள் போன்று முதலியாரவர்களும் தீவிரமான கிறிஸ்துமத கண்டனகாரராக விளங்கினார். கிறிஸ்து மத கண்டனத்தின் பொருட்டு யேசுமத நிரசனம், நால்வர் யேசுதாரதம்மியம், விவிலிய விகிர்த்தம், சற்சமய விளக்கம், விவிலிய பரீட்சை, சைவதூஷண நிராகரணம், கிறிஸ்துமத விகீதம், சைவசமயமே சமயம், மெய்ஞ்ஞானக்கும்மி மறுப்பு முதலான நூல்களை எழுதினார் என அறிய முடிகின்றது. இவற்றுள் யேசுமத நிரசரனம் பிரமாதி ஞூ ஆனி மாதமும் (1879) நால்வர்யேசு தார தம்மியம் விக்கிரம ஞூ ஆவணி மாதமும் (1880) விவிலிய விகிர்த்தம் விஷு ஞூ புரட்டாதி மாதமும் (1881) வெளிவந்தன. ஏனைய நூல்கள் வெளிவந்ததாக அறியுமாறில்லை.

சைவத்தின் பெருமையை ஏனைய சமூகத்தினர் அறியும் வகையில் ஆங்கில மொழியில் Essentials of Hinduism (இந்து மதத்தின் சாரம்) திருஞானசம்பந்தர் வரலாறு (Life of Thirugnana sambgathar) முதலான நூல்களை எழுதினார். தமிழில் ஈச்சுர நிச்சயம், பிரபஞ்சாரம் முதலான நூல்களையும் எழுதினார்.

திருக்கேதீச்சரம், கொக்குவில் கிருபாகர சுப்பிரமணிய கோவில், ஒட்டிசுட்டான் தான்றோன்றீசுவரர் கோயில் முதலான ஆலயங்களின் புனருத்தாரண பணிகளில் அதிக ஈடுபாடு காட்டினார். மற்றும் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி, ஏழாலை சைவப்பிரகாச வித்தியாசாலை முதலான பாடசாலைகளின் கல்வி வளர்ச்சியில் அதிக அக்கறை காட்டி உழைத்தார். இக்கல்லூரிகளின் பிரதம பரீட்சகராக முதலியாரவர்கள் விளங்கியமை ஈண்டு மனங்கொள்ளத்தக்கது.[66]

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலும் இருபதாம் நூற்றாண்டின் முதற்காற்பகுதி வரையும் நாவலர் இயக்கத்தின் இலட்சியத்தை முன் னெடுத்துச் சென்றவர்களுள் முதலியாரும் குறிப்பிடத்தக்கவர். சைவப்பிர காச சமாசீயம் (1880) சைவபரிபாலன சபை (1888) தமிழ்ச்சங்கம் (1900) சைவப்பிரகாச சமாஜம் (1914) காவிய பாடசாலை (1917) முதலான நிறுவனங்கள் இக்காலப்பகுதியில் நாவலர் இயக்கத்தின் நோக்கினை

66. முத்துக்குமாரசுவாமி,கு., குமாரசுவாமிப்புலவர் வரலாறு, 1970, பக். 19-20

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னெடுத்துச் சென்ற நிறுவனங்களுள் குறிப்பிடத்தக்கன. இந்நிறுவனங்களின் முக்கிய உறுப்பினர்களுள் ஒருவராகி அதன் வளர்ச்சிக்காக அரும்பாடு பட்டு உழைத்தார் முதலியாரவர்கள்.

பன்மொழிப்புலமையும் தத்துவ ஆர்வமும் பிரசங்கஞானமும் உடைய முதலியாரவர்கள் பல சமய மாநாடுகளுக்குத் தலைமை ஏற்று நடத்தினார். தூத்துக்குடி சைவ சித்தாந்த சபை, சென்னை சைவசித்தாந்த சமாஜம், யாழ்ப்பாணம் சைவசித்தாந்த சமாஜம் முதலான சமய நிறுவனங்கள் அவ்வப்பொழுது நடத்திய மாநாடுகளுக்கு முதலியார் பிரதம அதிதியாக அழைக்கப்பட்டுத் தலைமை தாங்கிச் சொற் பெருக்காற்றினார். 1916 ஆம் ஆண்டு மார்கழி மாதம் சென்னை மைலாப்பூரில் நடைபெற்ற சைவசித்தாந்த சமாஜத்தின் பதினொராவது வருடாந்தக்கூட்டத்தொடருக்கு முதலியாரவர்கள் தலைமைவகித்துப் பேசிய உரையின் சிறப்பினை கலாசிந்தாமணி என்னும் பத்திரிகை[67]

> ''இச்சமாஜத்தின் பதினொராம் வருடாந்தக் கூட்டம்...... ஸ்ரீமான் யாழ்ப்பாணத்து S சபாரத்தின முதலியாரவர்கள் தலைமையின் கீழ் கூடியது. பல வித்துவ சிரோமணிகள் பற்பல விடத்திலிருந்து வந்து, பற்பல விஷயங்களைப் பற்றிப் பற்பல விதமாக உபந்நியாசஞ் செய்தனர். ஒவ்வொருநாள் இறுதியிலும் சபாநாயகராகிய ஸ்ரீமான் சபாரத்தின முதலியாரவர்கள் உபந்நியாசித்த அருமை பெருமைகளைக் கடைந்தெடுத்து ''சைவசித்தாந்த அமுது இது; இதனை உண்மின், உண்மின் என்று உபசரித்து ஊட்டினது போல ஒவ்வொருவருடைய செவியிலுமூட்டினார். அனைவரும் அதனை உண்டு தேறினர்''

எனச் சிறப்பித்துக் குறிப்பிடுவது முதலியாரவர்களின் பல்துறை ஆளுமைக்குச் சிறந்த எடுத்துக்காட்டெனலாம்.

19 ஆம் நூற்றாண்டின் கடைக் கூற்றில் நாவலர் மரபின் வழி நின்று சைவசித்தாந்தக்கோட்பாட்டை நிலைநிறுத்துவதிலும் கிறிஸ்துமத கண்டனங்கள் செய்து மத மாற்றத்தைத் தடுப்பதிலும் தமிழ் மொழிக்கல்வியை வளர்த்துச் செல்வதிலும் பெரும்பங்காற்றியவர்களுள் முதலியாரவர்களின் பணி குறிப்பிட்டுச் சொல்லக் கூடியதொன்றே.

---

67. கலாசிந்தாமணி, மார்கழி 1916

68. வேலுப்பிள்ளை, யாழ்ப்பாண வைபவ கௌமுதி, 1918, பக்.213

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நமச்சிவாயப்புலவர்,சு,

இவர் ஆவரங்கால் சுப்பிரமணிய பிள்ளையின் மகன்[68] சிவசம்புப் புலவர், நாவலர் முதலானோர்களிடம் கல்வி பயின்றவர். நாவலரவர்களைத் துதிக்கின்ற பொழுது "தேறமுது சர்வகலை தேர்ந்த ஸ்ரீலஸ்ரீ யாறு முக சாமி யப்பனே" [69] எனப் போற்றுவார். இவர் தமிழ் இலக்கிய இலக்கணங்களில் மிக்க தேர்ச்சி பெற்றவர். சங்கீதத்தில் மிகுந்த ஞானம் உடையவர். முருகபத்தர், நாவலரவர்களின் வழி நின்று அதிக கீர்த்தனைகளைப் பாடியவர். ஈழமண்டலசதகம் இவர் பாடிய கீர்த்தனைகளை வியந்து போற்றும். நல்லூர் கந்தசுவாமி கோயிலார் நாவலரவர்கள் எழுதிய நல்லூர் கந்த சுவாமி கோயிற் பத்திரிகைகளுக்கு எதிராகப் பிரதிகண்டனம், பரிகண்டனம், சம்பாஷணை, வச்சிரகுலிசம் என்னும் நான்கு பத்திரிகை களை எழுதி வெளியிட்டனர். நாவலரவர்களின் சார்பாக நமச்சிவாயர் நாவலரவர்களை எம்பெருமான், எம்பெருமான் என விளித்துப் பேசியமை நல்லூர்க் கந்தசுவாமி மாப்பாணர்களுக்கு பெருங்கோபத்தைக் கொடுத்தமை இங்கு நினைவு கூரத்தக்கது. நல்லூர்க் கந்தசுவாமி கோயிலார் வெளியிட்ட கண்டனங்கள் யாவற்றுக்கும் பிரதிகண்டனமாக அமைந்த மித்தியாவாத நிரசனத்தில் இவரை ஆவரங்கால் நம்பி என நினைவு கூருவார்.[70] ஆயினும் நமச்சிவாயப் புலவருக்கும் நாவலரவர்களுக்கும் கருத்து முரண்பாடுகள் இருக்கவே வேண்டும். இதனால் தான் நாவலரவர்கள் சிவபதம் அடைந்த பொழுது பாமாலை சூட்டித் தனது பிழைகளைப் பொறுத்தருளும்படி வேண்டி நின்றார் போலும்.[71]

## ஆறுமுகம் பிள்ளை, வை., (-1894)

இவர் நல்லூரைச் சேர்ந்த வைரவநாதபிள்ளையின் மகன் ஆவார். 1846 ஆம் ஆண்டு முதல் நாவலரவர்களிடம் பயின்று வண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலையின் ஆசிரியர்களுளொருவராக இருந்தவர். பின் பிரமச்சரியத்தின் பொருட்டு இப்பாடசாலையை விடுத்துத் திருவண் ணாமலை ஆதீனத்தை அடைந்து கஷாயம் பெற்றுத் தம்பிரான் ஆயினார்.[72] தம்பிரான் அவர்கள் நாவலரவர்கள் போல் சித்தாந்தப் புலமை மிக்க, சிறந்த

69. வே.கனகரத்தின உபாத்தியார், ஆறுமுகநாவலர் சரித்திரம், 1882,ப.153
70. கைலாசபிள்ளை,த., ஆறுமுகநாவலர் பிரபந்தத்திரட்டு, 1954
71. சற்குருவே மெய்த்திருவே தண்ணளிலே விண்ணொளியோ சொற்கிருத்தா யெங்கிருந்தாய் சொல்லாயே - நிற்குமுனம் குற்றமது செய்தேமோ கொடுநெறி பெய்தேமோ பெற்றியது வந்தவெளி பேசு (கனகரத்தின உபாத்தியார், ஆறுமுகநாவலர் சரித்திரம். 1882, பக் 153)
72. இந்து சாதனம், சித்திரை, 1894

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரையாசிரியராகத் திகழ்ந்தார். இவர் பெரிய புராணத்தில் ஏயர்கோன்கலி காம நாயனார் புராணம் வரை உரை எழுதினார். இது இரு பகுதிகளாக வந்தது. முதற் பகுதி ஸர்வஜித்து வருடத்திலும் (1887) மற்றயது விளம்பி வருடத்திலும் (1898) வெளிவந்தது. மற்றும் சேக்கிழார் நாயனார் புராணம், திருமுறை கண்ட புராணம், அற்புதத்திருவந் தாதி, மூத்த நாயனார் இரட்டை மணிமாலை முதலானவற்றுக்கும் உரை கண்டுள்ளார்.

## கந்தப்பிள்ளை,வி., (1840-1914)

இவர் வேலணையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். நாவலரவர்களிடத்தில் தமிழ் இலக்கிய இலக்கணங்களைக் கற்றவர். நாவலரவர்களின் கட்டளைப்படி வேலணையில் சைவப் பிரகாச வித்தியாசாலையைத் தாபித்தவர். அங்கு ஒரு அச்சுயந்திரசாலையை நிறுவியவர். சைவத்தின் வளர்ச்சியின் பொருட்டுச் **சைவசூக்குமார்த்த போதினி** என்னும் பத்திரிகையை வெளியிட்டு வந்தவர். ஈழநாட்டிலும் தமிழ் நாட்டிலும் உள்ள பல்வேறு இடங்களில் பிரசங்கம் செய்தவர். கொழும்பு சைவபரிபாலன சபையின் பிரசாரகராகப் பல்லாண்டு பணிபுரிந்தவர்.[73] தத்துவப் பிரகாசவுரை, சிவநெறிப்பிரகாசம் ஆகிய நூல்களை நன்கு பரிசோதித்துப் பதிப்பித்தவர். நாவலரவர்களின் பணிப்பின் பேரில் தீவுப் பகுதியின் சைவசமய வளர்ச்சிக்குக் குறிப்பாக 20ஆம் நூற்றாண்டின் முதற் காற்பகுதியின் வளர்ச்சிக்கு அதிக பங்களிப்பு ஆற்றியவர் வித்துவான் கந்தப்பிள்ளையே எனில், அது மிகையன்று.

## காசிநாதப்பிள்ளை (-1870)

பிரபல ஸூ மார்கழி மாதம் தருமபுரவாதீனத்து ஸ்ரீமத் சச்சிதானந்த தேசிக சுவாமிகள் வித்தியாசாலைக்கு எழுந்தருளி சமாசாரம் அத்திய க்ஷராகிய காசிநாதப்பிள்ளையினுடைய கடிதத்தெடுத்துக் காட்டினால் இனிது விளங்கும்[74] என நாவலரவர்கள் தமது ஆவேதனமொன்றில் காசிப்பிள்ளை பற்றிக் குறிப்பிட்டிருப்பது நாவலரவர்கள் அவர் மீது வைத்திருந்த நம்பிக்கையையும் மதிப்பையும் காட்டுவதாக அமைகின்றது. சிதம்பரம் சைவப்பிரகாச வித்தியாசாலை முழுமையாகக் கட்டி முடிக்கப் பெற்ற பிற்பாடு அப்பாடசாலையின் முகாமையாளராகக் கடமையாற்றியவர் காசிநாதபிள்ளையே ஆவார். இவர் பச்சிலைப்பள்ளி மணியகாரனின் புதல்வர். இளமையில் தமது மனைவியை இழந்தமையால் துறவு பூண்டவர். பின் சிதம்பரம் சென்று தில்லை நடராசனுக்கு தொழுப்பு செய்து வந்தவர்.

---

73. கணேசையர், ச., ஈழநாட்டுத் தமிழ்ப்புலவர் சரித்திரம், 1939,பக், 166-117
74. சிதம்பரம், சை.பி.வித்தியாசாலை ஆவேதனம்,1867

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலரவர்களின் அரவணைப்பால் அவரது பணிக்குத் தம்மை ஈடுபடுத்தியவர். நாவலரவர்களையே குருநாதராகக் கொண்டு வாழ்ந்து 1870 ஆம் ஆண்டில் இயற்கை எய்தினார். நாவலரவர்களே அவரது அந்திமக்கிரியைகளை சிறப்பான முறையில் செய்து முடித்தனர்.[75]

## ஏரம்பையர்,சு., (1847-1917)

இவர் சம்பந்தப்புலவர் நாவலர் முதலான புலவர்களிடத்துப் பாடம் கேட்டவர். தமிழ் சங்கத மொழிகளில் பாண்டித்தியம் பெற்றவர். கவிதை பாடுவதில் வல்லவர். சமய ஒழுக்கசீலமுள்ளவர். ஆரம்பகாலம் முதலே சமயப் பிரசாரகராகவே விளங்கியவர். சைவபரிபாலன சபை ஆரம்பிக்கப்பட்டதும் அச்சபையின் பிரசாரகர்களிளொருவராகத் திகழ்ந்தவர். குமாரசுவாமிப்புலவர் நந்தாவில் சுப்பையர் முதலான பிரசாரகர்களுடன் நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் சென்று சமயப்பிரசாரம் செய்து வந்தவர்[76] சைவபரிபால சபையின் பொருட்டு பசுபதிச் செட்டியாரால் ஆரம்பிக்கப் பட்ட குருகுலப்பாடசாலையின் தலைமை உபாத்தியாயராகச் சில காலம் இருந்தவர். பின்னர் கீரிமலையிலே நாவலரவர்களின் தருமப் பொருள் கொண்டு தாபிக்கப் பெற்ற பாடசாலையிலே தலைமையாசிரியராக இருந்தவர். சேது புராணவசனம் (1900), மகாசங்கற்பம் (1900), நாகேஸ்வரி தோத்திரம், குவாலலம்பூர் சிவபெருமானூஞ்சல் கவணாவத்தை வைரவரூஞ்சல், மாதகற் பிள்ளையாரூஞ்சல், காலிக் கதிரேசர் ஊஞ்சல் என்பன இவரது ஆக்கங்களாகும். நாவலரவர்கள் தாம் பதிப்பிக்கும் பொருட்டு வைத்திருந்த சிவபூசாவிதி தருப்பண விதி ஆகிய இரு நூல்களையும் இவரே பதிப்பித்தவர் என்பர்.[77]

## சிவப்பிரகாச பண்டிதர்,ச., (1864-1916)

நாவலரவர்களைப் போல் சைவசமய வளர்ச்சிக்காகப் பிரசங்கம், கண்டனம் கற்பித்தல் நூல் வெளியிடல் முதலான துறைகளில் ஈடுபட்டவர் நீர்வேலி சங்கரபண்டிதர், இவரின் மூத்த புதல்வரே சிவப்பிரகாச பண்டிதர். தந்தை இறந்ததும் இவர் நாவலரவர்களிடத்தில் பாடம் கேட்டனர். வண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலையில் சிலகாலம் ஆசிரியராகக் கடமையாற்றியவர்[78] நாவலரவர்களின் தருமத்தை அடிப்படையாகக் கொண்டு தொடக்கப்

---

75. கனகரத்தின உபாத்தியார், வே., ஆறுமுக நாவலர் சரித்திரம்
76. இந்து சாதனம் பங்குனி,1893
77. செல்லையாபிள்ளை ச, ஆறுமுகநாவலர் சரித்திரச் சுருக்கமும் அவர்கள் இயற்றியருளிய தனிப்பாமாலையும் 1914 பக்,11
78. முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை குமார சுவாமிபுலவர் வரலாறு, யாழ்ப்பாணம் ஸ்ரீசண்முக நாத அச்சகம், 1970,பக்,101

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்ற சமய கல்வி நிறுவனங்களின் அனைத்து முயற்சிகளிலும் தாமும் ஒருவராக அமர்ந்து பயன் கருதாது பணியாற்றியவர். நீர்வேலியில் சைவப்பிரகாச வித்தியாசாலையொன்றினை நிறுவியவர். பாலாமிர்த்தம், பாலபாடங்கள் முதலான நூல்களை எழுதினர். திருக்கழிப் பாலைப் புராணத்தைப் பாடினார். திருச்செந்தூர் புராணத்துக்கு உரை எழுதினார். சிவானந்தலகரிக்குத் தமிழ் உரை கண்டனர். இவர் சமயப் பிரசாரராகவும் பௌராணிக வித்திகராகவும் திகழ்ந்தனர்.

## சின்னத்தம்பி,வீ.,

இவர் ஈழத்து வன்னிப் பகுதியில் அமைந்த பொன்னா வெளி வீரகத்தி என்பாரின் மகன். நாவலரவர்களிடத்தில் பிற்காலத்தில் பயின்றவர். உடையார் உத்தியோகம் வகித்தவர். நாவலரவர்களின் சிவபூஜைக்குச் சம்பா அரிசியைக் கிரமமாக அனுப்புவதை நியமமாக் கொண்டவர்.[79] நாவலரவர்களின் வேண்டுதலின் பேரில் பூநகரி வன்னிப் பகுதியில் தமிழ்க் கல்வியைப் பரப்பியவர். 1890 ஆம் ஆண்டில் பொன்னாவெளியில் திண்ணைப் பள்ளியை ஆரம்பித்த உடையார் 1905 ஆம் ஆண்டில் அதனை நிறுவன அமைப்பினுள் கொண்டு வந்தார்.[80] இங்கு பாலபாடங்கள், இலக்கண சுருக்கம், கந்தபுராணம். திருவிளையாடற் புராணம், பாரதம், முதலான நூல்கள் பயிற்றுவிக்கப்பட்டன. நவராத்திரிப்பாடல் எனும் பாடல் பாடி ஆசியர்களான வேதளம் திரட்டப்பட்டது **''மன்னாருக்குச் சமீபத்திலுள்ள மாதோட்டத்தில் திருக்கேதீச்சரம் என்னும் தேன் பொந்து ஒன்று உள்ளது. அங்கு மருந்து ஒன்று மறைந்திருக்கின்றது அதனைச் சென்றடையுங்கள்.''**[81] என்னும் ஒரு விஞ்ஞாபனத்தை (1872) நாவலரவர்கள் வெளியிட்டிருந்தார். இவ்விஞ்ஞாபனத்தைக் கருத்திற் கொண்டு சின்னத்தம்பி அவர்கள் திருக்கேதீச்சர ஆலயப் புனருத்தாரணப் பணியில் மிகுந்த ஈடுபாடு கொண்டு உழைத்தார். அவுர் தமது அந்திமகால வாழ்வினையும் திருக்கேதீச்சரநாதர் பணிக்கே அர்ப்பணித்தமை குறிப்பிடத்தக்கதாகும். நாவலர் மரபில் ஆலயசேவை மிக முக்கியத்துவம் உடையது என்பது இங்கு நினைவு கூரத்தக்கதாகும்.

79. நாவலர் மாநாடு விழாமலர், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபை வெளியீடு,1969, நாவலர்களஞ்சியம்5.
80. தத்துவநியமனம்,1905
81. திருக்கேதீச்சரம் திருக்குடத்திருமஞ்சனமலர், ஆலயத்திருப்பணிச்சபை வெளியீடு, 1976, பக்.13

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றும்,நாவலர் மரபில் வந்தோர்களில் இணுவில் **அம்பிகைபாகர்** நாவலரவர்களிடத்தே பாடங்கேட்டவர் இணுவையந்தாதி, தணிகை புராணவுரை, சூளாமணிவசனம் முதலான நூல்களின் ஆசிரியர். இவர் புராணபடனஞ் செய்வதிலும் வித்தகராகத் திகழ்ந்தார். சுழிபுரம் வை. **திருஞானசம்பந்தப்பிள்ளை** என்பவரே திருநெல்வேலிச் சைவப்பிரகாச வித்தியாசாலையில் உபாத்தியாயராக இருந்தவர். சைவ உதயபானு இந்துசாதனம் முதலான பத்திரிகைகளுக்கு ஆரம்பகாலத்தில் விடயதானம் செய்தவர். ஈழநாட்டின் பல பகுதிகளிலும் பிரசங்கம் செய்து வந்தவர். புராணபடனஞ் செய்வதிலும் வல்லவர். **மாணிக்கப்பிள்ளையார் திருவருட்பா, கதிர்காமவேலர் திருவருட்பா** முதலான பிரபந்தங்களைப் பாடியுள்ளார். வண்ணைத் **தில்லையம்பலம்** என்பார். நாவலர்பரம்பரையில் வந்தவர். நாவலர் மரபினர். சரவணமுத்துச் செட்டியாருக்கு மூத்த புதல்வர். வித்துவசிரோமணி பொன்னம்பல பிள்ளையின் தமையனார். பிரசங்கம் புராணபடனஞ் செய்தல் என்பவற்றை இவர் புனிதக் கடமைகளாகக் கொண்டிருந்தார்.

**சங்கரநாராயணபிள்ளை** என்பார் நாவலரவர்களிடத்தில் கல்வி பயின்றவர். நாவலரவர்களின் சைவாங்கில வித்தியாசாலையில் ஆசிரியராகக் கடமையாற்றிய **கனகரத்தின உபாத்தியாரும்** நாவலரவர்களிடம் பயின்று வண்ணை-சைவாங்கில வித்தியாசாலையில் ஆசிரியராகக் கடமையாற்றியவர். தமது குருவாகிய நாவலரவர்களின் வரலாற்றை நல்லூர் ஆறுமுகநாவலர் சரித்திரம் என்னும் பெயரில் ஒழுங்குபட முதன் முதல் எழுதி ஞு சித்திரை பானு ஐப்பசி மீ (1882) வெளிப்படுத்தியவர். **கா.தியாராசபிள்ளை** என்பார் நாவலரவர்களின் மாணாக்கரே. இவரே சதாவதானி **நா.கதிரைவேற்பிள்ளையின்** ஆசிரியராவார்.

**ஊரெழு ச.சரவணமுத்துப்பிள்ளை** (1822-1879) நாவலரவர்களிடம் பாடம் கேட்டாரா என்பது பற்றி அறியுமாறில்லை. ஆயினும் **செந்தமிழிற்றானே தனக்கிணையாகிய யுதித்துயர் சற்குருவாய்**[82] என்றுபாடுவதன் மூலம் இருவரும் நாவலர் மாணவபரம் பரையில் வந்தவராய், நாவலர் மரபில் நின்றவராய்க் கொள்ள முடிகின்றது. இவர் சைவ உதயபானு (யாழ்ப்பாணம் 1880) என்னும் பத்திரிகைக்கு ஆசிரியராக இருந்தவர். தமிழ் நாட்டில் சைவ உதயபானு (21.4.1884) என்னும் பெயருடன் ஒரு பத்திரிகையை நடத்தி வந்தவர். நாவலரவர்களும் **சைவ உதயபானு** என்னும் பெயருடன் ஒரு

82. கனகரத்தின உபாத்தியார், நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சரித்திரம், 1882, பக்.162

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்திரிகையை நடத்த உத்தேசித்திருந்தனர் என்பதை இங்கு நினைவிற் கொள்ளுதல் வேண்டும். இவர் சைவசித்தாந்த நூல்களில் மிகுந்த பயிற்சி உடையவர். இவர் ''சுத்தாத்துவித சைவ சிந்தாந்தப் பிரசாரகர்'' எனப் போற்றப்பட்டவர். நாவலரவர்களைப் போன்று சிறந்த கண்டனகாரராகவும் விளங்கினார். மாறுபடும் கருத்துக்களைத் துவம்சம்செய்யும் மனப்போக்கும் அதற்கேற்ற மொழி நடையும் சிறந்த கண்டனத்து அடிப்படை என்பர்[83] ''சரவண முத்துப்பிள்ளை யென்னுமிவர் போலிக் கொள்கைகளைத் தாக்கிக் கண்டன மெழுதுவதிலும் அதிக சமர்த்தர்'' எனச் சி.கணேசையர் குறிப்பிடுவது மேற் கூறிய கூற்றுடன் ஒப்பு நோக்கத்தக்கது[84].

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபை, கொழும்பு சைவபரிபாலன சபை முதலான சபைகளின் கௌரவ சைவசமயப் பிரசாரராக விளங்கினார். தமிழ் நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் சென்று சைவம், சைவசித்தாந்தம் தமிழ் மொழி என்னும் விடயங்கள். பற்றிப் பிரசாரம் செய்துள்ளார். நாவலரவர்களுடைய காலத்திலேயே **''நாவலரவர்கள் ஐந்தாம் குரவர்''** என்னும் கருதுகோள் முன்வைக்கப்பட்டது. ஆனால் அது நாவலரவர்களால் கண்டிக்கப்பட்டு கைவிடப்பட்டது என்பது வரலாறு. ஆயினும் பிற் காலத்தில் சரவணமுத்துப் பிள்ளையால் மீண்டும் நாவலர் ஐந்தாம் குரவர் என்னும் கோட்பாடு வலியுறுத்தப்பட்டது. நாவலரவர்களது பணிகளை பின்வருமாறு வற்புறுத்துவதன் மூலம் அதனைச் சாதிக்க முயன்றார்.[85]

> **'ஐந்தாஞ் சைவசமய குரவரென்று விவேகிகள் பலராலும் நன்கு பாராட்டப்பட்ட ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவல சற்குரு நாதசுவாமிகளது கல்வித்திறமை, பிரசங்க நன்மை, சமய விருத்தி, தேவபத்தி அடியார்பத்தி, பூசாநியமனம், வாய்மை, பரோபகாரம், சன்மார்க்கம், நிலைதிறம்பாமை, தீரத்துவம் முதலிய சுவலட்சணங்களையும் அவர்களாலே உகத்தவர்கள் அடைந்த இகபர சிலாக்கியங்களையும், பாதிரிகளும் அவர் மாணாக்கர்களுமே அறிய வல்லவர்கள்**

20 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் தமிழ் நாட்டிலும் ஈழ நாட்டிலும் பௌதிகவாதம் உலோகாகிதவாதம் மாயாவாதம் என்பன முக்கியத்துவம்

---

83. கைலாசபதி,க., ஈழத்து இலக்கிய முன்னோடிகள் 1986, பக்.
84. கணேசையர், சி., ஈழநாட்டுத் தமிழ்ப்புலவர் சரித்திரம், 1983, பக் 124
85. கைலாசபதி க. ஈழத்து இலக்கிய முன்னோடிகள் மக்கள் வெளியீடு, சென்னை,1986.பக் 69

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறும் வாதங்களாகக் கருதத்தக்க வகையில் அக்கருத்துள் முன்வைக்கப் பட்டன. புதிய பத்திரிகைகள் அவற்றுக்கு முக்கியத்துவம் கொடுத்து பிரசுரித்தன. தமிழ் நாட்டில் இவற்றின் செல்வாக்கு வலுவாக அமைந்தன. ஈழநாட்டிலும் இவ்வாதங்கள் மெல்ல மெல்ல செல்வாக்குப் பெறத் தொடங்கின. இந்த நிலையில் நாவலர் மரபினைச் சார்ந்தோர் மேற்கூறிய வாதங்களை நிராகரிக்கும் வகையிலும் சைவசித்தாந்த வாதத்தை மீட்டுருவாக்கம் செய்யும் வகையிலும் சைவசித்தாந்த மீட்சி இயக்கத்தை ஏற்படுத்தினர். அவ்வகையிலே கொக்குவில் சபாரத்தின முதலியார் ஊரெழு சரவணமுத்துப்பிள்ளை, ஆ.முத்துத்தம்பிப்பிள்ளை, வித்துவான் சி,தாமோதரம்பிள்ளை முதலானோர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். ஊரெழு சு.சரவணமுத்துப்பிள்ளை **சண்முகநாதன்** என்னும் பத்திரிகையில் நாவலர் மரபினைப் போற்றிக் குறிப்பாக, நாவலரவர்களால் வளர்த்து விட்டுச் சென்ற சைவசித்தாந்த நெறி காலவெள்ளத்தால் அடித்துச் சென்றுவிடுமோ என்ற ஆதங்கத்தினால் சைவசமயத்தைக் காக்கவேண்டும் என்றும் அதுவும் நாவலர் மரபில் நின்று சைவசித்தாந்தத்தை வளர்க்க வேண்டும் அல்லது அது பற்றிய மீட்சி இயக்கத்தை தோற்றுவிக்க வேண்டுமென்றும் பின்வருமாறு வற்புறுத்துவது பிள்ளையவர்கள் சைவசித்தாந்தத்திலும் நாவலர் மரபிலும் கொண்டிருந்த மாறாத ஆர்வத்தைக் காட்டி நிற்கும் [86]

> ''ஸ்ரீலஸ்ரீ நாவலரவர்களுடைய காலத்திலே அவர்களால் மிக்கோங்கிப் பிரபலமுற்றிருந்த நமது சுத்தாத்துவித சைவசித்தாந்த சமய அறிவு இப்பொழுது சுருங்கி வருவதற்கேது வாயிற்று. நாவலரவர்கள் காலத்திருந்தவர்களாயிப் பொழு துள்ள சிலரினாலேதான் நமது சித்தாந்த சைவஞ் சிறிது விளக்க முற்றிருக்கின்றது. இச்சிலரும் போயொழிந்தால், நமது யாழ்ப்பாண தேசம் முழுவதும் மாயாவாதமும் நிரீச்சுரவாதமும் உலோகாயதமுமே மலிந்து நீசதேசமாக வருவதற்கு யாதுஞ் சந்தேகமில்லை. இனி நமது தேசத்தைப் பழைய நன்னிலைக்குக் கொண்டு வரவேண்டுமேயானால் இங்கேயுள்ள செல்வப் பிரபுக்களுள்ளே அறிஞராயுள்ள சிலராவது தொருங்கு திரண்டு, கோயில்களையும் மடங்களையும் கட்டுதலை விடுத்து, ஊர்கடோறும் சிந்தாந்த சைவசபைகளைத் தாபித்து நடத்திவர முயலவேண்டும் ''

86. மேலது நூல்,பக்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த மீட்டுருவாக்கத்தின் விளைவாகத் தோன்றியனவே சைவ சித்தாந்தசபை, சைவசித்தாந்த சமாஜம் போன்ற நிறுவனங்களாகும் பிள்ளையவர்கள் புராணபடனஞ் செய்வதிலும் பிரபந்தங்கள் பாடுவதிலும் வல்லவராக விளங்கினார்.[87]

பிரசங்கம் செய்தல், புராணபடனங் செய்தல், பிரபந்தங்கள் பாடல் முதலானவற்றிலும் மிகுந்த ஈடுபாடு காட்டி வந்தார். **சி.பொன்னுச்சாமி ஐயர்** இவர் வண்ணார் பண்ணையைச் சேர்ந்தவர். நாவலரவர்களிடத்திலும் ந.ச. பொன்னம்பலபிள்ளை இடத்திலும் பாடம் கேட்டவர். தமிழ் இலக்கிய இலக்கணங்களில் நன்கு புலமை மிக்கவர். கவிபாடும் ஆற்றல் பெற்றவர். நல்லூர்க்கந்தன் மேல் நல்லை நீரோட்டகயமக அந்தாதி பாடியவர். புராணபடன வித்தகர். பிரசங்கம் செய்வதில் மிகுந்த ஆற்றல் உடையவர். **விநாயக மூர்த்திச் செட்டியார்** வண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலையில் ஆசிரியராக இருந்தவர். சங்கீத ஞானம் உடையவர். கீர்த்தனைகள் பாடுவதில் வல்லவர். இவர் காசநோயால் பீடிக்கப்பட்டிருந்த பொழுது நாவலரவர்களைக் கொண்டு கீர்த்தனைகள் பாடிவித்து அதனைக் கதிர்காமத்தில் பாடி அரங்கேற்றியதன் வாயிலாகக் காசநோய் நீங்கப் பெற்றார் என்பர். கதிரையாத்திரை விளக்கம் என்னும் நூல் இவரது தொகுப்பு நூலாகும்.[88]

**ம.க.வேற்பிள்ளை** மட்டுவிலைச் சேர்ந்தவர். சாலிவாகன சகாப்தம் 1769 க்குச் சமமான பிலவங்க ஞூ தை மாதம் 8 ந் திகதி, கிறிஸ்தாப்தம் 1848 இல் பிறந்தவர். இவர் தமது இளமைக் கல்வியை சண்முக உபாத்தியாயரிடத்திலும் பின்னர் உயர் கல்வியை கார்த்திகேய உபாத்தியார், வித்துவ சிரோமணி ந.ச. பொன்னம்பல பிள்ளை, நாவலர் ஆகியோரிடத்திலும் கற்றவர். இவரோடு சமகாலத்தில் கல்வி கற்றவர்களுள் ஒருவர் கோப்பாய் சபாபதி நாவலர் என்பர் ''வேற்பிள்ளை உபாத்தியாயர் பொன்னம்பல பிள்ளையை நிழல்போல் தொடர்ந்து அவரைப் பிரியாமலும், நாவலர் ஆகிய அக்கினியை அணுகாமலும் அகலாமலும் இருவரிடமும் அன்போடும் அச்சத்தோடுங் கல்வி பயின்று வந்தார்[89]

87. கணேசையர்,சி.,ஈழநாட்டுத்தமிழ்ப்புலவர் சரித்திரம், 1939, பக். 124
88. இந்நூல் நுன்மதி வருடம் தை மாதம் நாகபட்டினம் விர்த்தாந்த களஞ்சிய அச்சுக் கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது. இதில் நாவலரவர்களின் தமையனார் பரமானந்தப் புலவரும் நாவலரவர்களும் பாடிய கீர்த்தனைகளும் அடங்கி உள்ளன.
89. கணபதிப்பிள்ளை, சி., உரையாசிரியர் சரித்திரம் திருவாதவூரடிகள். புராணமூமும் விருத்தியுரையும், 1959,பக்.4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னும் கூற்று பிள்ளையவர்களின் குருபத்திக்கும் கல்வியில் கொண்டிருந்த ஈடுபாட்டிற்கும் சிறந்த எடுத்துக்காட்டாக அமைகின்றது எனலாம்.

பிற்காலத்தில் பிள்ளையவர்கள் நாவலர் பாரம்பரியத்தை வளர்த்துச் செல்வதற்கு நாவலரவர்களிடத்தும் வித்துவ சிரோமணியிடத்தும் முறையாகக் கல்வி பயின்றமையே அடிப்படையாக விளங்கிற்று என்பதை பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை பின்வருமாறு கூறுவதன் மூலம் அவதானிக்கலாம்.[90]

''நாவலர் அவர்களிடம் சைவ சாத்திரக் கருத்துக்களையும் இலக்கண நுண்மைகளையும், புராணங்கள் சைவாகமங்கள் இவற்றின் போக்குகளையும் சைவாசாரங்களையும், கடவுட் பத்தியையும் வேற்பிள்ளை உபாத்தியாயர் நன்கு பயின்று கொண்டார். பொன்னம்பல பிள்ளையிடம் கம்பராமாயண இரசனையை, எவ்வாறு எடுத்துச் சொல்லுவதென்ற இரகசி யத்தை அப்படியே கைப்பற்றிக் கொண்டார் என்றே சொல்ல வேண்டும். பொன்னம்பலபிள்ளைக்குப் பிறகு உரை சொல்லுகின்ற வித்தை வேற்பிள்ளை உபாத்தியாயரிடமே குடியிருந்தது. உரை சொல்லும் வித்தையைப் பொன்னப் பலபிள்ளையிடங் கைப்பற்றியது போலவே, வசனமெழுதும் வித்தையை நாவலர் அவர்களிடம் உபாத்தியாயர் பயின்று கொண்டார். ஒரு சிறு கடிதம் எழுதுவதானாலும் நாவலர் அவர்கள் வசனத்தைப் பின்பற்றியே எழுதுவார். உரை சொல்லும் பயிற்சியும் வசனமெழுதும் ஆற்றலும் பெருமுயற் சியின்றியே இவருக்கு இயல்பாக அமைந்து விட்டன. நாவலர் அவர்களிடம் பயிலற்பாலதாய்ச் சிறப்புற்று விளங்கிய உபந்நியாச ஆற்றலை உபாத்தியாயர் பயின்று கொண்டார் என்றால் சாலாது. உபாத்தியார் உபந்நியாசஞ் செய்வதுண்டு. அது பாட்டுக்கு உரை சொல்வது போன்றதொரு நடையா யிருக்கும். உரை சொல்லும் ஆற்றல், உபந்நியாச ஆற்றலை விழுங்கிமேற் கொண்டு விட்டது போலும்''

பிற்காலத்தில் பிள்ளையவர்கள் நாவலர் மரபினை வளர்த்துச் செல்வதில் ஒரு மைல்கல் போல் விளங்கினார். மட்டுவில் வடக்கில் ஒரு சைவப்பாடசாலையை நிறுவி அங்கு தென்மராட்சியிலுள்ள மாணவர்கட்குக்

---

90. மேலதுநூல், பக். 4-5.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Prof. V. SIVASAMY
UNIVERSITY OF JAFFNA

கல்வி போதித்து வந்தார். யாழ்ப்பாணம் நல்லூர் திருநெல்வேலி சண்டிலிப்பாய் வண்ணார்பண்ணை பருத்தித்துறை புலோலி முதலான இடங்களுக்கெல்லாம் கல்வி விருத்தியின் பொருட்டும் பிரசங்கத்தின் பொருட்டும் சென்று வந்தார். 1907 ஆம் ஆண்டு பிள்ளையவர்கள் சிதம்பரம் சைவப்பிரகாச வித்தியாசாலையின் தலைமையாசிரியராக நியமனம் பெற்றார். இத்தகைய நியமனம் தமிழ் நாட்டில் நாவலர் மரபைச் சிறப்பான வகையில் வளர்த்துச் செல்வதற்குப் பெருந்துணை புரிந்தது. இவ்வகையில் தமிழ் நாட்டிலும் ஈழநாட்டிலும் தமக்கென ஒரு மாணவர் பரம்பரையை உருவாக்கினார். இவர்களுள் வித்துவான் சுப்பையாபிள்ளை; வித்துவான் தண்டபாணி ஐயர், ஆவரங்கால் நமச்சிவாயபிள்ளை, சாவகச்சேரி ச.பொன்னம்பலப்பிள்ளை, வித்துவான் கணேசையர் முதலானோர்கள் இங்கு குறிப்பிடத்தக்கவர்கள்.

பிள்ளையவர்கள் புலோலி பர்வதவர்த்தினியம்மை தோத்திரம் வைரவ தோத்திரமாலை, ஆருயிர்க்கண்மணி மாலை, சந்திர மௌலீசர் சதகம், ஈழமண்டல சதகம் முதலான நூல்களைப் பாடியுள்ளார். வேதாரணிய புராணம், சிதம்பரச் சிவகாமியம்மை சதகம் முதலான நூல்களைப் பதிப்பித்து வெளியிட்டார். புலியூரந்தாதி, கௌவுளி நூல், திருவாதவூரடிகள் புராணம் அபிராமியந்தாதி முதலான நூல்களுக்குப் பிள்ளையவர்கள் உரை எழுதியுள்ளார். இவ்வுரை நூல்களே பிள்ளையவர்களை உரையாசிரியர் என இனங்காண வைத்தது. இவ்வுரை நூல்களிலே திருவாதவூரடிகள் புராணத்துக்கு எழுதிய விருத்தியுரையாகும். இந்நூலுக்கு வித்துவசிரோமணி ந.ச. பொன்னம்பல பிள்ளை, புலோலி.வ.கணபதிப் பிள்ளை, சுன்னாகம் அ. குமாரசுவாமிப்புலவர், புலோலி அ. சோமசுந்தரப் புலவர், தமிழ்நாடு கோ. வைத்திலிங்கபிள்ளை முதலான புலவோர்கள் சிறப்புப்பாயிரம் வழங்கிச் சிறப்பித்துள்ளனர். வித்துவசிரோமணி அவர்கள் ''வேற்பிள்ளையா நற்பெருங் கலைஞன், பொன்னவன்ன நன்மதிப்புலவர் கண், மெச்சிடவோருரை விரித்தன,னுச்சிமேலறிஞர் கொண்டுவப்புறல் கடனே'' எனப் பாராட்டுவார்[91]. பிள்ளையவர்களின் உரை நூல்களை மதிப்பீடு செய்ய முயன்ற ஈழத்து அறிஞர் ஒருவர் திருவாதவூரடிகள் புராண உரை பற்றிக் கூறுகையில்[92]

---

91. வேற்பிள்ளை,ம.க., திருவாதவூரடிகள் புராண மூலமும் விருத்தியுரையும், வித்தியாநுபாலன யந்திரசாலை, சென்னை, 1957, பக்.7
92. கணபதிப்பிள்ளை, சி., உரையாசிரியர் சரித்திரம், திருவாதவூரடிகள் புராண மூலமும் விருத்தியுரையும், 1957, பக்.7

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''திருவாதவூரடிகள் விருத்தியுரை, உரை எழுதுவதற்கு எடுத்துக் காட்டாக எடுத்துக்காட்டக்கூடியது. பரிமேலழகர் உரை நாவலர் உரை ஆகிய இருவர் உரைகளையும் பின்பற்றிச், சிவஞான சுவாமிகளின் பரந்த உரையைத் தொடர்ந்து விரிந்தது. உபாத்தியாயரின் விரித்தியுரை இதற்குப் பிறகு இது போன்ற தொரு மரபு பட்ட விருத்தியுரை இன்று காறுந்தோன்றவில்லை. இவ்விருத்தியுரையை வித்துவசிரோமணி பொன்னம்பலப் பிள்ளையே வியந்து பாராட்டி உபாத்தியாயருக்கு **உரை யாசிரியர்** என்ற சிறப்புப் பெயரை வழங்கியிருக்கின்றார் ''

எனப் போற்றி இருப்பது பிள்ளையவர்களின் புலமைத்துவத்தின் ஆளுமையை மதிப்பீடு செய்வதோடு அமையாது நாவலர் மரபின் தாக்கத்தையும் வெளிப்படுத்தியுள்ளமை அவதானிக்கத்தக்கதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயல் 3

## தமிழ் நாட்டில் நாவலர் மரபு

தமிழ் நாட்டில் நாவலரவர்களின் மரபில் வந்தவர்களாகத் திருமயிலை மகாவித்துவான் தணிகாசல முதலியார், காரைக்குடி சொக்கலிங்கச் செட்டியார், சுப்பு ஒதுவார், பொன்னோதுவார். சிதம்பரம், இ.வைத்திலிங்கம், உ.அ.சோமசுந்தரர், இ.சபாபதி, இ.ஐ.நிருத்தராஜ-தீட்சிதர், மா.கோபால சுவாமி தீட்சிதர், ஈ.சம்புலிங்கர், ஈ.சு. அருணாசலம், காஞ்சி இராமசாமிநாயுடு, துரைராசதேவர், பொன்னுச்சாமிதேவர் முதலானோர்களைக் குறிப்பிடலாம். இவர்களுள் பலர் நாவலரவர்களிடம் பாடம் கேட்டதோடு, தமது இவ்வுலக வாழ்க்கையின் குறிக்கோள்களை அடிப்படையாகக் கொண்டு தமது கல்வியின் நோக்கினை வகுத்து செயற்பட்டனர். ஆனால் இராமநாதபுரம் இராமசாமிப்பிள்ளை, நமச்சிவாயத்தம்பிரான், சொக்கலிங்கச் செட்டியார், முத்தையாத் தம்பிரான், பொன்னோதுவார், வன்றொண்டர் செட்டியார், ப.சண்முகவேலர் முதலானோர்கள் நாவலர் மாணவ பரம்பரையில் வந்ததோடு, நாவலர் மரபில் நின்றும் செயற்பட முனைந்தவர்கள். நாவலரவர்கள் தம் மரபினைச் சண்முகவேலர் தமிழ் நாட்டில் தக்கவாறு செல்வாரென்று உறுதியுடன் நம்பினார். அவர் சிதம்பரம் சைவப்பிரகாச வித்தியாசாலையில் நாவலரவர்களிடம் கல்வி பயின்றவர். அப்பாடசாலையின் ஆசிரியராக விளங்கியவர். யாழ்ப்பாணத்துச் சுப்பிரமணியபிள்ளையை எவ்வாறு தம்மரபிற்குத் தகுந்த வாரிசாகக் கருதினாரோ அவ்வாறே **சண்முகவேல ரையும்** கருதினார். சுப்பிரமணியபிள்ளை எவ்வாறு சடுதியாகத் தேகவி யோகம் அடைந்தனரோ அவ்வாறே சண்முகவேலரும் நினையாப் பிரகாரமாகத் தேகவியோகம் அடைந்தனர். சுப்பிரமணியபிள்ளை தேகவியோகம் அடைந்த பொழுது நாவலரவர்கள் அவர் பற்றிய இரங்கற் பாமாலையையும் அவர் வரலாற்றுச் சுருக்கத்தையும் எழுதினாரோ அவ்வாறே சண்முகவேலருக்கும் அவர் வரலாற்றைச் சுருக்கமாகப் பிரிவு ஆற்றாமை தோன்றும்படி எழுதி வெளியிட்டார்.[1]

> 'என்னிடத்தில் கற்ற முதல் வகுப்பின் முதல் மாணாக்கராகிய சண்முகவேல் சிதம்பரத்திலே திருமாலைத் தொண்டு செய்யும் சைவமரபிற் பழையபண்டாரத்தினுடைய புதல்வர். இவர் இரத்தாக்ஷி ஞு கார்த்திகை மாதம் 7உ நமது வித்தியாசா லையிலே பிரவேசித்தவர். இவர் கூரிய புத்தியும் கல்வியில் மிக்க

1. சிதம்பரம் சைவப்பிரகாச வித்தியாசாலை ஆவேதனம், 1867. பக்.2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசையும் இடையறா முயற்சியும் உடையவர். நல்லொழுக்கத்தினாலும் குருலிங்கசங்கமத்தினாலும் மிகச் சிறப்புப் பெற்றவர். ''அழலினீங்கானணுகானஞ்சி நிழலினீங்கா னிறைந்த நெஞ்சமோ-டெத்திறத் தாசா-னுவக்கு மத்திற மறத்திற்றறியாப் படர்ச்சிவழிபாடே'' என்னும் இலக்கணத்துக்கு இலக்கியமாய் உள்ளவர். நான் சென்னைபட்டணத்தில் வரும் போது தாமும் என்னோடு வந்து என்னிடத்துச் சில வருஷம் கல்வி கற்றுக் கோடற் கண்ணே பேராசை கொண்டிருந்தனர். நான் புறப்படும் பொழுது, இவர் ஆரோக்கியம் இல்லாதவராயிருந்தமையால், ஆரோக்கிய மடைந்த பின்பு வரும் பொருட்டு ஆஞ்ஞாபித்து விட்டு வந்தேன். ஆடி மாதம் 6 ம் தேதி முதல் மார்கழி வரையும் வித்தியாசாலைக்கு நியமமாகப் போய் முதல் வகுப்பைக் கைமாறு வேண்டாது கற்பித்துக் கொண்டு வந்தனர். தை 30 ம் தேதி முதலான வியாதியினாலே பீடிக்கப்பட்டுச் சில சிகிச்சை செய்த வழியும் ஆரோக்கியம் அடையாது, பங்குனி மாதம் குரு வாரமும் சுக்கில பக்ஷசத்தமியும் புனர்பூச நக்ஷத்திரமுங் கூடிய தினத்திலே மிதுனலக்கினத்திலே சிவபதம் அடைந்தனர். சிவபதம் அடையும் போது இவருக்கு வயசு இருபத் திரண்டு. **இவர் சில வருஷம் என்னிடத்துக் கல்வி கற்றுக் கொண்டு இவ்வித்தியாசாலைக்கு முதலுபாத்தியாயராகிக் கல்வி யறிவொழுக்கங்களை அபிவிருத்தி செய்து எனக்குப் பேரானந்தத்தை விளைவிப்பார் என்று பேராசையோடும் எதிர்நோக்கிக் கொண்டிருந்த நான், இவர் தேக வியோக மெய்திய சமாசாரத்தை அத்திக்ஷுராகிய காசிப்பிள்ளையுடைய கடிதத்தால் அறிந்து, எல்லையில்லாத துக்கசாகரத்தில் மூழ்கினேன். நற்குண நற்செய்கைகளினால் யாவராலும் நன்குமதிக்கப்பட்டு என்மனம் முழுதையும் வசீகரித்த என்னருந்தவப் பயனாகிய இவர் பெயரினாலே, சிதம்பர ஸ்ரீ மூலட்டானேசுரசுவாமியினுடைய, பாற்காவடி வேதனத்தின் பொருட்டும். கற்பக விநாயகர் சதுர்த்தி பூசையின் பொருட்டும். இருபத்தெட்டு ரூபா என் பொருளில் உபகரிக்கின்றேன்** ''

என நாவலரவர்கள் சண்முகவேலரின் பிறப்பையும் ஒழுக்கத்தையும் கல்விப்புலமையினையும் விதந்தோதுவதுடன் அவர் மீது வைத்த நம்பிக்கை அவருக்கு ஏற்பட்ட கொடிய நோயினால் வீண்போயிற்று என்பதை மிகுந்த பரிவுணர்வுடன் குறிப்பிடுவார். இவ்விழப்பு நாவலரவர்களின் வரலாற்றில் பெரும் இடைவெளியை ஏற்படுத்திற்று என்பது உண்மையே. ஆயினும் நாவலரவர்கள் தம் இக்குறிப்பு வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புப் பற்றி நாவலரவர்கள் எழுதியவற்றுள் சிறப்பானதொன்று எனலாம்.

12/20 S.C

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நமச்சிவாயதேசிகர்**

இவர் தமிழ் நாட்டிலே உள்ள திருநெல்வேலியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். நாவலரவர்களிடம் சித்தாந்த நூல்களில் பாடம் கேட்டவர்[2]. தமிழ் சங்கத மொழிகளில் ஆழந்த புலமையுள்ளவர். பிரமோதூத ஷூசித்திரை மாதம் (1871) திருவாவடுதுறை யாதீனத்தின் சின்னப்பட்டம் பெற்றவர். காசி காண்டத்தை மாணவர்களுக்குப்பாடம் சொல்வதில் மிகுந்த விருப்பம் உடையவர். சிதம்பரம் ஈசானமடம். ஸ்ரீ இராமலிங்க சுவாமிகள் சூரியனார் கோயில் ஸ்ரீ முத்துக்குமார தேசிகர், சிலேடைப்புலிபிச்சுவையர், சின்னக்குளம் அண்ணாமலை ரெட்டி முதலானோர்கள் இவரது மாணக்கர்களாவர். இவர் சித்திரை ஷூ பானு தை மாதம் (1883) கல்லிடைக் குறிஞ்சியில் பரிபூரணம் அடைந்தனர்.[3]

**இராமசாமிப்பிள்ளை**

இவர் இராமநாதபுரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். திருவாவடு துறை யாதீனத்தில் நாவலர்களிடம் பாடம் கேட்டவர்.[4] இங்கு திருஞானசம்பந்தப்பிள்ளை என்னும் தீட்சா நாமத்தைப் பெற்றவர். இவர் விசுவாசு ஷூ மார்கழி மாதம் சிதம்பர புராணத்துக்குப் புத்துரை எழுதியவர். இதில் இஃது யாழ்ப்பாணம் ஆறுமுகநாவலர் மாணாக்கர்களுள் ஒருவராகிய எனக்குறிப்பிட்டிருப்பது இங்கு மனங்கொள்ளத்தக்கதாகும். இவர் அடங்கன்முறை (1881) ஸ்ரீ மாதவச் சிவஞான சுவாமிகள் பிரபந்தத்திரட்டு முதலான நூல்களைப் பதிப்பித்தவர். இவர் பிரசங்கம் செய்வதிலும் பாடஞ் சொல்வதிலும் மிகுந்த ஆற்றலுடையவர். தேவகோட்டை நாராயணச் செட்டியார், நமச்சிவாயத் தம்பிரான் முதலானவர்கள் இவரோடு கல்விகற்றவர்கள். பாண்டித்துரைத்தேவர், துரைச்சாமித்தேவர் ஆகி யோரும் இவரது மாணாக்கர்கள் ஆவார்கள்[5]

---

2. கனகரத்தின உபாத்தியார், வே., ஸ்ரீலஸ்ரீ நல்லூர் அறுமுகநாவலர் சரித்திரம், 1968,பக்.63
3. அரசவனத்து அறநிலையம், திருவாவடுதுறை ஆதீன வெளியீடு, 1962,பக்.128
4. அரச வனத்து அறநிலையம், திருவாவடுதுறை ஆதீனவெளியீடு, 1962,பக்.132
5. அரச வனத்து அறநிலையம், திருவாவடுறை ஆத்ன வெளியீடு, 1962, பக். 132-133

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சொக்கலிங்கச் செட்டியார்**

இவர் இராமநாதபுர மாவட்டம் காரைக்குடியைச் சேர்ந்த இராமநாதச் செட்டியாருக்கும் முத்துக்கருப்பி ஆச்சி அம்மையாருக்கும் மகனாக நள ஙூ கார்த்திகை மீ 23 ஆம் நாள் (1856) பிறந்தார். ஆரம்பப்படிப்பைத் திண்ணைப்பள்ளியில் பயின்றவர். அவரது பெற்றோர்கள் வர்த்தகத்தின் பொருட்டு யாழ்ப்பாணம் சென்ற பொழுது அவர்களோடு இவரும் சென்றனர். தமது பதினேழாம் வயதில் நாவலரவர்களிடத்தும் வித்துவசிரோமணி பொன்னம்பலபிள்ளையிடத்தும் பாடங்கேட்டனர். பின் தமிழ் நாடு திரும்பி நாவலரவர்களின் மாணக்கராகிய வன்றொண்டர் செட்டியாரிடம் கல்வி பயின்றனர். சொக்கலிங்கச் செட்டியார் நன்றி மறவாது தமது ஆசிரியர்களான நாவலர் மேல் **ஆறுமுக நாவலர் துதி** என்னும் நூலையும் வன்றொண்டர் மேல் குருத்துதி என்னும் நூலையும் பாடினார். நாவலரவர்கள் போல் சைவத்தையும் தமிழ் மொழிக்கல்வியையும் வளர்த்தல் வேண்டும் என்பதில் மிகுந்த பேராசை உடையவர். பிரசங்கம் செய்வதில் ஆற்றலும் ஆர்வமும் உடையவர். நூல்கள் இயற்றுவதில் புலமை உடையவர். நூற்றுக்கு மேற்பட்ட நூல்களை இயற்றியுள்ளார்[6] வேதாந்த தத்துவ விசாரணையில் ஆர்வம் உடையவர். சிதம்பரம், காரைக்குடி முதலான் இடங்களில் சைவத்தமிழ்ப் பாடசாலைகளை நிறுவியவர். ருரோறகாரி வருடம் ஆவணி மாதம் 7ஆம் நாள் (1923) சிதம்பரத்தில் மெய்கண்டார் சித்தாந்த வித்தியாசாலையை நிறுவி சைவசித்தாந்தப் பாடங்களையும் தமிழ் மொழிக் கல்வியையும் பயிற்று வித்தனர். திருப்புத்தூர் புராணம், திருவாத வூரடிகள் புராண வசனம், திருத்தொண்டர் புராணசார் விளக்கம், சிவஞான போதார்த்த லகு வசனம், திருப்புத்தூர்ப் புராணம், வேதாந்தத்தெளிவு முதலான நூல்களுக்குச் செட்டியார் அவர்கள் ஆசிரியராவார்.[7]

**பொன்னோதுவார்**

திருவாவடுதுறை யாதீனத்தில் ஒன்பதாவது குருமகா சந்திதானமாக எழுந்தருளியிருந்த இராமலிங்கதேசிக சுவாமிகள் முதன் முறையாக இவ்வாதீனத்தில் திருமுறைகள் பண்ணோடு ஓதுதற்பொருட்டு, திருமழபாடியிலுள்ள ஓதுவார் குடும்பத்தினரை வரவழைத்து அவ்வாதீனத்தில் அமர்த்தித் திருமுறைகளைப் பண்ணோடு பாடிவரும்படி பணித்தார்.[8]

6. பாலசுப்பிரமணியம்,க., திருப்புத் தூர்ப்புராணம் (நாட்டுப்படலம், நகரப்படலம்) திறனாய்வு, 1978, (வெளிவராத ஆய்வுக்கட்டுரை - அண்ணாமலைப் பல்கலைக்கழகம், பக்.9
7. மேலது நூல்.பக்.9-10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வடிப்படையில் பண்டார ஓதுவார் முதலில் நியமிக்கப் பெற்றார். இப்பரம்பரையில் வந்தவரே பொன்னோதுவார் ஆவார் இவர் சுப்பிரமணிய ஓதுவார் மூர்த்தியின் மகனாவார். சுப்பிரமணிய ஓதுவாரை நாவலரவர்கள் யாழ்ப்பாணத்தில் பண்ணிசையை வளர்த்தற் பொருட்டு பல தடவைகள் அங்கு அழைத்துச் சென்றார்.[9] அவருடன் பொன்னோதுவாரும் சென்றுவந்த னர். அக்காலப்பகுதியில் நாவலரவர்களிடத்தும் வித்துவசிரோமணி பொன்னம்பல பிள்ளையிடத்தும் அதிவிருப்பம் கொண்டிருந்தார். அவர் களிடத்தில் தமிழ் இலக்கியம் இலக்கணங்களைச் சிறப்பான முறையில் பாடம் கேட்டார். சுப்பிரமணியக் கவிராயர், பழனிகுமாரசாமித் தம்பிரான், ஆறுமுகத்தம்பிரான் குன்றக்குடி ஆறுமுகதேசிகர் முதலானோரிடம் பொன் னோதுவார் பிற்காலத்தில் பாடம் கேட்ட பொழுதும் நாவலரவர்களிடத்தும் வித்துவசிரோமணியிடத்தும் பாடம் கேட்டதைப் பெரும் பேறாகக் கருதினர். அக்கல்வி அவரை நல்லாசிரியராகத் திகழ வாய்ப்பளித்த தெனலாம்.

பொன்னோதுவார் சீகாழி, காரைக்குடி சிதம்பரம் முதலான இடங்களில் அமைந்த உயர்நிலைப் பள்ளிகளில் உபாத்தியாயராகக் கடமையாற்றினார். அண்ணாமலைப் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப் பட்டபொழுது அங்கு தமிழ்துறை விரிவுரையாளராகவும் பணியாற்றினார்.

பொன்னோதுவார் சிறந்த இசையாசிரியராக விளங்கினார். என்பதை விட அவர் சிறந்த தமிழ்ப் புலவராகவே திகழ்ந்தார் எனலாம். இவர் சிறந்த உரையாசிரியர். துறைசைச்சிலேடை வெண்பா, இங்கிதமாலை முதலான நூல்களுக்கு இவர் உரை எழுதியுள்ளார். திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் புராண வசனம் என்னும் வசனநூலையும் எழுதியுள்ளார். ஓதுவார் தணிகைப் புராணத்துக்கு எழுதி வைத்திருந்த உரைக் குறிப்புக்களின் அடிப்படையில், வெளிவந்ததே திருவாவடுவுதுறை யாதீனம் வெளியிட்ட தணிகை புராணம்-குறிப்புரை என்னும் நூலாகும். பொன்னோதுவார் இசைஞானமும் தமிழ் புலமையும் மிக்கவராய் நாவலர் மரபின் வளர்ச்சிக்கு உழைத்து யுவ வருடம் (1935) சித்தி எய்தினர்.

**ச.விசுவலிங்கபிள்ளை** என்பார் நாவலரவர்களிடம் கற்று, சிதம்பரம்

---

8. அரசவனத்து அறநிலையம், திருவாவடுதுறை ஆதீனவெளியீடு, 1962, பக்.82-83

9. மேலது நூல், பக்.271-272

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவப்பிரகாச வித்தியாசாலையில் உபாத்தியாராகக் கடமையாற்றியவர்.[10] **முத்தையாத் தம்பிரான்** அவர்கள் திருவாவடுதுறை தம்பிரான் ஆவார். இவர் காசியில் மடம் கட்டியவர். இதனால் இவர் காசிமடம் முத்தையாத் தம்பிரான் என அழைப்பர். இவர் 1882 இல் யாழ்ப்பாணம் வருகைதந்த பொழுது இங்கு வெளிவந்த பத்திரிகைகள் இவரை நாவலர் மாணாக்கர் என்றே போற்றுதல் செய்தது.[11] **சுப்பு ஓதுவார்** பொன்னோதுவாரின் தந்தையார். தமிழ் மொழியில் நன்கு தேர்ச்சி மிக்கவர். நமச்சிவாய தேசிகர் பதிப்பித்த அடங்கன் முறையை (1881) பண்ணுடன் பாடிக்காட்டியவர். நாவலர வர்களுடன் பலமுறை ஈழநாட்டிற்கு வந்தவர், சாரங்கி வாசிப்பதில் நல்ல தேர்ச்சியுடையவர்.[12] **திருமலையிலை தணிகாசல முதலியார்**. திரு.வி.க. அவர்களின் ஆசிரியர் தாம் நாவலர் மாணாக்கர் என்று சொல்லிக் கொள்வதில் பெருமைப்பட்டவர்.[13] **பொன்னுச்சாமிதேவர், துரைராசதேவர்** முதலானோர்களும் நாவலரவர்களது மரபில் வந்தோர்களே.[14] நாவலரவர் கள் தமிழ் நாட்டில் பாடசாலை அமைத்து அதன் முகாமையாளராகவும் ஆசிரியராகவும் பல ஆண்டு கடமையாற்றியவர். பிரசிங்கம் செய்தல், சுதேசிய சமய கண்டனம் செய்தல், பிற சமய கண்டனம் செய்தல் நூல்களை எழுதுதல், வெளியிடல், பதிப்பித்தல் முதலான பணிகளை அங்கு ஆற்றியவர். பல நூற்றுக்கணக்கான மாணவபரம்பரையை உருவாக்கியவர். அதன் மூலம் நாவலரவர்கள் சைவம் தமிழ் சமூகப்பண்பாடு வரலாற்றில் மீட்சி இயக்கத்தையும் மீட்டுவாக்கத்தையும் ஏற்படுத்தியவர். தமிழ்நாட் டிலே பத்தொம்பதாம் நூற்றாண்டில் சமூக, இலக்கியப் பண்பாட்டை வரலாற்றில் காத்திரமான, அழுத்தமான மீட்டுவாக்கத்தை ஏற்படுத்தியவர் நாவலரவர்களே எனில் அது மிகையான கூற்றன்று.

---

10. கனகரத்தினம்.வை.,தமிழ்மொழி வாழ்க்கை வரலாற்று இலக்கியத்தில் வே. கனகரத்தின உபாத்தியாரின் ஸ்ரீலஸ்ரீ நல்லூர் ஆறுமுகநாவலர் சரித்திரம், பெறும் முக்கியத்துவம், தமிழியல், 1989,பக்.96
11. சைவ உதயபானு.1882
12. கனகரத்தினம்,வை., தமிழ் மொழி வாழ்க்கை வரலாற்று இலக்கியத்தில் வே.கனகரத்தின உபாத்தியார் ஸ்ரீலஸ்ரீ நல்லூர் ஆறுமுகநாவலர் சரித்திரம் பெறும் முக்கியத்துவம், தமிழியல், 1989.பக்.96
13. மேலது நூல்,பக்.96
14. கனகரத்தினம், வை., ஆறுமுகநாவலர் வரலாறு, ஒரு புதியபார்வை, மீரா அச்சகம், 1993, பக் 63-67

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயல் 4

## நாவலரின் நோக்கும் மரபும்

நாவலரவர்களின் சமகாலத்தில் வாழ்ந்தவர்களும் வேறு ஆசிரியர் மாணவ பரம்பரையில் வந்தவர்களும் நாவலர் நோக்கினையும் மரபினையும் மனங்கொண்டு நாவலரவர்களோடு இணைந்து செயற்பட்டனர். நல்லூர்க் கார்த்திகேய ஐயர், சங்கர பண்டிதர், காரைதீவு கா. கார்த்திகேய புலவர்,சி.வை.தாமோதரம்பிள்ளை, கறோல்.வை. விசுவநாதபிள்ளை, முருகேச பண்டிதர், கு.கதிரைவேற்பிள்ளை, தா. செல்லப்பிள்ளை அப்புக்காத்து நாகலிங்கம் முதலான பெரியோர்களும் உடுப்பிட்டி அ.சிவசம்பு புலவர், அம்பலவாண நாவலர், வல்லவை வைத்திலிங்க பிள்ளை, ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை, புலோலி வ.குமாரசுவாமிப்புலவர், புலோலி வ. கணபதிப்பிள்ளை முதலான புலவர்களும் நாவலரவர்களின் மாணவபரம்பரையில் நேரடியாக வராது நாவலரவர்களின் ஆசியைப் பெற்றும் நாவலர் மரபினை மனங்கொண்டும் செயற்பட்ட டோர்களா வார்கள்.

**நல்லூர்க் கார்த்திகேயப் புலவர்** நாவலரவர்களைப் போல் இருபாலைச் சேனாதிராச முதலியாரிடமும் கல்வி பயின்றவர். தமிழ்சங்கதம் ஆகிய மொழிகளில் வல்லவர். நாவலரவர்களின் சக மாணவர். நாவலரவர்களின் நண்பர். நாவலரவர்கள் சைவசமய வளர்ச்சியின் பொருட்டு எடுத்துக் கொண்ட முயற்சிகள் அனைத்திலும் பங்கு கொண்டு உழைத்ததோடு அவற்றினுள்ளும் பிரசார முயற்சிகளில் தீவிர பங்கேற்று உழைத்தார். **''என்னுடைய நண்பர்களுள் ஒருவராகிய வேங்கடாசாலையர் குமாரர் காத்திகேகையர் என்னைப் போலவே தாமும் கைமாறு வேண்டாது எனக்குத் துணைவராகி இடையிடையே பிரசங்கஞ் செய்து கொண்டு வந்தனர்.இப்பிரசங்கம் வெகுசனங்களுக்குப் பயன்பட்டமை எல்லோருக்கும் இனிது விளங்கும்''** [1] என நாவலரவர்கள் ஐயரின் பயன் கருதாப் பணியினைப் பாராட்டுவார் இ.ஜெ. றொப்பின்சன் பாதிரியார் எழுதிய இந்து பாஸ்ரேர்ஸ் (Hindu pastors) என்னும் நூல்.

> **''இவர்கள் எமது யாழ்ப்பாணப்பாடசாலையில் பகல் மாணவர்களாக இருந்தவர்கள். இவர்கள் கூட்டங்களுக்கு வரும் சனங்கள் அதிகம். இந்த இயக்கம் அனைத்துக்கும் பிரதான மூளையாக இருந்து வருபவர் ஆறுமுகநாவலர் ஆகும். மற்றவர்**

1. யாழ்ப்பாணத்து சைவப்பிரகாச வித்தியாசாலையின் முதலிருபது வருஷத்து ஆவேதனம், 1968, பக்.3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> **கார்த்திகேய ஐயர் என்ற அவரது நண்பர். கார்த்திகேய ஐயர் வட்டமான தோற்றமும் குழந்தைக் குணமும் கொண்ட பிராமணர். உடற் கட்டில் தமது தோழரைப் பார்க்கிலும் குறைந்தவர். இயல்பாகவே திடத்திலும் நைட்டிகத்திலும் மற்றவரைப்பார்க்கக் குறைந்த கவனம் கொண்டவர். ஆனால் இந்து நூல்களில் முன்னவரைப் போலவே அறிவாளியாயும் தேசாபிமானமும் கொண்டவர். இவர்கள் எமது அரண்களை நன்றாகத் தெரிந்தவர்கள். எமது சமயக் கோட்பாடு நோக்கம் திட்டம் அனைத்தும் தெரிந்தவர்கள்.**[2]

என ஐயரவர்களை நாவலரவர்களின் முயற்சிகளோடு இணைத்துப் பேசுவது நாவலரவர்களின் ஆரம்ப கால சமய முயற்சிகளில் ஐயர் கொண்ட பங்கினை வெளிப்படுத்தி நிற்கும்.

## நீர்வேலி சங்கரபண்டிதர் (1829-1870)

நாவலரவர்களின் சமகாலத்தவர். நாவலரவர்களுக்கு மிக நெருக்கமான நண்பர். கிறிஸ்துவ சமய முயற்சிகளைத் தடுப்பதன் நோக்கமாக நாவலரவர்களோடு இணைந்து கொண்டவர். இதனால் நாவலரவர்களின் சமய முயற்சிகளுக்குத் தம்மாலான ஒத்துழைப்புக்களை நல்கியவர். நாவலர் இயக்கத்தில் ஆரம்ப காலத்தில் நாவலரவர்கள் ஆகமங்கள் கூறும் பொருள் மரபினைத் தெரிந்து கொள்வதற்குக்காலாக இருந்தவர் பண்டிதர்களே ஆவார். வேதாரணியம் சுவாமிநாத தேசிகரிடத்தில் வியாகரணம் தருக்கம் காவியம் முதலானவற்றை நன்கு பயின்றவர். யாழ்ப்பாணத்திலே இக் காலப் பகுதியில் இருந்த வடமொழிப் பண்டிதருள் இவரே தலை சிறந்தவராக விளங்கினார்[3] இவரின் சங்கத மொழிப்புலமையை நன்கு மதித்தவர் நாவலரவர்கள். இவர் சித்தாந்த நூல்களில் வல்லவராகவும் பிரசங்கம், புராணபடனம் செய்வதில் மிக்க ஆற்றல் உடையவராகவும் திகழ்ந்தவர்.[4] நாவலரவர்கள் பண்டிதரவர்களைத் தம்மோடு இணைத்து முதன் முதலில் **சைவப்பிரகாச சமாசிஜம்** (1853-4) என்னும் சமய நிறுவனமொன்றினை அமைத்தவர்[5]. நாவலரவர்கள் முதன் முதல் எழுதிய பெரியபுராண

---

2. Robinson.E.J.Rev., Hindu pastors a memorial, London 1867. p. 122
3. கணேசையர்,சி., ஈழநாட்டுத் தமிழ்ப்புலவர் சரித்திரம், 1939,பக்.60
4. சைவத்தை நாட்டிப் பரமத மோட்டத் தயங்குமொரு தெய்வத்தைப் போல் வருசங்கரபண்டித தேசிகர் மெய்வைத்த கண்டிகை வெண்ணீற்றினோடு விளங்கிடச் செய் சைவப்பிரசங்கத் தெள்ளமுதென்றினிச் சார்குவமே முருகேசபண்டிதரால் பாடப்பட்டது மேலது நூல், பக்.61
5. கனகரத்தினம், வை., பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஈழத்தில் தோன்றிய சைவசமய இயக்கங்கள், இந்து தருமம், 1992/93, பக்.57-58

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசனத்துக்குப் (1854) பண்டிதரவர்களிடமிருந்து சிறப்புப் பாயிரம் வாங்கியமை இருவரின் நட்புக்கும் புலமையினை மதிக்கும் பண்பிற்கும் ஒருமித்த நோக்குக்கும் சிறந்த எடுத்துக்காட்டாக அமைகின்றது எனலாம்.

1858 ஆம் ஆண்டு முதல் 1869 ஆம் ஆண்டு வரை நாவலரவர்கள் தமிழ் நாட்டில் வாழ்ந்த காலகட்டத்தில் நாவலரவர்களின் சமயப்பிரசாரப் பணியினைத் தொடர்ந்து செய்தவர் பண்டிதரவர்கள். நாவலரவர்கள் தமிழ் நாட்டுக்குச் சென்றமை கிறிஸ்தவப் பாதிரிமார்களுக்கு மிகுந்த உற்சாகம் தரும் செயலாகக் காணப்பட்டது. வண்ணார் பண்ணையிலே யோன் கில்நர் பாதிரியார் **சனோபகாரசங்கம்** ஒன்றினை நிறுவி கிறிஸ்தவமத பிரசாரத்தை முனைப்புடன் செய்து வந்தார். இந்நிலையில் சைவப்பிரகாச சமஜாத்தின் உறுப்பினராகிய சங்கரபண்டிதர் பரமத கண்டன சுயமதஸ்தாபனம் என்னும் தமது சங்கக் குறிக்கோளை நடைமுறைப்படுத்தும் வகையில் வாரந்தோறும் சைவப்பிரகாச வித்தியாசாலையிலே ஒருவாரம் பரமத கண்டனமும் அடுத்த மாதம் சுயமத தாபனமும் செய்தும் செய்வித்தும் வந்தார்.[6]

இவர் எழுதிய கிறிஸ்தவ மத கண்டனம் (1882) என்னும் நூல், இவர் சைவசமயத்தின் நிலைபேற்றுக் களித்த நன்கொடை எனலாம். மிலேச்சமத விகற்பம் (1878) சற்பிரசங்கம் (1910) என்பனவும் இவர் எழுதிய கண்டன நூல்களேயாகும். சைவப்பிரகாசனம், சத்த சங்கிரகம், சிரார்த்த விதி, சிவபூசையந்தாதி உரை அநுட்டானவிதி முதலானவை சைவசமய வளர்ச்சியின் பொருட்டு பண்டிதரவர்களால் எழுதப் பெற்ற நூல்களாகும். பாலசிஷை (1880) சமஸ்கிருதம் இரண்டாம் புத்தகம், தாதுமாலை (1909) சத்த சங்கிரகத்தின் பூர்வார்த்தம் (1896) முதலான நூல்களை வடமொழிக் கல்வியின் பொருட்டு எழுதினர். மற்றும் பிரசாத சட்சுலோகி, சித்தாந்த சாராவளி, அகநிர்ணயம், அகபஞ்சசட்டி, வடமொழிச் சிவஞானபோதம் என்பவற்றுக்குத் தமிழ் மொழியில் உரை எழுதியுள்ளார். மகேந்திர விருத்தி, தேவி கலோத்தர விருத்தி, சித்தாந்தப்பிரகாசிகை, தருக்கபரிபாஷை முதலான நூல்களைப் பண்டிதரவர்கள் பரிசோதித்து பதிப்பிக்கும் பொருட்டு வைத்திருந்தார்கள் என்பர்.

காரைதீவு **கார்த்திகேய ஐயரும்** நாவலரவர்களின் சமகாலத்தவர். நாவலரவர்களின் ஆசிரியரான சேனாதிராச முதலியாரிடம் பாடங் கேட்டவர். நாவலரவர்கள் போல் பல்வகை ஆற்றலும் கைவரப் பெற்றவர்.

6. கனகரத்தினம், வை., பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஈழத்தில் தோன்றிய சைவசமய இயக்கங்கள், (1858-) இந்துதருமம். 1993/94, பக்.67-68

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தையார் பாடிமுடியாது விட்ட தன்னையமக வந்தாதியைப் பாடிமுடித்த வர். நாடகம் இயற்றுவதிலும் அதனை அரங்கேற்றுவதிலும் வல்லவர். நாடகம் வெறும் பொழுதுபோக்குச் சாதனமாக அமையாது மானுட வாழ்வியலின் ஒழுங்கமைப்பிற்கு மக்களை இட்டுச் செல்லும் சிறந்த சாதனமாகவும் விளங்குகின்றது. நாவலரவர்கள் நாடகம் என்னும் கலை வடிவத்தை ஒரு பொழுதும் எதிர்க்கவில்லை, அக்கலை வடிவம் எவ்வகையில் மக்களைச் சென்றடைகின்றது என்பதைக் கவனத்திற் கொண்டே ந;ாவலரவர்களின் நாடகம் பற்றிய நோக்கு அமைந்திருந்தது. நாடகம் மானுட வாழ்வியலின் ஒரு அழிவுச் சாதனம் என்று நாவலரவர்கள் ஒருபொழுதும் கருதவில்லை. நாவலரவர்களின் பரம்பரையே நாடக ஆசிரியர் பரம்பரை. நாவலரவர்களே நாடகம் இயற்றியவர். எனவே நாவலரவர்கள் அவைகாற்றுக் கலைக்கு முற்றிலும் எதிரானவர் எனக் கருதவேண்டிய அவசியம் யாருக்கும் எழ வேண்டியதில்லை. நாடகத்தின் சமூகப் பரிமாணத்தை நன்குணர்ந்த ஐயரவர்கள் குருக்கேத்திர நாடகம், சூரபர்மன் பட்டாபிஷேகம், சந்திர வண்ணன் முதலான நாடகங்களைப் பாடியும் நடிப்பித்தும் அரங்கேற்றினார். ஐயரவர்களின் நாடகங்கள் குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் நடைபெற்றன. நாவலரவர்கள் ஐயரவர்களை நன்கு தெரிந்திருந்தார். ஆயினும், ஐயரவர்களின் எந்த நாடகங்களையும் நாவலரவர்கள் கண்டித்ததாக வரலாறு இல்லை.

ஐயரவர்கள் நாவலரவர்களைப் போல் தீவிர கிறிஸ்தவ மத கண்டனராக விளங்கினார். ஐயரவர்கள் தீவிர பிரசாரத்தைப் பொறுக்க முடியாத பாதிரிமார்கள் ஐயரவர்களைத்தனிப்பட்ட வகையிலும் எள்ளி நகையாட முற்பட்டனர். ஐயரவர்களும் பாதிரிமார்களின் புறத்தோற்றத்தை யும் அவர்கள் தம் புனித நூலையும் பிரதிகண்டனம் செய்தார். **கிறிஸ்துமத குடாரம்** என்பது ஐயரவர்கள் எழுதிய கிறிஸ்தவ கண்டன நூலாகும். பிரசங்கம் செய்தல் புராணபடனம் செய்தல் என்பன ஐயரவர்களின் சமய வழிப்பட்ட நடவடிக்கைகளாக இருந்தன.நாவலரவர்களின் பிரசங்கத்தைக் கேட்பதில் மிகுந்த விருப்பம் உடையவர் ஐயரவர்கள் என்பர். நாவல ரவர்களின் ஆளுமை ஐயரவர்களைப் பெரிதும் பாதித்திருந்தமைக்கு ஐயரின் மேற்கூறிய சமய நடவடிக்கைகள் பெரிதும் தக்க சான்று எனலாம்.

ஐயரவர்கள் தமது ஊரிலே விரோதிகிருது ஆதை மாதம் (1851) சைவப்பிரகாச வித்தியாசாலை யொன்றினைத் தாபித்து தமது ஊர்ப்பிள்ளைகளுக்கும் அயலூர்ப்பிள்ளைகளுக்கும் பாடம் கற்பித்து வந்தார். இவரிடத்துப் பல மாணவர்கள் கற்றனர் அவர்களுள் கா.வேதக்குட்டி ஐயர், சி. கந்தப்பிள்ளை, அ.கணபதிப்பிள்ளை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கா.சிவசிதம்பர ஐயர், பொ. நாராயணபிள்ளை, கா. நடராசா ஐயர் முதலானோர்கள் குறிப்பிடத்தக்கவர்கள்.[7] ஐயரவர்கள் திரிபோசவெண்பா, திரிக்கைத்திருபந்தாதி, திருத்தில்லைப் பல்சந்த மாலை, நகுலேசரியமக வந்தாதி, வண்ணைய்த்திரிபந்தாதி, திண்ணைபுரத் திரிபந்தாதி முதலான பிரபந்தங்களைப் பாடினார். விதானமாலை என்னும் சோதிட நூலைப் பரிசோதித்து உரையில்லாத பாட்டுகளுக்கு உரையெழுதி விஷு புரட்டாதி மாதம் (1881) வெளிப்படுத்தினார். தக்ஷிணகைலாச புராணத் தைப் பரிசோதித்து சர்வசித்து ஐப்பசி மாதம் (1887) வெளியிட்டார்.

நாவலரவர்களின் சைவ சமயப் பணிகளை நன்கு அவதானித்து வந்த ஐயரவர்கள் நாவலரவர்களின் நோக்கினை மனங்கொண்டு செயற்பட்டதில் எவ்வித வியப்புமில்லை. நாவலரவர்களின் பணி குடாநாட்டின் பல்வேறு இடங்களிலும் நடைபெற்றது என்று குறிப்பிடுவதிலும் பார்க்க நாவலர் மரபு நாடெங்கினும் பரந்து செயற்பட்டது என்று கூறுவதில் அர்த்தம் உண்டு. அவ் வகையிலே காரைதீவு கார்த்திகேய ஐயரின் பணிகள் குடாநாட்டின் ஒரு பகுதியில் அமைந்த தீவுப்பகுதியில் நாவலர் நோக்கினையும் மரபினையும் வளர்த்துச் சென்றதில் பெரும்பங்கு வகித்தது எனில் அது மிகையான கூற்றன்று.

## சி.வை. தாமோதரம்பிள்ளை (1832-1901)

நாவலரவர்களின் சமகாலத்தவர். கிறிஸ்தவ மதத்தினர்; கிறிஸ்தவ சூழ்நிலையில் வாழ்ந்தவர். நாவலரவர்களின் அறிவு ஆற்றல் நேர்மை உண் மையான ஊழியம் முதலான பண்புகள் நாவலரவர்கள் பால் தாமோதரம் பிள்ளையை ஈடுபாடு கொள்ளச் செய்தது. நாவலர்களிடத்தில் இயல்பாகக் காணப்பட்ட ஆத்மீகப் பார்வை அல்லது சத்தி சாள்ஸ் வின்சலோ கின்ஸ் பரியை தாமோதரம்பிள்ளையை சி.வை.தாமோதரம்பிள்ளை ஆக்கிற்று. இதனால் பிள்ளையவர்கள் கிறிஸ்தவ மதத்தைச் சாடி **விவிலிய விரோதம் (1864)** என்னும் நூலையும் சைவத்தைப் போற்றி **சைவமகத்துவம் (1864)** என்னும் நூலையும் எழுதினார். சைவத்தைத் தழுவியதற்குப் பிள்ளைய வர்கள்.

> ''உண்மையைக் கடைப்பிடித்துய்தல் வேண்டுமென்ற பேராவ லால் ஏறக்குறைய 20 வருஷமாக ஒரு பக்கத்துணிவு சிறிதுமில் லாது சைவசித்தாந்த சித்தாந்த ஸ்மார்த்த, பௌத்த, அருகாதி இந்து சமயங்களையும் கிரேக்க, லுத்தேரிய, உரோமானிய, புரொத்தெஸ்தானக் கிறிஸ்தவ சமயங்களையும் ஆராய்ந்து அடியேன் சைவ சமயமே இவற்றுகெல்லாம் சிறந்ததெனக் கொண்டவன்''

7. சிவதம்பரஐயர், கா., மு. கார்த்திகேயப்புலவர் சரித்திரம், 1908, பக்.12

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக் காரணம் கூறுவது[8] ஒப்பீட்டளவில் சைவத்தின் மாட்சிமை யினைப் புலப்படுத்தும்.

நாவலரவர்கள் சைவசமயிகளே! ஊர்கள் தோறும் பள்ளிக் கூடங்களைத் தாபித்து உங்களுக்குள்ளே கல்வியறி வொழுக்கங்களிற் சிறந்த மேலோர்களைக் கொண்டு அவைகளை நடத்து வியுங்கள், உங்கள் பிள்ளை களை அப்பள்ளிக்கூடங்களிலேயே அனுப்பி லௌகிக நூல்களையும் நீதி நூல்களையும் சைவ நூல்களையும் படிப்பியுங்கள்''[9] என்ற வேண்டுதலுக் கமையப் பிள்ளையவர்கள் 1876 ஆவணி மாதம் 10 ஆம் திகதி ஏழாலையிலே சைவப்பிரகாச வித்தியாசாலையை நிறுவினார். அதன் தலைமை ஆசிரியராக சுன்னாகம் முதலில் முருகேச பண்டிதர் கடமையாற்றினார். பின்னர் அ. குமாரசுவாமிப் புலவர் கடமையாற்றினார். அங்கு இராமாயணம், பாரதம், கந்தப்புராணம், இரகுவம்சம் திருமுருகாற்றுப்படை, கம்பரந்தாதி, முல்லையந்தாதி முதலான நூல்கள் பயிற்றப்பட்டன. ஆண்டு தோறும் உயர் கல்விமான்களால் பிள்ளைகள் பரீட்சிக்கப்பட்டனர். ஆறுமுகநாவலர் இப்பாடசாலையின் முதற் பரீட்சகராக இருந்தமை குறிப்பிடத் தக்கதொன்றாகும்.

1877 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 2ந் திகதி நடைபெற்ற அறிக்கை:[10]

> ''இது சென்னைப்பட்டணத்தில் பி.எ.பி.எல்.பட்டம் பெற்று அக்கௌண்டண்ட் என்னும் உத்தியோகமுடையவராகயி ருக்கும் ஸ்ரீ தாமோதரம் பிள்ளையவர்களால் ஸ்தாபிக்கப்பட்டு, இப்போது ஒரு வருட காலமாக நடைபெற்று வருகின்றது. இவ்வித்தியாசாலையில் இப்பரீட்சை சென்ற வருடத்து மார்கழியில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரவர்களாலும் இரண்டாம் பரீட்சை இம்மாதம் 20 ஆம் திகதி எம்மாலும் நடத்தப்பட்டன முதற் பரீட்சையிற் காணப்பட்ட பிள்ளைகளின் தொகை நூறு''

எனக் குறிப்பிடுவது நாவலரவர்கள் தமது நோக்கத்தை செயல் படுத்துவதற்கு தம்மை உந்து சத்தியாகவும் பக்க பலமாகவும் அமைத்து வழி வகுத்துக் கொடுத்தார் என்பதற்கு இஃதொரு சிறந்த எடுத்துக்காட்டாகும். இப்பாடசாலை தனியாகக் கல்விச்சாலையாக நின்று விடாது சமயப்பிரசாரக் களமாகவும் அமைந்திருந்த தென்பது இதன் வரலாறு ஆகும்.

---

8. தாமோதரம்பிள்ளை, த., சிவை, சைவ மகத்துவம், வர்த்தமான தரங்கினி அச்சுக்கூடம், சென்னைப் பட்டனம், பக். - 10
9. கைலாசபிள்ளை,த., ஆறுமுகநாவலர் பிரபந்தத்திரட்டு, 1954. பக். 71
10. ஈழத்துக் குமாரசாமிப்பிள்ளை, கு.குமாரசுவாமிப்புலவர் வரலாறு, 1970, பக்.18-19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Prof. V. SIVASAMY
UNIVERSITY OF JAFFNA



நாவலரவர்கள் சைவம் தமிழ்மொழி வளர்ச்சியின் பொருட்டு பல நூல்களை எழுதியும் பதிப்பித்தும் வெளியிட்டார். மூலபாடத் திறனாய்வின் பேராசானாக நாவலரவர்களே விளங்கினார். நாவலரவர்கள் கல்வி ஆற்றலை உணர்ந்த தாமோதரம்பிள்ளை தொல்காப்பியம் சொல்லதிகாரம் சேனாவரையர் உரையினை நாவலரவர்களைக் கொண்டு, 1868 ஆம் ஆண்டு பதிப்பித்து வெளியிட்டார். அக்காலப்பகுதியில் பிள்ளையவர்கள் தத்துவ விசாரணியில் ஆசிரியராக்க் கடமையாற்றினார். நாவலரவர்களின் பலவகை ஆற்றலையும் சேவை மனப்பாங்கினையும் மனங்கொண்டும் **''சென்னை முதல் ஈழமீறாகவுள்ள இத்தமிழ் நாட்டு வித்துவான்களில் தமக்கிணையில்லாதவரும் இலக்கண விலக்கியங்களில் மகாவல்லவரும் சபாப்பிரசங்க சிங்கமுமாகிய ஆறுமுகநாவலர்''**[11] எனச் சிறப்பித்துப் போற்றுதல் செய்தார். இக்கூற்று தமிழ் நாட்டிலுள்ள ஏனைய தமிழ்ப் பெரியோர்களை மலைக்க வைத்தது. இதனால் பிள்ளையவர்களை நித்தித்தும் நாவலரவர்களைத் தூற்றியும் **''விஞ்ஞானப்பத்திரிகை''** என்னுமோர் கண்டனம் அங்கு எழுந்தது. நாவலரவர்கள் இக்கண்டனத்துக்குப் பிரதி கண்டனமாக **''நல்லறிவுச் சுடர் கொழுத்துதல்''** என்னும் நூலை எழுதி நல்லறிவு புகட்டினார்.

நாவலரவர்களுக்குப் பின் சி.வை. தாமோதரம்பிள்ளையே சிறந்த மூலப்பாடத்திறனாய்வாளராகவும் அதன் பேராசானாகவும் விளங்கினார். பழந்தமிழ் நூல்கள் யாவற்றையும் தமிழ் தேசியத்தின் சொத்து எனக் கருதினர். அந்நூல்கள் செல்லரித்து அழிவதையும் தமிழ் மக்கள் பாராமுகமாக இருப்பதையிட்டும் கவலை கொண்டார். அவர் பின் வருமாறு கூறுவது அவர் தமிழ் மொழி மீதும் அதன் பாரம்பரியத்திலும் கொண்டிருந்த அளவற்ற பேரார்வத்தைக் காட்டுவதாகும்.[12]

> **''பழைய சுவடிள் யாவும் கிலமாய் ஒன்றொன்றாய் அழிந்து போகின்றன. புது ஏடுகள் சேர்த்து அவற்றை எழுதி வைப்பாரும் இவர். துரைத்தனத்தாருக்கு அதன்மேல் இலட்சியமில்லை. சரஸ்வதியைத் தம்பால் வசிக்கப் பெற்ற வித்துவான்களை அவள் மாமி எட்டியும் பார்க்கின்றாளில்லை. திருவுடையீர்! நுங்கருணை இந்நாட்டவரினால் பின்பு தவம் புரிந்தாலும் ஒரு தரம் அழிந்த தமிழ் நூல்களை மீட்டல் அரிது.**

11. ஈழகேசரி வெளியீடு, நாவலர் நினைவுமலர், 1938. பக். 64
12. தாமோதரம்பிள்ளை, சி.வை., கலித்தொகை பதிப்புரை, தாமோதரம், 68-69

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யானை வாய்ப்பட்ட விளாம்பழத்தைப் பின் இலண்டத்தள் எடுத்து மென்? ஓடன்றோ கிட்டுவது? காலத்தின் வாய்ப்பட்ட ஏடுகளைப் பின்தேடி எடுப்பினும் கம்பையும் நாராச முந்தான் மீளும்....சீமான்களே இவ்வாறு இறந்தொழியும் நூல்களுக்குச் சற்றாவது கிருபை பிறக்கவில்லையா? ஆச்சரியம்! ஆச்சரியம்! அயலவன் அழியக்காண்கினும் மனம் தழும்புகின்றதே! தமிழ்மாது உன்தாயல்லவா? அவள் அழிய நமக்கென் னென்றுவளா இருக்கின்றீர்? தேசாபிமானம், மனிதாபிமானம், பாஷாபிமான மென்று இவையில்லாதார் பெருமையும் பெருமையா! இதனைத்தயை கூர்ந்து சிந்திப்பீர்களாக''

இக்கூற்றின் வெளிப்பாடாக அமைந்ததே பிள்ளையவர்கள் பதிப்பித்த பழந்தமிழ் இலக்கிய இலக்கண நூல்களாகும். வீரசோழியம் (1881) இறையனார் அகப்பொருள் உரை (1883) தொல்காப்பியம் பொருளதிகாரம் (1885), இலக்கண விளக்கம் (1900), சூடாமணி (1883), கலித் தொகை (1883), நீதிநெறி விளக்கம் (1853), தணிகை புராணம் (1883) முதலான நூல்களைப் பதிப்பித்தார். கட்டளைக் கலித்துறை, நட்சத்திர மாலை, ஏழாம் வாசகம் முதலான நூல்களை எழுதினர்.

நாவலரவர்கள் பிள்ளையவர்களை ஆட்கொண்டதன் பயன் தமிழ் இலக்கிய வரலாறு உரமும் ஊட்டமும் பெற்றமையேயாகும்.

நாவலரவர்களின் அருளாட்சிக்குள் ஆட்பட்டவர்களுள் **கறோல் விசுவநாதபிள்ளை** என்பாரும் ஒருவர். இவர் கிறிஸ்துவ மதத்தவர். கிறிஸ்துமத பிரசாரகராய் விளங்கியவர், நாவலரவர்களின் சமகாலத்தவர். நாவலரவர்கள் கிறிஸ்தவத்துக்கு எழுதிய கண்டன நூலான சைவதூஷண பரிகாரம் (1854) என்னும் நூலுக்கு கிறிஸ்தவமதம் சார்பாக பிரதிகண்டனம் செய்தவர் கறோல் அவர்கள். அவர் **சைவ தூஷணபரிகார நிராகரண சுப்பிர தீபம்** என்னும் நூலை எழுதினார். ஆயினும் 1864 க்குப் பின் நாவலர் தாசன் என்று கூறுகையில் தன்னை நாவலர் மரபிற்கு அர்ப்பணித்து அதன் வளர்ச்சிக்காகச் செயற்பட்டார். இராமநாதன் அவர்களை மக்கள் பிரதிநிதி ஆக்குவதில் நாவல,ரவர்களுக்குப் பக்கபலமாக நின்றவர் கறோல் அவர்களே. தன்னை முழுமையாக சைவனாக்கிக் கொண்ட விசுவநாத பிள்ளையவர்கள் தாம் எழுதிய சைவதூஷண பரிகார நிராகரண சுப்பிரதீபம் என்னும் நூலுக்குப் பிராயச்சித்தமாக **காலதீபிகை** என்னும் நூலை எழுதினார். 1880 வருடம் கார்த்திகை மாதம் 21ந் திகதி பிள்ளையவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேகவியோகம் அடைந்தனர். அப்பொழுது சைவத் தமிழ் உலகம் பெரும் துயரத்தில் ஆழந்திற்று.[13]

## முருகேச பண்டிதர் (1830 -1900)

சுன்னாகத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். பூதப்பிள்ளை என்பவரின் மகன். நீர்வேலிச் சங்கரபண்டிதரிடத்திலும் உடுப்பிட்டிச் சிவசம்பு புலவரிடத்திலும் கல்வி பயின்றனர். நல்லாசிரியர். நாவலரவர்களின் அன்புக்குரியவராக விளங்கியவர். நாவலரவர்களால் சிதம்பரம் சைவப்பிரகாச வித்தியாசாலையில் ஆசிரியராகக் கடமையாற்றும் படி பணிக்கப்பட்டவர். இலக்கண நூல் வல்லவர். இலக்கணக் கொண்டர் என்னும் பட்டப்பெயரைப் பெற்றவர். இவர் மயிலணிச் சிலேடை வெண்பா, ஊஞ்சல் பதிகம், குடைந்தை வெண்பா, சந்திர சேகர விநாயகரூஞ்சல் நீதி நூறு, பதார்த்தீபிகை முதலான பிரபந்தங்களைப் பண்டிதர் பாடியுள்ளார். **திறமையான புலமை உள்ளவர்களை அறிந்து அவர்களின் புலமை மக்களைச் சென்றடையும் ஆற்றுப்படுத்துவதில் நாவலரவர்களுக்கு நிகர் அவர் தாம்.**[14] இத்தகைய நாவலரவர்களின் ஆளுமையும் அவர் தம் மரபினைப்பிறர்பேணிக் காப்பதற்குக் காரணமாயிற்று. அதற்கு உதாரணமாக விளங்கியவர்களுள் முருகேச பண்டிதரும் ஒருவர்.

## கதிரைவேற்பிள்ளை, கு (1830 -1904)

உடுப்பிட்டி குமார சுவாமி முதலியாரின் மகன் வட்டுக்கோட்டைச் செமினரில் கல்வி பயின்றவர். கிறிஸ்தவ சூழ்நிலையில் வாழ்ந்தவர். பாதிரிமார்களின் அன்புக்கும் ஆசிக்கும் பாத்திரமான முதல்தர மாணாக்கர். கிறவுதர் என்பாரின் உதவியுடன் **இலக்கியக் கண்ணாடி** (Liteary Mirror) என்னும் பத்திரிகையை 1853 ஆம் ஆண்டு வைகாசி மாதம் தொடக்கமும் இலங்காபிமானி (Ceylon Patriot) என்னும் பத்திரிகையை 1863 ஆம் ஆண்டு மாசி மாதம் தொடக்கமும் ஆரம்பித்து நடத்தியவர். 1858 இல்

---

13. பிள்ளையவர்களின் மாணவரான இ.வை. தாமோதரம்பிள்ளை கறோல் அவர்களின் பிரிவாற்றாமை குறித்துப் பல இரங்கற் பாக்களைப் பாடியுள்ளார். அவற் றினுளொன்று வருமாறு,

ஆறுமுகநாவலரை யன்றழைத்தார் போதாதோ வீறு
விசுவநாதனையும் வேண்டினார் - நீறு
நிகழ்சைவந்தனையங்குந் தாபிக்கவோ விவர்கள்
கைவந்தவர்களெனக் கண்டு,

(நாகலிங்கபிள்ளை, சி., மகாவித்துவான் விசுவநாதபிள்ளை 1949, பக்.11)

14. கைலாசபதி, க., ஈழத்து இலக்கிய முன்னோடிகள் 1986

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டத்தரணி ஆனவர். யாழ்ப்பாண கிறிஸ்தவமத சூழ்நிலையோ ஆங்கில மொழிக் கல்வியோ கதிரைவேற்பிள்ளை அவர்களது சமய ஆர்வத்தையோ தமிழ் மொழிப் பற்றையோ ஒரு பொழுதும் பாதித்ததில்லை.

> ''எங்கள் சமூகத்தார் எங்கள் மாநிலத்திலிருந்து எங்கள் இலக்கியம் எங்கள் சமயம் என்பன சம்பந்தமாக இது வரையும் ஒரு பத்திரிகை வெளிவரவில்லையே என இக்காலத்திலே தான் அதிகமாகக் கருதுகின்றார்கள். இன்று எங்கள் பிரதேசத்து மக்கள் முன்னென்றுமில்லாத வகையில் கல்வித் துறைகளில் விஞ்சி வாழ்கின்றார்கள். மனோபக்குவம் வாய்ந்த எங்கள் மக்களுக்குப் பொருத்தமான பத்திரிகை யொன்று இப்பொழுது வெளிவருகின்றது.
>
> இந்து சமயம், விஞ்ஞானம், இலக்கியம் இறையுணர்வு முதலியன சம்பந்தமான அறிவுத்துறைகளை நாடுகின்ற நன்நெஞ்சோடு சீர்தூக்கிப் பார்த்து எழுதி வெளியிடல் எங்கள் நோக்கமாகும்.
>
> எங்கள் சின்னஞ்சிறிய பத்திரிகை சைவ சமயத்தவர்களுக்குச் சைவ சித்தாந்தங்களின் அருமை பெருமைக்கோட்பாடுகளை விளக்கி அவர்களைத் தங்கள் சாத்திரங்களை நன்கு கற்குமாறு தூண்டுவதாக இருக்கும். தமிழிலும் வடமொழியிலும் உள்ள உயர்ந்த ஞானக் கருத்துக்களை வெளியிடுவதாயிருக்கும்''

என கதிரைவேற்பிள்ளை அவர்கள் தமது பத்திரிகை யொன்றில் எழுதி இருக்கும் குறிப்பு[14] அவரது சமய ஆர்வத்தையும் தமிழ் மொழிப் பற்றையும் துல்லியமாகப் புலப்படுத்தி நிற்கும்.

கதிரைவேற்பிள்ளையின் கல்வி, தொழில் முதலான துறைகளின் உறவுகள் பெரிதும் கிறிஸ்தவர்களைச் சார்ந்தும் அரசைச் சார்ந்தும் இருந்த பொழுதும் தமிழ் மொழிக் கல்வியை வளர்த்தல் வேண்டும் என்பதிலும் தமிழ்மொழியில் புதிய ஆக்கங்கள் வெளிவர வேண்டும் என்பதிலும் ஆர்வம் உடையவராக விளங்கினார். நாவலரவர்களுக்கும் கதிரைவேற்பிள்ளைக்குமிடையிலான நட்பு 1846ஆம் ஆண்டிற்கு முன்பாக இருந்து வந்தது. 1846 ஆம் ஆண்டு ஆடிமாதம் உடுப்பிட்டி அருளம்பல முதலியாரோடு நாவலரவர்கள் தமிழகத்தின் கல்வி நிறுவனங்களைப்

14. குலரத்தினம், க.சி., செந்தமிழ் வளர்த்த செம்மல்கள், 1989,பக்.176

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA

பார்வையிட சென்றமை இங்கு நினைவு கூரத்தக்கதாகும்.[15] 1846 ஆம் ஆண்டு முதல் நாவலரவர்கள் தமது வீட்டில் திண்ணைப் பள்ளியொன்றினை நடத்தி வந்தனர். 1848 ஆம் ஆண்டு இப்பள்ளியினை நிறுவன அமைப் புடையதாக அமைப்பதற்குப் பல முயற்சிகள் மேற்கொண்டனர். இக்காலப் பகுதியில் நாவலரவர்கள் பெரும் பணநெருக்கடிக்குட்பட்டிருந்தார். இந்நிலையில் கதிரைவேற்பிள்ளை நாவலரவர்களுக்குத் தம்மாலான உதவி யினை வழங்க முன்வந்தார். நாவலரவர்கள் கதிரைவேற்பிள்ளையின் ஒத்துழைப்பை நன்றியோடு பின்வருமாறு நினைவு கூர்வார்.[16]

> ''பிங்கள ௵ மாசி மாதம் 14 ம் திகதி புதன் வாரத்தில் இராத்திரியில் இவ்வித்தியாசாலையிலே ஒரு சபை கூட்டி இதன் வரலாற்றைப் பிரசங்கித்தேன். அச்சபையில் கதிரைவேற்பிள்ளை தாம் சௌமிய ௵ வைகாசி (1848) சேர்த்த விதாரணத்தை வட்டியோடும் என்னிடத்தில் ஒப்புவித்தனர் ''

பிள்ளையவர்கள் இத்துடன் அமையாது தாமும் இக்கல்வி வளர்ச் சியின் பொருட்டு ரூபா எழுபத்தைந்து (75) நாவலரவர்களிடம் வழங்கினர். இவர் நாவலரவர்களின் சம காலத்தவர் ஆதலால் நாவலரவர்களின் நோக்கினை தக்கவாறு புரிந்து செயற்படவும் வாய்ப்பாக அமைந்தது. நாவலரவர்களின் சித்தியின் பின்னும் நாவலர் மரபினை மனங்கொண்டு செயற்பட்டார்.

சிவகேசவமிசிரர் எழுதிய தருக்கபாஷை என்னும் நூலினை சிவப் பிரகாச சுவாமிகள் தமிழில் மொழிபெயர்த்து எழுதியிருந்தார். அந்நூலினை பிள்ளையவர்கள் பதிப்பித்து வெளிப்படுத்தினார். தமிழ் புலவோர் பலரு டனும் கூடித் தமிழ் மொழி அகராதி யொன்றைத் தயாரித்தார். வண்ணை வைத்தீஸ்வரர் ஆலயப்புனருத்தாரண பணிக்கும் தம்மால் இயன்ற அளவு உதவினர். நாவலரவர்கள் தருக்கமுறையைத் தமிழ் மக்கள் நன்றாகக் கற்றல் வேண்டும் என்பதையும் அகராதி தொகுப்பு ஆலய புனருத்தாரணங்கள் முதலான விடயங்களிலும் ஈடுபட வேண்டும் என்றும் அடிக்கடி வற்புறுத்தி வந்தார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. நாவலரவர்களும் பல அகராதித் தொகுப்பில் ஈடுபட்டு உழைத்தார் என்பது நினைவு கூரத்தக்கது.

---

15. இராமலிங்கம், மு., நாவலரின் இந்தியப் பிரயாணங்கள், ஈழநாடு, மறுபிரசுரம், 1971, பக்.3
16. யாழ்ப்பாணத்துச் சைவப்பிரகாச வித்தியாசாலையின் முதலிருபது வருஷத்து ஆவேதனம், 1868, பக்.5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தா.செல்லப்பாபிள்ளை

இவர் ஒரு பட்டதாரி, சட்டத்தரணி, திருவனந்தரபுர சமஸ் தானத்தின் பிரதம நீதிபதியாக இருந்தவர். நாவலரவர்கள் ஈழநாட்டிலும் தமிழ் நாட்டிலும் சமூக நலனின் பொருட்டு எடுத்த நடவடிக்கைகளுக்குப் பக்கபலமாக இருந்தவர். யாழ்ப்பாண மாவட்ட அதிபராக இருந்த துவைனந்துரையின் மேல் நாவலரவர்கள் பல ஊழல் குற்றச் சாட்டுக்களைத் தொடுத்தார். அவற்றை இலங்கை ஆள்பதிக்கும் பிரித்தானிய அரசுக்கும் அறிவித்தார்.[17] நாவலரவர்களைப் பின்பற்றிச் செல்லப்பாபிள்ளையும் துவைனம் துரை மேற் குற்றச்சாட்டுக்கள் சுமத்திப் பிரித்தானிய அரசுக்கு முறையீடு செய்தனர்.[18] தமிழ் நாட்டில் சிவபுரி வெள்ளந் தாங்கி ஆறுமுகம் பிள்ளை என்பார் சிவகாமியம்மைக்குரிய 40 வேலி விளை நிலங்களை வசப்படுத்தி வைத்திருந்தார். நாவலரவர்கள் அந்நிலங்களையும் அதற்குரிய ஊதியத்தையும் சிவகாமியம்மை யாருக்குச் சமர்ப்பித்து விடும்படி பலமுறை சொல்லிய வழியும், அது நிறைவேறாது கண்டு அவரை நயைப்புடைத்தனர். இவ்வைதுவைப் பொறுக்கமுடியாத ஆறுமுகம்பிள்ளை நாவலரவர்களின் மேல் மானநட்ட வழக்கொன்றினைத் தாக்குதல் செய்தனர். அவ்வழக்கு மஞ்சக்கும்பக்கோட்டில் தாக்கல் செய்யப்பட்டது. இவ்வழக்கை நாவலரவர் களின் பொருட்டு நடத்தியவர் சட்டத்தரணி தா.செல்லப்பாபிள்ளை அவர்கள். ஆயினும் நாவலரவர்களே குற்றவாளியாகக் காணப்பட்டார். நாவலரவர்கள் அந்தக் குற்றத்தைத் தாம் செய்ததாக ஒப்புக் கொண்டதால் ஏழு (7) ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. பிறர் இத்தீர்ப்பை எதிர்த்து மேன்முறையீடு செய்யும்படி வற்புறுத்திய பொழுதும் நாவலரவர்கள் அவ்வாறு செய்யவில்லை.[19] பிள்ளையவர்கள் நாவலரவர்கள் நேர்மையி னையும் சமூக சமய சேவையில் நாவலரவர்களின் அர்ப்பணத் தன்மையி னையும் ஏற்கனவே அறிந்திருந்தமையினால் பிற்காலத்தில் நாவலரவர் களின் நோக்கினை மனங்கொண்டு அமைக்கப்பெற்ற சைவபரிபாலன சபையின் தலைவராகவும் இந்து ஓக்கனின் (Hindu Organ) ஆசிரியராகவும் அமர்ந்து பல்வகைப் பணிகளை ஆற்றியமை இங்கு நினைவு கூரத்தக் கதாகும். கு.கதிரைவேற்பிள்ளை, **தா.செல்லப்பாப்பிள்ளை** ஆகியோர் போன்று நாவலர் மரபினை பிற்காலத்தில் மனங்கொண்டு செயற்பட்ட வர்களுள் **சேர் பொன் இராமநாதன், சேர் பொன் அருணாசலம், காரைநகர் அருணாசல உபாத்தியார்,** வண்ணை சுவாமிநாத பண்டிதர், இந்து போட்

17. தனஞ்சயராசசிங்கம், ச., நாவலரும் துவைனம் துரையும் நாவலர் பெருமான் 150 ஆவது ஜயந்தி விழாமலர். 1972.பக்.56-64.
18. கைலாசபிள்ளை,த., ஆறுமுகநாவலர் சரித்திரம், 1955,பக்.95.
19. மேலது நூல்,பக்.96

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PROF. V. SIVASAMY
UNIVERSITY OF JAFFNA

சு.இராசரத்தினம், புலோலி சு.சிவபாதசுந்தரனார், சுவாமி விபுலானந்தர், பாவலர் துரையப்பாபிள்ளை சி.கணபதிப்பிள்ளை முதலானோர்களைக் குறிப்பிடலாம். இவர்களின் சைவ சமய முயற்சிகள் விதந்தோதத்தக்கன.

நாவலரவர்களின் சமகாலத்தில் வாழ்ந்து நாவலர் மரபினைப் போற்றியவர்களுள் **உடுப்பிட்டிச் சிவசம்புப் புலவரும்** ஒருவர். நல்லூர் சரவணமுத்துப்புலவரிடம் பாடம் கேட்டவர். நாவலரவர்களுக்கு நன்கு அறிமுகமானவர். சிவசம்பு அவர்களுக்குப் புலவர் என்னும் பட்டத்தை வழங்கியவரே நாவலர் என்பர். நாவலரவர்களின் சமய கல்விப் பணிகளை உளமாரப் போற்றியவர் புலவரவர்கள். கற்பித்தல், பிரசங்கம் செய்தல், புராணபடனம் செய்தல், பிரபந்தங்களைப் பாடுதல் என்பன இப்புலவருக்குக் கைவந்த கலை. இவர் பல்வகைப் பிரபந்தங்களைப் பாடியுள்ளார்.

கந்தவன நாதர் பதிகம், வல்லிபுர நாதர் பதிகம், செந்தில் யமக வந்தாதி. புலோலி நான்மணி மாலை, திருச்செந்தில் திருவந்தாதி, முதலான பிரபந்தங்கள் புலவரவர்களால் பாடப்பட்டவையாகும். மறைசையந்தாதி, யாப்பெருங்கலக்காரிகை, கந்தபுராணம் (வள்ளியம்மை - திருமணப்படலம்) முதலான நூல்களுக்கு உரை எழுதியுள்ளார். யாழ்ப்பாணக் குடாநாட்டின் வடபகுதியின் தமிழ் - சமய வளர்ச்சியில் தனது பல்வகைப் பணிகளால் காத்திரமான செல்வாக்கைப் பெற்றிருப்பவர் சிவசம்புப்புலவர் அவர்கள். இவர் சிறந்த மாணவ பரம்பரையை விட்டுச் சென்றவர். வல்வை ச. வைத்திலிங்கப் பிள்ளை வல்வை த. அருணாசலம் பிள்ளை, புலோலி ம.தில்லைநாத நாவலர், வ.குமாரசுவாமிக் குருக்கள், கரணவாய், க.கனகசபா பதிக்குருக்கள், கரணவாய் தி. ஞானப்பிரகாசதேசிகர், கை. திருஞானசம்பந்ததேசிகர், கை.நமச்சிவாயதேசிகர், அல்வாய் இ. ஆறுமுகம் பிள்ளை, பொலிகண்டி வே.சிதம்பரப்பிள்ளை. மந்துவில் வயித்திலிங்கச் செட்டியார் என்போர் புலவரின் மாணவபரம் பரையில் குறிப்பிடத்தக்கவர்கள்.[20] இத்தகைய மனப்பாங்கும் ஆர்வமும் தமிழ் மரபினையும் நாவலர் மனங் கொண்டதன் நோக்கினையும் விளைவேயெனலாம்.

## வைத்திலிங்கபிள்ளை

வல்வெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். சிவசம்புப் புலவரிடத்தில் பாடங்கேட்டவர். தமிழ்ச்சங்கத மொழிகளில் புலமை மிக்கவர். தருக்கம், சோதிடம் முதலானவற்றில் வல்லவர். சமயாபிமானி. நாவலரவர்களை நன்கறிந்தவர். நாவலரவர்களோடு வாதிட்டவர். ஆனால்

20. கணேசையர்.,சி., ஈழநாட்டுத் தமிழ்ப்புலவர் சரித்திரம், 1939,பக்.107

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலரவர்களின் பணியினைப் போற்றியவர். பேரன்பு கொண்டவர். நாவலலவரவர்கள் மரபில் தம்பணியை வளர்த்துக் கொண்டவர். சி.வை. தாமோதரம்பிள்ளை எழுதிய சைவாகமத்துவம் என்னும் நூலுக்கு எதிராக அருளப்ப முதலியார் **சைவமதத்துவதிக்காரம்** என்னும் நூலினை எழுதினார். இந்நூலுக்குப் பிரதிகண்டனம் செய்யும் வகையில் **சைவமகத்துவதிக்கார நிக்கிரகம்** என்னும் நூலினைப் பிள்ளையவர்கள் எழுதினார்.[21] இது சைவத்தின் மேன்மையை மேலும் துலக்கியது. இவரது பல்துறைப் புலமையைப் போற்றி, **இயற்றமிழ்ப் போதனாசிரியர்** என்னும் பட்டத்தை தமிழ் உலகம் வழங்கியது. இந்நூல் கிறிஸ்தவர்கள் தாமோதரம்பிள்ளை மேல் கொண்டிருந்த கோபத்தைத் தணித்தது. பிள்ளையவர்கள் பல மாணவர்களுக்குப் பாடம் கற்பித்தார். அவர்களுள் உடுப்பிட்டி சு. ஆறுமுக உபாத்தியார், மட்டக்களப்பு ச.பூபாலபிள்ளை முதலானோர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். சைவசமய வளர்ச்சியின் பொருட்டு வல்வையில் அச்சுயந்திர சாலையொன்றினை நிறுவிச் **சைவாபிமானி** என்னும் பத்திரிகையையும் பல நூல்களையும் அச்சிட்டு வெளியிட்டு வந்தார். இவர் கவிதை பாடுவதில் மிகுந்த ஆற்றல் படைத்தவர். **வல்வை வயித்தியேசர் பதிகம், செல்வச் சந்நிதி முறை** முதலான பிரபந்தங்கள் இவரால் பாடப்பட்டவையாகும். கந்தபுராண அண்டகோசப் படலம், தெய்வயானை திருமணப்படலம், வள்ளியம்மை திருமணப்படல்ம் சூரபன்மன் வதைப்படலம் முதலான படலங்களுக்கு உரையெழுதியதோடு, கல்வளையந்தாதி, கந்தரலங்காரம் முதலான நூல்களுக்கும் உரையெழுதி வெளியிட்டார். **சாதிநிர்ணய புராணம்** என்னும் நூலினையும் எழுதினார். **சிந்தாமணி நிகண்டு** என்னும் அகராதியைத் தொகுத்தார். நாற்கவிராச நம்பி அகப் பொருள் உரை, சிவராத்திரி புராணம், சூடாமணி நிகண்டு என்பன பிள்ளையவர்களால் பதிப்பிக்கப் பெற்ற நூல்களாகும்.

நாவலரவர்கள் கரையோர மக்களின் சமூக நலன்களில் அக்கறை கொண்ட அளவிற்கு அவர்களின் கல்வி முயற்சியில் அக்கறை காட்ட வில்லை என்பர். கத்தோலிக்க, புரட்டஸ்தாந்து கிறிஸ்தவ மிஷனரிமார் களின் சமூகசேவையும் கல்விச் சேவையும் கரையோரப்பிரதேச மக்களை மனங்கொண்டே செயறபட்டு வந்தமையால் அவர்களோடு போட்டியிட்டு மேற்போந்த பணிகளைத் தம்மால் செய்ய முடியாதென நாவலரவர்கள் கருதியிருப்பாரேயானால் அது நியாயபூர்வமான கருத்தேயாகும். அதே சமயம் கரையோர மக்களின் சைவசமய வளர்ச்சியின் பொருட்டு சுதேசிய சைவர்கள் மேற் கொண்ட நடவடிக்கைகளை முழுமனதுடன் வரவேற்றார்,

21. மேலது நூல்,பக்.81

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாராட்டினார். நாவல்ரவர்களின் இத்தகைய உயர்ந்த உள்ளப்பாங்கே வைத்திலிங்கபிள்ளையை நாவலரவர்கள் பால் பெருமதிப்புக் கொள்ள வைத்தது. எனலாம். அதனாலேதான் பிள்ளையவர்களும் நாவலர் மரபில் நின்று செயற்பட்டார். அவ்வகையில் நாவலரவர்கள் விட்டுச் சென்ற இடத்தினை, நாவலர் மரபினை மனங்கொண்டு அப்பணியினைக் காத்திரமாக வளர்த்துச் சென்ற பெருமைக்குரியவராய் வல்வை வைத்திலிங்க பிள்ளை விளங்கினார் எனில் மிகையன்று. மற்றும் வட்டுக்கோட்டை **அம்பலவாணநாவலர்** மானிப்பாய் **ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை புலோலி வ.குமாரசுவாமிப் புலவர், வ.கணபதிப்பிள்ளை** மேலைப் புலோலி நா.கதிரைவேற்பிள்ளை முதலான அறிஞர்களும் புலவர்களும் பிரசங்கம் செய்தல் புராணபடனம் செய்தல், அச்சிடல், பதிப்பித்தல், இலக்கிய இலக்கண நூல்களை எழுதல் முதலான பணிகளில் தம்மை ஈடுபடுத்தி நாவலர் மரபினைப் பேணிக்காக்க முற்பட்டு நின்றனர். வட்டுக்கோட்டை **அம்பலவாண நாவலரும் ஆ. முத்தம்பிப்பிள்ளையும் நா. கதிரை வேற்பிள்ளை** ஆகியோர் நாவலர் மரபினைப் பிற்காலத்தில் முனைப்புடன் செயற்படுத்தவதில் தம்மை அர்ப்பணித்தவர்கள் என்பது ஈண்டு மனங் கொள்ளத்தக்கதாகும்.

## முத்துத்தம்பிப்பிள்ளை

அவர்கள் 1858 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 18 ஆம் நாள் யாழ்ப்பாணத்திலுள்ள மானிப்பாய் என்னும் ஊரில் பிறந்தார். அவர் தமிழ் - வடமொழிக் கல்வியை முருகேச பண்டிதரிடமும் ஆங்கிலக் கல்வியை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியிலும் பயின்றவர். பின்னர் 1875 ஆம் ஆண்டு நாவலப்பிட்டியில் ஆசிரியராகத் தொழில் புரிந்தவர்.[22] நாவலர வர்கள் கல்வி பயின்ற மத்திய கல்லூரியில் பிள்ளையவர்கள் கல்வி பயின்றமையாலும் ஆசிரியர் என்ற வகையிலும் சமகாலத்தில் நாவலர வர்கள் தமிழ் சைவ சமய முயற்சிகளைப் பிள்ளையவர்கள் அறிந்திருக்க வாய்ப்புகள் மிகுதியாக இருந்தன.

1880 ஆம் ஆண்டு தமிழ் நாடு சென்ற பிள்ளையவர்கள் தஞ்சாவூரில் அழகியநாதன் செட்டியாரின் விருப்பத்தின் பெயரில் ஆசிரியத் தொழில் பார்த்து வந்தார். பின்னர் எழுதுவினைஞராகவும் கணக்காளராகவும் தொழில் பார்த்தார். 1884 ஆம் ஆண்டு தவசிமுத்து நாடார் வேண்டுதலின் பேரில் **சத்தியாபிமானி** என்னும் பத்திரிகை நடத்தினார். 1885 இல் சென்னை

22. சிவபாதசுந்தரனார், ந., நாவலர் கோட்டம் முத்துத்தம்பிப்பிள்ளை, திருமகள் அச்சகம், சுன்னாகம்,1977.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்றார். அங்கு அவர் 1887 ஆம் ஆண்டு ஆனி மாதம் 2 ந் திகதி விக்டோரியா ஜுபிலி அச்சுக் கூடத்தை நிறுவினார். வினோத செயுட்திரட்டு, சிவசுப்பிரமணிய சுவாமி பேரில் விருத்தம், பட்டணத்துப்பிள்ளையார் பாடல் உரை, ஆரோக்கிய தீபம், சுவாமிநாதையரின் சிலப்பதிகாரப் பதிப்பு முதலான நூல்களைப் பிள்ளையவர்கள் இவ்வச்சகத்தில் பதிப்பித்து வெளிப்படுத்தினார். பிள்ளையவர்கள் தமிழ் நாட்டில் வாழ்ந்த காலத்தில் நாவலர் மரபினை உளங்கொண்டு அதனைப் வளர்ப்பதிலும் அதன் பெருமையை நிறுவுவதிலும் முனைப்பாகச் செயற்பட்டார் என அறிய முடிகின்றது.

1893 ஆம் ஆண்டு தமிழ் நாட்டின்னின்று தாயகம் திரும்பிய பிள்ளையவர்கள் நாவலர் மரபு என்ற இயக்கத்துக்குச் சேவை செய்யும் முழுநேர ஊழியனாகத் தன்னை மாற்றிக் கொண்டார். இங்கு வந்ததும் யாழ்ப்பாணத்தில் நாவலரவர்கள் வாழ்ந்த இல்லத்தினை விலைக்கு வாங்கினார். அதற்கு **நாவலர் கோட்டம்** என்று பெயர் சூட்டினார். அவ்விடத்திலே அச்சுக்கூடமொன்றினை நிறுவி, அதற்கு **நாவலர் அச்சுக்கூடம்** என்று பெயர் சூட்டினார். அதனைத் தொடர்ந்து நாவலரவர்கள் போல் நூல்களை எழுதுதல் பதிப்பித்தல், வெளியிடல் முதலான பணிகளில் ஈடுபட்டார். குமாரசுவாமிப் புலவரால் பரிசோதிக்கப்பெற்ற சூடாமணி நிகண்டு முதல் ஐந்து தொகுதி, அவர் எழுதிய **வினைப்பகுபத விளக்கம்** சேர் பொன் இராமநாதன் எழுதிய **பகவத்கீதையுரை,** ஔவையாரின் நீதிச்செய் யுட்கள் திருவாசகம் முதலான நூல்களைப் பிள்ளையவர்கள் சிறப்பான முறையில் பதிப்பித்து வெளிப்படுத்தினர்.[23] அவர் எழுதிய அபிதானகோசம் (1902) தமிழ் இலக்கிய வரலாற்றில் முன்னோடியான நூல், பின்னெழுந்த கலைக்களஞ்சியத்துக்கெல்லாம் வழிகாட்டி, தென்மொழி வரலாறு (1922) தமிழ் இலக்கிய வரலாற்றைச் சுருக்கமாகத் தருவதாகும், திராவிடப் பிரகாசிகைக்குப் பின் தோன்றிய தமிழ் இலக்கிய வரலாற்றுச் சாயல் படிந்த நூல்களுள் இதுவுமொன்றாகும். யாழ்ப்பாணம் சரித்திரம் (1912), யாழ்ப்பாணத்தில் எழுந்த வரலாற்று இலக்கியங்களையும் பிறவற்றையும் அடிப்படையாகக் கொண்டு எழுதப்பெற்ற வரலாற்று நூல். ஈழமண்டலப் புலவர் சரித்திரம் வாழ்க்கை வரலாற்று இலக்கியமாகும். ஆங்கிலம் - ஆங்கிலம் - தமிழ் அகராதி (1900) செந்தமிழ் அகராதி என்பன இவரது அகராதி முயற்சிகளாகும். இவற்றுள் செந்தமிழ் அகராதி வெளிவந்ததாக அறியுமாறில்லை. சமயிகளிடையே ஒழுகலாற்றை வழிப்படுத்தும் பொருட்டு, கந்தரலங்காரம், கந்தரனுபூதி, ஆத்திசூடி, கொன்றைவேந்தன்,

23. மேலது நூல்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்னெறி, நல்வழி, வெற்றி வேட்கை, விநாயகர் அகவல் முதலான நூல்களுக்குப் புத்துரை செய்து வெளியிட்டார். காளிதாசர் சரித்திரம், அற்புதயோகி சரித்திரம். பாரதச் சுருக்கம் என்பன மாணவரிடையே வாசிப்புப் பழக்கத்தையும் நல்லமொழித் திறனையும் வளர்க்கும் பொருட்டு பிள்ளையவர்களால் எழுதப்பட்ட வசன நூல்களாகும். அத்துடன் நன்னூல் இலகுபோதம் - எழுத்ததிகாரம், (1904) நன்னூல் இலகுபோதம் - சொல்லதிகாரம் (1905) நன்னூல் உதாரண விளக்கம் (1912) என்பனவும், புதிய இலகு போதம் பிள்ளைப் பாடல், புதிய இலகுபோதம் - பாலபாடம் (1-8 ம் வகுப்பு) புதிய இலகுபோதம் - இலக்கணம் (5-16ம் வகுப்பு) முதலானவையும் மாணவர் பொருட்டு எழுதப்பட்ட பாட நூல்களாகும். **வைத்திய விசாரணி** என்னும் மாதாந்தப் பத்திரிகையொன்றினையும் (1897) இவர் வெளியிட்டார். [24]

மேலும் பிள்ளையவர்கள் ஈழநாட்டுத் தமிழ்ச் சங்கத்திலும் (1900) பாண்டித்துரைத்தேவரின் தமிழ்ச் சங்கத்திலும் (1904) ஒரு உறுப்பினராக இருந்ததோடு, இச் சங்கங்கள் நடத்திய பண்டிதர் பரீட்சைக்கு பரீட்சகராகவும் விளங்கினார். யாழ்ப்பாணத்துச் சைவசித்தாந்த சமாஜ நிர்வாக உறுப்பினராக இருந்து சிறப்பாகச் சமயப் பணியாற்றினார். ஈழநாட்டுக்குப் பிள்ளையவர்கள் மீண்டும் திரும்பியதினால் நாவலர் மரபினை மனங்கொண்டு அதனை வளர்த்துச் செல்ல அவரால் முடிந்தது. இதனாலே தான் ''நாவலர் கோட்டம் ஆ.முத்துத்தம்பி'' என வரலாற்று ஆசிரியர்கள் இவரை அழைத்தனர் போலும்

## அம்பலவாண நாவலர் (1855-1932)

வட்டுக்கோட்டையிலுள்ள சித்தங்கேணியில் 1855 ம் ஆண்டு பிறந்தவர். நாவலர் மரபிலுள்ள வந்த ம.க. வேற்பிள்ளை உபாத்தியாரிடம் தமிழ் இலக்கிய இலக்கணம் பயின்றவர். சிவசங்கரபண்டிதர், முருகேச பண்டிதர் ஆகியோரிடத்து சங்கத மொழி பயின்றவர். கழிபுரம் கனகரத்தின முதலியாரிடம் ஆங்கிலம் கற்றவர். [25] அம்பலவாணர் மும்மொழி விற்பன்னர். நாவலரவர்கள் பிரசங்கத்தால் ஆட்கொள்ளப்பட்டவர். நாவலரவர்களைப் பின்பற்றிப் பிரசங்கம் செய்தவர். இவரின் ஆற்றலை அறிந்து இவரை வருவித்து ஆசீர்வதித்து தீட்சை அளித்தவர். [25] அன்று தொட்டு நாவலரவர்களையே குருவாகக் கொண்டு நாவலர் மரபினைத் திரிகரண சுத்தியுடன் பின்பற்றி வந்தவர். நாவலரவர்கள் சிவபதம் அடைந்த பொழுது நாவலர் **சற்குருமணிமாலை** பாடியவர். அது நாவலரவர்கள் பால்கொண்ட குருபத்தியினை வெளிப்படுத்தி நிற்கும்.

24. மேலது நூல்,
25. கணேசையர்,சி., ஈழநாட்டுத் தமிழ்ப்புலவர் சரித்திரம், 1939,பக்.178

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''குருவே யிரித்தெமை யாண்டிட நீயுருக்கண்டனையே
குருவேயெம் மாறு முகநாவ லசற் குருமணியே''

என அம்பலவாணர் பாடுவது மேற் கூறிய கருத்தினை வலியுறுத்தி நிற்கும்.[26] இதனால் நாவலரவர்கள் போல் நைட்டிகப்பிரமச்சாரியாக வாழ்ந்தனர். சைவம் தமிழ் வளர்ச்சியின் பொருட்டு நாவலர் மரபினைப் பின்பற்றியவர். மேலும், சித்தங்கேணியிலுள்ள கிலமுற்ற கோயில்கள் இவரது திருப்பணிகளால் புதுப் பொலிவு பெற்றன. சித்தங்கேணியில் அம்பலவாணர் ஏற்படுத்திய ஆங்கில பாடசாலையே வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. இதுவே பிற்காலத்தில் வட்டுக் கோட்டை இந்துக்கல்லூரியாக மாறிய பொழுதும், வட்டுக்கோட்டையில் யாழ்ப்பாணக் கல்லூரியால் சைவசமய வளர்ச்சிக்கு ஏற்பட இருந்த தடைகளை இக்கல்லூரி நிவர்த்தி செய்து வைந்தது. இதனாலே தான் அம்பலவாண நாவலர் ஆற்றிய லோகோப காரமான பணிகளுள் சித்தங்கேணி ஆங்கிலப் பாடசாலைத் தாபனம் தலையாயது என்பதில் ஐயமில்லை என்றனர்.[27] அம்பலவாண நாவலர் அகோர சிவாசாரியார் பத்ததி, (நிர்மலமணி வியாக்கியானம்) பிரம தருக்கஸ்தவம் வேணுவனலிங்கோற்பவம், அருணாசல மான்மியம் முதலான நூல்களைச் சிறப்புறப் பதிப்பித்து வெளியிட்டார். சிவத்துரோக கண்டனம், திருவாதிரைத்திருநாள் மகிமைப்பிரபாவம் முதலான நூல்களை இவர் எழுதினர். பெரிய புராண பாடியம், சித்தாந்தப் பிரபோதம், தக்ஷாதர்சம், சைவ சந்நியாச பத்ததி, ஆரிய திராவிடப் பிரகாசிகை முதலான நூல்கள் இவரால் எழுதப்பட்டதாக அறிய முடிகின்றது. ஆனால் இவை வெளிவந்ததாக அறியுமாறில்லை.

நாட்டுக்கோட்டைச் செட்டிமார்களின் அழைப்பை ஏற்றுத் தமிழ் நாடு சென்றவர் அம்பலவாண நாவலர், அங்கு தமது பல்துறைப் பணிகள் மூலம் சைவத்தையும் தமிழ் மொழியையும் வளர்க்க முற்பட்டவர். அதன் பொருட்டு நாட்டுக்கோட்டை, தேவகோட்டை, காரைக்குடி, கண்டனூர், காளையார் கோயில் முதலான இடங்களிலே சமயப் பிரசங்கங்கள் செய்து வந்தார். திருவாவடுதுறை ஆதீனம் இவரது பிரசங்க வன்மையையும்

26. அம்பலவாண நாவலர், சற்குரு மணிமாலை, சைவப்பிரகாச யந்திர சாலை, யாழ்ப்பாணம்.
27. கைலாசபதி,க., ஈழத்து இலக்கிய முன்னோடிகள், 1986

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தாந்தப் புலமையையும் ஆராய்ந்து ''நாவலர்'' என்னும் பட்டத்தை வழங்கியது[28]. பண்டார மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாணதேசிக பரமாசாரிய சுவாமிகள் இப்பட்டத்தை வழங்கினார். இக்கௌரவம் நாவலர் மரபின் நின்றோரான அம்பல வாணருக்கு அளிக்கப்பட்டமை நாவலர் மரபின் செல்வாக்கையும் ஆளுமையையும் எடுத்துக்காட்டும்.

நாவலர் தம் வாழ்நாளில் ஒரு சைவ மடாலயமொன்றினை அமைக்க வேண்டும் என விரும்பி இருந்தார். அவருடைய காலத்தில் அவ்வெண்ணம் நிறைவேறவில்லை. அவ்வெண்ணத்தை நிறைவேற்றும் வகையில் அவர் முயற்சித்தார். தேவகோட்டை நெல்லையப்பர் காந்திமதி தேவஸ்தானத்தின் அருகில் ஒரு மடம் அமைத்து அதற்குத் திருஞான சம்பந்த சுவாமி மடாலயம் எனப் பெயரிட்டு நடத்தி வந்தார். பின் சிதம்பரத்தில் ஒரு மடங்கட்டுவித்து அதற்கு **ஆறுமுகநாவலர் சந்தான சம்பந்த சுவாமி** ஆதீனம் எனப் பெயரிட்டு நடத்தி வந்தார்.[29] அம்பலவாண நாவலரின் இப்பணி ஒரு வகையில் நாவலர் மரபிற்கு வளமூட்டும் செயலாக அமைந்திருந்தது.

நாவலர் மரபையே தனது இலட்சியமாகக் கொண்டு, நாவலர் அவர்களையே தமது தெய்வமாகப் போற்றி வாழ்ந்த அம்பலவாண நாவலர் ஆங்கீரஸ ஞு சித்திரை மாதம் 23 ம் திகதி (1932) சிதம்பரநாதனின் திருவடிநிழலை அடைந்தார்.

## நா.கதிரைவேற்பிள்ளை

தசாவதானி நா.கதிரைவேற்பிள்ளை அவர்கள், நாவலரவர்கள் ஆரம்பித்த புலோலி சைவப்பிரகாச வித்தியாசாலையில் கல்வி பயின்றவர். இவர் தாயார் பெயர் சிவகாமி அம்மையார். தந்தையார் பெயர் நாகப்பிள்ளை. இவர் பிரசோற்பத்தி ஞு வருடம் மார்கழி மாதம் 3ஆந் தேதி பிறந்தார். இவர் ஈழநாட்டில் நாவலரவர்களின் மாணாக்கர்களான கா.தியாகராசாப்பிள்ளை, வேன்மயில்வாகனச் செட்டியார் ஆகியோரிடத்தில் கல்வி பயின்றவர். தமிழ் நாட்டில் தி.க. கனகசுந்தரம்பிள்ளை, ந.க. சதாசிவப்பிள்ளை, காசிவாசி செந்திநாதையர், சபாபதிநாவலர் முதலானோர்களிடத்தில் கல்வி பயின்றவர்.[30]

28. கணேசையர், சி., ஈழநாட்டுத் தமிழ்ப்புலவர் சரித்திரம்,1939,பக்.183
29. மேலது நூல் பக்: 185
30. கலியாணமுதலியார், வி.,நா.கதிரைவேற்பிள்ளை அவர்கள் சரித்திரம் பரோக்கிரஸ்ஸிவ் அச்சுக்கூடம், சென்னை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நா.கதிரைவேற்பிள்ளை அவர்கள் ஈழநாட்டில் எழுதுவினைஞராகவும் புலோலி சைவப்பிரகாச வித்தியாசாலையில் ஆசிரியராகவும் கடமையாற்றியவர். தமிழ் நாட்டில் சென்னை - பச்சையப்பன் கல்லூரி (1898), திருமயிலை சாந்தோம் கல்லூரி (1898), சென்னை - வெஸ்லியன் கல்லூரி (1902) முதலான கல்லூரிகளில் பண்டிதராகவும், ஆரணிய சமஸ்தானத்தின் மகாவித்துவானாகவும் கடமையாற்றியவர். பிள்ளையவர்கள் தமிழ், சங்கதம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் தேர்ச்சி உடையவராக விளங்கினார். பொதுவாக நாவலர் மரபில் காணப்படும் பொது அம்சங்களுள் இதுவுமொன்று. புதிய மாணவபரம்பரையை நாவலர் நோக்கிற்கேற்ப உருவாக்குதல் இம்மரபின் கூறாகும். திரு.வி. உலகநாத முதலியார், பு.மு. பாலசுந்தர நாயக்கர், ச.சச்சிதானந்தபிள்ளை, அ. சிவசங்கர முதலியார், இரத்தினசாமி முதலியார், கிளோற்றன் பாதிரியார் முதலானோர்கள் பிள்ளையவர்களின் மாணாக்கர் ஆவர். இம்மாணாக்கர் மூலம் தமிழ் நாட்டில் நாவலர் மரபினை ஆழ்ப்பதித்து பரவலாக்கியவர் பிள்ளையவர்கள் ஆவார்.

தமிழ் நாட்டில் நாவலரவர்களாலும் அவர் தம் மாணவபரம்பரையாலும் ஆரம்பித்து வைக்கப்பட்ட கல்வி மரபுகளுளொன்று புராணபடன முறையாகும். பிள்ளையவர்கள் சென்னை - கந்தசுவாமிகோயில், இராயப்பேட்டை. முத்துக்குமார சுவாமி கோயில் முதலான இடங்களில் தணிகைப் புராணம், திருவிளையாடற் புராணம் கந்தபுராணம் முதலான நூல்களுக்கும் ஈழநாட்டில் திருத்தொண்டர் புராணம் திருவிளையாடற் புராணம் திருச்செந்தூர் புராணம் முதலான நூல்களுக்கும் புராணபடனம் செய்து வந்தார். புராணபடனம் ஒரு தொழில்சார் கல்வி முறை சார்ந்தது. புலமைசார் கல்வியை வெளிப்படுத்துவது. பிள்ளையவர்களின் ஆசிரியத் தொழில், புராணபடனஞ் செய்தல் முதலான தொழில் சார் கல்விகள் பிள்ளை அவர்களைச் சிறந்த சொற்பொழிவாளராக உயர்த்திற்று. இவர் ஈழநாட்டிலும் சிறப்பாகத் தமிழ் நாட்டிலும் தமிழ் இலக்கியம், சமயம், தத்துவம் முதலான விடயங்கள் பற்றி ஆற்றிய சொற்பொழிவுகளின் அட்டவணை கீழே தரப்படுகின்றது. இவ்வட்டவணை அவரின் பல்துறை சார்ந்த புலமைத்துவத்திற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக அமைகின்றது எனலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| இடம் | பொருள் | ஆண்டு |
|---|---|---|
| திருவாவிநன்குடி இராயப்பேட்டை முத்துக்குமாரசுவாமி கோயில் | பழனித்தலபுராணம்<br>திருமறைமான்மியம் | 1904<br>1904 |
| சிதம்பரம் | சிதம்பரமான்மியம் | 1904 |
| சென்னை-பாங்கர் பெரியபாளைத்தம்மன் மண்டபம் | பௌத்தம் | 1904 |
| தொண்டைநாடு திருவேரகம்பம் | அருட்பாக்கள் திருமுறையே | 1904 |
| சென்னை, மதுரை தமிழ்ச்சங்கம் | வேளாளர் நான்காம் வருணத்தாரே | 1903 |
| திருவாவடுதுறை ஆதீனம் | சந்தானபரம்பரை | 1905 |
| அல்வாய்-வீரபத்திரர் கோயில் சுவாமி மண்டபம் | வீரபத்திரர் பிரபாவம் | 1905 |
| வியாதெரு-சித்தி விநாயகர் மண்டபம் | கல்வியால் தேடப்படுவது யாது | 1905 |

12120 S.C

பிள்ளையவர்கள், நாவலரவர்க்ள் போல் மதசம்பந்தமான வாதப் பிரதிவாதங்களில் தீவிரமாக ஈடுபட்டார். நாவலரவர்கள் அந்நிய மதமான கிறிஸ்துமத கண்டனங்கள் செய்வதில் தீவிரம் காட்டினார். சைஷ தூஷண பரிகாரம் (1852) என்னும் தலை சிறந்த கண்டன நூலை இதன் பொருட்டு எழுதினார். ஆனால் பிள்ளையவர்கள், நாவலரவர்கள் போலல்லாது சுதேசிய சமய கண்டனங்கள் செய்வதில் மிகுதியாக ஈடுபட்டார். அதன் பொருட்டு சைவதூஷண சந்திரிகை (1900), புத்தமத கண்டனம் முதலான நூல்களை எழுதினார். அத்துடன் சுப்பிரமணிய பராக்கிரமம் (1922), சிவசேத்திராலய மகோற்சவ உண்மை விளக்கம் (1896), கருவூர்மான்மியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA JPL



(1906), திருஞான சம்பந்தர் சுவாமிகள் சரித வசனம் - சுருக்கம், இராமலிங்க பிள்ளை பாடல்கள் ஆபாச தர்ப்பணம் அல்லது மருட்பா மறுப்பு (1904) முதலான நூல்களை எழுதினார். கதிர்காமக் கலம்பகம் (1892), புதுச்சந்நிதி கந்தர்பிள்ளைத்தமிழ், சென்னை கந்தர் நவமணிமாலை முதலான நூல்களையும் பாடினார். பிள்ளையவர்களின் நூல்களுள் தமிழ்ப் பேரகராதி (1899) தனித்துவம் வாய்ந்தது. இந்நூற்றாண்டில் வெளிவந்த அகராதிகளுள் பல சிறப்புக்களைக் கொண்ட அகராதி இது என்பர் ஆய்வாளர்.

பிள்ளையவர்கள் பல நூல்களுக்குப் பொழிப்புரை, அரும்பதவுரை, விருத்தியுரை எழுதியுள்ளார். கூர்மபுராணம், யாப்பெருங்கலகம், கந்தரனுபூதி, தணிகைப்புராணம், திருவானைக் கலம்பகம் முதலான நூல்களுக்கு விருத்தியுரை கண்டுள்ளார். திருவிளையாடற்புராணம், ஏகாதசிப்புராணம், பிரபுலிங்கலீலை, சிவராத்திரி புராணம் முதலான நூல்களுக்கு அரும்பதவுரை எழுதியுள்ளார். பழநித்தலபுராணம், பட்டணத்துப்பிள்ளையார் புராணம் முதலான நூல்களுக்குப் பொழிப்புரை எழுதியுள்ளார். இந்நூல்களில் மேற்கோள் காட்டல், இலக்கணக்குறிப்புத்தரல், அகராதிப் பொருள் தரல், கலைச்சொல் அகராதி தரல் முதலான உரைத் திறன்கள் கையாளப்பட்டுள்ளன.

அகத்தியர் தேவாரத்திரட்டு, சைவசித்தாந்த சங்கிரகம் (1892), போற்றிக் கலிவெண்பா (1912), திருவாலவாய்த் தேவாரப் பதிகங்கள் (1912), மதுரைப்பதிற்றுப்பத்தந்தாதி (1912), திருவாலவாய்த் திருப்புகழ் (1912), பட்டணத்தடிகள் புராணம் (1902), தாயுமானவர் சுவாமிகள் திருப்பாடற்றிரட்டு (1937) முதலான நூல்களைப் பிள்ளையவர்கள் பதிப்பித்து வெளியிட்டுள்ளார்.

மாயாவாததும்சகோளரி, அத்துவிதசித்தாந்த மகோத்தாரணர், போலியருட்பாப் பிரபந்த நிர்க்கந்த கிஞ்சுக கண்டனப் பிரசண்ட மாருதம் (1905), சைவசித்தாந்தமகாசரபம் (1905), அட்ட அவதானம், சோடாவதானம், அஷ்டாதச அவதானம், நாவலர் முதலான பட்டங்களைப் பிள்ளையவர்கள் தமது புலமைத்துவத்தால் பெற்றுக் கொண்டார். ''பிள்ளை நாவலருக்குப்பின் தம்காலத்தில் தமிழ்நாடு முழுவதிலும் ஒப்புயர்வில்லாத தனிச் சக்கரவர்த்தியாய் விளங்கினார்'' [31] என்ற பண்டிதமணி சி.க.வின் கூற்று இங்கு நினைவு கூரத்தக்கது.

---

31. கணபதிப்பிள்ளை,சி., சதாவதானம் கதிரைவேற்பிள்ளை, கலைக்கண், 10பங்குனி1974.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19 ஆம் நூற்றாண்டில் தமிழ் நாட்டில் தமிழ் இலக்கிய வரலாற்றிலோ சமய இலக்கிய வரலாற்றிலோ அசைவியக்கத்தைத் தோற்றுவித்தது அருட்பா - மருட்பா போராட்டம் என்பதை மறுப்பதற்கில்லை. இந்த அசைவியக்கம் முக்குணவயப்பட்ட ஒருவரால் பாடப்பட்டு பத்தி உணர்வோடு போற்றப்படுவதெல்லாம் சமய இலக்கியம் என்ற கருத்து நிலையை ஆய்வுக்கு உட்படுத்தியது. இது இந்த நூற்றாண்டில் இரு கட்டங்களாக நடைபெற்றது. முதற் கட்டத்தில் ஆறுமுக நாவலரும் அவர் இயக்கமும் இராமலிங்க அடிகளாரும் அவரது இயக்கமும் ஒன்றுடன் ஒன்று வாதித்தன. நாவலர் இயக்கம் ''திருமுறைகளே அருட்பாக்கள்'' என்ற கருத்தை முன்வைத்தது. இராமலிங்க இயக்கம் இராமலிங்கர் பாடல்களும் அருட்பா என்ற கருத்தை முன் வைத்தது. இராமலிங்க அடிகளாரின் தனிப்பட்ட சமய வாழ்வியல் அம்சங்களில் ஏற்பட்ட முண்பாடுகளும் இராம லிங்கர் இயக்க அங்கத்தினரின் அடாவடித்தனங்களும் நாவலரவர்கள் எழுதிய **போலியருட்பா மறுப்பு** (1869) என்னும் கண்டன நூலும், இராம லிங்கர் இயக்கத்தின் நோக்கத்தை வலுவிழக்கச் செய்தன. அத்துடன் 1869 ஆம் ஆண்டு நாவலரவர்கள் இராமலிங்க அடிகளார் மீது தொடுத்த மானநட்ட வழக்கில் நீதிமன்றத்தில் இராமலிங்கர் சிதம்பரத்துப் (பேரம்பத்தில் நாவலர் என்னும் சொல்லை நா+அலர் எனப் பிரித்துப் நாவினால் 'வடு செய்வன்' எனப்பல பொருள்படப் பேசியதை அங்கு சைவப்பிரசாரகரை அவதூறாக ஒரு போதும் பேசவில்லை என்று மறுத்ததும், இவ்வியக்கம் மேலும் வலுவிழக்கக் காரணமாயிற்று. இத்தகைய பத்தி நூல் பற்றிய காரணகாரிய வாதத்தால் ஏற்பட்ட அசை வியக்கம், பத்தி நூல்கள் எவை என்பதைத் தெளிவாகப்புரிந்து கொள்வதற்கான வாய்ப்பை பொது மக்களுக்கு அளித்த தென்பதை யாரும் மறுப்பதற்கில்லை. 1869 ஆம் ஆண்டு மார்கழி மாதம் நாவலரவர்கள் ஈழநாடு திரும்பிய தன் பின் அருட்பா-மருப்பா வாதங்கள் தமிழ் நாட்டில் தணிந்து இருந்தன.

நாவலரவர்களுக்குப் பின் மீண்டும் தமிழ் நாட்டில் தமிழ்ப் புலவோருள் தன்னிகரற்றவராக பிள்ளையவர்கள் விளங்கிய போது, அருட்பா-மருட்பாப் போராட்டம் மீண்டும் தலை தூக்கிற்று.

இக்காலத்தில் இப்போராட்டம் ''திருவருட்பாப் போராட்டமாக அமைந்தது. இராமலிங்கர் பாடல்கள் திருவருட்பா என்ற இயக்கத்துக்கு மறைமலையடிகள் தலைமை தாங்கினார். திருமுறைகளே திருவருட்பாக்கள் என்னும் இயக்கத்துக்குப் பிள்ளையவர்கள் தலை தாங்கினார். பிள்ளையவர் களின் இயக்கம் வலுவடைந்த பொழுது, அவரது உயிருக்கு ஆபத்துக்கள் [illegible]ட்டன. பிள்ளையவர்கள், இராமலிங்க அடிகளாரின் பாடல்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரசங்கங்கள் யாவற்றையும் தொகுத்து அவற்றின் அடிப்படையில், இராமலிங்கர் பாடல் **ஆபாச தர்ப்பணம் அல்லது மருட்பா மறுப்பு** (1904) என்னும் நூலை எழுதி பு.பாலசுந்தர நாயக்கர் பெயரில் வெளியிட்டார். இந்நூலை அடிப்படையாகக் கொண்டு இராமலிங்க அடிகளாரின் தமையனார் மகன் ச.வடிவேலுப்பிள்ளை சென்னை பொலிஸ் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார். இதில் முதலாம் எதிரியாகப் பிள்ளையவர்கள் குற்றம் சாட்டப்பட்டார். இவ்வழக்கினை நீதிபதி எம்.அஸுர்ஸீன் சாகிப்பகதூர் அவர்கள் விசாரனை செய்தார். 1907 ஆம் ஆண்டு கார்த்திகை. மாதம் 21 ந் திகதி இவ்வழக்கின் தீர்ப்பினை வழங்கினார். எதிரிகளின் நோக்கம் இராமலிங்கரின் சமய தத்துவத்தைக் கண்டிப்பதேயன்றி வழக்காளியின் மனதைப் பங்கப்படுத்துவதன்று எனத் தீர்ப்பை வழங்கி, அவ் வழக்கினைத் தள்ளுபடி செய்தார். இத்தீர்ப்பினை எதிர்த்து 1905 ஆம் ஆண்டு சென்னை உயர் நீதிமன்றத்துக்கு மேன்முறையீடு செய்தனர். அம்முறையீட்டை விசாரணை செய்த நீதியரசர்கள் மார்கழி மாதம் 2ந்திகதி தீர்ப்பை வழங்கும் பொழுது, பொலிஸ் நீதி மன்றத்தின் தீர்ப்பு சரியானதென்பதை ஊர்ஜிம் செய்தனர்.[32] இதனை அடுத்து நாடெங்கிலும் **திருமுறைமகோற்சவம்** என்னும் நிகழ்ச்சி ஆலயங்களிலும் மடாலயங் களிலும் பொது விடயங்களிலும் பிள்ளையவர்களின் தலைமையில் நடைபெற்றது.

இவ்விடத்தில் சி.தில்லைநாதன் அவர்களின் கருத்தொன்றினை நோக்குதல் பொருத்த முடையது.

> மருட்பா - மறுப்பு என்ற நூலும் கதிரைவேற் பிள்ளைக்குப் பெரும் பிரசித்தியைக் கொண்டு வந்ததாகும். வடலூர் இராமலிங்கபிள் ளையை ஐந்தாம் குரவர் என்றும் அவரது பாடல்கள் அருட்பாக்கள் என்றும்....சிலர் போற்றியதை ஆறுமுகநாவலர் கண்டித்தார். அதனால் பல சர்ச்சைகள் நிகழ்ந்தன. கதிரைவேற்பிள்ளையின் நூல் நாவலர் கருத்தை நிலை நாட்டியது. வழிபாட்டுக்குரியவராகி விட்ட பழைய சமய குரவருக்குச் சமமாக நிகழ்காலப் பிரசித்திகளையும் 'பெருமைகளையும் ஏற்கும் சமகாலத்தவரைக் கொண்டாடும் செயலைச் சமயத்தின் பழைய வழக்கங்களையும் பெருமைகளையும் பேண விழைவோர் கண்டிப்பது புரிந்து கொள்ளத்தக்கதே. 'ஆனால் தாம் விரும்புவோரைத் தெய்வீக நிலைக்கு உயர்த்தும் எத்தனத்தில் அந்தரப்படுவோரின் மன உளைச்சல்களும் சினமும் பரிதாபத்

32. கலியாணசுந்தர முதலியார், வி.,நா.கதிரைவேற்பிள்ளை அவர்கள் சரித்திரம், புரோகிரஸ்ஸிவ் அச்சுக்கூடம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திற்குரியவையாம் இறைவனுக்கு நெருங்கியவர் என்று ஒருவரைக் கொண்டாட அவசரப்படுகின்றவர்கள் உண்மையில் அவருடன் சேர்ந்தவர்கள் என்ற வகையில் தமக்குப் பெருமை சேர்ப்பதிலேயே அதிக அங்கலாய்ப்பு உடையவர்களாகவும் இருக்கலாம். அது எவ்வாறாயினும், எதிர்ப்புக்களைக் கண்டு அஞ்சியோ பிரசித்தி பெறும் ஆவலிலோ தன்னிலைப் பாட்டிலிருந்து சற்றும் விலகிய வரல்லர் சதாவதாணி கதிரைவேற்பிள்ளை [33].

கதிரைவேற்பிள்ளையின் வாழ்வையும் பணியையும் நோக்கும் பொழுது "கதிரைவேற்பிள்ளையின் ஆன்மீக லட்சிய புருஷர் ஆறுமுக நாவலர் [34] என்ற பண்டிதமணி சி.க.வின் கூற்று இங்கு மனங் கொள்ளத் தக்கது. நாவலரவர்களை இலட்சிய புஷராகக் கொண்டு, நாவலரவர்கள் போல், சமயத்தையும் தமிழ் மொழியையும் இணைத்து, அவற்றின் வளர்ச்சிக்குத் தன்னை அர்ப்பணித்து, மொழி, சமயப் பற்றுக்களுடன் பன்மொழிப்புலமை, அயரா உழைப்பு முதலான புலமைத்துவக் கூறுகளைத் தம்முள் கொண்டு, ஈழ நாட்டையும் தமிழகத்தையும் களமாகக் கொண்டு பிரசங்கம் செய்தல், புராணபடனம் செய்தல் வாதங்களில் ஈடுபடுதல், நூல்களை எழுதுதல், நூல்களுக்கு உரை செய்தல், நூல்களைப் பதிப்பித்தல், அகராதியைத் தொகுத்தல், திருமுறைகளின் புனிதத்துவத்தைப் பேணல், நிறுவுதல் முதலான பணிகளால் நாவலர் மரபினை மீண்டும் ஆழப்பதிப்பில் பிள்ளையவர்கள் வெற்றி கண்டார்.

## அருணாசல உபாத்தியார்

இருபதாம் நூற்றாண்டின் முதற்கால் நூற்றாண்டிலும் நாவலரவர்களின் கல்விப் பணியினை ஈழநாட்டில் சிறப்பான வகையில் முன்னெடுத்துச் சென்றவர்களுள் காரைதீவு அருணாசல உபாத்தியார் குறிப்பிடத்தக்கவர். அவர் ஆரம்ப, உயர்நிலைக் கல்வியை கிறிஸ்தவ சூழ்நிலையில் பயின்றவர். இடைநிலைக் கல்வியை வண்ணை சைவப் பிரகாச வித்தியாசாலையில் பயின்றவர். அவ்வகையில் நாவலர் இலட்சியங்களை மனங்கொண்டிருந்தவர். கிறிஸ்தவ சூழ்நிலையில் உயர்கல்வி பயின்றமையும் அவர்களின் வலோற்காரமான சமயமாற்றமும் அருணாசல உபாத்தியாரை நாவலர் கல்விப் பணியினை முன்னெடுத்துச் செல்ல வேண்டிய அவசியத்தையும் தோற்றுவித்தது. உபாத்தியாரின் கல்வி ஊழியத்தினை மதிப்பீடு செய்த தம்பு கைலாசபிள்ளை அவர்கள்,

33. தில்லைநாதன்.சி.,இலங்கைத் தமிழ் இலக்கியம், தேசிய கலை இலக்கியப்பேரவை வெளியீடு, 1997,ப.50

34. கலைக்கண், 10 பங்குனி 1974

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''யர்ழ்ப்பாணத்திலுள்ள சைவாசிரிய கலாசாலைக்கு முதற்காரணம் சு.அருணாசலமே. பரோபகாரிக ளென்று யாழ்ப்பாணத்திற் பிறந்தவர்களுள் இரண்டாவதாக நான் மதித்திருப்பது இவரையே. ஆசிரிய கலாசாலைக் காகத் தங்காலத்தையும் பொருளையும் செலவு செய்து இவர் செய்த முயற்சிகள் பல'' [35] எனக் குறிப்பிடுவது இங்கு அவதானிக்கத்தக்கது.

உபாத்தியாரின் கல்விப் பணிகளை பின்வருமாறு வகுத்து நோக்கலாம்.

(அ) ஆரம்ப சைவப் பாடசாலைகளை அமைத்தல்

(ஆ) ஊர்கள் தோறும் சைவப் பாடசாலைகளை அமைக்கத் தூண்டுதல்

(இ) சைவாச்சிரியர் பயிற்சிக் கல்லூரியை நிறுவுதல்.

(அ) காரைதீவில் சங்கரப்பிள்ளைக்கும் நாகமுத்து அம்மையாருக்கும் இரத்தாட்சி வருடம் ஐப்பசி மாதம் 15 ம் நாள் (31.10.1864) பிறந்த அருணாசலம் அவர்கள், தமது ஆரம்பக் கல்வியை காரைதீவு அமெரிக்கன் மிஷன் பாடசாலையில் பயின்றார். இடைநிலைக் கல்வியை யாழ்ப்பாணம் வண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலையில் பயின்றார். ஆசிரியர் தராதரப்பத்திரம் பெறும் பொருட்டு, தெல்லிப்பளை அமெரிக்க மிஷன் ஆசிரியர் கல்விப் போதனாசாலையில் சேர்ந்து பயின்றார். அங்கு பயில்பவர்கள் கட்டாய மதமாற்றத்துக்கு உட்படுத்தப்பட்டனர். அருணாசலம் அவர்களுடன் இவரது ஊரைச்சேர்ந்த S. அம்பலவாணர், ஐ.சுப்பிரமணியம், மு.குமாரவேலு முதலானோர்களும் பயின்று வந்தனர். இவர்களுள் எஸ்.அம்பலவாணர் என்பவர் ஞானஸ்நானம் பெற்று அல்லின் ஏபிரகாம் என்னும் பெயரைப் பெற்றனர். இவரே பிற்காலத்தில் கலைமாணிபட்டம் பெற்று வட்டுக்கோட்டைக் கல்லூரியில் கணிதப் பேராசிரியராகவும் வானசாத்திர விற்பன்ராகவும் விளங்கியவர். சுப்பிரமணியம் கிறிஸ்த போதகராக விளங்கியவர். ஆனால் மு.குமாரவேலும் அருணாசலம் அவர்களும் கிறிஸ்தவ சமய மாற்றத்துக்கு உட்படவில்லை. பரீட்சை முடிவில் இரவோடு இரவாகப் பெட்டியைக் காவிக் கொண்டு ஊர் திரும்பியவர்கள். ஊர் திரும்பிய அருணாசலம் அவர்கள் தாம் கிறிஸ்தவ சமய சூழ்நிலையில் கல்வி பயின்றதினால் ஏற்பட்ட விளைவு களை மறுமதிப்பீடு செய்ய விழைந்தார். மிஷனரிப் பாடசாலைகளில் சைவப்பாரம்பரியத்துக்கு அமைய கல்வி பயில முடியாத நிலையும், கிறிஸ்தவ சமயிகளின் ஊதியத்தின் பயனாக சமய மாற்றத்தை வேண்டி நிற்பதையும் அதுவே அவர்களின் பெருநோக்கமாகவும் அமைந்திருப் பதையும் நன்குணர்ந்து கொண்ட அருணாசலம் அவர்கள் ''ஊர்கள் தோறும் சைவப்பாடசாலைகளை அமைத்தல்'' என்னும் நாவலரவர்களின் இலட்சி யத்தை மனங்கொண்டு செயற்பட முனைந்தார்.

35. கணபதிப்பிள்ளைஐயர், சைவாசிரியர்களைத் தோற்றுவித்த திரு.ச அருணாச்சலம் அவர்கள், காரைநகர் சைவமகாசபை வெளியீடு, முகவுரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1885 ஆம் ஆண்டு நாவலரவர்களைப் போல் தனது ஊரில் உள்ள பிள்ளைகளை அழைத்து வந்து தமது வீட்டில் திண்ணைப் பள்ளியொன் றினை நடத்தி வந்தார். பின் குட்டிப்புலத்தில் சுப்பிரமணியம் என்னும் செல்வப்பிரபுவின் காணியிலொன்றை வாங்கி, அங்கு ஒரு பாடசாலையை நிறுவி அதற்கு **சுப்பிரமணிய வித்தியாசாலை** என்னும் நாமம் சூட்டி அதனை நடத்தி வந்தார். அப்பாடசாலையின் உபாத்தியாயர்களாக சி.தில்லையம்பலம், த.நாகமுத்துப்புலவர், ச.பஞ்சாட்சர ஐயர் ஆகியோ ருடன் அருணாசல உபாத்தியாயரும் கடமையாற்றினர். இப்பாடசாலை அருணாசல உபாத்தியாயரின் முகாமைத்துவத்தின் கீழ் மிஷனரிமார்களின் எதிர்ப்பின் மத்தியிலும் அரச அங்கிகாரத்துடன் நடைபெற்று வந்தது. அத்துடன் அமையாது **வியாவிலில்** கா.வேதக்குட்டி ஐயரின் உதவியோடு சைவபரிபாலன வித்தியாசாலை யொன்றினை நிறுவினார். அருணாசல உபாத்தியாயர் இப்பாடசாலையில் வேதனம் பெறாது சிலகாலம் கல்வி கற்பித்து வந்தமை குறிப்பிடத்தக்கதாகும். ''ஊர்கள் தோறும் சைவப் பாடசாலைகள் அமைத்தல்'' என்னும் நாவலரவர்களின் இலட்சியத்தை மனங்கொண்டு செயற்பட்ட உபாத்தியாரால் ஒரு பாடசாலையிலும் நிரந்தரமாகத் தொழில் புரிய முடியவில்லை.

இந்நிலையில் உபாத்தியாயர் யாழ்ப்பாணக் குடாநாடு எங்கிலும் ஊர்கள் தோறும் சைவப்பாடசாலைகளை அமைத்தல் என்னும் நாவலர வர்கள் நோக்கினைப் பரப்புவதிலும் அதற்குச் செயல் வடிவம் கொடுப் பதிலும் முனைப்புடன் செயற்பட்டார். உபாத்தியாயர் பெரும் நிலச் சுவாந்தாரும் அல்லர். செல்வப்பிரபுவும் அல்லர், சாதாரண பொது மகன். ஆனால்''சைவத்தையும் அதன் கருவியாகிய கல்வியையும் வளர்த்தல் வேண்டும்'' என்னும் உபாத்தியாயரின் வைரம் வாய்ந்த இலட்சிய வேட்கை, உறுதி, நம்பிக்கை போன்றன மேற்காட்டியவற்றுக்கு மேலாக நின்று பல சாதனைகளை புரியுவைத்தன. அவரது இயல்பையும் உறுதியையும் இலட்சிய வேட்கையையும் கூற வந்த சி.கணபதிப்பிள்ளை ஐயர்.

> ''அக்காலத்தில் ஒரு பெரியார் மற்றைய இடங்களுக்குச் செல்ல வேண்டுமென்றால் மாட்டு வண்டி அல்லது குதிரை வண்டியிற் குறித்த நேரங்களிற் செல்வர். இப்பெரியாரோ பகலென்றும் இரவென்றும் பாராது, பனியென்றும் வெயிலென்றும் பாராது, மழையென்றும் குளிரென்றும் பாராது தனது இருபாதங்களையே வாகனமாகக் கொண்டு இருபது முப்பது மைல் தூரமான இடங்களிலும் கரடுமுரடான பாதைகளிலும் தனது பாதங்களுக்குப் பாதுகாப்பாக எவ்வித பாதரட்சையும் அணியாது, கைகளுக்குப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதுகாப்பாகப் பிரம்பு முதலியன பாவியாது கொப்பிகளும் புத்தகங்களும் துண்டுப் பிரசுரங்களும், பென்சிலும் கையிற் கொண்டு நாலுமுழ வேட்டியும் ஆறணியன் சால்வையை மூலையாக மடித்துத் போட்டுச் செல்வர்.

இவ்வாறு பல கிராமங்களுக்கும் பட்டணங்களுக்குஞ் சென்று அங்குள்ள சைவாபிமானிகளையுஞ் செல்வந்தர்களையும் கண்டு தாம் எடுத்தாண்ட விடயங்களை விளக்குவார். ஒரு முறை சென்று தம் எண்ணம் நிறைவேறாவிடின் திரும்பத் திரும்பச் செல்வார். சென்று தம் எண்ணத்தை முடித்து விடுவார். சிலகாலம் தாம் காணச் சென்றவர் இல்லாவிட்டால் பின் வந்து சந்திப்போமென் றெண்ணியவராய் வேறொருவரைக் காணத் தம் நடைகுதிரை யாகிய அஞ்சலோட்டத்தைத் தொடங்குவார். இவ்வாறு திரிந்து திரிந்து பல கிராமங்களிற் சைவப்பாடசாலைகள் ஆரம்பிக்கச் செய்தார்''[36]

எனக் குறிப்பிடுவது இங்கு மனங்கொள்ளத்தக்கதாகும்.

(ஆ) கரம்பன் சண்முகநாத வித்தியாசாலை, மட்டுவில் கமலாசனி வித்தியாசாலை, கரணவாய் மாணிக்க வித்தியாசாலை, அல்வாய் - சைவப்பிரகாச வித்தியாசாலை, துன்னாலை காகிநாதர் வித்தியாசாலை, உடுப்பிட்டி சைவப்பிரகாச வித்தியாசாலை, வல்வை சிவகுரு வித்தியா சாலை, அனலைதீவு சதாசிவ வித்தியாசாலை முதலான பாடசாலைகள் உபாத்தியாயரின் ஊழியத்தின் பயனாகத் தோன்றியவைகளே என்பர்.

வட்டுக் கோட்டைக் கல்லூரிக்குச் சென்று மதமாற்றம் பெற்று ஆங்கிலக் கல்வி பெறுவதை விரும்பாத உபாத்தியாயரவர்கள் தமது கிராமத்து மக்கள் ஆங்கிலக் கல்வி பெறும் பொருட்டுத் தமது ஊரில் சைவாங்கில வித்தியாசாலையை நிறுவ வேண்டியதின் அவசியத்தை ஊர்ப் பொதுமக்களுக்கும் செல்வந்தர்களுக்கும் எடுத்துரைத்தார். அத்தோடு அமையாது அவ்வூர்ப் பிரபுக்களாகிய க. இலட்சுமணபிள்ளை, சி.கந்தப்பு, கோவிந்தபிள்ளை போன்றோருக்கு இப்பாடசாலையை அமைப்பதில் ஊக்கமளித்தார். இதன் பயனாக 1889 ஆம் ஆண்டு **திருஞானசம்பந்தர் மூர்த்தி நாயனார் சைவாங்கில வித்தியாசாலை** என்னும் பெயரில் ஆங்கில பாடசாலை யொன்று நிறுவப்பட்டது. இதன் முதல் தலைமையாசிரியராக நல்லூர் - சயம்பு உபாத்தியார் நியமனம் பெற்றார்.[37] இப்பாடசாலை

36. மேலதுநூல் ப.16-17

37. நடராசா F.X.C, 1971, காரைநகர் மான்மியம், இரஞ்சனா பதிப்பகம்; கொழும்பு.ப.67.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிற்காலத்தில் காரைநகர் இந்துக் கல்லூரியாக உயர்நிலை பெற்றது. நாவலரவர்களும் யாழ்ப்பாணத்து கிறிஸ்தவ ஆங்கிலக் கல்லூரிகளுக்குப் பதிலாக சைவப்பிள்ளைகள் சைவச் சூழ்நிலையில் ஆங்கிலக்கல்வி பயிலும் வகையில் வண்ணார் பண்ணையில் சைவாங்கில வித்தியாசாலையை நிறுவியமை இங்கு நினைவு கூரத்தக்கதாகும்.

(இ) நல்லொழுக்கமும் விவேகமும் கல்வியில் இடையறாத முயற்சியும் ஆரோக்கியமான உபாத்தியாயர்களை உருவாக்க வேண்டு மென்பதில் மிகுந்த ஆர்வம் உடையவராக நாவலரவர்கள் விளங்கினார். இதற்காகப்பல விஞ்ஞானங்களையும் வெளியிட்டு வந்தார். ஆயினும் நாவலரவர்கள் காலத்தில் நாவலரவர்களால் இவ்விலட்சியத்தை நிறைவேற்ற முடியவில்லை. 1880களில் உபாத்தியாயர் தாம் அமெரிக்க மிஷனைச் சேர்ந்த ஆசிரியர் போதனா கல்லூரியில் பெற்ற அநுபவத்தின் வாயிலாகச் சைவர்களுக்கென தனியானதோர் சைவாசிரிய பயிற்சிக் கல்லூரி இருத்தல் வேண்டும் என்பதன் அவசியத்தை நன்கு உணர்ந்து கொண்டார். இதுவே உபாத்தியாரின் வைரம் பாய்ந்த இலட்சிய வேட்கையாகவும் இருந்தது.

முதன் முதலில் காரைதீவில் ஒரு சைவாசிரிய கலாசாலை உருவாக்கினர். மாணவர்களுக்கு உணவும் உறையுளும் கொடுத்துத்தக்க உபாத்தியார்களைக் கொண்டு அதனை நடத்தினார். அதற்கு அரச அங்கீகாரத்தையும் வேண்டி நின்றார். அரசின் அங்கீகாரம் கிடைக்கவில்லை.. மிஷனரிமார்களின் எதிர்ப்பும் இதற்கோர் பிறிதோர் காரணம் எனலாம்.

எதற்கும் சளைக்காத உபாத்தியாயர் அவர்கள் ஆசிரியர் போதனா பாடசாலையைக் கீரிமலைக்கு மாற்றினார். கீரிமலையில் ஏரம்பையர் குடியிருந்த மடம் சைவாசிரியர் போதனாபாடசாலையாக 1914 ஆண்டில் மாற்றம் பெற்றது. இப்போதனாசாலையை இரண்டு ஆண்டுகள் நடத்தினார். இப்போதனா பாடசாலை, அரச கல்வி விதிமுறைகளுக்கு அமைவாக நடைபெறவில்லை என்ற காரணத்தினால் இப்போதனாசாலையும் அரச அங்கீகாரத்தைப் பெறத்தவறியது.[38] சிறாப்பர் க.நமச்சிவாயபிள்ளை, பாலசிங்கம் புறொக்கடர் சு. கதிரேசு முதலானோர்கள் இப்போதனாசாலை நடத்துவதில் உதவி புரிந்தோர்களில் குறிப்பிடத்தக்கவர்கள். உபாத்தியாயரின் இலட்சியம் உழைப்பு என்பன தோல்விக்கு மேல் தோல்வி கண்ட

38. கணபதிப்பிள்ளை ஐயர், சி, 1971, சைவாசிரியர்களைத் தோற்றுவித்த திரு.ச. அருணாசலம் அவர்கள், ப.19.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழுதும் மனம் சோர்வடையவில்லை. உயிர் உள்ளவரை தனது இலட்சியத்தைக் கைவிடாது மேலும் மேலும் அதன் பயனை அடைவதில் தீவிரமாக உழைத்தார். ஆசிரியர் போதனா பாடசாலையை உபாத்தியாயர் மீண்டும் வண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலையில் ஆரம்பித்து நடத்தி வந்தார். அப்பாடசாலையைப் பார்வையிட்ட வித்தியாதிகாரி திரு. இவான்ஸ் என்பார், இப்பாடசாலைக்குப் போதிய இடவசதிகள் இல்லை என்பதைக் காரணம் காட்டி அரச அங்கீகாரத்தை மறுத்தார், உபாத்தியா யரின் தனிமனித முயற்சிகள் யாவும் நிறைவேறாத நிலையில் மனஞ் சோர்வுறாது போதனாசாலையை உருவாக்குவதில் புதிய அணுகுமுறை களைத் தேட முயன்றார். இக்காலகட்டத்தில் தான் சட்டவல்லுனர் சு.இராசரத்தினம் அவர்களின் தொடர்பு உபாத்தியாருக்குக் கிட்டியது.

உபாத்தியாயருக்கும் சு. இராசரத்தினம் அவர்களுக்கும் இடையில் ஏற்பட்ட தொடர்புகளையும் சு.இ.யின் இயல்புகளையும் இரு ஆசிரியர்கள் பின்வருமாறு உரைப்பது இங்கு மனங்கொள்ளப்பட வேண்டிய தொன்றாகும். சி.கணபதி ஐயர்,[39]

> இக்காலத்திற்றான் ஓர் ஆசானுபாகுவான இளைஞன் கீரிமலைக்கு அடிக்கடி நீராட வருவதுண்டு. சட்டப்படிப்பு மேற்கொண்ட காலம். மூன்று சில்லுகளையுடைய மோட்டோர் பைசிக்கிள், அதில் குளோஸ் கோற்றும் மடித்து உத்தரியமாய்ப்போட்ட சேலம் பட்டுச் சால்வையும் அணிந்த தோற்றம், கம்பீரமான மீசையுங் கூட. இந்த உருவமே பிற்காலத்தில் இந்து போட் சு. இராசரத்தினம் என்பது. இவருக்கும் திரு. அருணாசலத்திற்கும் கீரிமலையில் பரிச்சயம் ஏற்பட்டது. திரு.அருணாசலம் அவர்கள் வித்தியா பகுதியாருக்கு எழுதும் கடிதங்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கத் திரு. இராசரத்தினம் அவர்களின் உதவியைப் பெற்று வந்தார். இதனால் இருவருக்கும் நெருங்கிய பரிச்சயம் ஏற்பட்டது. திரு.அருணாசலம் அவர்களின் சேர்க்கையே திரு.இராசரத்தினத்தின் சேவைக்கு அத்திவாரமானது.

பண்டிதமனி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் 'அருணாசல உபாத்தியாயரின் வாரிசு' என்னும் மகுடத்தின் கீழ்,

39. கணபதிப்பிள்ளை,சி, ''யாழ்ப்பாணத்தின் மூன்று சமயக் கண்கள்'' சைவாசிரியர்களைத் தோற்றுவித்த திரு.ச. அருணாசலம் அவர்கள்,ப.20

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு அருணாசலம் வித்தியா பகுதியினரோடு தொடர்புபடுங் காலங்களில் தமிழை இங்கிலிசுப் படுத்தியும் இங்கிலிசைத் தமிழ்ப்படுத்தியும் உபகரிக்கும் வழக்கமுடையவர் ஓரிளங்கனவான். அந்தக் கனவானே அந்த மனிதர். சு, இராசரத்தினமே அந்தக்கனவான் ஆன மனிதர். அவர் நல்ல அப்புக்காத்து.

எவருக்கும் அஞ்சாத செல்லப்பிள்ளை, அவர் வைத்திருந்த பவுன்டன் பேனா மிகப் பெரியது; விலையுயர்ந்தது. அந்தப் பேனா திரு. அருணாசலம் அவர்களின் தூண்டுதலால், கல்விச் சட்ட இரகசியங்களிலும் சூழ்ச்சிகளிலும் அடிக்கடி தோய்ந்து முழுகித் திளைத்திருந்தது. எந்தச் சந்தர்ப்பத்தில் எது செய்ய வேண்டுமென்பதை அந்தப் பேனா நன்கு அறியும்''[40]

எனச் சு.இராசரத்தினம் அவர்களின் நுண்மாண்நுழை புலத்தினை வெளிப்படுத்துவார்.

உபாத்தியாயர் சு. இராசரத்தினம் அவர்களுடன் கொண்ட தொடர்பால் தமிழ் அரசியல்வாதிகளான சேர். வைத்திலிங்கம் துரைச்சுவாமி, சேர்.பொன்.இராமநாதன், சேர்.பொன். அருணாசலம், சேர். அம்பலவாணர் கனகசபை முதலானோர்களைச் சந்திக்கும் வாய்ப்பினைப் பெற்றார். இதனால் சைவர்களின் கல்விக்குரிய அவசிய தேவைகளை அவர்களிடம் முறையிட முடிந்தது. சட்ட நிரூபணசபை உறுப்பினர்களினதும் உபாத்தியாயரதும் தொடர்ச்சியான வற்புறுத்தல்கள் மூலம் அரசினர் ஒரு கல்விக் குழுவொன்றினை அனுப்பி உபாத்தியாயரின் முறைப்பாட்டினை ஆராய்ந்தனர். உபாத்தியார் முதல் பலர் அக்குழுவின் முன் சாட்சியம் அளித்தனர். இக்குழுவினரின் பரிந்துரைக்கமைய 1916 ஆம் ஆண்டு கோப்பாய் அரசினர் போதனசாலை, ஐக்கிய போதனாசிரியர் கலாசாலையாக மாற்றம் பெற்று, சைவாசிரியர்களும் பயிலும் வாய்ப்பு அளிக்கப் பெற்றது.[41]

1916 ஆம் ஆண்டு முதல் உபாத்தியாயர் அப்போதனாசிரியர் கல்லூரியின் முகாமையாளராக அரசினால் நியமிக்கப் பெற்றார். பெருந்தன்மையும், பரோபகாரமும், உழைப்பும், விடா முயற்சியும், நம்பிக்கையும், பணிவும், பண்பும் கொண்ட உபாத்தியாயரின் வாழ்வில் இந்நாள் மகத்தான பொன்நாள். அது சைவமக்களுக்கும் ஆயிற்று. உபாத்தியாயரின் விடாமுயற்சியையும் அலைச்சலையும் தம்முள்ளே எள்ளி நகையாடியோர்கள். அவர் முன் வெட்கித் தலை குனிந்து நின்றனர்.

40. மேலது நூல், அணிந்துரை. ப்க். xxii - xxiii

41. மேலது நூல் ப.23

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போதனாசிரியர் கலாசாலையின் அதிபராக இளையதம்பியும் திரு.முருகேசு,புலவர், வ.குமாரசுவாமி முதலானோர்கள் விரிவுரையாள ராகவும் கடமையாற்றினர். அங்கு பயிலும் மாணவர்கட்கு அரசாங்கம் அளிக்கும் மானியம் போதாமையால் மாணவர்க்கான விடுதியினை அ.நாகநாதமுதலியார் மூலமும், உணவை வள்ளல் வை. ஆறுமுகம் மூலமும் பெற்று வழங்கினார். சுன்னாகம் குமாரசுவாமிப்புலவர், மானிப்பாய் இந்துக்கல்லூரி அதிபர் பண்டிதர் மயில்வாகனம், இந்து வாலிப சங்கத்தாபகர் எம். எஸ்.இளையதம்பி முதலான கல்விமான்கள் அவ்வப போது வகுப்புகள் நடத்தினர்.[42] 1908 ஆம் ஆண்டு இக்கலாசாலையில் இருந்து ஏழு மாணவர்கள் வெளியேறினார்கள். 1920 ஆம் ஆண்டு வரை யும் சிறப்பாக நடைபெற்ற இச்சைவப் போதனாசிரியர் கலாசாலை, உபாத்தி யாயரின் மறைவோடு மெல்ல மெல்லத் தளர்வுற்று 1923 ஆம் ஆண்டில் அதன் தளர்ச்சியின் எல்லையை அடைந்தது. அரசினர் அதனை மூடினர்.

பிள்ளையவர்கள் நாவலரவர்களின் சிந்தனைகளுக்கேற்ப கீரிமலையில் ஒரு சைவாதீனத்தை அமைத்துப் பிள்ளைகளைப் பயிற்று வித்து சைவப் பிரசாரர்களாக அவர்களை நியோகிக்க நினைத்திருந்தும் காலன் உபாத்தியாயரை விரைந்து அழைத்தமை சைவமக்கள் செய்த தவம் அவ்வளவு ஆயிற்று. ஆயினும், ''1918 ஆம் ஆண்டு தொடக்கம் 1922 ஆம் ஆண்டு வரை திருநீறு பூசிக்கொண்டு தமிழ் உபாத்தியாயரென்று வந்தவர்கள் அனைவரும் காரைதீவு அருணாசலம் என்ற மகான் நிழலில் வளர்ந்த அநாதர்களே யாவர்''[43] என்ற கூற்றை யாரும் மறுப்பதற்கில்லை.

உபாத்தியாயரின் முதன் மாணாக்கராகிய புங்குடுதீவு இ. சதாசிவம்பிள்ளை தமது ஆசிரியரின் பணியினைப் பின்வருமாறு நினைவு கூர்வது இங்கு நோக்கத்தக்கது.[44]

''பொதுநலத் தொண்டு நாவலர்ப் பின்னர்ப்
புரிபவ னாரெனிற் கரைப்
பதியினன் அருணா சலமலா திலையெனப்
பலமுற நல்லைமா நகரின்
அதிபன்கை லாயபிள்ளையாய்ந் துணர்ந்தே
யறைந்தவகை கேட்டன மிதன்மேற்
துதிபெறு மவன்சீர் சொல்லிட வொன்றும்
தோன்றிடவில்லை யெம் மகத்தே''

---

42. மேலது நூல், ப-ன். 23-33 43. மேலது நூல், அநுபந்தம். ப. 39
44. மேலது நூல் வாழ்த்துரை ப. xxix

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இராமநாதன்,பொன்.(1851-19)** இவர் பொன்னம்பல முதலியாருக்கும் செல்லாட்சி அம்மையாருக்கும் புத்திரராக 1851 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 16 ஆந் திகதி பிறந்தார். தனது ஆரம்பக் கல்வியை இராணிக் கலைக் கழகத்திலும், உயர்கல்வியை, சென்னை இராசதானிக் கல்லூரியிலும் பயின்றார். பின்னர் சட்ட அறிஞர் சேர். றிச்சாட் மோகன் அவர்களிடம் (Sir Richard Mohan) சட்டம் பயின்று சட்டவல்லுனர் ஆனார்.[45]

பொன், இராமநாதன் அவர்கள் தமது இருபத்தொன்பதாவது வயதில் அரசியலில் புகுந்தார். 1879 ஆம் ஆண்டு வைகாசி மாதம் 4 ஆம் திகதி சேர். முத்துக்குமாரசுவாமி முதலியார் காலமானதைத் தொடர்ந்து, 1879 ஆம் ஆண்டு ஆவணி மாதம் ஓர் இடைத்தேர்தல் நடைபெற்றது. இத்தேர்தலில் பொன். இராமநாதனும் கிறிஸ்தோபர் பிறிற்றோவும் (Christopher Brito) போட்டியிட்டனர். இவர்கள் இருவரும் நன்னித்தம்பி முதலியாரின் புத்திரிகளை மணமுடித்தவகையில் இருவரும் சகலர், சகோதரர்.

பொன். இராமநாதன் அவர்கள் கொழும்பில் பிறந்தவர். வாழ்ந்தவர் சென்னையில் படித்தவர், சட்டத்தரணி, அவர் யாழ்ப்பாண மக்களுக்கோ நாவலர் அவர்களுக்கோ நன்கு தெரிந்தவர் என்பர். பிறிற்றோ கொழும்பில் கல்வி பயின்றவர் அல்லர். பட்டதாரி, சட்டத்தரணி, உயர் அரசாங்க அதிகாரியாக இருந்தவர். நாடறிந்தவர். யாழ்ப்பாணம் அவரை நன்கறிந்து இருந்தது.[46] நாவலர் அவர்களின் நண்பர். ஆயினும் நாவலர் அவர்களும் அவரது இயக்கமும் பொன். இராமநாதன் இத்தேர்தலில் வெற்றிக்காக உழைத்தனர். தமிழ் மக்களைக், குறிப்பாகச் சைவ சமயிகளின் நோக்கங்களை நிறைவேற்றும் வகையில் ஒரு பிரதிநிதி சட்டநிரூபண சபையில் அமைவதையே இவ்வியக்கத்தினர் விரும்பினர். இதனால், குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் பாடசாலைகளிலும் பொன். இராமநாதன் வெற்றி பெற வேண்டி, பிரசார நடவடிக்கைகளை மேற் கொண்டனர். இறுதியில் ஆள்பதி நாயகம் சேர்.ஜேம்ஸ் ஆர் லோங்டன் (Sir James R.Longden) அவர்களுக்கு பொன். இராமநாதன் அவர்களையே தமிழர் பிரதிநிதியாகத் தெரிவு செய்யப்பட வேண்டுமென வேண்டினர். அதன் பொருட்டு, ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் முதல் நொத்தாரிசு சின்னத்தம்பி வரை இருபத்தொரு கனவான்கள் கையெழுத்திட்டு அனுப்பி வைத்தனர்.

---

45. Vythilingam .M. The Life of Sri Ponnambalam Ramanathan, Vol. 11 (1976) pp336-37,

46. தனஞ்சயராச சிங்கம், ச. நாவலர் பணிகள், நேஷனல் பிரிண்டர்ஸ், கண்டி (1969) பக். 39-44.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறே கிறிஸ்தோபர் பிறிற்றோவும் தமிழர் பிரதிநிதியாகத் தெரிவு செய்யப்பட வேண்டுமென பல கிறிஸ்துவப் பெருமக்கள் ஆள்பதி நாயகத்திடம் வேண்டிக் கொண்டனர். இறுதியில் தமிழர் பிரதிநிதியாக 1879 ஆம் ஆண்டு மார்கழி மாதம் பொன். இராமநாதன் அவர்கள் ஆள்பதியினால் தெரிவு செய்யப்பட்டார். பொன். இராமநாதனின் வெற்றியில் பெரு மகிழ்ச்சி கொண்ட நாவலர் அவர்கள், தனது வண்ணார் பண்ணை - சைவப் பிரகாச வித்தியாசாலையில் வரவேற்று உபசார நிகழ்ச்சி ஒன்று நடத்தி மகிழ்ந்ததோடு, பொன். இராமநாதன் பணிகள் சிறக்க வாழ்த்தும் தெரிவித்துக் கொண்டார்.

பொன்.இராமநாதனுக்கு நாவலர் அவர்களை முன் தெரிந்திருக்க வாய்ப்பில்லை என்று கூறிவிட முடியாது. பொன்.இராமநாதன் சென்னையில் கல்வி கற்ற காலத்தில், நாவலர் அவர்கள் அங்கே வித்தியானுபாலன யந்திரசாலை வைத்து பழம் பெரும் நூல்களைப் பிழையற வெளியிட்டு வந்தவர். சென்னையில் நடைபெறும் சமயம், இலக்கியம் சம்பந்தமான வாதப் பிரதி வாதங்களில் பங்கு பற்றியவர். அருட்பா-மருட்பா போராட்டத்தின் தலையாய பிரமுகர். இந்த வகையில் தமிழ் நாடெங்கணும் நாவலர் அவர்கள் பலருக்கும் தெரிந்திருந்த பெரும் மனிதனாக விளங்கினார். சி.வை. தாமோதரம் பிள்ளை அவர்களின் மேற்பார்வையின் கீழ், அங்கு கல்வி பயின்ற பொன்.இராமநாதனுக்கு அக்காலப் பகுதியில் நாவலர் அவர்களைத் தெரிந்திருக்க வாய்ப்பு இல்லை என்று கூற முடியாது. அவ்வாறு கூறின், அதனை ஒரு மருள் வாதம் எனலாம். அதே சமயம் நாவலர் அவர்களுக்கும் பொன்னம்பல முதலியாரின் மகன் இராமநாதனை அறியாதிருக்க வாய்ப்பிருக்கவில்லை எனக் கூறமுடியாது. பொன்னம்பல முதலியாருடன் சி.வை. தாமோதரம் பிள்ளை கொண்டிருந்த தொடர்பும், சி.வை. தாமோதரம் பிள்ளைக்கும் நாவலருக்கும் இடையிலிருந்த தொடர்பும், பொன்னம்பல முதலியாரின் சென்னைப்பட்டண பிரயாணம் ஒரு வகையில் நாவலர் அவர்களுக்கு பொன். இராமநாதனை முன் கூட்டியே தெரிந்திருக்க வாய்ப்பு இருந்திருக்கிறது எனக் கூறலாம். நாவலர் அவர்களைப் பற்றி, பொன்.இராமநாதன் அவரது பள்ளிப் பருவம் முதல், குறிப்பாகச் சேர். முத்துக்குமார சுவாமி முதலியார் வழி பிற்காலம் வரை உயர்வான பெருமதிப்பினை வைத்திருந்தார் என்பதன் மதிப்பீடாக[47]

---

47. கனகரத்தினம், இரா.வை. (பதி) சி. செல்லப்பாபிள்ளையின் யாழ்ப்பாண நல்லூர் ஆறுமுகநாவலர் அவர்களின் சரித்திர சுருக்கமும் அவர்கள் இயற்றியருளிய தனிப் பாமாலையும், கவிக்குயில் அச்சகம், சென்னை. 1996.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA JPL

1884 ஆம் ஆண்டு மாசி மாதம் 11 ஆம் திகதி அவர் சட்ட நிருபண சபையில் நாவலர் அவர்கள் பற்றி ஆற்றிய குறிப்புரையாகும். அது வருமாறு.

''சகிப்பிளமையானது. வெவ்வேறு காலங்களிலே வெவ்வேறு சூழ்நிலைகளிலே அவர்களிடையே (மிஷனரிமார்களிடையே) காணப் பட்டது. ஆனால், இன்றைய நாளிலே அது சிறப்பாக அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. 1879 இல் வட பகுதி இந்துக்களின் தலைமைசால் சீர்திருத்தவாதியின் மரணத்தின் பின்னர் தான் இந்நிலை''

மாட்சிமை தங்கிய தேசாதிபதி சேர். ஆதர் ஹமில்டன் கோடன்;

நீங்கள் யாரைப்பற்றிக் கூறுகின்றீர்கள்?

கௌரவ சேர். பொன். இராமநாதன்:

**இந்துக்களின் தலை சிறந்து விளங்கிய சீர்திருத்தவாதி ஆறுமுக நாவலர் பற்றி**

எனவே, பொன். இராமநாதனிடத்தில் இளமைக் காலம் முதல், பற்றற்ற சைவ ஊழியரான நாவலர் பெருமான் என்னும் ஞானியின் ஆத்மீக ஒளி அவரை உள்ளூர ஆட்கொண்டிருந்த தென்பதை மறுப்பதற்கில்லை. இதுவே அவரது சமூக, சமய, கல்விப் பணிகளுக்கெல்லாம் வித்திட்ட தெனலாம்.

செல்வ வளமிக்க பிரபுத்துவக் குடும்பத்தில் பிறந்த பொன். இராமநாதன் அவர்கள் சட்டமா அதிபராகவும் தலை சிறந்த அரசியல் வாதியாகவும் ஞானியாகவும் விளங்கியவர். அவர் தனது கௌரவத்தையும் செல்வ வளத்தையும் அதிகாரத்தையும் பயன்படுத்தித் தமிழ் மக்களினதும் சைவர்களினதும் சமயம் கல்வி. ஆத்மீகம் போன்ற துறைகள் வளர அயராது பாடுபட்டார். சைவப் பெண்பிள்ளைகளினதும் ஆண்பிள்ளைகளினதும் அவர்தம் கல்வியின் பொருட்டும் அவர்தம் பாரம்பரியங்களை அறிதற் பொருட்டும், மருதனா மடத்தில் இராமநாதன் மகளிர் கல்லூரி (1913) என்னும் பெயரில் ஒரு பெண்கள் பாடசாலையையும் திருநெல்வேலியில் பரமேஸ்வராக் கல்லூரி (1921) என்னும் பெயரில் ஆண் பிள்ளைகளுக்கு ஒரு பாடசாலையும் அமைத்தார்.

கற்றுவல்லோரைப் பயிற்றுவித்தலும் அவர்களுக்குப் பட்டமளித்து சமுதாயத்தில் அவர்களினதும் தமிழ்க் கல்வியினதும் தரத்தினை உயர்த்தல் வேண்டும் என்பதும் நாவலவரவர்களினது பேரார்வமாகும். அதனை மனங் கொண்டு பொன். இராமநாதன் அவர்கள் திருநெல்வேலியில் அமைந்த கல்லூரி வளாகத்தினுள்ளேயே தமிழாசிரிய பயிற்சிக் கலாசாலையையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டித பயிற்சிக் கல்லூரியையும் நடத்தி வந்தமை குறிப்பிடத்தக்கது காரைதீவு அருணாசல உபாத்தியார் பயிற்றப்பட்ட ஆசிரியர்களை உருவாக்க சைவாசிரிய பயிற்சிக் கல்லூரியை நிறுவதற்கு அயராது உழைத்தார். அவ்வுழைப்பில் தாம் பங்கு கொண்டிருந்தமையையும் அதன் அவசிய தேவையையும் நினைவிற் கொண்டே செயற்பட்டார் எனலாம்.

ஈழத்தில் பாடல் பெற்ற சைவாலயங்கள் உள்ளன. அவை புனருதாரணப் பணிக்குட்பட்டிருந்தன. அப்பணிகளை நிறைவேற்றி வைப்பதில் அவரும் அவரது குடும்பத்தினரும் ஆர்வம் காட்டி வந்தனர். ஆனாலும், தமிழ் நாட்டில் சிற்ப சாத்திர முறைகளுக்கும் ஆகம விதிகளுக்கும் அமைந்து கலையழகுடனும் பொலிவுடனும் என்றும் அழியாததாய், நிலைத்து நிற்கக் கூடியதாய், கருங்கல்லால் கட்டப்பட்டதாய் அமைந்த கலைக் கோயில்கள் பல உள்ளன. ஆனால் அத்தகைய கலையாம்சம் பொருந்திய கலைக்கூடக் கோயில்கள் ஈழநாட்டில் இருக்கவில்லை. அத்தகைய கலையம்சம் பொருந்திய கலைக்கூடக் கோயில்லொன்றினைப் படைத்து, அதனைத் தில்லைப் பொன்னம்பலத்தில் உள்ள பொன்னம்பல வாணேஸ்வரருக்குக் காணிக்கையாக்கும் வகையில் கட்டியெழுப்பப்பட்ட கலைப்படைப்பே கொழும்பு, கொட்டாஞ்சேனை பொன்னம்பல வாணேஸ்வரம் ஆகும். இங்கு நடைபெறும் கிரியைகள் ஆகம முறைக்குட்பட்டது. இதன் கட்டடக் கலைப்பாணி நாயக்கர் காலக் கலைப்பணியை நினைவூட்டினாலும் மதுரை நாயக்கர் கலைப்பணியின் கலை வடிவங்களை ஒத்து நிற்கின்றன. அந்த வகையில் இஃதொரு ஈழத்தில் எழுந்த பெரும் கலைக்கூடம். இதற்கு நிகரான கலைக்கூடமொன்று கட்டியெழுப்பப்படும் என்று குறிப்பிடுவதற்கு இல்லை. இஃது தில்லையில் கனகசபையில் வீற்றிருக்கும் பொன்னம்பல வாணேஸ்வரரின் நாமத்தையும் பொன். இராமநாதன் நாமத்தையும் குறியீடாக என்றும் உணர்த்தி நிற்கும் ஒப்பற்ற கலைப்படைப்பினைப் பிறிதொரு வகையாகக் கூறின் ஈழத்து மக்களுக்கு பொதுவாகவும், சைவ சமயிகளுக்குச் சிறப்பாகவும் அவர் விட்டுச் செல்லும் பெரும் நன்கொடையே இக்கலைக் கூடமாகும். நாவலரவர்களும் ஆலயங்கள் ஆகம முறைக்கமைந்து சிற்ப சாத்திர விதிகளுக்கேற்ப கருங்கல் கொண்டு கட்டும் ஆலயங்கள் மிகுந்த பயனை அளிக்க வல்லன என்பதைத் தனது விக்கியாபனங்கள் தோறும் ஆங்காங்கே வற்புறுத்தி வந்தமை நினைவு கூரத் தக்கது.

பொன். இராமநாதன், நாவலர் அவர்களைப் போல், சமய சீலராய், சைவ சமயப்பிரசாரகராய், தத்துவாதியாய், நூலாசிரியராய் சமய முயற்சிகளுக்கு ஊக்க மளிப்பவராய் விளங்கினார். கீழைத்தேச நாடுக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளுக்கும் இலண்டன், அமெரிக்கா போன்ற மேற்குலக நாடுகளுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டு சமயப்பிரசாரம் செய்து வந்தார். ஈழநாட்டிலும் ஈழநாட்டிற்கு வெளியிலும் சைவபரிபாலன சபைகள் நடத்தும் சைவ சித்தாந்த மாநாடுகளுக்குத்தலைமை தாங்கிச் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றிவந்துள்ளார். யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை, கொழும்பு சைவபரிபாலன சபை, யாழ்ப்பாணம் சைவ வித்தியாவிருத்திச் சங்கம் முதலான நிறுவனங்களின் காப்பாளராகவும் உறுப்பினராகவும் இருந்து அந்நிறுவனங்களின் முயற்சிகளுக்கு ஊக்கமும் ஒத்துழைப்பும் நல்கி வந்தனர். வாழ்க்கை வசதியில் குறைந்த பெற்றோரின் பிள்ளைகளையும் பாடசாலைகளில் சேர்த்துக் கற்பிக்கப்பட வேண்டும். என்ற நோக்கில் சைவவித்தியா விருத்திச் சங்கத்தை வழி நடத்தினர்.

தமிழ்மொழியினதும் தமிழ் வளர்ச்சியின் பொருட்டும், திருக்குறட் பாயிரம் - இராமநாத பாஷ்யம், ஔவை நாயகியின் ஆத்திசூடி - மந்திர விளக்கம் (1916) செந்தமிழ் இலக்கணம் (1929) பகவத் கீதை - தமிழ் மொழி பெயர்ப்பும் விருத்தியுரையும் ஆகிய நூல்களையும் மேற்கு நாடுகளிடையே காணப்படும் ஆத்மீக விசாரனை குறித்து ஆங்கிலத்தில் An Eastern Eyposition of the Gospel of Jesus According to St. John Being and Interpretation என்னும் நூலையும் எழுதியுள்ளார்.[48]

பொன். இராமநாதன் அவர்களிடம் காணப்பெற்ற செல்வப் பெருக்கு, கல்வி, அறிவு, அஞ்சாமை, அறநோக்கு, ஆன்மீக நாட்டம் என்பன தருமம் என்றொரு பொருள் உண்டென்பதை உள்ளத்தில் உணர்த்தி நின்றது. அவரின் இத்தகைய விழுமியங்கள் அனைத்திற்கும் இலட்சியப் புருஷராக செயலில் துறவியாய், மகாபுருடராய் விளங்கிய ஆறுமுக நாவலரே எனல் கூறின், அக்கூற்றில் உண்மை உண்டு எனலாம்.

**சுப்பிரமணியம் இராசரத்தினம்** அவர்கள் 1884 ஆம் ஆண்டு ஆடி மாதம் 4ஆம் திகதி பிறந்தவர். தாய் மாமன் வைமன் கதிரைவேற்பிள்ளை அவர்களின் அரவணைப்பில் வளர்ந்தவர். நாவலரவர்கள் போல் யாழ்ப்பாணத்தில் மத்திய கல்லூரியில் கல்வி பயின்றவர். பின்னர் கல்கத்தா பல்கலைக்கழகத்தில் உயர் கல்வி பயின்றவர். கொழும்பு சட்டக்கல்லூரியில் பயின்று சட்டத்தரணியானார். சட்டவல்லுனரான சு. இராசரத்தினம்

48. கனகரத்தினம், இரா.வை. (பதி) சி. செல்லையா பிள்ளையின் யாழ்ப்பாண நல்லூர் ஆறுமுகநாவலர் அவர்களின் சரித்திரச் சுருக்கமும் அவர்கள் இயற்றி யருளிய தனிப்பாமாலையும், கவிக்குயில் அச்சகம், சென்னை.1996,பக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் பல தவைவை யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில் பதில் நீதியரசராக கடமை புரிந்தவர். அத்தகைய நிரந்தர உயர்ந்த உத்தியோகம், வலிய வாய்த்த பொழுதும் அவற்றில் எல்லாம் விருப்பங்கொள்ளாது நாவலரவர்கள் போல் சைவத்தையும் தமிழ் மொழிக்கல்வியையும் வளர்க்க முற்பட்டவர்.

கு.கதிரைவேற்பிள்ளை நாவலரவர்களுக்கு நெருக்கமானவர். நாவலர் மரபை முன்னெடுத்துச் சென்றவர்களுளொருவர். அவ்வகையில் தாய்மாமன் பராமரிப்பில் வளர்ந்த சு.இராசரத்தினம் அவர்களுக்கும் நாவலரவர்களின் இலட்சிய வாழ்க்கை முறைகளை இளமை தொட்டு அறிந்திருக்கும் வாய்ப்புகள் மிகுதியாக இருந்தது. நாவலரவர்களின் வாழ்க்கையின் இலட்சியம் ''மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலக மெல்லாம்'' என்பதை அடிநாதமாகக் கொண்டிருந்தது.எம்.எஸ் இராசரத் தினம் சு. இராசரத்தினம், சேர்.பொன். இராமநாதன் முதலானோர்களால் 1923 மார்கழி மாதம் ஆரம்பிக்கப்பட்ட சைவவித்தியா விருத்திச் சங்கம் இந்நோக்கினையே இலட்சியமாகக் கொண்டிருந்தது. இந்நோக்கினை அடைவதற்கு நாவலர் மரபினை அவ்வாறே பின்பற்றியும் புதிய போக்கு களை வேண்டும் பொழுது கடைப்பிடித்தும் வந்தனர். 1923 ஆம் ஆண்டு முதல் 1970 ஆம் ஆண்டு வரை இத்தாபனத்தின் முழு நேர ஊழியனாகத் தன்னை அர்ப்பணித்து வாழ்ந்தவர் சு. இராசரத்தினம் அவர்கள்.

நாவலரவர்களுடைய இலட்சியத்தை மனங்கொண்டு நாவலர வர்கள் போல் சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் விருத்தியின் பொருட்டு பல விக்கியாபனங்களை வெளியிட்டு வந்தார். 1939 ஆம் ஆண்டு **சைவசமயிகளுக்கு ஒரு விஞ்ஞாபனம்** என்னும் ஒரு துண்டுப்பிரசுரத்தை நாவலரவர்களை அடியொற்றி வெளியிட்டார். அதில் வரும் பின்வரும் பகுதிகளை இங்கு நோக்கலாம்.[49]

> ''இந்தப் பாதிரிமார்கள் அடுத்துக் கெடுக்கின்ற சூழ்ச்சிகளை, முதன் முதல் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரவர்கள் அறிந்து, அவர்கள் ஒரே ஒருவராயிருந்தும் பாதிரிமார்களைப் பலதுறைகளில் எதிர்த்துப் போர் புரிந்து வந்தார்கள். யாழ்ப்பாணச் சமய நிலை என்னும் புத்தகத்தில் பாதிரிமார்களின் சூழ்ச்சிகளை நாவலரவர் கள் விரித்தெழுதியிருக்கிறார்கள். அந்தப் புத்தகத்திலிருந்து சில வசனங்களை இங்கே அனுமதித்துக் காட்டுகின்றோம்''

49. இராசரத்தினம், சு., சைவசமயிகளுக்கு ஒரு விஞ்ஞாபனம், கமலாசினி அச்சுக்கூடம், யாழ்ப்பாணம், 1939

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என ஆரம்பித்து சு.இ. அவர்கள் அந்நூலிலிருந்து ஐந்து முக்கிய விடயங்களை எடுத்துக் காட்டுவார். அவற்றுள் இரண்டினை இங்கு நோக்கலாம்.

''இத்தேசத்திலுள்ள வறியவர்கள் அநேகர் சைவசமயமே மெய்ச் சமயம் என்று அறிந்தும், அன்னம் வஸ்திரம் முதலியவை பெற்றுப் படிக்கும் பொருட்டும், உபாத்தியாயருத்தியோகம், பிரசங்கி உத்தியோகம் முதலிய உத்தியோகங்களைச் செய்து சம்பளம் வாங்கும் பொருட்டும், கவர்ண்மெண்டு உத்தியோகங்களின் நிமித்தம் துரைமாரிடத்தே சிபாரிசு செய்விக்கும் பொருட்டும், கிறிஸ்தவ சமயப் பெண்களுள்ளே சீதனமுடையவர்களையும் விவாகஞ் செய்யும் பொருட்டும் கிறிஸ்தவ சமயத்திலே பிரவேசிப்பாராயினார்கள்.''

''சைவசமயிகளே! பாதிரிமார்களும் அவர்களைச் சார்ந்த கிறிஸ்தவர்களுடன் செய்யுஞ் சிவதூஷணங்களைக் கேளாதொழியுங்கள். உங்கள் பிள்ளைகளை அவர்களுடைய பள்ளிக் கூடங்களிலே விபூதியழித்துவிட்டுப் போய்ச் சிவதூஷண புத்தகங்களை படித்தற்கு அனுப்பாதொழியுங்கள். ஊர்தோறும் பள்ளிக்கூடங்கள் தாபித்து, உங்களுக்குள்ளே கல்வியறிவொழுக் கங்களிற் சிறந்த மேலோர்களைக் கொண்டு அவைகளை நடத்துவியுங்கள். உங்கள் பிள்ளைகளை அப்பள்ளிக் கூடங்களிலேயே அனுப்பி லௌகீக நூல்களையும் நீதி நூல்களையும் சைவசமயங்களையும் படிப்பியுங்கள்.''

இதனைத் தொடர்ந்து அன்றைய கிறிஸ்தவ சூழ்நிலையையும் சை.வி.வி. சங்கத்தின் தோற்றத்திற்குரிய காரணத்தையும் குறிப்பிடுவார்.[50]

''இப்பொழுது கிறிஸ்தவர்கள் இங்கே நடத்துகின்ற வேலை மரத்தை வளர்க்கின்றோம் வளர்க்கின்றோம் என்று அதன் வேரிலே மெல்ல மெல்ல நீர் ஊற்றுகின்ற வேலை. தோளிலேயிருந்து காதிலே தாவுகிற வேலையென்று சொல்லலாம். ஒல்லாந்தர் போல 'மரங்களைத் தறிக்கின்றோம், இதோ முறிக்கின்றோம்,' என்று இவர்கள் சத்தம் போடுவதில்லை. சார்ந்திருந்து காரியம் பார்க்கின்றவர்கள் இவர்கள், எங்கள் குழந்தைகளைக் கொண்டே எங்கள் சமயத்துக்குக் கொள்ளி வைப்பிக்க முயலுகிறார்கள். குழந்தைகளின் இதயம் நிர்மலமானது. தூய வெண்டுகில்

50. மேலது விஞ்ஞாபனம்.,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்றது. சுத்தப்பளிங்கு, குழந்தையுள்ளத்திலே எது படிக்கின் றதோ அதுதானே சிலையில் எழுத்தாய் விடுகின்றது. தொட்டி லிற், பழக்கஞ் சுடுகாடு மட்டும் அல்லவா!

கிறிஸ்தவர்கள் தங்கள் பிள்ளைகளைத் தங்கள் வீட்டுக்குச் சமீபத்தில் சைவப் பள்ளிக்கூடம் இருந்தாலும், அங்கே அனுப்ப மாட்டார்கள். அது நீதி, ஆனால், அந்தக் கிறிஸ்தவர்கள் ''சைவப் பள்ளிக் கூடத்துக்கும் எங்கள் பள்ளிக் கூடத்துக்கும் என்ன வித்தியாசம்; படிப்பு எங்கும் ஒன்று தானே'' என்று சைவப் பெற் றார்களுக்குச் சொல்லிச் சைவப்பிள்ளைகளைக் கிறிஸ்தவ பள்ளிக் கூடங்களுக்கிழுக்கின்றார்கள். வசதிகிடைத்தால் உபாத்தி யாயர்களுக்கே ஞானஸ்நானம் பண்ண வைக்கின்ற இக் கிறிஸ்த வர்கள், தங்கள் பள்ளிக்கூடம் இனி அந்த ஊரிலே நிலைக்கா தென்று கண்டால், சைவ உபாத்தியாயர்களிலும் இரண்டொரு வரை நியமித்து, வேண்டுமானால் தேவாரங்களிலும் இடையி டையே சொல்லிக் கொடுத்து, கிடைத்தது அறுதி என்று கிறிஸ்தவ உபாத்தியாயர்கள் உபதேசிமார்கள் சிலருக்காவது வயிறு கழுவுதற்கு வழி தேடிக் கொள்ளுகிறார்கள், இந்தச் சூழ்நிலை களைச் சிந்தியாத பெற்றோர்கள். தங்கள் குழந்தைகளுக்கு உரிய பருவத்திலே அரிச்சந்திரனது உண்மையை. தருமரின் பொறு மையை, திருஞானசம்பந்தர் முதலிய உண்மை நாயன்மார்களின் மகிமையை, மங்கையர்க்கரசியார் காரைக்காலம்மையார் வளர்த்த சைவ உருக்கத்தை அறிவதற்குக் கிறிஸ்தவ பாடசாலை களிலே சந்தர்ப்பம் இல்லாமல் போகிறதை அறிகின்றார் களில்லை. இந்தக் குழந்தைகள் தங்கள் சீவியத்தை நடத்தவதற்கு முன்மாதிரியான பெரியோர்களின் சீவிய இலக்கை அறியாமல் சாத்திர நம்பிக்கையில்லாத நிரீச்சுரவாதிகளாய், யப்பான் பதுமைகள் மாதிரி உள்ளீடில்லாமல் வேழமுண்ட விளாங்கனி களாகி விடுகின்றார்கள். இப்பொழுது கிறிஸ்தவர்களின் பிரதான நோக்கம் ஒரு பிள்ளையைக் கிறிஸ்தவனாக்குவதன்று. அவனு டைய சொந்த சமயத்தை அவனறியாதபடி ஆக்குவதே அவர்கள் நோக்கம். அப்பால் கிறிஸ்து சமயஞ் தானே பரவும். அது பரவாவிடினும் தங்கள் வயிற்று வளர்ப்பு இங்கே நிலை பெறும் என்பது கிறிஸ்தவர்களுக்கு நன்கு தெரியும்.

நாவலரவர்களுக்குப் பிறகு கிறிஸ்தவர்களின் சூழ்ச்சிகளை அறிந்த சைவப் பிரமுகர்கள் சிலர் தனித்துங் கூடியும் பல சைவப் பாடசாலைகளையுங் கல்லூரிகளையுங் தாபித்தார்கள். எவ்வளவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முயன்றும் கிறிஸ்தவர்களின் நெருக்கடியை நீக்க முடியவில்லை இதனை உணர்ந்த சேர். பொன் இராமநாதன் சேர்.வை. துரைச்சாமி வட்டுக்கோட்டை M.S. இராசரத்தினம் முதலியவர் களும் எங்களிற் சிலரும் சேர்ந்து 1923 ஆம் ஆண்டிலே சைவ வித்தியாவிருத்திச் சங்கத்தைத் தாபித்தோம்.

இவ் விஞ்ஞாபனத்தின் மூலம், இத்தாபனத்தின் செயலாளராகவும் முகாமையாளராகவும் விளங்கிய சு.இ. அவர்கள் நாவலர் மரபினை முழுமையாக மனங்கொண்டு செயற்பட விழைந்தார் எனலாம்.

நாவலரவர்கள் விபவவருடத்திலும் (1868) பிரமோதூத வருடத்திலும் (1870) வெளியிட்ட விக்கியாபனங்களிலே தாம் செயல்படுத்த இருக்கும் செயற்திட்டங்களைக் குறிப்பிட்டுள்ளார்.[51] அவற்றைப் பின்வருமாறு பகுக்கலாம்.

(அ) தமிழ்க் கல்வியும் சைவசமயமும் அபிவிருத்தி யாதற்குக் கருவிகள் முக்கிய ஸ்தலந்தோறும் வித்தியாசாலைகளை ஆரம்பித்தல்.

(ஆ) நல்லொழுக்கமும் விவேகமுமுடையவர்களாய்ப் பரீக்ஷிக்கப்பட்ட பிள்ளைகள் நூற்றுவரைச் சேர்த்து தனித்தனி இருபது பிள்ளைகளையுடைய வகுப்பு ஐந்தாக வகுத்து, அன்னவஸ்திரம் முதலியவை கொடுத்துக் கல்வி கற்பித்தல் வேண்டும்.

(இ) நல்லொழுக்கமும் விவேகமும் கல்வியில் விருப்பமும் இடையறா முயற்சியும் ஆரோக்கியமுமுடைய உபாத்தியாயர்களை உருவாக்குதல்.

(விக்கியாபனம் 1868)

(ஈ) இப்படித் தேர்ச்சியடைந்தவர்களையே உபாத்தியார்களாகவும் சைவப்பிரசாரகர்களாகவும் நியோகித்தல் வேண்டும்.

(விக்கியாபனம் 1870)

நாவலரவர்களால் நிறைவேற்றப்பட முடியாத பல இலட்சியங்களை தனது நிறுவனப் பணிகள் மூலம் நிறைவேற்றி நாவலரவர்களது கனவினை நனவாக்கிய பெருமை சு.இ., அவர்களுக்கு உண்டு

---

51. கைலாசபிள்ளை,த., ஆறுமுகநாவலர் சரித்திரம், வித்தியாநுபாலன யந்திரசாலை, சென்னப்பட்டணம், 1916,பக்.44-49.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சு.இ. அவர்கள் சைவப்பிள்ளைகள் கிறிஸ்தவப் பாடசாலைகளில் கல்வி கற்றாலும் விபூதி தரித்துத் தமது கலாச்சாரத்துடன் போகலாம் என்பதைச் சட்ட சபையில் தனது தனியார் தீர்மானத்தின் மூலம் நடைமுறைக்குக் கொண்டு வந்த பெருமைக்கு உரியவர்.

தமிழ்க் கல்வியையும் சைவத்தையும் அபிவிருத்தி செய்தற் பொருட்டு நெடுந்தீவு முதல் பதுளை ஈறாகவும் சிலாபம் முதல் கண்டாவளை வரையும் தமிழ், தமிழ் - ஆங்கிலம், ஆங்கிலம் முதலான மொழிப் போதனா பாடசாலைகளை நிறுவிச் சைவத்தையும் தமிழ் மொழியையும் வளர்த்தவர் சு.இ. ஆவார்.

''கற்று வல்ல உபாத்தியாயர் நூற்றுவரை பயிற்றுதல்'' என்று நாவலரவர்கள் குறிப்பிடுவது. சைவாசிரிய பயிற்சிக் கலாசாலை யொன்றினை உருவாக்கி அவ்வுபாத்தியார் மூலம் சைவத் தமிழ்க் கல்வியை வளர்த்தல் என்பதாம். 1928 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் சு.இ. அவர்களின் தனிப்பட்ட முயற்சியால் 22 மாணவர்களுடன் யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் தனியார் வீடொன்றில் சைவாசிரிய கலாசாலை யொன்றினை நிறுவினார். அது 1939 இல் தனியான கல்வி நிறுவனமாக மாறிற்று. 1963 ஆம் ஆண்டு வரை இக்கலாசாலை 1500 க்கு மேற்பட்ட ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளித்தமை குறிப்பிடத்தக்கதாகும். **''அன்னம் வஸ்த்திரம் கொடுத்து மாணவர்களைக் கற்பித்தல் வேண்டும்''**[52] என்பது நாவலரவர்களின் இலட்சிய வேட்கைகளுளொன்று. இதனை நல்ல முறையில் நடைமுறைப் படுத்தியவர் சு.இ. அவர்கள்.1930 களில் திருநெல்வேலியில் ஆண்களுக்கும் பெண்களுக்குமான இரு அநாதை விடுதிகளை சு.இ. உருவாக்கினார். அங்கு உறைந்துகற்றோர் பலரை நல்லாசிரியர்களாகவும் பல்துறை அறிஞர்களாகவும் உருவாக்கினார். நாவலர் இலட்சியத்தை சு.இ. நிறைவேற்றிய அதே வேளையில் சு.இ. அவர்களின் சமூக, சமய ஊழியத்தின் தலையாய பயன் இந்நிறுவனமே யாகும். இன்றும் இந்நிறுவனம் சு.இ. அவர்களை ஞாபக மூட்டி வருகின்றது. 1958 ஆம் ஆண்டு சை.வி.வி. சங்க அறிக்கையின்படி சு.இ,. அவர்களின் நிர்வாகத்தில் 187 நிறுவனங்கள் இருந்தன.

35 ஆண்டுகளாகச் செய்து வந்த தொண்டின் பயனாக இச்சங்கம் 187 கல்லூரிகளில் 1500 ஆசிரியர்களின் துணை கொண்டு 35,000 மாணவர்களுக்கான கல்விப் போதனைகளை நடத்தி வந்தது. இவ்வாண்டு இந்நிறுவனத்தின் கீழ் பின்வரும் தாபனங்கள் அமைந்திருந்தன.[53]

52. மேலது நூல்.
53. சை.வி.வி. சங்கத்தின் ஆண்டறிக்கை, 1958. பக். 30

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1) பெண்களுக்கும் ஆண்களுக்குமாகவுள்ள சைவ ஆசிரிய பயிற்சிக் கலாசாலை.
2) 7 ஆங்கில வித்தியாசாலைகள்.
3) 147 தமிழ் வித்தியாசாலைகள்.
4) 300 மாணவர்களுக்கு மேலுள்ள 2 அநாதைப் பிள்ளைகளின் விடுதிப்பாடசாலைகள்.
5) 15 நெசவுப் பள்ளிகள்
6) 16 கூடை இழைக்கும் பள்ளிகள்

சு.இ. அவர்கள் 1954 முதல் 1958 ஆம் ஆண்டு வரை இரு பண்ணிசை ஆசிரியர்களை முத்துத்தம்பி வித்தியாசாலையில் நியமித்து தனது நிர்வாகத்தின் கீழ் உள்ள ஆசிரிய மாணவர்களுக்குப் பண்ணிசையைப் பயிற்றுவித்தார்.

**சு.இ. முக்கியமான பணிகளுள் பிறிதொரு பணி பிற்பட்டோர் சமூகத்தின் சமூக, பொருளாதாரக் கல்வி நடவடிக்கைகளில் மிகுந்த அக்கறை காட்டியமையாகும்.** குறிப்பாக தமது நிர்வாகத்தில் அமைந்த பாடசாலைகள் ஆசிரியர் கலாசாலைகள் யாவற்றிலும் இச் சமூகப்பிள்ளைகளையும் கற்று வல்லோரையும் சேர்த்துக் கல்வி பயிற்றுவித்து தொழில் வாய்ப்புக்களை அளித்தமை குறிப்பிடப்பட வேண்டிய மிக முக்கிய வரலாற்று நிகழ்ச்சியாகும். 1924 ஆம் ஆண்டு அரியாலை ஏ. கதிரைவேலு அவர்கள் **''இச்சங்கம் தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் பிள்ளைகளையும் அதன் பாடசாலைகளிற் சேர்த்துக் கொள்வதன் மூலம் அவர்களுக்கு இயன்றவரை ஊக்கம் அளித்தல் வேண்டும்''** என்னும் பிரேரணையைக் கொண்டு வந்தார். அப்பிரேரணையை சேர்.பொன். இராமநாதன் அவர்கள் வழி மொழிந்தார்[54] இத்தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. சட்டநிருபண சபையிலும் தாழ்த்தப்பட்ட இனத்தைச் சார்ந்த மாணவர்களுக்கு சமாசனம் சமபோசனம் முதலிய இன்னோரன்ன எத்துறையிலும் வேறுபாடு காட்டக் கூடாது என்னும் தீர்மானத்தைக் கொண்டு வந்து ஏகமனதாக நிறைவேற்றினர். சு.இ. அவர்கள் இத்தீர்மானத்தைத் தமது நிறுவனத்தில் பல எதிர்ப்புக்களுக்கும் மத்தியில் தீவிரமாக நடைமுறைப்படுத்தினர். இதனால் சு.இ. அவர்கள். அன்று பட்ட துன்பங்கள் பல. தெளிந்த அறிவும் ஞானமும் சட்ட நுணுக்கமும் அஞ்சாமையும் ஆசானுபாகுவான தோற்றமும் கொண்ட சு.இ. அவர்கள் சமூக எதிர்ப்பை ஒரு பொருட்டாக எடுத்துக் கொள்ளவில்லை. தனக்கு எது

54. ஈழநாடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரியெனப் பட்டதோ அதனை எவ்வித எதிர்ப்புக்கும் மத்தியிலும் சாதிக்கும் வல்லமை படைத்தவர் சு.இ. அவர்கள். சு.இ. தனது அறிக்கை யொன்றில்[55]

> "எமது விடுதிச் சாலைகளிலும் ஹரிஜன மாணவர்கள் அனுமதிக் கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு யாதொரு வகையான பேதமும் காட்டப்படுவதில்லை. காரை நகரில் எங்கள் பாடசாலை இரண்டில் ஹரிஜனப் பிள்ளைகள் சேருவதற்கு முதலில் விண்ணப்பிக்கவில்லை. பின்னர் அவர்கள் விண்ணப்பித்து அனுமதிக்கப்பட்ட போது, மேற்சாதிப் பெற்றோர் சிலர் தங்கள் பிள்ளைகளை எங்கள் பாடசாலைகளிலிருந்து நீக்கிக் கொண்டு போய்க் கிறிஸ்தவ பாடசாலைகளுக்கு அனுப்ப எங்களை நிர்ப்பந்தித்த போதிலும் நாங்கள் எமது கொள்கையினின்றும் வழுவியதில்லை. தற்பொழுது இப்பாடசாலைகளில் எல்லாச் சாதிப்பிள்ளைகளும் பேதமின்றிப் பயிலுகின்றனர். ஒரு சமயம், பாடசாலை ஒன்றன் தலையாசிரியரின் வீடு தீக்கிரையாக்கப் பட்டது. ஆயினும், அவ்வாசிரியர் தமது கடமையைச் செவ் வனவே புரிந்தனர். எல்லாப் புகழும் அவருக்கே உரியதாகும். எமது சங்கம் ஹரிஜன மக்களுக்காக இவ்வளவு தொண்டுக ளையும் இயன்ற வரை புரிந்துள்ளதையிட்டுப் பெருமைப்படுவ தோடு எதிர்காலத்தில் இன்னும் அநேக தொண்டுகளைப் புரிவதற்கு உத்தேசித்துள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்"

என மிகுந்த வாஞ்சையோடு குறிப்பிடுவது சு.இ. அவர்கள் பிற்பட்டோர் சமூகத்தின் வளர்ச்சியின்பால் கொண்டிந்த உள்ளார்ந்த மனப்பதிவினை எடுத்துக் காட்டும். நாவலரவர்களும் "சாதியி லும் சமயமே மேல்" எனக்குறிப்பிடுவதும் இங்கு மனங் கொள்ளத்தக்கது.

நாவலரவர்களால் தனது சமயம் கல்வி ஆகிய பணிகளோடு சேர்ந்த சமுதாயப் பணிகளை முழுமையாக நிறைவேற்ற முடியவில்லை. நாவலர வர்களின் கல்விசார்ந்த சமுதாயப்பணிகளை முழுமையான வடிவிலே நிறைவேற்றி ஈழத்துச் சைவத் - தமிழ் மக்களைக் கடமைப்படுத்திய சு.இ. இன் பல்வேறு பணிகளையும் மனங்கொண்ட, அவரின் கீழ் ஊழியம் புரிந்த பண்டிதமணி, சி. கணபதிப்பிள்ளையவர்கள்[56]

---

55. சைவவித்தியா விருத்திச்சங்க வருடாந்த அறிக்கை. 1958. ப-ன். 57-58
56. ஈழநாடு, பங்குனி 1970

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''**பல்லாயிரவர் செய்து முடிக்க முடியாத காரியங்களைத் திருவருளின் தூண்டுதலால் ஒரு தனிமனிதர் செய்து வைத்து விட்டுப் போய்விட்டார்.** அவர்க்குச்சாந்தி பிறப்பிப்பது எமது கடன்; நாற்பது வருடத் தொடர்பினால் நான் நேரில் கண்டவற்றை நினைவில் தோன்றியவாறு திரு. சு. இராசரத்தினம் அவர்களின் ஞாபகமாக இங்கே கூறுகின்றேன்''

என்று கூறுவது எல்லோராலும் மனங் கொள்ளப்பட வேண்டிய விடயமாகும் இத்தகைய சைவப் பெருமகன் 1970 ஆண்டு பங்குனி மாதம் 12ந் திகதி சிவபதம் அடையப் பெற்றார்.

## பாவலர் துரையப்பாபிள்ளை (1872 - 1929)

சைவத்தமிழ்க் கல்விப் பாரம்பரியம் உள்ள குடும்பத்தில் பிறந்தவர். தந்தையார் பெயர் அருளம்பலம், இவர் கச்சேரி முதலியாராகப் பதவி வகித்தவர். தாயார் தங்கம்மா. இவர்கள் இருவருக்கும் பிள்ளையாக 1872 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 20 ஆந் திகதி பிறந்தவர். இளமைக் கல்வியைத் தெல்லிப்பழை அமெரிக்க மிஷன் பாடசாலையிலும் இடை நிலைக்கல்வியை வட்டுக்கோட்டை சர்வசாத்திரக் கல்லூரியிலும் பயின்றார். அங்கு ஞானஸ்ஞானம் பெற்றவர். ரெயிலர் (Taylor) என்னும் நாமம் இவருக்குச் சூட்டப் பெற்றது. நாவலரவர்களைப் போல் இவரது இளமைப் பருவமும் கிறிஸ்தவ சூழ்நிலையில் கழிந்தது. அங்கு தமிழ் மொழிக் கல்வியை ஆர்ணல்சதாசிவம்பிள்ளையிடம் (1820-1896) பயின்றார். சதாசிவம் பிள்ளை நாவலரவர்களின் சமகாலத்தவர். நாவலரவர்களுடன் தமிழ் நாடு சென்றவர் என்பது ஈண்டு மனங்கொள்ளத் தக்கது.

யாழ்ப்பாணத்தில் தமது கல்வியை முடித்துக் கொண்ட பிள்ளையவர்கள் பாணந்துறை அர்ச்யோவான் கல்லூரியில் ஆசிரியராகவும் பின்னர் அரசாங்க சேவையில் எழுதுவினைஞராகவும் கடமை புரிந்தார். 1895 ஆம் ஆண்டு இந்தியா சென்றார். அங்கு கோல்காப்பூர், பெல்காம் முதலான இடங்களில் அமைந்த மிஷன் உயர் பாடசாலைகளில் ஆசிரியராகக் கடமையாற்றினார். இக்காலப் பகுதியில் இந்தியாவின் தேசிய வீரர்களான கோபால கிருஷ்ண கோகலே, பாலகங்காதரதிலகர். சித்தரரஞ்சன்தாஸ், சுரேந்திரநாத் பானர்ஜி முதலானோர்களின் நடவடிக்கைகளில் ஈர்க்கப் பட்டார். குறிப்பாகக் கோகலேயின் செல்வாக்கு பிள்ளையவர்களின் மீது அதிகம் என்பர். 1898 ஆம் ஆண்டு இந்தியாவில் ஏற்பட்ட கொள்ளை நோய் காரணமாக பிள்ளையவர்கள் ஈழநாடு திரும்பினார். ஈழநாட்டிற்கு வந்த பிள்ளையவர்கள் தமிழ் மக்களின் சமூக பொருளாதாரப் பிரச்சனைகளில் கூடுதலான அக்கறை கொண்டவராகக் காணப்பட்டார். அந்த வகையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறுமுகநாவலரின் பன்முகப்பட்ட முயற்சிகளின் தருக்கரீதியான வளர்ச்சி யின் வடிவமாகத் துரையப்பாபிள்ளையைக் கருதலாம் என்பார்.[57]

ஈழநாட்டிற்கு வந்த பிள்ளையவர்கள் ஆசிரிய பயிற்சி பெற்றுத் தெல்லிப்பழை அமெரிக்க மிஷன் பாடசாலைக்கு அதிபரானார். 1910 ஆம் ஆண்டு தாம் மகாஜனாக் கல்லூரியை ஆரம்பிக்கும் வரையும் கலை, இலக்கிய சமூக பொருளாதார விடயங்களில் மிகுந்த பேரூக்கத்துடன் செயற்பட்டார். இதோபதேச கீதரசமஞ்சரி, சிந்தனைச் சோலை, எங்கள் தேசநிலை, யாழ்ப்பாண சுவதேசகக் கும்மி முதலான இலக்கியப் படைப் புக்களையும் சகல குணசம்பன்னன் என்னும் நாடக நூலையும் இயற்றினர். 1910 ஆம் ஆண்டு பிள்ளையவர்கள் கிறிஸ்துமதத்தை விடுத்துச் சைவ சமயத்துக்கு மாறினார். 1925 ஆம் ஆண்டு சிவதீட்சையும் பெற்றுக் கொண் டார். அந்த ஆண்டில் சரஸ்வதி வித்தியாசாலை என்னும் ஆரம்பப்பாடசா லையையும் கட்டினார். 1910 இல் பிள்ளை தம்மை முழுமையான சைவனாக மாற்றிக் கொண்டமை ஒரு வரலாற்றுப் புதுமையல்ல. இது தேசியத்தின் ஒரு அம்சம். ''தேசிய உணர்வின் ஓர் அம்சமாக இடையில் வந்த அந்நிய கிறிஸ்தவத்தை விடுத்து, பரம்பரைச் சமயமான இந்து மதத்தைப் பலர் தழுவிக் கொண்டமை வரலாற்றுச் செய்தியாகும்'' என்ற கூற்று இங்கு நினைவு கூரத்தக்கதாகும்.[58]

நாவலரவர்கள் சேர்.பொன். இராமநாதன் அவர்களை அரசிய லுக்கு கொண்டு வந்தமையும் மட்டக்களப்பு - **யாழ்ப்பாணம் வேளாண்மைச் சங்கம்** அமைத்தமையும் நாவலரவர்களின் சமூக நோக்கினைப் படம் பிடித்துக் காட்டும். ஈழத்தை ஆண்ட பிரித்தானியர் பெருந்தோட்டப் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்ய முயன்ற அளவிற்கு விவசாய அபிவிருத்தியில் நாட்டம் வைக்கவில்லை. அந்நிலையிலும் 1878இல் கமத் தொழில் வரியாக 10 வீதம் அறவிட்டனர். 1888இல் இதனை இராம்நாதன் கடுமையாக எதிர்த்தார். 1892இல் இவ்வரி ஒழிக்கப்பட்டது. இந்நிலையில் துரையப் பாபிள்ளையவர்கள் யாழ்ப்பாணத்து மக்களை விழித்து ''யாழ்ப்பாணத்தவர் வன்னி நாடுகளுக்குச் சென்று கிருஷிக முயற்சி செய்ய அதிக சிரத்தை கொள்ளாதிருப்பது மிகத்துக்கத்துக்குரிய காரியம்'' என உதய தாரகைப் பத்திரிகையின் மூலம் மக்களைத் தேசியத்தின் பால் தட்டியெழுப்பினார்.[59]

---

57. கைலாசபதி,க., ஈழத்து இலக்கிய முன்னோடிகள், 1986,பக்.109
58. மேலது நூல், ப. 110.
59. நற்றாண்டு விழாச்சபை வெளியீடு,பாவலர் நற்றாண்டு விழா மலர், 1975பக்.25

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலரவர்கள் சமயநெறியிலும் சமுதாயத்திலும் புரையோடிக் கிடந்த கள்ளுண்ணல், மதுபானம் அருந்துதல், வியபிசாரம், தேவதாசி நடனம், கொலை, களவு முதலான கூடாவொழுக்கங்கள் பற்றி யாழ்ப்பாணச் சமயநிலை (1822) பாலபாடம் 2ம் 4ம் புத்தகம், நல்லூர்க் கந்தசுவாமி கோயில் முதலாம், இரண்டாம் பத்திரிகை (1875) முதலான நூல்கள் வாயி லாகக் கண்டனஞ் செய்துள்ளார். இது சமய சார்பாக எழுந்த கண்டனங்கள் என்பதை விட, ஒரு சமூக சீர்திருத்தத்தை நோக்கி எழுந்த கண்டனங்கள் எனலாம். துரையப்பாபிள்ளையும் இதோபதேச கீதரசமஞ்சரி (1901) மூலம் நாவலரவர்கள் கூறியவற்றையும் வழக்காடலின் தீமை, கைக்கூலி வாங்குதல், சீதன வழக்கத்தின் தீமைகள், பணவாஞ்சை, வீண் செலவு, பாலிய விவாகம், பெண்களின் அவலம், ஜீவகாருண்யம் முதலிய பல சமூக முக்கியத்துவமுடைய பொருளைப் பற்றி காலத்துக்கேற்றவாறு பாடியுள்ளார் ''இலங்கை வரலாற்றைப் பொறுத்தவரையில் அவர்தான் சமூக சிந்தனையை முதன் முதலாகக் கவிதைப் பொருளாக்கியவர். அந்த வகையில் அவரும் புதுநெறி கண்டவரே. சமயத்திலிருந்து சமூதாயத்துக்கு இலக்கிய கர்த்தா வின் கருத்தூன்றிய பார்வை புடைபெயர்தலை அவரது ஆக்க இல்க்கியங் கள் காட்டுகின்றன'' என்ற கூற்று இங்கு மனங் கொள்ளத்தக்கதாகும்.[60]

நாவலரவர்கள் நாடகங்களில் விருப்பம் உடையவர். நாடகம் எழுதியவர். நாடக ஆசிரியர் பரம்பரையில் வந்தவர். பிள்ளையவர்களும் நாடக ஆசிரியர் பரம்பரையில் வந்தவர். இவர் முன்னோரர்ன கந்தப்பிள்ளை பல நாடகங்களை எழுதியவர் என்பர். நாவலரவர்களும் நாவலர் பரம்பரையினரும் எழுதிய நாடகங்கள் இயலும் இசையும் சார்ந்தவை. ஆனால் பாவலரும் பாவலர் சந்ததியினரும் எழுதிய நாடகங்கள் முத்தமிழ் சேர்ந்தவை. நாவலரவர்களின் முன்னோர் எழுதிய நாடகங்கள் அறிவின் பாற்பட்டவை. பாவலர் எழுதிய சகல குணசம்பன்னன் என்னும் நாடகமும் அவர் முன்னோர்கள் எழுதிய நாடகங்களும் சமூதாய நலன் கொண்ட வையாக அமைந்தவை. இவ்விரு வகை நாடகங்களுள் முதன்மையானவை உயர் குழாத்தின் பால் செல்வாக்குப் பெற்றிருந்தன. பிள்ளையவர்கள் பாமரமக்கள் மத்தியில், வெகு ஜன சாதனமாக அவர்களுக்கு நல்லறிவுச் சுடர் கொளுத்துபவராக விளங்கினார்.

உண்மையில் நாவலர் மரபின் தாக்கத்தைப் பிள்ளையவர்களி டத்தில் நிதர்சனமாகக் காணக்கூடியதாகவே உள்ளது. எவ்வாறு கறோல் விசுவநாதன் தனது சைவசமய பத்தியை வெளிப்படுத்தும் பொருட்டு காலதீபிகை என்னும் நூலை எழுதினரோ, சி.வை. தாமோதரம் பிள்ளை

60. கைலாசபதி, க., ஈழத்து இலக்கிய முன்னோடிகள், 1986, ப. 124

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமது சைவமெய்யியல் ஈடுபாட்டைக் காட்டும் வகையில் விவிலிய விரோதம் (1867), சைவ மகத்துவம் (1867) என்னும் நூல்களை எழுதினரோ அதே போன்றே சிவதீக்ஷை பெற்றுக் கொண்ட பிள்ளையவர்கள் சிவமணிமாலை என்னும் நூலைப் பாடினர்.

**''சென்ற நூற்றாண்டில், நீதி என்ற வாளைக் கைலேந்தி, சைவக் குழந்தைகள் தம் சமயத்தை அறிதற்குச் சந்தர்ப்பங் கிடைக்க ஒட்டாது அம்மட்டோ அக்குழந்தைகள் தம் சமயத்தில் நம்பிக்கையீனம் கொள்ளத்தக்க வகையில் மற்றொரு சமயத்தைத் திணிக்கும் அநீதியாகிய புல்லுருவிகளை வெட்டிக் களைந்து வீரகர்ச்சனை செய்தவர்கள் நாவலர் பெருமான் அவர்கள்.**

**நாவலர் பெருமானின் நீதிவழியைத் தொடர்ந்தவர்கள் மிகமிகச் சிலர். அந்தச் சிலரில் ஒருவராய், சிரேட்டராய் விளங்கியவர்கள் துரையப்பாபிள்ளை அவர்கள். பிள்ளையவர்களுக்குச் சைவ உலகு செய்ய வேண்டிய நன்றிக் கடன் மிகப் பெரிது.**[61]

என்ற பண்டிதமணியின் கூற்று நாவலர் மரபில் துரையப்பா பிள்ளையின் பங்களிப்பின் மதிப்பீட்டின் உரைகல் எனலாம்.

**பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை** விகாரி வருடம் (1899) ஆனி மாதம் 14 ஆம் திகதி யாழ்/சாவகச்சேரி மட்டுவிலில் பிறந்தார். இவர் தந்தையார் பெயர் சின்னத்தம்பி, தாயார் பெயர் வள்ளியம்மை. தமது இளமைக்கல்வியை அமெரிக்க மிஷன் கல்லூரியில் பயின்றார். தமிழ் மொழிக்கல்வியை அவ்வூரில் உள்ள பொன்னையா உபாத்தியார், புலவர் பொன்னம்பல பிள்ளை முதலான ஆசிரியர்களிடம் பயின்றார். புராண படனக் கல்வியை உரையாசிரியர் ம.க. வேற்பிள்ளையிடமும் அவர் புத்திரர் வே. மகாலிங்கசிவத்திடமும் கற்றார். இவ்வாசிரிய பரம்பரை வித்துவ சிரோமணி ந.ச. பொன்னம்பலபிள்ளை மாணவபரம்பரையில் வந்தவர்கள். அந்தவகையில் சி.க. அவர்கள் இளமையிலே நாவலர் அவர்கள் பற்றி தெரிந்திருக்கும் வாய்ப்பினைப் பெற்றிருந்தார். இளமையில் தாயாரை இளந்தமையினால் தொடர்ச்சியாகக் கல்வி கற்கும் வாய்ப்பினை சி.க. அவர்கள் இழந்தார். வயலில் வேலை செய்வதிலும் தாயம் சீட்டு ஆடுவதிலும் அவரது பொழுது கழிந்தது.

---

61. நூற்றாண்டு விழாச்சபை வெளியீடு, பாவலர் நற்றாண்டு விழாமலர். 1975. ஆசியுரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயினும், அவரது அடிமனத்தில் தாம் எப்படியும் கல்வி கற்று ஒரு பெருநிலையை அடைய வேண்டும் என்ற ஆர்வம் துளிர்விட்டுக் கொண்டே இருந்தது. இந்த ஆர்வத்தின் பயனாய் 1917 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 12 ஆம் திகதி நாவலர் தருமத்தில் நிறுவப்பட்ட காவிய பாடசாலையில் ஒரு மாணாக்கனாகச் சேர்ந்தார். அங்கு சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர், தம்பு கைலாசபிள்ளை, வித்துவான் சுப்பையாபிள்ளை முதலானோர்களிடம் கல்வி கற்றார் [62]. இவர்கள் யாவரும் நாவலர் மரபில் வந்தவர்களே ஆவர். பிற்காலத்தில் வித்தகம் ச.கந்தையாப் பிள்ளை அவர்களிடம் இலக்கியம் இலக்கணம் கற்றார்.

காவிய பாடசாலையில் கல்வி கற்றதன் பயனாக 1925 ஆம் ஆண்டு மதுரைத் தமிழ்ச் சங்கம் நடத்திய பண்டிதர் பரீட்சையில் சித்தியடைந்தார். 1927 முதல் 1928 வரையும் கோப்பாய் அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் சேர்ந்து கல்வி கற்று, தராதரம் பெற்ற ஆசிரியரானார். 1929 ஆம் ஆண்டு சைவப்பெரியார் சு. இராசரத்தினம் அவர்கள் தமது நிர்வாகத்தின் கீழ் இருந்த சைவாசிரிய கலாசாலையில் தமிழ் விரிவுரை யாளராக இவரை நியமித்தார். சி.க. அவர்களுக்கு முன்பு வவுனியா - பண்டிதர் இராசையனார் விரிவுரையாளராக நியமனம் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். குமாரசுவாமிப்புலவர், கைலாசபிள்ளை வழியாக சு.இ. அவர்கள் பண்டிதர் சி.க. அவர்களை ஏற்கனவே தெரிந்து வைத்தி ருந்தார். இராசையனார் தமிழ்ப் பண்டிதராக இருந்த பொழுதும் அவர் கிறிஸ்து சமயத்தை தழுவியவராக இருந்தமையும் சி.க. அவர்கள் அங்கு நியமனம் பெறுதற்குப் பிறிதொரு காரணமாக அமைந்தது.

1929 முதல் 1959 ஆம் ஆண்டு வரையும் சி.க. அவர்கள் சைவாசிரியகலாசாலையில் விரிவுரையாளராகக் கடமையாற்றினார். அவர் தன்னை ஒரு ஆசிரியனாக மாத்திரம் கருதாது சமுதாயத்தின் தேவை உணர்ந்து அதற்கு ஏற்ப பல்வேறு பணிகளை ஆற்றினார். சைவ வித்தியா விருத்திச்சங்கம் மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலமெல்லாம் என்ற இலட்சியத்தை மனங்கொண்டு நாவலர் மரபினைப் பேணி வளர்க்க முற்பட்டதால் சி.க. அவர்களும் அதனோடு இணைந்து சேவையாற்றக் கூடிய வாய்ப்பினைப் பெற்றார். சி.க. அவர்கள் பல்வேறு பணிகளுக்கும் வித்திட்டவர் சைவப் பெரியார் சு.இ. அவர்களே ஆவர். சு.இ. அவர்களின் பெருந்தன்மையும் தீர்க்க தரிசனமும் இல்லையேல் பண்டிதமணி சி.க. என்பவரைத் சைவ தமிழ் உலகம் அறிந்திருக்க முடியுமா? சு.இ. அவர்கள்

---

62. செந்திநாதன், கன்க., மூன்றாவதுகண், ஆனந்தா அச்சகம், யாழ்ப்பாணம், 1959. ப-ள். 7-14.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவத் தமிழ் உலகத்துக்கு அளித்த நன்கொடைகளுள் சி.க. அவர்களும் ஒருவராவர். இதனை யாரும் மறுப்பது கடினம்.

சி.க. அவர்கள் இக்கலாசாலையில் இருந்த காலகட்டத்தில் (3 புரட்டாசி 1935) தனது இலட்சியங்களை பின்வருமாறு குறிப்பிட்டார்.[63]

(1) உண்மையான தமிழ்க் கல்வியை இலவசமாக எங்கும் அபிவிருத்தி செய்வது

(2) நாவலர் ஐயாவின் தர்மாபிவிருத்திக்கு இயன்ற உதவி புரிவது.

சி.க. அவர்கள் செல்வ வளமுள்ள குடும்பத்தில் பிறந்தவரல்லர். முதுசமும் உடையவரல்லர். ஆனால் தான் ஊழியம் புரியும் நிறுவனத்தின் இலட்சியமும் இதே நோக்குடையதாக அமைந்ததால் சி.க. அவர்கள் தனது இலட்சியங்களை அதனுடன் இணைந்து செயல்படுத்த முடிந்தது. சி.க. அவர்கள் - சைவத்தமிழ் கல்வியின் வளர்ச்சியின் பொருட்டு ஈழ நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் சென்று பிரசங்கம் செய்து வந்தார். ஆரியமும் தமிழும், துறவும் கீதையும், நாவலர் காட்டிய வழி தலைப்பட்டாள் நங்கை, காரைக்கால் அம்மையார், கம்பர் ஒரு நாடகப் புலவன், நாவலரும் தமிழும் முதலான பல்வேறு விடயங்கள் பற்றி பிரசங்கம் செய்துள்ளார். அவரது கம்பீ ரமான தோற்றமும் சைவத் தமிழாசிரியர் தோற்றமும் கல்வி ஞானமும் கடல் மடை திறந்தாற் போன்ற பிரசங்க ஆற்றலும், பேச்சில் அமைதியும் எழுச் சியும், குரலின் இனிமையும் அவரது பிரசங்கத்தை பாமரப் மக்கள் தொடக் கம் பண்டிதர் வரை மிகுந்த ஆர்வத்துடன் கேட்கத் தூண்டிற்று. கீரிமலை, தனங்கிளப்பு, மட்டுவில் முதலான இடங்களில் உள்ள ஆலயங்களிலும் மடங்களிலும், கந்த புராணம், பெரிய புராணம், திருவிளையாடற் புராணம், திருவாதவூரடிகள் புராணம் முதலான நூல்களுக்கு தனது நண்பர்களுடனும் மாணவர்களுடனும் சேர்ந்து புராணபடனம் செய்து வந்தார்.[64]

உண்மையான தமிழ்க்கல்வியை இலவசமாக எங்கும் அபிவிருத்தி செய்ய வேண்டும். என்னும் ஆர்வத்தால் சை.வி.வி. சங்கத்தின் அனுசரணை யுடன் சைவாசிரிய கலாசாலையில் காவிய பாடசாலை (1935) ஒன்றினை ஆரம்பித்து நடத்தி வந்தார். இங்கு பிரவேச பண்டிதர், பால பண்டிதர், பண்டிதர் வகுப்புக்களும் மதுரைத்தமிழ்ப் பண்டிர வகுப்புக்களும் நடத்தப்பட்டன. இவற்றுடன் வடமொழிப் பண்டித வகுப்புக்களும் சிங்கள மொழிக் கல்வியும் போதிக்கப்பட்டன. 1938 ஆம் ஆண்டு வரையும்

63. மேலது நூல், பக். 15.
64. மேலது நூல், பக். 7-14

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்காவிய வகுப்புகள் சிறப்புற நடத்தப்பட்டன. ஈழநாட்டில் பல நூற்றுக் கணக்கான பண்டிதர்கள் தோன்றுதற்கும் தமிழ் மொழிக்கல்வி சிறப்புற விளக் குதற்கும் இக்காவிய பாடசாலை மிக முக்கியமான நிறுவனமாக விளங்கிற்று.

நாவலர் அவர்கள் போன்று சி.க. அவர்களும் ஒரு பிரசித்தி பெற்ற கண்டனகாரராக விளங்கினார். அவரது கண்டனங்களால் கல்வி, சமய, சமூக ஒழுங்குகள் என்பன சரியாகப் பேணப்பட்டன. அவரது கண்டனங்கள் சுதேசிய கண்டனங்களாகவும் இலக்கிய சர்ச்சைக்கு உரியனவாகவும் அமைந்தன. டாக்டர் உ.வே. சுவாமிநாதையர், சு.நடேசபிள்ளை, ம.பொ. சிவஞானகிராமணியார், வையாபுரிப்பிள்ளை, மு.வரதராசன், ரா.பி. சேதுப்பிள்ளை, சோமநாதபுரம், இராச கோபாலபிள்ளை, சுத்தானந்த பாரதியார், தொழுவூர் வேலாயுத முதலியார், நரசிங்கபுரம் வீரசாமி முதலியார் முதலான தமிழ் நாட்டோரும் [65] மாவெட்டி சு.சுவாமிநாதன் நல்லூர்க்கந்தசுவாமி கோயிலார் முதலான ஈழ நாட்டவரும் சி.க. அவர்களின் கண்டனத்துக்கு உள்ளானார்கள். சுவாமிநாத பண்டிதர் மீது பாடிய இரங்கற் பாக்கள் (1934), நாவலர் (1968), நவபாரதம் (1938), சமபோசனமும் ஸ்ரீமத் சிவபாத சுந்தரமும் (1932), தொல்காப்பியப் பதிப்பு: தமிழ் தந்த தாமோதரம்பிள்ளையின் பரோபகாரம் (17 புரட்டாசி 1950), வி.கலியாண சுந்தர முதலியாரும் அவர்தம் ஆசிரியரும் (1970), தேவைகளைச் செய்தோரை இனித்தேவையில்லை. டாக்டர் உ.வே. சா. ஐயர் அவர்களில் ஏன் இந்தத்துவேஷம் முதலான கட்டுரைகள் சி.க. அவர்களின் கண்டனங்களுக்கும் புலமைத்துவத்துக்கும் எடுத்துக்காட்டாக அமைகின்றன எனலாம்.

சி.க. அவர்கள் எந்த நிலையிலும் நூல்கள் எழுத வேண்டும் என்று நினைக்கவில்லை. ஆயினும் பல்வேறு காலங்களில் பல்வேறு சந்தர்ப்பங் களில் வழியிலுந் தெரிவிலுந் தோன்றிய எண்ணங்களின் கோவையை கட்டுரைகளாக வடித்துள்ளார். அவை பின் அவரது மாணவர்களால் தொகுக்கப்பட்டு நூல் வடிவம் பெற்றுள்ளன. அவ்வகையில் சுமார் இருபத்தி நான்கு (24) நூல்கள் வெளிவந்துள்ளன. இந்நூல்களில் சில சமயசம்பந்த மாணவை. அவை சைவ நற்சிந்தனை (1959), கந்த புராண கலாசாரம் (1959), கந்தபுராண போதனை (1960), சிவராத்திரியிற் சிந்திக்கத்தக் கவைகள் (1963), கோயில் (1979) முதலான நூல் இவ்வகையில் அடங்குவன. சில சைவ சித்தாந்தம், இந்திய மெய்யியல் சார்ந்தவை. அவை சமயக்கட்டுரைகள் (1961), அத்வைத சிந்தனை (1984), அன்பினைந்

---

65 சுசிந்தரராசா,சு., பண்டிதமனியின் பேரும் புகழும், மஹாத்மா அச்சகம், 1993. ப-ள். 32-34.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திணை (1983), ஆகியவையாகும். வேறு சில இலக்கிய - இலக்கணம் சார்ந்தவை. இலக்கியவழி (1955,1964), கம்பராமாயணக் காட்சி (கவிநயக்கட்டுரை) (1965), பாரத நவமணிகள் (1959), இருவர் யாத்திரை நாவலர் (1979),செந்தமிழ்க் களஞ்சியம் (1987), பாஷை இலக்கணம், இலக்கியம் கற்பித்தல் (1994) முதலானவை அவ்வகையைச் சார்ந்தவை. கந்தபுராணம் - தக்ஷகாண்டத்திற்கு சி.க. அவர்கள் உரை எழுதியுள்ளார். இது 1967ஆம் ஆண்டு பேராதனைப் பல்கலைக்கழக இந்து மாணவர் சங்கத்தால் வெளியிடப் பெற்றது. அத்துடன் நாவலரவர்கள் 1875 ஆம் ஆண்டு நல்லூர்க் கந்தசுவாமிக் கோயிலாளருக்கு எதிராக நல்லூர்க் கந்தசுவாமி கோயில் - முதலாம் பத்திரிகை என்னும் இரண்டாம் பத்திரிகை (1875) என்னும் பிரசுரங்களை எழுதி வெளியிட்டு இருந்தார். இந்த நூற்றாண்டு வரையும் நாவலர் அவர்களால் சுட்டிக்காட்டப்பட்ட திருத்தங்கள் சில திருத்தம் அடையாததால் அவற்றை மீண்டும் ஞாபகப் படுத்தும் வகையில் நாவலர் அவர்கள் சுட்டிய, திருத்தமடையாத விடயங்களைத் தொகுத்து நாவலரும் கோயிலும் என்னும் பிரசுரமாக வெளியிட்டார்[66]

சி.க. அவர்களிடத்தில் புலமை மேலோங்கி நின்றது. ஆயினும் அவற்றை கவிதையாக வெளிப்படுத்துவதற்கு அவரது இலக்கிய - சமய சிந்தனைகள் தடையாக அமைந்தன. ஆயினும் இவற்றை மீறி பலதனிநிலைச் செய்யுட்களைப் பாடியுள்ளார். இவர் ஆரம்பத்தில் பாடிய கண்ணகி தோத்திரம் (1966), கதிர்காம வேலவன் பவனி வருகின்றான் (?) என்பவை அவரது சிந்தனைகளுக்குத் தடையாக அமைந்தனவென்று சொல்லுவதற் கில்லை. இவை அவரது புலமைத்துவ வெளிப்பாடுகளேயாகும். இவரது பாடல்களை ஊன்றி அவதானிக்கும் பொழுது,சி.க. அவர்கள் இப்புலமைத் துவத்தில் ஈடுபாடு காட்டி இருந்தால் இந்நாடு தலை சிறந்த கவிஞரையோ புலவரையோ பெற்றிருக்க முடியும். நாவலர் அவர்களிடத்திலும் இதனை அவதானிக்க முடியும்.

சி.க. அவர்களுக்குச் சைவசித்தாந்தம் பற்றிய சிந்தனை இடையில் தோன்றியதல்ல. இளமையில் புராணபடனம் செய்தல், கேட்டல் என்பவற் றாலும் வண்ணார்பண்ணை காவிய பாடசாலையில் சைவ வினாவிடைகள் சித்தியார் போன்ற நூல்களும் பிரபந்தங்களும் கற்றதாலும் கிடைக்கப் பெற்றது. ஆனால் அவரது இலக்கிய தாகம் அவரை சைவசித்தாந்தம் பற்றி பெரிதும் சிந்திக்க இடங்கொடுக்கவில்லை. ஆயினும் தமிழ்ப் பரீட்சைகள்

66. கணபதிபிள்ளை, சி. (தொகுப்பு) நாவலரும் கோபியறும், நாவலர் தர்ம பாதுகாப்பு சபை வெளியீடு. 1975.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாவும் தமிழ் மொழி பாண்டியத்தை நோக்கிய அவரை அழைத்துச் சென்றன. இந்த நிலையில் சைவாசிரிய கலாசாலையின் உப அதிபர் பொ.கைலாசபதி அவர்களின் கூட்டாகவும் இந்திய மெய்யியல் பற்றிய சிந்தனைக்கு அழைத்துச் சென்றது. குறிப்பாகச் சைவ சிநதாந்த மெய்யியலில் ஆழமாகச் சிந்திக்கத் தூண்டிற்று. அதன விளைவாக அச்சிந்தனைகளை அடிப்படையாகக் கொண்டு பல சமய சிந்னைக் கட்டுரைகளை தினகரனில் எழுதி வந்தார். அக்கட்டுரைகளின் தொகுப்பு 1961இல் சமயக்கட்டுரைகள் என்னும் பெயரில் வெளி வந்தது. இச்சிந்தனையின் முதிர்ச்சியை அன்பினைந்திணை, அத்வைதசிந்தனை முதலானவற்றில் காணலாம்.

சி.க. அவர்கள் பரீட்சார்த்தமாக ஆக்க இலக்கியங்களில் தன்னை ஈடுபடுத்தி வந்துள்ளார். இருவர் யாத்திரிகர், செருப்புக் கட்டியின் கதை எனும் இரண்டு சிறுகதைகளையும் இரு சகோதரர்கள் எனும் முடிவு பெறா நாவலையும், நளன் தூது, வால்மீகிதானோ எனும் இரு நாடகங்களையும் எழுதியுள்ளார்.[67] ஆனால் இதன் மூலம் சி.க. அவர்கள் தனது மொழி நடையை வளம்படுத்திக் கொண்டார் என்று சொல்வதற்கில்லை. நாவலர் அவர்கள் எழுதிய பெரிய புராணவசனம், திருவிளையாடற் புராண வசனம் பாலபாடம் - இரண்டாம் புத்தகத்தில் வரும் கதைகள் யாவற்றிலும் நவீன இலக்கிய மொழி நடைத்தன்மையைப் பார்க்கலாம். இதனால் நாவலர் அவர்கள் நவீன ஆக்க இலக்கிய மொழி நடையின் தந்தையென்று யாரும் கூறின் பொருத்தமான கூற்றாக அமைந்து விடாது.

சி.க. அவர்கள் தமது சமய இலக்கிய முயற்சிகளினால் பண்டிதமணி, சைவசித்தாந்த சாகரம், முதுபெரும்புலவர், மகாவித்துவான். இலக்கிய கலாநிதி முதலான பட்டங்களைப் பெற்றுக் கொண்டார். இவற்றை ஒரு பொழுதும் அவர் தேடிச் செல்லவில்லை. இவை அவரைத் தேடிச் சென்று சிறப்புப் பெற்றன. தேனீ, தும்பி, ததீசி, புகழேந்தி, விநாயகன் முதலான புனைபெயர்களிலும் அவரது புகழ் நிலைத்து நின்றன. சி.க. அவர்களின் இலக்கிய முயற்சிகள் அவரது சொந்தப் பெயரிலும் வெளிவந்தன. இத்தகைய சிறப்புக்கள் பொருந்திய பண்டிதமணி குரோதன வருடம் மாசி மாதம் 28 ஆம் நாள் புதன் கிழமை (பங்குனி 13) இறையடி சேர்ந்தார்.

பண்டிதமணி சி.க. அவர்கள் தனது சமய - இலக்கியக் களத்தில் செல்வம், செல்வாக்கு புலமை உடையவர்கள் சொல்லும் கருத்துக்களை

67. செந்திநாதன், கனக., மூன்றாவதுகண், 1959. ப. 36.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளவாறு உள்வாங்கிக் கொள்ள மறுத்தவர். ஒருவருடைய தகுதிப் பாட்டிலும் அவர் சொல்லும் கருத்தில் உண்மையும் தருமமும் உண்டா என்பதை ஆராய்ந்து அறிந்தே ஏற்றுக் கொண்டார். இவ் வைராக்கியம் சி.க. அவர்களுக்கு மாத்திரம் சொந்தமன்று நாவலர் மரபினர்க்கு இது சொந்தமானது. ஈழத்து இலக்கிய வழி செழிப்புறுதற்கும் செழிப்புற்று இருப்பதற்கும் இதுவும் ஒரு அடிப்படைக் காரணம் எனலாம். இந்த நூற்றாண்டின் நடுப்பகுதியில் இக்கருத்தினை வளர்த்தவர் பண்டிதமணி சி.க. அவர்கள். இந்நூற்றாண்டின் இறுதியிலும் இக்கருத்து வலுவுடன் இருப்பதென்றால் அவர் ஈழத்து இலக்கிய வழிக்கு செய்த பெரும் பங்களிப்பில் பெரியது அது வென்றே கூறுதல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயல் 5

## முடிவுரை:-

சென்ற நூற்றாண்டிலும் இந்நூற்றாண்டிலும் நாவலர் மரபு தமிழ் இலக்கியப் பரப்பிலும் சமயவியலிலும் பெரும் செல்வாக்கைச் செலுத்தியது. செலுத்துகின்றது. தமிழ் இலக்கியப் பரப்பின் பல்வேறு வகைமைகளான சிற்றிலக்கிய முயற்சிகள், உரை,உரைநடை, பதிப்பு, இலக்கிய வரலாறு, தனிமனித வரலாறு முதலானவை இக் காலப்பகுதியில் (1875-1950) நாவலர் மரபினரால் வளர்ச்சி கண்டன. இத்தகைய துறைகள் உயர் குழாத்தினருக்குச் சொந்தமாக அமையாது பொது மக்களை நோக்கி நாவலர் மரபினரால் எடுத்துச் செல்லப்பட்டமை இம்மரபின் சிறப்பானதோர் அம்சமாகும். 'வித்துவம்' என்பது புலமை உடையோருக்குச் சொந்தமாய் அமைவது. அது ஒருகாலத்தில் உயர் குழாத்தினருக்கு உழைப்பாய் இருந்து வந்தது. ஒருவகையில் புலவன் தன் அறிவினை இக்குழாத்தினருக்கு அடகுவைத்தான். ஆனால் நாவலர் மரபின் வளர்ச்சியின் பிற்பாடு வித்துவம் என்பது பொதுமக்கள் பால் திசை திருப்பப்பட்டது. உரை, உரைநடை, புராணபடனம், பிரசங்கம், துண்டுப்பிரசுரம், பாடநூல்கள், முதலானவற்றை இதற்கு உதாரணமாகக் குறிப்பிடலாம். இதுவே நாவலர் மரபின் வெற்றியாகும். இதனைப் பிறிதொரு வகையாகக் குறிப்பிடின் நாவலர் மரபின் செயற்பாடுகள் அனைத்தும் பொதுமக்களைச் சென்ற டையும் வகையில் திசைதிருப்பப்பட்டமையே நாவலர் மரபின் தனித்து வமாகும். நாவலர் மரபு செழிப்புற்ற இக்காலப் பகுதியினை (1850-1950) **'நாவலர் மரபுக் காலம் அல்லது நாவலர் மரபில் மக்கள் முகிழ்ந்த காலம்'** எனக் குறிப்பிடலாம் நாவலர் மரபினைப் பொதுப்பட நோக்கின்;

நாவலர் பணிகள் என்னும் மலை உச்சியில் நாவலர் மாணவர் பரம்பரை, நாவலர் நோக்கு, நாவலர் மரபு என்னும் கிளை நதிகள் உற்பத்தியாகி வற்றாது ஓடிச் சைவத்தமிழ் நிலப் பரப்பினை வளம்படுத்தின. நாவலர் மாணவபரம்பரை என்னும் கிளை நதியின் நீர்த்தேக்க மட்டம் குறைந்து செல்கின்ற பொழுதும் நாவலர் மரபு என்னும் கிளை நதி வற்றாது ஓடிக் கொண்டே இருக்குமென்பதில் எவ்வித ஐயுறவுக்குமிடமில்லை. இன்று பரந்த தமிழ் உலகில் சைவமும் அதன் வளர்ச்சிக்கருவியாகிய கல்வியும் வளர்ந்து வருகின்ற தென்றால் அதற்கு நாவலர் மரபும் அதனால் விளைந்த அறுவடையின் பயன்களும் பெரிதும் காரணமாக அமைந்தன எனக் கூறில் அக்கூற்றில் உண்மை உண்டு. அதனை ஒரு கருதுகோளாகக் கொள்ள முடியாது. நாவலர் மரபு வளர்ந்து செல்லும் சமூக பொருளாதார கல்விக் கருத்துக்களுக்கும் மாற்றங்களுக்கும் ஏற்ப அக்கருத்துக்களை சிந்தித்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்வாங்கி ஏற்று, வளர்ந்து வருவது கண் கூடு. நாவலர் மரபை வளர்த்துச் சென்ற நாவலர் மாணவபரம்பரை இன்று அரிதாகி விட்டது. அதற்குப் பல காரணங்கள் இருப்பினும், நாவலர் மரபு இன்றும் அழிந்து விடாது பேணப்பட்டு வரப்படுகின்றது. அது ஒரு பொழுதும் அழிந்து விடாது; அழித்து விடவும் முடியாது. ஏனெனில், ஒவ்வொரு சைவத்தமிழ் மகனும் அவன் விரும்பியோ விரும்பாமலோ அம்மரபினைப் பேணி வருவதனால், நாவலர் மரபு என்னும் நதி வற்றாது சைவத்தமிழ்ப் பரப்பினை வளம்படுத்தியே வரும் என்பதில் எவ்வித ஐயுறவுமில்லை.

பிறிதோர் வகையாகக் கூறின், நாவலர் மரபு என்பது தொடர்ச்சியான வளர்ச்சி முறைகளால் காரணகாரியத் தொடர்புடையதாய் போலியற்றதாய், நோக்கங்கள் மாறுபடாததாய், வளர்ச்சி அடைவதற்கான மாற்றங்களை ஏற்று, அது சார்ந்த சமுதாயத்தையும் அதன் வழி மனித சமுதாயத்தையும் வளம்படுத்தி வருகின்றதென்பதால், நாவலர் மரபு என்னும் பெரும் நதி வற்றாது தொடர்ந்து ஓடி, மனித சமுதாயத்தை வளம்படுத்திக் கொண்டிருக்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

---

47. மேலது பிரசுரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னிணைப்பு - 1

ரூபா 12
இலங்கை
முத்திரை
10261
1.2.52

# உண்மைப் பிரதி

இல: 10261

## தத்துவ நியமனம்

யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணைச் சைவப் பிரகாச வித்தியாசாலைத் தாபகரும் அதிபதியும் ஆகிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள் தாம் 1872 ஆம் ஆண்டு மாசி மாதம் 17 ஆம் தேதி 16 ஆம் இலக்கத்தில் நொத்தாரீஸ் கா. சின்னக் குட்டி முன்னிலையிலும், 1887 ஆம் ஆண்டு ஆனி மாதம் 6 ஆம் தேதி 67 ஆம் இலக்கத்தில் நொத்தாரீஸ் சு. கந்தப்பசேகரர் முன்னிலையிலும், 1871 ஆம் ஆண்டு ஆடி 29 ஆம் தேதி 70 ஆம் இலக்கத்தில், க. விசுவநாதன் முன்னிலையிலும் எழுதுவித்த உறுதிகளில் **தமக்குப் பின் இவ்வித்தியாசாலைத் தருமத்தையும் அதைச் சேர்ந்த தருமங்களையும் தம்முடைய சீடபரம்பரையிலுள்ளவர்களே நடத்திவரல் வேண்டுமென்று** எழுதுவித்திருக்கின்றபடியாலும்,

மேற்படி நாவலரவர்கள் சிவபதம் அடைந்த பின் அப் பாடசாலை அவர்களுடைய சீடராகிய ந.க. சதாசிவப்பிள்ளை 31 வருஷகாலம் இவ்வித்தியாசாலையையும் இந்தியாவில் சிதம்பரத்திலே மேற்படி நாவலரவர்களால் தாபிக்கப்பட்ட வித்தியாசாலையையும் நடாத்தி வந்திருக்கின்றபடியாலும்,

மேற்படி நாவலரவர்களுடைய உரிமைக்காரார் சகலரும் தாங்கள் இவ்வித்தியாசாலைத் தருமங்களை நடத்த முயற்சி செய்யாமல் அந்தச் சதாசிவம்பிள்ளையையே பராமரிப்புக்காரனாகக் கண்டு, நொத்தாரிஸ் மு. கந்தசாமி முன்னிலையில் 1879 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 29 ஆம் தேதியிலும் 1880 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 11 ஆம் தேதியிலும் 18 ஆம் தேதியிலும் முறையே 1608, 1678, 1679, ஆம் இலக்கங்களில் தொடரா முறிகள் எழுதிக் கொடுத்திருக்கின்றபடியாலும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்படி நாவலரவர்களுடைய ஆதனத்துக்கு உரிமைத் தத்துவம் பெற்ற தத்துவக்காரர் இவ்வித்தியாசாலைக்குரிய கிட்டங்கி வாடகை அறவிடும் பொருட்டு, யாழ்ப்பாணம் றெற்கு வெஸ்துக் கோட்டில் 10934 ஆம் இலக்கத்தில் வழக்கு வைத்த போது, **உரிமைத்தத்துவகாரருக்கு இவ்வித்தியாசாலையை நடத்தும் அதிகாரம் இல்லையென்று கோடு தீர்த்திருக்கின்றபடியாலும்,**

வீ. முத்துக்காளிச் செட்டியார் என்பவர் இவ்வித்தியாசாலைக்குச் சரியான பராமரிப்புக்காரன் இங்கில்லையென்றும், கோடு சிலரை நியமித்துத் தரவேண்டும் என்றும் 1273ஆம் இலக்கத்தில் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் வழக்கு வைத்தபோது, அது 1882 ஆம் ஆண்டில் ஆகஸ்து மாசத்து 4475 ஆம் 4477 ஆம் இலக்க கவர்ண்மென்டு கஜற் பத்திரிகையில் வெளிப்படுத்தப்பட்டும், ஒரு உரிமைக்காரராவது பிறராவது போய் வெளிப்படாமையினாலும்,

மேற்படி 12732 ஆம் இலக்க வழக்கிலும் ந.க. சதாசிவப் பிள்ளை என்பவரே இவ்வித்தியாசாலைத் தருமத்துக்கு நியாசதாரி (Trustee) யாக நியமிக்கப்பட்டிருக்கின்றபடியாலும்,

மேற்படி ந.க. சதாசிவப்பிள்ளை தமக்குப் பின் இவ்வித்தியாசாலையையும், அதனோடு சேர்ந்த தருமங்களும் நடக்க வேண்டிய விஷயத்தைக் குறித்து 1910 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 20 ஆம் தேதி ஒரு மரணசாசனம் எழுதியிருக்கின்றபடியாலும்,

இந்த மரணசாசனம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் ஒப்பனை பண்ணப்பட்டபோது 2476 ஆம் இலக்க வழக்கில் ஒரு தத்துவம் பிறந்திருக்கிறபடியாலும்,

அந்த மரணசாசனத்தில் யாழ்ப்பாணத்தில் ஆறுமுகநாவலரவர்களாற்றாபிக்கப்பட்ட சைவப் பிரகாசவித்தியாசாலையையும் அதனோடு சேர்ந்த தருமங்களையும் நடத்தும் பொருட்டும், இவைகள் என்றென்றைக்கும் நடத்துதற்கு வேண்டிய விதானங்களைச் செய்து வைக்கும் பொருட்டும் நல்லூர் தம்பு கைலாசப்பிள்ளை என்பவரை நியமித்திருக்கிறபடியாலும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனாலே சகலருமறிக.

யாழ்ப்பாணம் நல்லூர் தம்பு கைலாசபிள்ளை ஆகிய நான் ந.க. சதாசிவப்பிள்ளை என்பவர் 1910 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 20 ஆம் தேதி நாவலரவர்கள் வண்ணார் பண்ணையிற்றாபித்த சைவப்பிரகாச வித்தியாசாலையையும் அதனோடு சேர்ந்த பிறதருமங்களும் என்றென்றைக்கும் நடைபெறும் பொருட்டுச் செய்யும் விதானங்களாவன:

1. இவ்வித்தியாசாலையை நடத்துகிற அதிகாரிகள், இவ்வித்தியாசாலையிலாவது ஆறுமுக நாவலரவர்கள் மாணாக்கர் பரம்பரையிலாவது கல்வி கற்றவராயும் வேளாண் வருணத்தவராயும் சைவாசாரமுடையவராயும் இருத்தல் வேண்டும்.

2. இவர்கள் வண்ணார் பண்ணைச் சைவப்பிரகாச வித்தியாசாலையையும், அதனோடு சேர்ந்த வித்தியாசாலைகளையும் பிறதமருங்களையும் ஆறுமுகநாவலரவர்கள் இயற்றியனவும் அச்சிட்டனவும் பிரமாணமாகக் கொண்டனவுமாகிய நூல்களுக்குச் சிறிதும் மாறுபாடில்லாமல் நடத்தல் வேண்டும்.

3. இவர்கள் வருஷந்தோறும் வித்தியாசாலைப் பிள்ளைகளைப் பரீக்ஷிப்பித்து தை மாசங்களில் பிரசித்த சபையில் பிள்ளைகளுக்கு உபகாரங் கொடுத்தல் வேண்டும்.

4. இவர்கள் வித்தியாசாலையில் தமிழையே முக்கியமான பாஷையாகக் கற்பித்தல் வேண்டும்

5. இவர்கள் வித்தியாசாலைப் பிள்ளைகளுக்கு இயன்றளவு சைவ சமயாசாரமும் சைவ சமயபத்தியும் வரும்படி செய்தல் வேண்டும்.

6. இவர்கள் பணமிருந்தால் விவேகமுடைய சைவப்பிள்ளைகளுக்கு அன்னவஸ்திரமுங்கொடுத்துக் கல்வி கற்பிக்கலாம்.

7. பிள்ளைகள் சேர்ந்தால் இவர்கள் சமய சாத்திரங்களும் ஞானசாத்திரங்களும் கற்பிக்கலாம்.

8. இவ்வித்தியாசாலையைத் தமிழ்க் கல்விக்கும் சைவசமய விருத்திக்குமாகவே உண்டாக்கினதாக இவ்வித்தியசாலையின் முதலாவேதனத்தில் நாவலரவர்கள் சொல்லியிருக்கின்றபடியால், இவர்கள் வித்தியாசாலைச் செலவுக்கு மேலே வருமானமிருந்தால் சைவப்பிரசாரகர்களை ஏற்படுத்திச் சமயப்பிரசங்கமும் செய்விக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார், திருநாவுக்கரசு நாயனார், சுந்தரமூர்த்தி நாயனார், மாணிக்கவாசக சுவாமிகள், ஆறுமுக நாவலர் என்னும் ஐவருடைய குருபூசைகளையும் தவறாமல் நடாத்திவரல் வேண்டும்.

10. கோயிற் பூசை, திருவிழா முதலானவைகளையும் அக்கோயில், வருமானத்தைக் கொண்டு அதற்குத்தக்கபடி ஒழுங்காகவும் சிவாகம விதிப்படியும் நடத்திவரல் வேண்டும்.

11. இச்செலவு நீக்கி மிச்சவரும்படியிலிருந்து இவ்வித்தியாசாலைக்காக நிலங்கள் வாங்கி விடலாம்.

12. இவர்கள் எந்த ஆதனத்தையாவது ஈடேனும் ஒற்றியேனும் வைக்கக்கூடாது. மூன்று வருடத்துக்கு மேற்பட்ட காலத்துக்குக் குத்தகைக்குக் கொடுக்கவும் கூடாது.

13 இவர்கள் ஒவ்வொரு மாசமும் கணக்கெழுதத் தொடங்கு முன் கைலாசபிள்ளையார் கோயிலுக்குப் போய்ச் சந்நிதியிலே அக்கோயில் குருக்கள் முன்னிலையில் நின்று, ''யாழ்ப்பாணம் சைவப்பிரகாச வித்தியாசாலைக்கும் அதைச் சேர்ந்த தருமங்களுக்கும் உரிய பொருள் சிவத்திரவியமாகும். அதை நான் அபகரிக்கமாட்டேன். பொய்யான கணக்கு எழுதினாலும் கடவுள் என்னைத் தண்டிப்பாராக. என் மனமும் பஞ்சபூதங்களும் திக்குப்பாலகர்களும் சாட்சியாய் இருக்குக'' என்று சத்தியஞ் செய்து கொள்ளுதல் வேண்டும்.

14. ஒவ்வொரு வருஷக்கணக்கும் தை மாசங்களில் ஆவேதனத்தோடு அச்சிட்டு வெளிப்படுத்தல் வேண்டும்.

15. இவ்வித்தியாசாலை உபாத்தியாயர்கள் சேர்ந்தாவது சைவக் குருமார் பத்துப்பேர் சேர்ந்தாவது கவர்ண் மெண்டாராவது கேட்டால் அவர்களுக்குக் கணக்குக் காட்டல் வேண்டும்.

16. இவர்கள் தமக்குப்பின் இந்த இடத்துக்கு மேலே (முதலாம் பிரிவிற்) சொல்லப்பட்ட இலக்கணமுடையவராக ஒருவரைத் தெரிந்து நியமித்துக் கொள்ளுதல் வேண்டும். அப்படி நியமிக்காமல் சடுதியில் இறந்து விடின், நாவலரவர்களுடைய சிதம்பரம் சைவப்பிரகாச வித்தியாசாலையை அந்தக்காலத்தில் நடத்துகின்றவர், மேலே (முதலாம் பிரிவிற்) சொல்லப்பட்ட இலக்கண முடையவராக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நியமித்தல் வேண்டும். அவரும் அது செய்யாவிட்டால், சைவர்களா யுள்ள தமிழ்ப் பண்டிதர்களும் சைவக் குருமாருங் கூடி மேலே பிரிவிற் சொல்லிய இலக்கணமுடையவராக ஒருவரை நியமிக்கலாம்.

17. இவ்வித்தியாசாலையும் சிதம்பர சைவப்பிரகாச வித்தியாசாலையும் ஆறுமுகநாவலரவர்களாகிய ஒருவருடையவைகளே யாதலால், இவ்வித்தியாசாலையும் அவ்வித்தியாசாலையும் ஒன்றேயாம். ஆதலால், இவர்கள் இவ்வித்தியாசாலைக்கு வேண்டுங்காலத்தில் அவ்வித்தியாசாலைப் பணத்தில் வாங்கவும் அதற்கு வேண்டுங் காலங்களில் இவ்வித்தியாசாலைப் பணத்திலிருந்து கொடுக்கவும் இவர்களுக்கு அதிகாரமுண்டு.

18. இவர்கள் வேண்டுமானாற்றங்கள் செலவின் பொருட்டு (வித்தியா சாலைப் பணத்தில் 20ரூபாவும் கோயிற் பணத்திலே 5 ரூபாவுமாக) மாசம் 25 ரூபாவுக்கு மேற்படாத தொகை எடுத்துக் கொள்ளலாம். இப்போதுள்ள அசைவற்ற ஆதனங்களிலும் பார்க்க இன்னும் அசைவற்ற ஆதனங்கள் வாங்கப்படுங்காலங்களில் அவற்றின் வரும்படியில் பத்துக்கு இரண்டு வீதம் இவர்கள் இன்னும் எடுத்துக் கொள்ளலாம்.

19. ஒருவரைத் தமக்குப் பின் ரிறஸ்ரியாக நியமித்தவர் தம்முடைய காலத்தில் அவரை விலக்கலாம்.

**உறுதிப்படுத்திய திகதி** **(ஒப்பம்)** **க.ச. வீரவாகு**
27.3.1919
K.S. Veravage
**பிரசித்த நொத்தாரிஸ்**

**குறிப்பு:-** இவ்விதானங்களுக்கு மாறுபாடில்லாமல் நடாத்த வேண்டுமென ஒவ்வொரு மனேஜர்மார் நியமன உறுதிகளிலும் காட்டடப்பட்டிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA
JPL



# ஆய்வு நூல் பட்டியல்

## 1. நூல்

அரவிந்தன். மு.வை.,

1968 உரையாசிரியர்கள், மாணிக்கவாசகர் நூலகம், சிதம்பரம்.

அருணாசலக் கவிராயர்.,

1934 ஸ்ரீலஸ்ரீ நல்லூர் ஆறுமுக நாவலர் சரித்திரம், இரண்டாம் பதிப்பு, கலாநிதியந்திரசாலை, பருத்தித்துறை.

அம்பலவாண நாவலர்.,

1963, சற்குரு மணிமாலை, சைவப்பிரகாச யந்திர சாலை, யாழ்ப்பாணம்.

ஆறுமுகநாவலர்.,

1954, சைவசமய நெறி மூலமும் புத்துரையும். வித்தியாநுபாலன யந்திரசாலை, யாழ்ப்பாணம்.

1937, யாழ்ப்பாணச் சமயநிலை, சைவ வித்தியா விருத்திச் சங்க வெளியீடு, யாழ்ப்பாணம்.

இராமலிங்கம்.மு.,

1971, நாவலருக்கு முந்திய கல்வி முயற்சிகள் மறுபிரசுரம், ஈழநாடு, யாழ்ப்பாணம்.

1971 நாவலரின் இந்தியப் பிரயாணங்கள் மறு பிரசுரம், ஈழநாடு, யாழ்ப்பாணம்.

கணேசையர்,சி.,

1939, ஈழநாட்டுத் தமிழ்ப்புலவர் சரித்திரம், திருமகள் அச்சகம், சுன்னாகம்.

கலியாண சுந்தரனார், வி.,

1911, வித்தியாபிமானிகளுக்கு விக்கியாபன நிரசரனம், வித்தியாநுபாலயந்திரசா சென்னப் பட்டணம்.

1968, சதாவதானி மேலைப்புலோலி, நா, கதிரைவேற் பிள்ளை அவர்கள் புரோக்கீரஸ்ஸிவ் அச்சுக் கூடம், சென்னை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PROF. V. SIVASAMY
UNIVERSITY ... JAFFNA

கனகரத்தின உபாத்தியாயர், வே.,
1882, ஸ்ரீலஸ்ரீ நல்லூர் ஆறுமுக நாவலர் சரித்திரம், சைவப்பிரகாச யந்திரசாலை, யாழ்ப்பாணம்.

கனகரத்தினம், வை. இரா.,
1993, ஆறுமுகநாவலர் வரலாறு ஒரு புதிய பார்வை, மீரா அச்சகம், சென்னை.
1994, வே. கனகரத்தின உபாத்தியாயரின் ஸ்ரீலஸ்ரீ நல்லூர் ஆறுமுகநாவலர் சரித்திரம், புவனேஸ்வரி அம்மன் ஆலய வெளியீடு, ஏழாலை.
1996, சி. செல்லையா பிள்ளையின் யாழ்ப்பாணம் நல்லூர் ஆறுமுக நாவலர் அவர்களின் சரித்திரச் சுருக்கமும் அவர்கள் இயற்றியருளிய தனிப் பாமாலையும், கவிக்குயில் அச்சகம், சென்னை.
1997, நாவலர் உரைத்திறன், கார்த்திகேயன் அச்சகம், கொழும்பு.

குலரத்தினம், க.சி.,
1989, செந்தமிழ் வளர்த்த செம்மல்கள், சுடரொளி வெளியீட்டகம், யாழ்ப்பாணம்.

கைலாசபிள்ளை.தா.,
1919 ஆறுமுகநாவலர் சரித்திரம், வித்தியாநுபாலன யந்திரசாலை, சென்னைப்பட்டணம்.
1954 ஆறுமுகநாவலர் பிரபந்தத்திரட்டு, வித்தியாநுபாலன யந்திரசாலை, யாழ்ப்பாணம்.

கைலாசபதி.க.,
1986, ஈழத்து இலக்கிய முன்னோடிகள், மக்கள் வெளியீடு, சென்னை.

சச்சிதானந்தம், வை.,
1983, மேலை இலக்கியச் சொல்லகராதி, மக்மெலன் இந்தியா வெளியீடு, சென்னை.

சிவதம்பி,கா.,
1978, ஈழத்து தமிழ் இலக்கியம், அன்னை அச்சகம், சென்னை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவசிதம்பர ஐயர்.கா..

1908, கார்த்திகேயர் புலவர் சரித்திரம், சோதிடப் பிரகாச அச்சுயந்திரசாலை, கொக்வில்.

சிவபாத சுந்தரனார், நா.,

1977, நாவலர் கோட்டம் முத்துத்தம்பிப் பிள்ளை, திருமகள் அழுத்தகம், சுன்னாகம்,

சுந்தரமூர்த்தி, இ.,

1985, பரிமேழலகர் திருக்குறள் உரைத்திறன், ஐந்திணைப்பதிகம், சென்னை.

செந்திநாதன்,செ.,

1959, மூன்றாவது கண், ஆனந்தா அச்சகம், யாழ்ப்பானம்.

செல்லையா பிள்ளை, சி.,

1914, ஆறுமுகநாவலர் சரித்திரச் சுருக்கமும் அவர்கள் இயற்றியருளிய தனிப்பாமாலையும், மீனாம்பாள் அச்சகம், கொழும்பு.

தனஞ்சயராசசிங்கம், ச.,

1969, நாவலர் பணிகள், நேஷனல் பிறின்டர்ஸ், கண்டி.

தாமோதரம்பிள்ளை, சி.வை.,

சைவமகத்துவம் விவிலிய விரோதம், வர்த்தமான தரங்கினி அச்சுக்கூடம், சென்னைப்பட்டணம்.

திருவாவடுதுறை ஆதீன வெளியீடு,

1962, அரசவனத்து அறநிலையம், ஸ்ரீநமசிவாய மூர்த்தி அச்சகம், திருவாவடுதுறை.

தில்லைநாதன், சி.,

1967, வள்ளுவன் முதல் பாரதிதாசன் வரை, தமிழ்ப்புத்தகாலயம்.

1997 இலங்கைத் தமிழ் இலக்கியம், தேசிய இலக்கியப் பேரவை வெளியீடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழனியப்பன், வெ, பழனி.,

1984 தமிழ்ப்புலவர் வரலாற்றுக் களஞ்சியம், பகுதி, அண்ணாமலைப் பல்கலைக்கழக வெளியீடு, அண்ணாமலை நகர், சிதம்பரம்.

1989 தமிழ்ப்புலவர் வரலாற்றுக் களஞ்சியம், பகுதி-3, அண்ணாமலைப் பல்கலைக்கழக வெளியீடு, அண்ணாமலை நகர்.

பாலசுப்பிரமணியம்.,

திருப்புத்தூர் புராணம் (நாட்டுப்படலம் நகரப்படலம்), அச்சில் வெளிவராத ஆய்வுக் கட்டுரை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

மனோன்மணி. ச.,

1983, சி.வை. தாமோதரம்பிள்ளை, ஓர் ஆய்வு நோக்கு, ஆசீர்வாத அச்சகம், யாழ்ப்பாணம்.

முத்துக்குமாரசுவாமி. கு.,

குமாரசுவாமிப்புலவர் வரலாறு, ஸ்ரீசண்முகநாத அச்சுக்கூடம், யாழ்ப்பாணம்.

விநாயக மூர்த்திச் செட்டியார்.,

கதிரை யாத்திரை விளக்கம், விர்த்தாந்த களஞ்சிய அச்சுக்கூடம், நாகைபட்டணம்.

வேங்கடசாமி, மயிலை, சீனி.,

1967, பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ் இலக்கியம், சாந்தி நூலகம், சென்னை,

ஸ்ரீகாந்தா அச்சக வெளியீடு.,

1969, ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பாடிய கதிர்காம முருகன் கீர்த்தனைகள், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2. கட்டுரை**

கணபதிப்பிள்ளை, சி,

1957, "உரையாசிரியர் சரித்திரம்", வாதவூரடிகள் புராணமும்விருத்தியுரையும், வித்தியாநுபாலன யந்திரசாலை, சென்னை.

1969 "நாவலரும் புராணபடனமும்", நாவலர் மாநாட்டு விழா மலர், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சபை வெளியீடு.

1971, யாழ்ப்பாணத்தின் மூன்று சமயக் கண்கள், சைவாசிரியர்களைத் தோற்றுவித்த திரு.ச. அருணாசலம் அவர்கள் காரைநகர் சைவ மகாசபை வெளியீடு.

கனகரத்தினம், இரா.வை.,

1992 / 93, பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஈழத்தில் தோன்றிய சைவசமய இயக்கங்கள், (1840 - 1858) இந்துதருமம், இந்து மாணவர் சங்க வெளியீடு, பேராதனைப் பல்கலைக்கழகம்.

1993/94 பத்தொன்பதாம் நூற்றாண்டில் தோன்றிய சைவசமய இயக்கங்கள், (1854-1870) இந்துமாணவர் சங்க வெளியீடு, பேராதனைப் பல்கலைக்கழகம்.

1996, சுவாமிநாத பண்டிதர் - ஓர் அறிமுகம், பண்பாட்டியல், பண்பாட்டு ஆய்வுக் கழகம், பேராதனை.

கைலாசபதி, க.,

1979, ஆறுமுகநாவலரும் சபாபதி நாவலரும், நாவலர் நூற்றாண்டு மலர், ஆறுமுக நாவலர் சபை வெளியீடு, யாழ்ப்பாணம்.

சிவத்தம்பி, கா.,

1972 இயக்கவாதிகளின் சொத்து, நாவலர் பெருமான் 150 வது ஐயந்தி விழா மலர், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபை வெளியீடு, கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனஞ்சயராச சிங்கம், ச.,

1972, நாவலரும் துவைனம் துரையும், நாவலர் பெருமான் 150 வது ஐயந்தி விழா மலர், ஆறுமுகநாவலர் சபை வெளியீடு, கொழும்பு.

தில்லை நாதன், சி.,

1972, நாவலரும் தமிழகமும், நாவலர் பெருமான் 150 வது ஐயந்திவிழாமலர், ஸ்ரீலஸ்ரீஆறுமுகநாவலர் சபை வெளியீடு, கொழும்பு.

1979, சீர்திருத்தவாதி நாவலர், நாவலர் நூற்றாண்டு மலர், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சபை வெளியீடு, யாழ்ப்பாணம்.

Dennis Hudson, Winning souls for Siva Siva Arumuganavalar's Transmission of the Saiva Religion,

பூலோகசிங்கம், பொ.

1989, நாவலர் பரம்பரை, பண்டிதமணி நினைவு மலர், பண்டிதமணி நூல் வெளியீட்டுச் சபை, யாழ்ப்பாணம்.

### *3. நினைவு மலர்*

1938, நாவலர் நினைவு மலர், ஈழகேசரி வெளியீடு, திருமகள் அச்சகம், சுன்னாகம்.

1969, நாவலர் மாநாட்டு மலர், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சபை வெளியீடு, கொழும்பு.

1972, நாவலர் பெருமான் 150 வது ஐயந்திவிழா மலர், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபை வெளியீடு, கொழும்பு.

1975, பாவலர் துரையப்பாபிள்ளை நூற்றாண்டு விழாமலர், நூற்றாண்டு விழாச்சபை வெளியீடு, திருமகள் அச்சகம், சுன்னகம்.

1979, நாவலர் நூற்றாண்டு மலர், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சபை வெளியீடு, யாழ்ப்பாணம்.

1989, பண்டிதமணி நினைவு மலர், பண்டிதமணி நூல் வெளியீட்டுச் சபை, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**4. பத்திரிகை**

| | |
|---|---|
| இந்துசாதனம், | சித்திரை 1894<br>ஆவணி 1902 |
| இலங்காபிமானி, | 6 தை 1865 |
| ஈழகேசரி, | 26 மாசி 1939 |
| கலாசிந்தாமணி, | மார்கழி 1916 |
| சைவ உதய பானு, | சித்திரை 1880<br>பங்குனி 1882<br>24 பங்குனி 1883 |
| தினவர்த்தமானி, | 1868 |
| கலைக் கண், . | 10 பங்குனி 1971 |
| புதுமை இலக்கியம், | கொழும்பு 1962 |
| Ceylon Patriot | February 1863 |
| Hindu Organ | April 1819 |
| Liteary Mirror | May 1853 |

**5. ஆவேதனங்கள்**

1884-18 யாழ்ப்பாணம் சைவப்பிரகாச வித்தியாசாலை முதலிருபது வருசத்து ஆவேதனம்.

1868 சிதம்பரம் சைவப்பிரகாச வித்தியாசாலை ஆவேதனம், கலாநிதியச்சுயந்திரசாலை, சென்னைபட்டணம்.

1882, கீரிமலைச் சிவன் கோயில் ஆவேதனம், சைவப்பிரகாச யந்திரசாலை, யாழ்ப்பாணம்.

1923-1958, சைவ வித்தியாவிருத்திச் சங்க வருடாந்த அறிக்கைகள், வித்தியாவிருத்திச் சங்க வெளியீடு.

1930 Hindu Board of Education Report

1958 Hindu Board of Education Report

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெயர் அகரநிரல்


| | |
|---|---|
| அம்பலவான நாவலர்., வட்டுக்கோட்டை | 6,11, 55,77-73 |
| அம்பிகை பாகன், | 6,42 |
| அருணாசல உபாத்தியார், | 66, 79-87 |
| அருணாசலம் பிள்ளை, வல்வை த. | 67 |
| அருணம்பல முதலியார், | 64 |
| ஆறுமுகம் பிள்ளை,வை | 6,12,13,38-39,53 |
| ஆறுமுகம் பிள்ளை, | 67 |
| ஆறுமுக உபாத்தியார், சு. உடுப்பிட்டி | 68 |
| ஆறுமுக தேசிகர், குன்றக்குடி | 53 |
| ஆறுமுகச் செட்டியார், | 6,22 |
| இரத்திரேசுவர ஐயர், உடுவில் | 24 |
| இராசரத்தினம், சு. | 67,92-99 |
| இராமசாமிப்பிள்ளை, | 49 |
| இராமநாதன் பொன், | 66, 70, 87-92 |
| இராமலிங்கசுவாமி, ஈசானுமடம் | 51 |
| இராமலிங்க வன்னியனார், | 21 |
| ஏரம்பையர் த. | 6,21,40 |
| கணபதிப்பிள்ளை, சி. | 46,67,76,79,81,103-108 |
| கணபதிப்பிள்ளை, வ. | 86 |
| கணபதிப்பிள்ளை, ஐயார் சி. | 81,84 |
| கனேஸ் ஐயர் | 43,47 |
| கதிரைவேற்பிள்ளை, கு. | 55, 53-65, 66 |
| கதிரைவேற்பிள்ளை, நா. | 31,32,42,73-79 |
| கந்தப்பிள்ளை, வி. | 6,39,47 |
| கனகசுந்தரம்பிள்ளை, தி.க. | 73 |
| கனகரத்தின உபாத்தியார், | 6,42 |
| கனகரத்தின முதலியார், | 71 |
| காசிநாதபிள்ளை, பச்சிலைப்பள்ளி, | 6, 39-40 |
| கார்த்திகேய ஐயர், காரைதீவு, | 55, 57-58 |
| கார்த்திகேய ஐயர் (புலவர்) நல்லூர் | 9,44,55-56 |
| கார்த்திகேய முதலியார் (மாதகல்) | 34 |
| குமாரசுவாமி தம்பிரான், பழநி | 13,53 |
| குமாரசுவாமிப்புலவர், அ. | 21,23-26, 40,47,60,70,103 |
| குமாரசுவாமிப்புலவர் வ. | 55 |
| கைலாச பிள்ளை, த. | 6,15-18, 79, 103 |
| சங்கரநாராயணபிள்ளை | 6,42 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| சங்கர பண்டிதர் | 55,56-59 |
| சண்முகவேலர், ப. | 49 |
| சச்சிதானந்தம் வை, | 1 |
| சதாசிவப்பிள்ளை, ந.க. | 6, 8-9, 73 |
| சதாசிவம், ஆ. | 1 |
| சபாபதிச் செட்டியார், சு. | 6, 22 |
| சபாபதி நாவலர், சு. | 33-34, 45, 73 |
| சபாரத்தின முதலியார், ச. | 6, 35-37 |
| சரவண முத்துப்பிள்ளை, ச. ஊரெழு | 6, 42-43, 44 |
| சிங்காரவேலு முதலியார் | 34 |
| சிவகுருநாதபிள்ளை, வை.சி.சி. | 11, |
| சிவசம்புப்புலவர், அ. உடுப்பிட்டி | 55, 56 |
| சிவப்பிரகாச பண்டிதர் | 6,40-41 |
| சிவபாதசுந்தரம். சு., | 67 |
| சிவசிதம்பர ஐயர் | 59 |
| சிவராமச் செட்டியார் (சிதம்பரம்) | 34 |
| சிவானந்தையர், சி., | 22 |
| சின்னத்தம்பி, வீ. பொன்னாவெளி | 6,41 |
| சின்னத்தம்பி செட்டியார், சு., | 6,22 |
| சுப்பிரமணிய உபாத்தியார், | 6,19 |
| சுப்பிரமணிய (ஓதுவார்) | 11,53,54 |
| சுப்பிரமணிய பிள்ளை வி. | 6,49 |
| சுப்பையர், க., | 21,40 |
| சுப்பையாபிள்ளை வித்துவான் | 47 |
| சுவாமிநாத பண்டிதர் | 11,66 |
| சுவாமி நாதையர், மு., | 6,23,70 |
| செந்திநாதையர், சி., | 6,24,26-32,73 |
| செல்லப்பா பிள்ளை தா. | 55,56 |
| சேனாதிராச முதலியார், | 2 |
| சொக்கலிங்கச் செட்டியார் - காரைக்குடி | 11,49,52 |
| சோமஸ்கந்த பண்டிதர், ஆ.மு. | 11,21 |
| ஞானப்பிரகாச முனிவர் | |
| ஞானப்பிரகாச தேசியர். தி., | 67 |
| தணிகாசலமுதலியார் - திருமயிலை | 49,54 |
| தண்டபாணி ஐயர் | 47 |
| தம்பையாப்பிள்ளை, சி. | 21 |
| தம்பையாப்பிள்ளை, வி. | 24 |
| தவசிமுத்து நாடார் | 49 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாமோதரம் பிள்ளை சி.-வதிரி 44,59,62
தாமோதரம்பிள்ளை, சி.வை, 55, 59-63,68
தியாகராசப்பிள்ளை, கா. 6,42,73
திருஞான சம்பந்தப்பிள்ளை க. சுழிபுரம்
திருஞானசம்பந்தப்பிள்ளை வை., 32,42
தில்லைநாதபிள்ளை, ந. ச., 6,7-8
தில்லைநாத நாவலர் - புலோலி 67
தில்லைநாதன். சி., 78
தில்லையம்பலபிள்ளை வண்ணை 42
துரைசாமிதேவர் 51
துரைசாதேவர் 54
துரையப்பாபிள்ளை, பாவலர் 99-102
துவையினம்துரை 66
தொல்காப்பியர் 1
நச்சினார்க்கினியர் 1
நடராசையர் - இணுவில் 6, 18-19
நமச்சிவாயத்தம்பிரான் 49,51
நமச்சிவாய தேசிகர் 51,67
நமச்சிவாயப் புலவர் 53
நமச்சிவாயபிள்ளை
நாகமுத்துப்புலவர் 81
நாகலிங்க சுவாமிகள், சங்கானை 21
நாகலிங்கம் , அப்புக்காத்து 55
நாராயணசாமி - பின்னத்தூர் 11
நாராயணச் செட்டியார் 51
நாராயணபிள்ளை,பொ., 59
நிருத்தராஜ தீட்சிதர், ஐ., 49
பசுபதிச் செட்டியார் சி.த.மு 6, 20-21,40
பண்டார ஓதுவார் 53
பாண்டித்துரைத் தேவர் - 51
பாலசுந்தர முதலியார், மயிலை 34
பூபாலபிள்ளை ச. மட்டக்களப்பு 68
பெரியதம்பிப்பிள்ளை 24,25
பொன்னம்பல பிள்ளை, ச., - சாவகச்சேரி 11,34,47, 103
பொன்னம்பலபிள்ளை, நா.ச. 6,9-12,15,42,45,46,47,52,53,103
பொன்னுசசாமி ஐயர், சி., 45
பொன்னுசசாமி தேவர் 54
பொன்னுத்துரை ஐயர்,சி., 6,11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| பொன்னோதுவார் | 11, 52-53 |
| மாணிக்கத்தியாகராசா, வண்ணை | 24 |
| மாணிக்கப்பிள்ளை | 42 |
| மயில் வாகனம், பண்டிதர், | |
| மாரிமுத்து. இ., | 6,21 |
| முத்துக்குமாரக் கவிராயர் | |
| முத்துச்சாமிக்குருக்கள் | |
| முத்துத்தம்பிப்பிள்ளை - ஆ., | 44,55,69-71 |
| முத்தையாத் தம்பிரான் | 49,54 |
| முத்துவேலாயுத பிள்ளை - சிதம்பரம் | 34 |
| முருகேச பண்டிதர் | 55,60,63,69,71 |
| வண்றொண்டர் செட்டியார் | 49,52 |
| வயித்திலிங்கச் செட்டியார், மந்துவில் | |
| விசுவநாதபிள்ளை,வை (கறோல்) | 55,62-63 |
| விசுவநாதையர், இ. | 22 |
| விசுவலிங்கப்பிள்ளை, ச. | 54 |
| விநாயக மூர்த்திச் செட்டியார் | 6,45 |
| வேலுப்பிள்ளை,க., | 6,19 |
| வேற்பிள்ளை,ம.க., | 6,11,45-48,71 |
| வேன்மயில்வாகனச் செட்டியார் | 6,22-23 |
| வைத்திலிங்கபிள்ளை, ச.வல்வை, | 55,67-69 |
| வைத்திலிங்கப்பிள்ளை. வை., | 15 |
| வைத்திலிங்கம் - ஊரத்தூர்கோவை | 11,47 |
| வைத்திலிங்கம், இ. | 49 |
| .வைத்திலிங்கச் செட்டியார் | 67 |
| றொபின்சன் பாதிரியார். இ. ஜெ., | 55 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல் இதழ் அகரநிரல்


| | |
|---|---|
| அகநிர்ணயம், | 57 |
| அகத்தியர் தேவாரத்திரட்டு | 9 |
| அகபஞ்சசட்டி-தமிழ் உரை | 57 |
| அகோரசிவாசாரியார் பத்ததி | 72 |
| அத்வைத சிந்தனை | 106 |
| அநுட்டானவிதி | 57 |
| அபிதானகோசம் | 70 |
| அகரதாரதம்மியம் | 33 |
| அருணாசலமான்மியம் | 72 |
| அவுரோதவுந்தியாருரை | 9 |
| அன்பினைந்தினை | 106 |
| ஆங்கிலம் - ஆங்கிலம் - தமிழ் அகராதி | 70 |
| ஆசௌச தீபிகை | 13 |
| ஆத்திசூடி - உரை | 70,91 |
| ஆத்திசூடி மந்திர விளக்கம் | 91 |
| ஆரோக்கிய தீபம் | |
| ஆறுமுக நாவலர் துதி | 52 |
| ஆறுமுகநாவலர் சகதம் | 35 |
| ஆறுமுக நாவலர் சரித்திரம் | 17,42,106 |
| ஆறுமுகநாவலர் சரித்திரம் - ஸ்ரீலஸ்ரீ, நல்லூர் | 17 |
| ஆறுமுகநாவலர் பிரபந்தத்திரட்டு, | 17 |
| இங்கித மாலை | 53 |
| இணுவையந்தாதி | 42 |
| இந்து சாதனம் | 11, 16, 21, 30, 35 |
| இரகுவம்சம்-பதிப்பு | 60 |
| இரகுவமிச சரிதாமிர்தம் | 25 |
| இராமலிங்கபிள்ளை பாடல்கள் ஆபாசன தர்ப்பணம் | 76,68 |
| இருசகோதரர்கள் | 107 |
| இருவர் யாத்திரை | 106 |
| இலங்காபிமானி | 63 |
| இலக்கணக் சந்திரிகை | 25 |
| இலக்கண விளக்கம் | 62 |
| இலக்கணச் சுருக்கம் | |
| இலக்கண விளக்கம் | 62 |
| இலக்கியக் கண்ணாடி | 63 |
| இலக்கியவழி | 106 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| இலக்கியம் கற்பித்தல் | 106 |
| இலங்கைச்சரித்திர சூசனம் | 13 |
| இலங்கைப் பூமிசாத்திரம் | |
| இறையனார் அகப்பொருள் உரை | 62 |
| ஈச்சுர நிச்சயம் | 36 |
| ஈழமண்டல சதகம் | 47 |
| ஈழமண்டலப்புலவர் சரித்திரம் | 70 |
| எங்கள் தேச நிலை | 100 |
| எழுத்து என்னுஞ் சொல்லுக்கு இட்ட வைரக்குப் பாயம் | 34 |
| ஏகாதசிப்புராணம் | 76 |
| ஏழாம் வாசகம் | 67 |
| ஒட்டிசுட்டான் சிவபெருமான் பெயரில் ஆசிரிய வருத்தம் | 36 |
| **கண்ணகி கதை** | 25 |
| **கண்ணகி தோத்திரம்** | 88 |
| **கட்டளைக்கலித்துறை** | 52 |
| **கதிர்காம வேலவர் திருவருட்பா** | 42 |
| **கதிரையாத்திரை விளக்கம்** | 45 |
| **கந்த புராணம்** | |
| **வள்ளியம்மை திருமணப்படலம்** | 68 |
| **சூரபன்மன் வதைப்படலம்** | 68 |
| **தெய்வானை திருமணப்படலம்** | 68 |
| **கதிர்காமக்கலம் பகம்** | 76 |
| **கந்தபுராணக்கலாச்சாரம்** | 106 |
| **கந்தபுராணம், தக்ஷகாண்டவுரை** | 106 |
| **கந்தபுராண போதனை** | 106 |
| **கந்தரலங்காரம் உரை** | 68 |
| **கந்தபுராண கலாச்சாரம்** | 106 |
| **கந்தர் நவமணிமாலை** | 76 |
| **கந்தரனுபூதி** | 13,76 |
| **கந்தரனுபூதி உரை** | 70 |
| **கந்தவனநாதர் பதிகம்** | 57 |
| **கம்பரந்தாதி** | 60 |
| **கம்பராமாயணக்காட்சி,** | 106 |
| **கல்வளை அந்தாதி - உரை** | 68 |
| **கலாசிந்தாமணி** | 62 |
| **கலாதீபிகை** | 62 |
| **காலிக்கதிரேசரூஞ்சல்** | 40 |
| **காளிதாசர் சரித்திரம்** | 71 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| கிறிஸ்துமத கண்டனம் | 57 |
| கிறிஸ்துமத குடாரம் | 58 |
| கிறிஸ்தவ மத விகிதம் | 36 |
| குடந்தை வெண்பா | 63 |
| குருசேந்திர நாடகம் | 58 |
| கூர்ம புராணம் | 76 |
| கௌலி நூல் | 47 |
| கோயில் | 106 |
| சகல குணசம்பன்னன் | 100 |
| சத்தசங்கிரகத்தின் பூர்வார்த்தம் | 57 |
| சத்தசங்கிரகம் | 57 |
| சத்தியாபிமானி | 69 |
| சதுர் வேத தாற்பரிய சங்கிரகம் | 18 |
| சந்திரகாசன் கதை | |
| சந்திரசேகர விநாயகர்ஊஞ்சல் | 63 |
| சந்திர மௌலிக சரணம் | 47 |
| சமஸ்கிருதம் - இரண்டாம், புத்தகம் | 57 |
| சற்குருமணி மலை | 71 |
| சற்சமய விளக்கம் | 36 |
| சண்முக நாதன் | 47 |
| சாணக்கிய நீதி வெண்பா | 25 |
| சாதிநிர்ணயபுராணம் | 68 |
| சிசுபால சரித்திரம் | 25 |
| சித்தாந்த சாராவளி | 51 |
| சித்தாந்த சிகாமனி | 18 |
| சித்தாந்தப் பிரகாசிகை | 57 |
| சிந்தாந்தப் பிரகோணம் | 72 |
| சிதம்பர சபாநாத புராணம் | 34 |
| சிதம்பர பாண்டி நாயக்க மும்மணிக்கோவை | 34 |
| சிதம்பரபுராணம் - புத்துரை | 54 |
| சிந்தனைக் களஞ்சியம் | 106 |
| சிந்தனைக் சோலை | 100 |
| சிந்தாமணி நிகண்டு | 68 |
| சிரார்த்தவிதி | 57 |
| சிவகீதை | 18 |
| சிவசமய வாதமறுப்பு | |
| சிவசேத்திராலய மகோற்சவ உண்மை | 75 |
| சிவஞான சித்தியார் - சுபக்கம் | 57 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| சிவஞான சுவாமிகள் பிரபந்தத் திரட்டு | 51 |
| சிவஞான போதமும் வார்திக மென்னும் பொழிப்புரையும் | 9 |
| சிவஞான போத விருத்தி | 18 |
| சிவஞான போத விளக்கச் சூறாவளி | 27 |
| சிவஞான போதார்த்த லாகுவசனம் | |
| சிவஞான போத யோகிகள் குருபூசை மகோற்சவம் | 34 |
| சிவத்துரோக கண்டனம் | 72 |
| சிவதத்துவ விவேகம் | 9 |
| சிவநாமவாத தீபிகை | |
| சிவநெறிப் பிரகாசம் | 39 |
| சிவபூசையந்தாதி உரை | 57 |
| சிவபூசா விதி | 40 |
| சிவபெருமான் பேரில் ஆசிரிய விருத்தம் | 35 |
| சிவமணி மாலை | 100 |
| சியோகசாரம் | 15 |
| சிவயோகசாரம் | 18 |
| சிவயோகரத்தினம் | 18 |
| சிவராத்திரி புராணம் | 76 |
| சிவராத்திரியிற் சிந்திக்கத் தக்கவை | 106 |
| சிவனும் தேவனா என்னும் தீய நாவுக்கு ஆப்பு | 31 |
| சிவானந்தல்கரி - தமிழ் உரை | 4 |
| சுதேச வர்த்தமானி | 34 |
| சுப்பிரம பராக்கிரமம் | 75 |
| சூரகர்மன் பட்டாபிஷேகம் | 68 |
| சூடாமணி வசனம் | 42 |
| செந்தமிழ் அகராதி | 76 |
| செந்தமிழ் களஞ்சியம் | 106 |
| செல்வச்சன்னிதி முறை | 68 |
| சேக்கிழார் புராணம் | 39 |
| சேதுபுராண வசனம் | 40 |
| சைவ உதய பானு | 11,15,35,40,42 |
| சைவ சந்நியாச பத்ததி | 72 |
| சைவ சித்தாந்த சங்கிரகம் | 70 |
| சைவ சூக்குமார்த்த போதினி | 39 |
| சைவ தூஷண சந்திரிகை | 75 |
| சைவ தூஷண பரிகாரம் | 62,75 |
| சைவ தூஷணபரிகார நிராகரண சுப்பிரதீபம் | 62 |
| சைபிரகாசனம் | 57 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவமகத்துவம் 59,68
சைவ தூஷன நிராகரனம் 36
சைவபிமானி
சைவ மகத்துவம் 59,68
சைவ மகத்தவ திக்காரம் 67
சைவ மகத்துவ திக்கார நிக்கிரகம் 68
சைவ வேதாந்தம் 32
ஞானாமிர்தம் 34
தணிகை புராணம் 42,53
தத்துவப் பிரகாசவுரை 39
தத்துவ விசாரணி 61
தத்துவ விவேகி
தமிழ்ப் பேரகராதி 76
தர்க்காமிர்தம் 33
தர்ச்சுண கைலாசப் புராணம் 57
தருக்க பரிபாஷை 57,65
தருப்பண விதி 40
தமிழ் புலவர் சரித்திரம் 75
தக்ஷிணகைலாச புராணம் 57,65
தாந்திரிய கண்ட கண்டனம் 27
தாயுமானவ சுவாமிகள் திருப்பாட்ற்றிரட்டு 16
திண்ணபுரத்திரிபந்தாதி 59
திராவிடப் பிரகாசிகை 70
திருவருட்பா 77
திரிபோச வெண்பா 59
திருக்கலிப்பாலைப்புராணம் 41
திருக்கேதீச்சரப் பதிகம் - விளக்கவுரை 12
திருஞானசம்பந்தர் சரிதவசனம் 76
திருக்கோவையார் 9
திருச்சிற்றம்பலயமகவந்தாதி 34
திருச் செந்தூர்ப்புராணவுரை 41
திருச் செந்தில்திருவந்தாதி 67
திருச்செந்தில் யமகவந்தாதி 67
திருத்தில்லை கல்சந்தமாலை 59
திருபோச வெண்பா 59
திருமுறை கண்ட புராணம் 39
திருவாதவூரடிகள் புராணம் 13,41
திருவாதவூரடிகள் புராணம் - வசனம் 41


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவுடை மருதூர் பதிற்றுப் பத்தந்தாதி
தெய்வயானை அம்மை தோத்திரம்
தென்மொழி வரலாறு 76
தேவாரம் வேதசாரம் 31
தேவிகாலோத்தர விருத்தி 51
தொல்காப்பியம் - சொல்லதிகாரம் - சேனாவரையர் 62
நகுலமலைக் குறவஞ்சிநாடகம் (பதி) 26
நட்சேத்திரமாலை 62
நல்லறிவுச்சுடர் கொழுத்துதல் 61
நல்லூர் கந்தசுவாமி கோயில்
(முதலாம் பத்திரிகை, இரண்டாம் பத்திரிகை 101
நளன் தூது 107
நன்னூல் - இலகு போதம் 71
நன்னெறி - உரை 71
நன்னூல் உதாரண விளக்கம் 70
நாராயண பரத்துவ நிரசரணம் 33
நால்வர் யேசுதாரதம்மியம் 36
நாகைநீலலோசனி 30
நீதிநெறி விளக்கம் 62
நைடகம் 13
பட்டணத்துப்பிள்ளையார் புராணம் 76
பசு பதி பாச விளக்கம் 18
பதார்த்த தீபிகை 63
பரிகண்டனம் 36
பர்வதவர்த்தினியம்மை தோத்திரம் 47
பறாளை விநாயகர் பள்ளு 34
பாஷை இலக்கணம் 106
பாரதச் சுருக்கம் 70
பாரத தாற்பரிய சங்கிரகம் 34
பாரதம் - ஆதிபருவம் உரை 11
பாரதச் சுருக்கம் 70
பாரத தாற்பரிய சங்கிரகம், 34
பிரபஞ்ச விசாரம், 36
பிரபலிங்கலீலை, 76
பிரம வித்தியா 29,35
புதுச் சந்நிதி கந்தர் பிள்ளைத்தமிழ் 76
புத்தமத கண்டகம், 75
புலியூரந்தாதி 13

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரிலாலி நவமணிமாலை 67
பெரிய புராணபாடியம், 72
போலியருட்பாமறுப்பு, 77
போற்றிக் கலிவெண்பா 70
மகாவுக்கிர வீர பத்திராஸ்திரம் 27
மறைசையந்தாதி உரை 67
மயூரகிரி புராண வுரை 11
மாவை யந்தாதி 67
மிலேச்சமத விகற்பம்
முன்னை நாத சுவர்மி வடிகாம்பிகை மீது ஆசிரிய விருத்தம் 36
மூத்த நாயனார் இரட்டை மணிமாலை 36
மெய்ஞானக் கும்மி மறுப்பு 36
யாப்பெருங்கலகம் 76
யாழ்ப்பாண சமயநிலை, 101
யாழ்ப்பாண சுயதேசியக் கும்மி 100
யேசுமத நிரசனம் 36
லோபகாரி 29
வச்சிரருலிசம் 38
வச்சிரதண்டம் 27
வனச்தொடை 18
வடமொழி மொழிச் சிவஞான போதம் - தமிழ் உரை,
வண்ணைத் திரிபந்தாதி 59
வதிரி நகர் தண்டபாணிக்கடவுள் பதிகம் 67
வயிரவர் கடவுள் தோத்திரம் 36
வல்லிபுரநாதர் பதிகம் 67
வல்லை வயித்தீயேசர் பதிகம் 67
வள்ளி நாயகி தோத்திரம் 36
வஜ்ரடங்கம் 31
விஞ்ஞானப் பத்திரிகை 67
விதானை மாலை 59
விஜயத்துவஜம் 30
விவிலிய குஞ்சித கண்டன தீக்காரம்
விவிலியப்பரீட்சை, 36
விவிலிய விகிர்த்தம் 36
விவிலிய விரோதம் 59
விவேக திவாரகன் 30
விளைப்பகுபத விளக்கம் 25
வீரபாகு தேவர் விருந்தம் 35

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றிக் கொடியோன் 30
வேதாகம நாமவாத தீபிகை 33
வைத்தியவிசாரணி 71

## பொருள் அகரநிலை

அத்வைத வேட ஒற்றுமை 29
அத்வைத நிலை 28
அருட்பா - மருட்பாப் போராட்டம் 31
ஆரணிய சமஸ்தானம் 73
ஆறுமுகநாவலர் சந்தான சம்பந்த சுவாமி ஆதீன 73
இந்துக்கல்லூரி - யாழ்ப்பாணம் - 36,21
வட்டுக்கோட்டை 42
இந்துவாலிபர் சங்கம் 21
இராமநாதன் மகளிர் கல்லூரி, 90
உலோகாகித வாதம் 35
ஐந்தாம் குரவர் 43
கந்தசுவாமி கோயில் - நல்லூர் 38
கந்த புராண கலாச்சாரம் 101
கம்பராமாயணரசனை 11
கலாவிருத்திச் சங்கம் 15
காவியபாடசாலை, 15,24,36,103,
காவியரசனை 9
கிறிஸ்தவ கண்டன குடாரி 31
கிறிஸ்தவ கண்டனசபை 16
ஹரிஜனங்கள் 98
குருக்குல பாடசாலை 40
கொள்ளை நோய் 99
சமயப்பிரசாரகர் 1
சற்பிரசங்கம் 57
சனோபகார சங்கம் 57
சிவன் கோயில் - வண்ணார் பண்ணை
கீரிமலை 83
சைவசித்தாந்த சபை - யாழ்ப்பாணம் 16
தூத்துக்குடி 37
சைவ சித்தாந்த மகாசரபம் 76

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவ சித்தாந்த சபை 15
சித்தாந்த வித்தியானுபாலன யந்திரசாலை 34
சைவ சித்தாந்த சபை - யாழ்ப்பாணம் 15
சைவ சித்தாந்த மகாசரபம் 16
சைவப்பிரகாச சமாசீயம் 21
சைவ சித்தாந்த சமாஜம், 24
சைவ சித்தாந்த மீட்சி இயக்கம் 36
சைவ பரிபாலன சபை - யாழ்ப்பாணம் 11,16,20,24,43
சைவ பரிபாலன சபை - கொழும்பு 39,43
பிரகாச வித்தியாசாலை - யாழ்ப்பாணம் 6,13,19,20,21,24,80,88,
சைவப்பிரகாச வித்தியாசாலை - சிதம்பரம் 8,39,49,54,
சைவப்பிரகாச வித்தியாசாலை - ஏழாலை 32,36,60
சைவப்பிரகாச வித்தியாசாலை - புலோலி 23,73,
சைவப்பிரகாச வித்தியாசாலை - நீர்வேலி 41
சைவப்பிரகாச வித்தியாசாலை - வேலணை 39
சைவப்பிரகாச யச்சுயந்திரசாலை 36
சைவப்பிரசாரகர் 43
சைவ - மாயாவாத வேட வொற்றுமை 29
சைவ வித்தியாவிருத்திச்சங்கம் 92,95,97,104
சைவாங்கில வித்தியாசாலை 35,42
சைவாசிரியர் கலாசாலை 83,97,104
சைவாபிமானி 68
தத்துவநியமனம் 111
தர்க்க குடார தாலுதாரி 32
தமிழ்ச்சங்கம் - யாழ்ப்பாணம் 15
திருக்கேதீச்சரம் 21,36,41,
திருஞானசம்பந்தர் ஆதீனம் 34
திருமுறைமகோற்சவம் 78
திருவாதிரைத் திருநாள் மகிமைப்பிரவாகம் 72
திருவாவடுதுறை ஆசீகம் 34,51,72
திருவண்ணாமலை ஆதீனம்
திருவருட்பாப் போராட்டம் 77
நாவலர் அச்சுக்கூடம் 70
நாவலர் இயக்கம் 36
நாவலர் தருமம் 15
நாவலர் பிரதிமை 17
நாவலர் மரபு 1,3,5,44,46,47,59,74,76,103,106
நல்லறிவுச் சுடர் கொழுத்துதல் 61

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA
JDL

நிரீச்சுரவாதம் 44
புராணப்படனம் 21,23,42,44,56,58,74,105
பௌதீக வாதம் 43
மட்டக்களப்பு - யாழ்ப்பாண வேளாண்மைச்சங்கம் 101
மாயா வாத தும்சகோளரி 76
மாயாவாதம் 73
வேதாகமோத்த சைவசித்தாந்தசபை 29
வேதாந்தப் பிரகாச சபை 29

12120 S.C

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Prof. V. SIVASAMY
UNIVERSITY OF JAFFNA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

*Printed By*
Karthikeyan (Pvt) Ltd,
501/2, [Hotel Ceylon Inn Shopping Complex] Galle Road, Wellawatte, Tel : 595875.
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org